ஆண்டறிக்கை 2017

இலங்கை மகாவலி அதிகார சபை

இலங்கை மகாவலி அதிகார சபை ஆண்டறிக்கை – 2017

நோக்கு மற்றும் பணி i

வரலாற்றுப் பின்னணி ii-viii

பணிப்பாளர் நாயகத்தின் மீளாய்வு – 2017 ix

சிரேஷ்ட முகாமைத்துவம் x

2017 ஆம் ஆண்டு தொடர்பாக பணிப்பாளர் நாயகத்தின் மீளாய்வு குறிப்பு xi-xii

பணிப்பாளர் சபையின் சுருக்கக் குறிப்பு xiii

கணக்காய்வுக் கமிட்டியின் அறிக்கை – 2017 xiv-xv

கடந்த 7 ஆண்டுகளின் போது சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் xvi

இலங்கை மகாவலி அதிகார சபையின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் கம்பனிகளின் பணிப்பாளர் சபை - 2017 xvii

பாகம் I -நிர்வாக அறிக்கை

அத்தியாயம் 1 இலங்கை மகாவலி அதிகார சபையின் ஸ்தாபிதம் மற்றும் (1-8)

அதன் உள்ளடக்கம் 1-3

இலங்கை மகாவலி அதிகார சபையின் கருமங்கள் 4

இலங்கை மகாவலி அதிகார சபையின் நிர்வாக கட்டமைப்பு 5

மகாவலி வலயங்களின் கட்டமைப்பு மற்றும் நிர்வாகம் 6

தலைமை அலுவலக செயற்பாடுகள் பிரிவு 7

திட்டமிடல் மற்றும் இயக்குதல் பிரிவு 8

உள்ளக கணக்காய்வு பிரிவு 8

அத்தியாயம் 2 தொழில்நுட்ப சேவைகள் பிரிவு (9-29

பணிகள் 9-15

ஆற்றுப் பள்ளத்தாக்கு முகாமைத்துவ அலுவலகம 15-16

முதன்மை வேலைகள் நிர்வாகம், இயக்குதல் மற்றும் பராமரிப்பு பிரிவு 16-17

நீர் முகாமைத்துவ செயலகம் 17-22

காணிப் பயன்பாடு மற்றும் திட்டமிடல் பிரிவு 23-26

வனவள மற்றும் சுற்றாடல் பிரிவு 27-29

அத்தியாயம் 3 அபிவிருத்திப் பிரிவு (31-60)

காணிப் பிரிவு 30-33

விவசாய அபிவிருத்திப் பிரிவு 34-44

மீன்பிடி மற்றும் கால்நடை வளங்கள் அபிவிருத்தி பிரிவு 45-47

நிறுவன அபிவிருத்திப் பிரிவு 48-51

வணிக அபிவிருத்திப் பிரிவு 51-60

அத்தியாயம் 4 மனித வளங்கள் மற்றும் நிதி முகாமைத்துவப் பிரிவு (61-78)
ஆளணி மற்றும் நிர்வாகப் பிரிவு 61-67
சட்டப் பிரிவு 67-68
நிதிப் பிரிவு 69-72
மகாவலி பாதுகாப்புப் படை 73
மகாவலி நிலையம் 73-77
போக்குவரத்துப் பிரிவு 78

அத்தியாயம் 5 இலங்கை மகாவலி அதிகார சபையின்
கீழ் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் கம்பனிகள் 79-80

பாகம் II வருடார்ந்தக் கணக்குகள் 81-92

பாகம் III கணக்காளர் நாயகத்தின் அறிக்கை 93-128

பாகம் IV கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை தொடர்பாக
பணிப்பாளர் நாயகத்தின் விளக்கங்கள் 129-173

பாகம் V இலங்கை மகாவலி அதிகார சபையின் செயலாற்றுகை
அறிக்கை மற்றும் முதலீட்டு திட்டம 174-191

நோக்கு

ஆற்றுப் பள்ளத்தாக்குகளை அடிப்படையாகக் கொண்டு ஒருங்கிணைந்த, நிலைத்து நிற்கக் கூடிய அபிவிருத்தியை நோக்கிப் பயணிக்கும் தென்னாசியாவின் தலைசிறந்த தேசிய நிறுவனமாக மாற்றமடைதல்.

பணி

இலங்கையின் சமூக, பொருளாதார செழிப்பு நிலையை எடுத்து வருவதற்கென மகாவலி மற்றும் ஏனைய விசேட பிரதேசங்களில் இருந்து வரும் நிலம், நீர், அனைத்து விதமான இயற்கை மற்றும் மனித வளங்கள் என்பவற்றை உச்ச மட்டத்தில் பயன்படுத்திக் கொள்வதற்கென புத்தாக்க இயல்பிலான நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்கள் என்பவற்றின் உருவாக்கத்துக்கும், மேம்பாட்டுக்கும், விருத்தி நிலைமைக்கும் துணை நிற்றல்.

வரலாற்றுப் பின்னணி

மகாவலி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் இலங்கையில் இதுவரையில் மேற்கொள்ளப்பட்ட மிகப் பெரிய பௌதீக மற்றும் மனித வள அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டமாக இருந்து வருகின்றது. முக்கியமாக இலங்கை நாட்டின் உலர் வலயத்தின் கிராம அபிவிருத்தி தொடர்பாக அடிப்படையில் கவனம் செலுத்திய இந்த நிகழ்ச்சித்திட்டம் அப்போதைய அரசாங்கத்தினால் 1968 ஆம் ஆண்டில் ஐ நா அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்/ உணவு மற்றும் விவசாயத் தாபனம் (UNDP/FAO) என்பவற்றின் தொழில்நுட்ப உதவியுடன் வடிவமைக்கப்பட்டது. நாட்டின் மத்திய மலைப் பிரதேசங்களின் இயற்கை நீர் ஆதாரங்களை உலர் வலயத்தில் விவசாய மற்றும் குடியேற்ற அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கென பயன்படுத்திக் கொள்வதில் மகாவலி திட்டம் மிக முக்கியமான பாத்திரத்தை வகித்து வந்துள்ளது.

இலங்கையின் துரித குடித்தொகை வளர்ச்சியின் விளைவாக ஏற்பட்டிருந்த பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் அதன் முயற்சியின் போது உற்பத்தியைத் துரிதப்படுத்தும் விடயத்தில் நாடு கவனம் செலுத்த வேண்டிய தேவை இருந்து வந்தது. 1940 களின் அளவுகளுடன் ஒப்பிடும் போது 1969 இல் இலங்கையின் குடித்தொகை இரட்டிப்பாக அதிகரித்ததுடன், அவ்வாண்டில் அது 11. 8 மில்லியன் மட்டத்தை எட்டியிருந்தது. அப்பொழுது நாட்டின் வருடார்ந்த குடித்தொகை அதிகரிப்பு 3.1 சதவீதமாக இருந்து வந்தது. அக்காலகட்டத்தில் இடம்பெற்று வந்த குடித்தொகை அதிகரிப்பின் பின்புலத்தில் 1980 ஆம் ஆண்டளவில் நுகர்வுக்கென இலங்கைக்கு 1.8 மில்லியன் மெட்ரிக் தொன் அரிசி தேவைப்படும் என அனுமானிக்கப்பட்டிருந்தது. எனினும், அச்சந்தர்ப்பத்தில் நாட்டில் 0.7 மில்லியன் மெட்ரிக் தொன் அரிசி மட்டுமே உற்பத்தி செய்யப்பட்டு வந்தது. மேலும், கைத்தொழில் அபிவிருத்தி, வீட்டு நுகர்வு என்பவற்றுக்கான மின்சாரத்துக்கான கேள்வி 2000 gwh அலகுகள் என மதிப்பிடப்பட்டிருந்தது. எவ்வாறிருப்பினும், 1969 ஆம் ஆண்டில் வருடார்ந்த மின்சார உற்பத்தி 470 gwh அலகுகளாக இருந்து வந்ததுடன், நீர்மின் உற்பத்தி நிலையங்கள் இதில் 388 gwh அலகுகளை பங்களிப்புச் செய்து வந்தன. குதி மின்சாரம் அனல் மின் நிலையங்கள் மூலம் எரிபொருள் பாவனையுடன் உற்பத்தி செய்யப்பட்டு வந்தது. 1960 – 1967 காலப்பிரிவின் போது வருடாந்த அரிசி இறக்குமதி 466,000 மெ. தொன்களாக இருந்து வந்ததுடன், அதன் விளைவாக ஒவ்வொரு வருடமும் 200 மில்லியன் ரூபா வெளிப் பாச்சல் இடம்பெற்றது. அது தவிர உப உணவுப் பயிர்களின் இறக்குமதிகளுக்கென வருடாந்தம் ரூ. 139 மில்லியன் செலவிடப்பட்டு வந்தது. இந்தச் செலவுகள் அனைத்தும் மிக உயரளவிலான பெறுமதி ஒன்றைக் காட்டின.

நாட்டின் குடித்தொகை ஈர வலயத்தில் மட்டுமே பெருமளவில் ஒன்று திரண்டு வரும் விடயமும் அக்கால கட்டத்தில் அவதானிக்கப்பட்டிருந்தது. ஈர வலயத்தின் குடித்தொகை சதுர கிலோ மீற்றர் ஒன்றுக்கு 465 நபர்களாக காணப்பட்டது. உலர் வலயத்தில் குடித்தொகை அடர்த்தி சதுர கிலோமீற்றர் ஒன்றுக்கு சுமார் 80 நபர்கள் என்ற அளவில் காணப்பட்டது. உலர் வலயம் நாட்டின் மொத்த நிலப்பரப்பில் 66 சதவீதத்தை உள்ளடக்கியிருந்த அதே வேளையில், குடித்தொகையில் 70 சதவீதத்தினர் ஈர வலயத்திலேயே செறிந்து வாழ்ந்து வந்தனர். அதன் பிரகாரம் உலர் வலயம் நெடுகிலும் சனச்செறிவு மிகக் குறைவாக இருந்து வரும் நிலை அவதானிக்கப்பட்டது. நாட்டின் ஏனைய நதிகளுடன் ஒப்பிடும் பொழுது ஈர வலயத்தின் மத்திய மலைநாட்டிலிருந்து ஊற்றெடுக்கும் மகாவலி கங்கை இலங்கையின் மொத்த நிலப்பரப்பில் ஆறிலொரு பிரதேசத்துக்குச் சமமான பிரதேசம் ஒன்றிலிருந்து கிடைக்கும் நீரோட்டங்களைச் சேகரித்து, உலர்

வலயத்துக் கூடாக எடுத்துச் சென்று கடலில் கலக்கின்றது. மகாவலி கங்கை வற்றாத ஒரு நதி எனக் கருதப்படுகின்றது. மேல் மகாவலி பிரதேசங்களில் நீர்மின் உற்பத்தி நிலையங்களுக்கு நீரை விநியோகம் செய்யும் அதே வேளையில், உலர் வலயத்தின் விவசாய அபிவிருத்தியை மேற்கொள்வதற்கென மகாவலி கங்கையின் நீரை திசை திருப்ப வேண்டிய தேவை இருந்து வருகின்றது என்ற விடயம் உணரப்பட்டது. இலங்கை அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் இங்கு வந்த ஐக்கிய நாடுகள் அமைப்பின் ஒரு தூதுக்குழு உலர் வலயத்தில் காணி அபிவிருத்திக்கான வாய்ப்புக்களைக் கண்டறிவதற்கென 1956 ஆண்டில் ஒரு சாத்தியப்பாட்டு அறிக்கையை மேற்கொண்டது. அதே நேரத்தில் கனேடியன் ஹன்டிங் சேர்வே கோர்ப்பரேஷன் என்ற நிறுவனம் இலங்கை நீர்ப்பாசன மற்றும் நில அளவைத் திணைக்களங்களுடன் இணைந்து அப்போதைய அரசாங்கத்தின் வேண்டுகோளின் பேரில் மகாவலி கங்கை தொடர்பான ஓர் ஆய்வை மேற்கொண்டது. இந்த இரு நிறுவனங்களும் தமது கண்ணோட்டங்களை உள்ளடக்கும் இரண்டு சுயாதீனமான அறிக்கைகளை 1961 ஆம் ஆண்டில் அரசாங்கத்திடம் சமர்ப்பித்தன. சம்பந்தப்பட்ட ஆய்வுகள் 1962 ஆம் ஆண்டில் ஒப்புதலுக்கென பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டன.

ஒட்டுமொத்த மகாவலி வடிநிலத்தினதும் நீர் வளங்கள் தொடர்பான விரிவான ஆய்வொன்றை மேற்கொள்ளாத விதத்தில் மகாவலி கங்கையின் நீரின் ஒரு பாகத்தை திசை திருப்புவது பாதகமான விளைவுகளை ஏற்படுத்துமென இலங்கை நிபுணர்கள் அபிப்பிராயப்பட்டதன் காரணமாக பாராளுமன்றம் இந்த அறிக்கைகளுக்கு ஒப்புதல் வழங்கவில்லை. அதனையடுத்து, மகாவலி கங்கையையும் உள்ளடக்கிய அனைத்து நதிகளையும், அனைத்து நீராதாரங்களையும், நிலப்பரப்புக்களையும் உள்ளடக்கிய விதத்தில் விரிவான ஓர் ஆய்வினை மேற்கொண்ட பின்னர், முன்னுரிமை அடிப்படையில் அபிவிருத்திக்கென தெரிவு செய்யப்பட வேண்டிய கருத்திட்டங்கள் எவை என்பது தொடர்பாக சுயாதீனமான பரிந்துரைகளை சமர்ப்பிக்குமாறு 1962 ஆம் ஆண்டில் அரசாங்கம் ஐக்கிய நாடுகள் அமைப்பிடம் ஒரு வேண்டுகோளை விடுத்தது. இந்த வேண்டுகோளை அடுத்து ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் இலங்கைக்கு உணவு விவசாயத் தாபன குழு ஒன்றை அனுப்பி வைத்தது. அது தவிர, இந்தக் குழுவுக்கு உதவுவதற்கென இலங்கையிலிருந்து நிபுணர்களும், அதேபோல ஏனைய உதவி ஆளணியினரும் நியமனம் செய்யப்பட்டார்கள்.

நான்கு ஆண்டுகள் மேற்கொள்ளப்பட்ட விரிவான ஆய்வுகளின் பின்னர் சம்பந்தப்பட்ட ஆராய்ச்சி 1968 ஆம் ஆண்டில் 14 புறம்பான விசேட அறிக்கைகளை உள்ளடக்கிய 3 தொகுதிகளாகப் பிரசுரிக்கப்பட்டது. அதனை அடுத்து, மகாவலி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்துக்கு 1968 ஆம் ஆண்டில் பாராளுமன்றம் ஒப்புதலை வழங்கியது.

இந்த நிகழ்ச்சித்திட்டங்களிலிருந்து பயன்களைப் பெற்றுக்கொள்ளும் வட மத்திய மாகாணத்திலும், கிழக்கு மாகாணத்திலும் அமைந்திருந்த பிரதேசங்கள் 13 வலயங்களாகப் பிரிக்கப்பட்டதுடன், அகர வரிசையில் 'A' தொடக்கம் 'M' வரையில் அவற்றுக்குப் பெயரிடப்பட்டன. பொருளாதார ரீதியில் சாத்தியமானவை எனவும், குறைந்த முதலீடுகளுடன் அதிக அளவிலான பயன்களைப் பெற்றுக்கொடுக்கக் கூடியவை எனவும் கருதப்பட்ட கருத்திட்டங்கள் முதலாவது கட்டத்தின் போது எடுத்துக் கொள்ளப்பட்டன.

மகாவலி பெருந்திட்டம்

மகாவலி நீர் ஆதாரங்களிலிருந்து மின்சார உற்பத்திக்கும், நீர்ப்பாசன நடவடிக்கைகளுக்குமென சுமார் 6,900 மில்லியன் கன அடி நீரை வழங்குவதே மகாவலி பெருந்திட்டத்தின் பிரதான நோக்கமாக இருந்தது. 15 நீர்த்தேக்கங்களை நிர்மாணித்து, மின்சார உற்பத்திக்கென அவற்றில் 11 நீர்த்தேக்கங்களைப் பயன்படுத்திக் கொள்வதும் அதன் இரண்டாவது நோக்கமாக இருந்து வந்தது.

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் (UNDP), உணவு மற்றும் விவசாயத் தாபனம் (FAO) என்பவற்றினால் சமர்ப்பிக்கப்பட்ட மகாவலி பெருந்திட்டத்தின் பிரகாரம், மகாவலி வடிநிலத்திலும், உலர் வலயத்தில் அமைந்திருக்கும் ஏனைய வடிநிலங்களிலும் அமைந்திருக்கும் 364,372 ஹெக்டெயார் நிலப்பரப்புக்கு சிறுபோகம் மற்றும் பெரும்போகம் ஆகிய இரு பருவங்களின் போதும் நீர்ப்பாசன நீரை வழங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தது. இந்த மொத்த நிலப்பரப்பில் 264,777 ஹெக்டெயார் விவசாயத்துக்கென திறந்துவிடப்படவிருக்கும் புதிய நிலங்களாக இருந்தன. மிகுதி 110,404 ஹெக்டெயார் நிலப்பரப்பில் ஏற்கனவே ஒரு பருவத்தின் போது மட்டும் சாகுபடி செய்யப்பட்டிருந்தது. திட்டமிடப்பட்டிருக்கும் நீர்த்தேக்கங்கள் மற்றும் கால்வாய்கள் என்பவற்றின் ஆற்றலைப் பயன்படுத்தி 2037 GWh அலகு மின்சாரம் உற்பத்தி செய்ய முடியும் என்ற விடயமும் சுட்டிக் காட்டப்பட்டிருந்தது. மகாவலி பெருந்திட்டத்தின் பிரகாரம் 30 வருட காலப்பிரிவின் போது இந்த அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தது. நிதிகளின் உபயோகம் மற்றும் அமுலாக்கம் என்பவற்றின் வசதியைக் கருத்தில் கொண்டு - குறிப்பாக அபிவிருத்தியின் பயன்கள் அனைவருக்கும் கிட்ட வேண்டும் என்ற விடயத்தைக் கருத்தில் கொண்டு - இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் நடவடிக்கைகள் 3 கட்டங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தன:

I. முதலாவது கட்டம்

முதலாவது கட்டத்தை 1969 - 1980 காலப்பிரிவின் போது அமுலாக்குவதற்கு யோசனை தெரிவிக்கப்பட்டிருந்தது. இக் கட்டத்தின் போது 74,494 ஹெக்டெயார் புதிய நிலங்களுக்கும், 58,300 ஹெக்டெயார் பழைய நிலங்களுக்கும் நீர்ப்பாசன நீரை வழங்குவதற்கும், வருடாந்தம் 820 GWh அலகு மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கும் திட்டமிடப்பட்டிருந்தது. இக் கட்டத்தின நடவடிக்கைகள் 3 கருத்திட்டங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தன:

- பொல்கொல்ல திசைதிருப்பல் (1969 – 1973)
- விக்டோறியா / மினிப்பே திசைதிருப்பல் (1973 – 1977)
- மொறகஹகந்த பல் நோக்கு அலகு

II. இரண்டாவது கட்டம்

இந்த இரண்டாவது கட்டத்தின் போது மாதுறு ஓயா நீர்த்தேக்கம், பல்நோக்கு கட்டட தொகுதி, கந்தகாடு அணைக்கட்டு போன்ற முதன்மை வேலைப் பிரிவுகளில் மகாவலி மற்றும் மாதுறு ஓயா வடிநிலங்களில் அமைந்திருக்கும் 93,117 ஹெக்டெயார் நிலப்பரப்புக்கு நீர்ப்பாசன வசதிகள் வழங்கப்படும். நீர்ப்பாசன வசதிகளை வழங்குவதற்கென திட்டமிடப்பட்டிருந்த 93,117 ஹெக்டெயார் நிலப்பரப்பில் 8502 ஹெக்டெயார் நிலப்பரப்பு ஏற்கனவே சாகுபடியின் கீழ் இருந்து வந்தது. இக்கட்டத்தின் முக்கிய நடவடிக்கைகள் பின்வருவனவற்றையும் உள்ளடக்கியிருந்தன: தல்தெனவில் 15 MWh நிறுவப்பட்ட ஆற்றலுடன் ஒரு நீர்மின் உற்பத்தி நிலையத்தை நிர்மாணித்தல், றத்கிந்த நீர்த்தேக்கத்திலிருந்து மாதுறுஓய நீர்த்தேக்கத்துக்கு நீர் வழங்கும்

பொருட்டு ஓர் சுரங்கப் பாதையை நிர்மாணித்தல், மாதுறுஓய நீர்த்தேக்கத்துக்கு அருகில் 4.9 MWh நிறுவப்பட்ட ஆற்றலுடன் கூடிய ஒரு நீர்மின் உற்பத்தி நிலையத்தை நிர்மாணித்தல்.

III. மூன்றாவது கட்டம்

இக்கட்டத்தின் கீழ் வட மத்திய மாகாணத்தில் 105,668 ஹெக்டெயார் புதிய நிலப்பரப்பு அபிவிருத்தி செய்யப்படும். நீர் மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கான இறுதித் திட்டத்தின் அமுலாக்கத்தின் விளைவாக 293 MWh அலகு நிறுவப்பட்ட ஆற்றலுடன் கூடிய நீர்மின் உற்பத்தி நிலையங்கள் நிர்மாணிக்கப்படும். அத்தகைய நீர்மின் உற்பத்தி நிலையங்களுக்கூடாக வருடாந்தம் 1169 MWh அலகு மின்சாரம் உற்பத்தி செய்யப்படும். மினிப்பே குளத்தின் வலது கரைக் கால்வாயின் அபிவிருத்தி, 164 கி.மீ. நீளமான வட மத்திய கால்வாயின் நிர்மாணம், ரொட்டலாவல, உமாஓய, றன்தம்பே, கொத்மலை மற்றும் களுகங்கை நீர்த்தேக்கங்களின் நிர்மாணம் என்பன இக் கட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

எனினும், தற்போதைய முன்னுரிமைத் தேவைகளின் அடிப்படையில் மகாவலி பெருந்திட்டம் 3 அபிவிருத்திக் கட்டங்களின் அடிப்படையில் அமுல் செய்யப்பட்டு வருகின்றது.

மகாவலி பெருந்திட்டத்தின் அமுலாக்கம் (1 ஆவது அபிவிருத்திக் கட்டம்)

மகாவலி பெருந்திட்டத்தின் முதலாவது கருத்திட்டமாக 1970 ஆம் ஆண்டில் பொல்கொல்ல மற்றும் போவதென்ன கருத்திட்டம் தொடக்கி வைக்கப்பட்டதுடன், அதன் நிர்மாண வேலைகள் 1976 ஆம் ஆண்டளவில் பூர்த்தியடைந்தன. இக் கருத்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டமையை அடுத்து ஏற்கனவே இருக்கும் 16000 ஹெக்டெயார் நிலப்பரப்புக்கும், 23000 ஹெக்டெயார் புதிய நிலப்பரப்புக்கும் நீர்ப்பாசன நீரை வழங்கக் கூடிய ஆற்றலும், 40 MWh அலகு நிறுவப்பட்ட ஆற்றலுடன் கூடிய விதத்தில் மின்சாரத்தை உருவாக்கக் கூடிய வாய்ப்பும் கிடைத்தது. இக் கருத்திட்டத்தின் கீழ் 1977 ஆம் ஆண்டளவில் மகாவலி H வலயத்துக்குள் கலாவெவ வடிநிலத்தில் 23000 விவசாயக் குடும்பங்கள் குடியேற்றப்பட்டன. இப்பொழுது மகாவலி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வலயம் H பிரதேசத்தில் குடியேற்றங்கள் தொடர்பான அனைத்து நடவடிக்கைகளும் பூர்த்தியடைந்திருப்பதுடன், அங்கு குடியேற்றப்பட்டிருக்கும் குடும்பங்களின் மொத்த எண்ணிக்கை 39,500 ஆக இருந்து வருகின்றது.

1977 ஆம் ஆண்டளவில் இலங்கையின் பொருளாதாரம் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கி வந்தது. அரிசியை உள்ளடக்கிய விதத்தில் இறக்குமதி செய்யப்பட்ட விவசாயப் பண்டங்களின் இறக்குமதிச் செலவு அதிகரித்து வந்தமை ஒரு பிரச்சினையாக இருந்து வந்தது. நாட்டின் மொத்த அரிசித் தேவையில் 69 சதவீதம் மட்டும் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்டதுடன், 31 சதவீதம் அரிசித் தேவையை இறக்குமதிகள் மூலம் ஈடு செய்ய வேண்டியிருந்தது. அது தவிர வேறு பல அத்தியாவசிய விவசாயப் பண்டங்களும் நாட்டுக்குள் இறக்குமதி செய்யப்பட்டு வந்தன.

1977ஆம் ஆண்டில் இலங்கை மின்சார சபையினால் மேற்கொள்ளப்பட்ட மின்சார உற்பத்தி 408 MWh அலகுகளாக இருந்து வந்ததுடன், அது அச்சந்தர்ப்பத்தில் நாட்டில் மின்சாரம் தொடர்பாக நிலவி வந்த கேள்வியை நிறைவேற்றி வைப்பதற்கு போதியதாக இருந்து வரவில்லை. மின்தடை

செயலிழப்பு ஒரு சாதாரண விடயமாக மாறி இருந்ததுடன், வருடத்தில் மின்சாரம் துண்டிக்கப்படும் நாட்களின் எண்ணிக்கை 70 ஆக அதிகரித்திருந்தது.

வேலையில்லாத் திண்டாட்டம் தொடர்பான விகிதம் 17 சதவீதமாகக் காணப்பட்டது. வேலையில்லாத் திண்டாட்டத்தைக் குறைப்பது ஓர் அத்தியாவசியமான அம்சமாக இருந்து வந்ததுடன், அத்தகைய பிரச்சினைகளுக்கு உடனடியான தீர்வுகள் தேவைப்பட்டன.

அவசர அடிப்படையில் இத்தகைய பிரச்சினைகளைக் கையாள்வதற்கான ஓர் படிமுறை என்ற விதத்தில் அப்போதைய அரசாங்கம் மகாவலி பெருந்திட்டத்தின் அமுலாக்கத்தை துரிதப்படுத்துவது தொடர்பான ஒரு முடிவினை 1977 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 12 ஆம் திகதி மேற்கொண்டது.

துரிதப்படுத்தப்பட்ட மகாவலி நிகழ்ச்சித்திட்டம் (இரண்டாவது அபிவிருத்திக் கட்டம்)

மகாவலி பெருந்திட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட ஒரு சில கருத்திட்டங்களை அமுல் செய்வதற்கும், அவற்றை குறுகிய 6 வருட காலப் பிரிவுக்குள் பூர்த்தி செய்வதற்கும் அரசாங்கம் 1977 ஆம் ஆண்டில் தீர்மானித்தது. இக் கருத்திட்டங்களை அமுல் செய்வதற்கென புறம்பான ஒரு அமைச்சும் உருவாக்கப்பட்டது. அதன் பிரகாரம் கொத்மலை, விக்டோரியா, றந்தெனிகல மற்றும் மாதுறுஓயா நீர்த்தேக்கக் கருத்திட்டங்களை ஆரம்பித்து, அமுல் செய்வதற்கென நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. பின்னர் றன்தம்பே கருத்திட்டமும் இந்த நிகழ்ச்சித்திட்டத்துக்குள் சேர்த்துக் கொள்ளப்பட்டது. மாதுறுஓயா தவிர, ஏனைய நீர்த்தேக்கங்களில் நீர்மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டதுடன், அதேநீர் நீர்ப்பாசன நோக்கங்களுக்கும் பயன்படுத்தப்பட்டது. அதன் பிரகாரம் விவசாய குடும்பங்களை குடியேற்றுவதுடன் இணைந்த விதத்தில் மகாவலி C மற்றும் B வலயங்களின் அபிவிருத்தியும் துரிதப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டது. வலயம் B மற்றும் வலயம் C என்பவற்றில் முறையே 30,465 குடும்பங்களும் 45,488 குடும்பங்களும் குடியேற்றப்பட்டன.

இக் கருத்திட்டங்களுக்கென முறையே சுவீடன், பெரிய பிரித்தானியா, கனடா, ஜேர்மனி, ஆகிய நாடுகள் நிதியுதவிகளை வழங்கின. ஆற்றின் கீழ்ப்பகுதி நடவடிக்கைகளுக்கான நிதிகளை உலக வங்கி, ஐரோப்பிய பொருளாதார ஆணைக்குழு, ஜப்பான் மற்றும் குவைத் ஆகிய நாடுகள் பெற்றுக் கொடுத்தன. இக் கருத்திட்டங்களை தொடக்கி வைப்பதற்கென 1979 ஆம் ஆண்டில் இலங்கை மகாவலி அதிகார சபை ஸ்தாபிக்கப்பட்டது. பொறியியல் மற்றும் வடிவமைப்பு நடவடிக்கைகளுக்கு மகாவலி பொறியியல் மற்றும் நிர்மாண முகவரகமும், மீள் குடியேற்ற நடவடிக்கைகளுக்கென மகாவலி பொருளாதார முகவரகமும் உருவாக்கப்பட்டன. துரிதப்படுத்தப்பட்ட மகாவலி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பாரிய நீர்த்தேக்கங்களின் முகாமைத்துவத்துக்கென 1986 ஆம் ஆண்டில் முதன்மை வேலைகள் இயக்குதல், பராமரித்தல் மற்றும் நிர்வாகப் பிரிவு ஸ்தாபிக்கப்பட்டது.

துரிதப்படுத்தப்பட்ட மகாவலி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழான கருத்திட்டங்கள் 1990 ஆம் ஆண்டளவில் பூர்த்தி செய்யப்பட்டதுடன், அத்தகைய கருத்திட்டங்களுக்கூடாக மின்சார உற்பத்தி மற்றும் விவசாயம் போன்ற துறைகளில் கணிசமான அளவிலான முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இந்தப் பின்னணியில், விவசாயத்துறையில் நேரடி முதலீடுகளை

மேற்கொள்ளும் விடயத்தில் அரசாங்கம் தயக்கம் காட்டி வந்ததுடன், அதன் காரணமாக மகாவலி பெருந்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த மொறகஹகந்த நீர்த் தேக்ககக் கருத்திட்டம் பின்னர் அமுல் செய்வதற்கென ஒத்தி வைக்கப்பட்டது. எவ்வாறிருப்பினும், சார்புரீதியில் நீண்ட காலமாக கோப்புக்களுக்கு மட்டும் வரையறுக்கப்பட்டிருந்த இந்தக் கருத்திட்டம் தற்பொழுது அமுல் செய்யப்பட்டு வருகின்றது. இதன் விளைவாக மகாவலி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் பயன்கள் மேலும் விரிவடையும்.

மகாவலி நிகழ்ச்சித்திட்டத்தின் தற்போதைய வகிபங்கு மற்றும் எதிர்கால திட்டங்கள் (மூன்றாவது அபிவிருத்திக் கட்டம்)

மகாவலி நிகழ்ச்சித்திட்டம் நாட்டின் நாலாபக்கங்களிலும் வியாபித்துச் செல்லும் கட்டம் என்ற முறையில் அதன் மூன்றாவது அபிவிருத்திக் கட்டத்தை குறிப்பிட முடியும். மொரகஹகந்த களுகங்க நீர்த்தேக்க கருத்திட்டத்துக்கு ஊடாக, வடக்கு, வட மத்திய, கிழக்கு, வட மேல், மற்றும் மத்திய மாகாணங்களில் அமைந்திருக்கும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான 1200 குளங்களுக்கு நீரை விநியோகிக்கும் நோக்கத்துடன் மொரகஹகந்த - களுகங்க அபிவிருத்திக் கருத்திட்டம் அமுல் செய்யப்பட்டது. எலஹர பிரதேசத்தில் அமைந்திருக்கும் வயல்களுக்கும், பொலன்னறுவை, திருகோணமலை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த அனைத்து பிரதான நீர்த்தேக்கங்களுக்கும் ஆண்டு முழுவதும் தொடர்ச்சியாக நீரை விநியோகம் செய்து, இதன் மூலம் 81,000 ஹெக்டயார் புதிய விவசாயக் காணிகளுக்கு நீர்ப்பாசனம் பெற்றுக் கொடுக்கப்படுகிறது. அதன் ஊடாக விவசாய முன்னேற்றத்தை எடுத்து வருவதும், நாட்டின் சுய தேவைப் பூர்த்திக்கு பங்களிப்புச் செய்வதும், அதன் மின் உற்பத்தி நிலையத்திற்கு ஊடாக உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தின் மூலம் தேசிய மின் கட்டமைப்புக்கு 25 மெகாவோட் மின்சாரத்தை வழங்குவதும் இத்திட்டத்தின் அடிப்படை குறிக்கோள்களாக இருந்து வந்துள்ளன. அதே போல, இக்கருத்திட்டத்தின் மூலம் இடம்பெயர நேரிட்ட மக்களுக்கு தேவையான குடியிருப்புக்களை அமைத்துக் கொடுப்பதுடன், அனைத்து உள்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய புதிய லக்கல நகரத்தை நிர்மாணித்து, மக்கள் உரிமைக்கு பெற்றுக் கொடுக்கும் பாரிய பணியும் இப்பொழுது பூர்த்தியடைந்துள்ளது. இந்தக் கருத்திட்டம் 2019 ஆகஸ்ட் மாதம் பூர்த்தியடையும் பொழுது, அது இலங்கை மகாவலி அதிகார சபையிடம் ஒப்படைக்கப்படவுள்ளது. அதனை அடுத்து, இலங்கை மகாவலி அதிகார சபையின் பிரமாண்டமான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களில் இவ்விதமாக மற்றொரு திட்டம் வெற்றிகரமாக நிறைவு பெறவுள்ளது.

மகாவலி அதிகாரசபை தனது பணிகளை மேலும் விரிவாக்கும் நோக்கத்துடன் உமாஓய பல்நோக்கு அபிவிருத்திக் கருத்திட்டத்தை ஆரம்பித்து வைத்தது. இதற்கு ஊடாக உமாஓய ஆற்றுப் பள்ளத்தாக்கின் நீர், வெலிமட பிரதேசத்தில் அமைக்கப்படும் இரண்டு நீர்த்தேக்கங்களில் சேகரிக்கப்பட்டு, 15.6 கிலோ மீற்றர் நீளமான சுரங்கப் பாதையொன்றுக்கு ஊடாக கிரிந்திஓய பள்ளத்தாக்குக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது. இலங்கையில் அமைக்கப்படும் மிகப் பெரிய சுரங்கப் பாதையாக இது இருந்து வரும். அதற்கு ஊடாக ஆசியாவின் மிகப் பெரிய தரைக் கீழ் மின்னுற்பத்தி நிலையம் ஆண்டொன்றுக்கு 120 மெகாவோட் மின்சாரத்தை உற்பத்தி செய்து, தேசிய மின் கட்டமைப்பு பங்களிப்புச் செய்யும். அதன் மூலம் தேசிய வலுத் தேவையை நிறைவேற்றி வைத்தல், மிகவும் பின்தங்கிய ஊவா மாகாணத்தின் விவசாய விளைதிறனை மேம்படுத்துதல், மக்களின் குடிநீர் தேவைகளை நிறைவேற்றி வைத்தல் என்பவற்றை அடிப்படை நோக்கங்களாக கொண்டு, இக்கருத்திட்டம் இப்பொழுது வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு

வருகின்றது. இது 2019 ஆண்டில் முடிவடையும் பொழுது, இலங்கை மகாவலி அதிகார சபையின் முனைப்பான நீர் முகாமைத்துவ கட்டமைப்புக்குள் உள்வாங்கப்படும்.

இலங்கை மகாவலி அதிகார சபையின் பாரிய நீர்த்தேக்கங்கள் மற்றும் ஏனைய நீர்த்தேக்கங்கள் என்பவற்றை சுத்திகரிக்கும் ஒரு கருத்திட்டமும், அதே போல, நீரேந்து பரப்புக்கள் மற்றும் ஆற்று வடிநிலங்கள் என்பவற்றை பாதுகாக்கும் ஒரு கருத்திட்டமும் ஏற்கனவே இலங்கை மகாவலி அதிகார சபையின் சுற்றாடல் மற்றும் வனவளப் பாதுகாப்பு பிரிவினால் அமுல் செய்யப்பட்டு வருகின்றன.

புதுப்பிக்கத்தக்க வலு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், மகாவலி நீர்த்தேக்கங்களில் மிதக்கும் சூரிய ஒளித் தொகுப்புக்களை நிறுவுவதன் மூலமும், சிறிய அளவிலான நீர்மின் உற்பத்தி கருத்திட்டங்களை அபிவிருத்தி செய்வதன் மூலமும் சுற்றாடலுக்கு உசிதமான விதத்தில் தேசிய வலுத் தேவைக்கு பங்களிப்புச் செய்வதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அதன் மூலம் பாரியளவிலான வருமானம் ஈட்டப்படவுள்ளது. இலங்கை மகாவலி அதிகார சபையின் புதிய உபாய ரீதியான வருமான மார்க்கங்கள் இப்பொழுது இணங்காணப்பட்டு வருகின்றன.

இதே வேளையில், மாதுறுஓய வலதுகரை அபிவிருத்திக் கருத்திட்டம், வளவே வலயம், ரம்பக்கன் ஓய, மகாவலி ‘B’ வலயம், மகாவலி ‘H’ வலயம் போன்ற வலயங்களைச் சூழ மேலும் பல அபிவிருத்திக் கருத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதன் மூலம் இலங்கை மகாவலி அதிகார சபை அதன் மூன்றாவது கட்டத்தின் அனைத்து அடிப்படை குறிக்கோள்களையும் நிறைவேற்றிக் கொள்ளும் பொழுது, நாட்டின் நாலா பக்கங்களிலும் பொருளாதாரம் வலுப்படுத்தப்படவுள்ளது. விவசாயம், நீர்ப்பாசனம், கால்நடை வளங்கள், வலு, சுற்றாடல் பாதுகாப்பு போன்ற துறைகளில் நாட்டுக்கு வழங்கி வரும் உச்சமட்ட பங்களிப்புக்கூடாக இந்த மூன்றாவது அபிவிருத்திக் கட்டத்தை நோக்கி இப்பொழுது மகாவலி அதிகார சபை நகர்ந்து கொண்டிருக்கின்றது.

பணிப்பாளர் சபை தொடர்பான விபரம் - 2017

வரிசை எண்.	பெயர்/பதவி	காலம்
01	**திரு. அநுர திசாநாயக்க** பணிப்பாளர் நாயகம் இலங்கை மகாவலி அதிகார சபை	ஜனவரி - மே 2017
02	**திரு. கோட்டாபய ஜயரத்ன** பணிப்பாளர் நாயகம் இலங்கை மகாவலி அதிகார சபை	மே – டிசம்பர் 2017
03	**பொறியியலாளர் (திரு) எஸ். எஸ். எல். வீரசிங்க** பணிப்பாளர் நாயகம் நீர்ப்பாசன திணைக்களம்	ஜனவரி - பெப்ரவரி 2017
04	**பொறியியலாளர் (திரு.) எம். துரைசிங்கம்** பணிப்பாளர் நாயகம் நீர்ப்பாசன திணைக்களம்	மார்ச் - அக்டோபர் 2017
05	**பொறியியலாளர் (திரு.) எஸ். மோகனராஜா** பணிப்பாளர் நாயகம் நீர்ப்பாசன திணைக்களம்	நவம்பர் - டிசம்பர் 2017
06	**திரு. எம். டீ. ஜே. சி. முரகே** உதவிப் பணிப்பாளர் நிதி அமைச்சு	ஜனவரி - டிசம்பர் 2017
07	**பொறியியலாளர் (திரு.) ஆர். எம். டப். ரத்னாயக** செயலாளர் மகாவலி அபிவிருத்தி, நீர் முகாமைத்துவ அமைச்சு	ஜனவரி – பெப்ரவரி 2017
08	**பொறியியலாளர் (திரு.) என். ஏ. சிசிர குமார** செயலாளர் நீர்ப்பாசன திணைக்களம் - நீர் முகாமைத்துவம்	மார்ச் – அக்டோபர் 2017
09	**பொறியியலாளர் (திருமதி) சீ. எச். தேவேந்திர** மேலதிக செயலாளர் மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு	நவம்பர் – டிசம்பர் 2017
10	**திரு. திலக் பண்டார மஹலேகம் -** உறுப்பினர்	ஜனவரி – டிசம்பர் 2017

சிரேஷ்ட முகாமைத்துவம்

வரிசை எண்.	பதவி	பெயர்
01	பணிப்பாளர் நாயகம்	திரு. அநுர திஸாநாயக்க ஜனவரி – மே 2017
		திரு. எஸ்.எம். கோட்டாபய ஜயரத்ன மே – டிசம்பர் 2017
02	மேலதிக பணிப்பாளர் நாயகம்	-
03	பிரதிப் பணிப்பாளர் நாயகம் (நிர்வாகம் மற்றும் நிதி)	-
04	பிரதிப் பணிப்பாளர் நாயகம் (தொழில்நுட்ப சேவைகள்)	பொறியியலாளர் (திரு) கே.ஜி. பெரேரா
05	பிரதிப் பணிப்பாளர் நாயகம் (அபிவிருத்தி)	-
06	பணிப்பாளர் (ஆளணி மற்றும் நிர்வாகம்)	திருமதி கே.சீ. எஸ் பெர்னான்டோ
07	கருத்திட்ட பணிப்பாளர் (அணைக்கட்டு பாதுகாப்பு மற்றும் நீர் வளங்கள் திட்டமிடல் கருத்திட்டம்)	பொறியியலாளர் (திரு) டி.சி. எஸ் எலகந்த
08	கருத்திட்ட பணிப்பாளர் (மொரகஹகந்த களுகங்க அபிவிருத்தி கருத்திட்டம்)	பொறியியலாளர் (திரு) ஆர்.பி. தென்னகோன்
09	கருத்திட்ட பணிப்பாளர் (மகாவலி ஒருங்கிணைந்த கருத்திட்டம்)	பொறியியலாளர் (திரு) எம்.பி.எம். பெரேரா
10	பணிப்பாளர் (நிதி)	திரு. ரீ.டி. பிரியந்த
11	பணிப்பாளர் (உள்ளக கணக்காய்வு)	-
12	பணிப்பாளர் (மகாவலி நிலையம்)	திரு. அருண பிரபாத் லேகம்கே
13	பணிப்பாளர் (விவசாயம்)	திரு டப்ளியு. ஈ.டி மெல்
14	பணிப்பாளர் (மீன்பிடி மற்றும் கால்நடை வளங்கள்)	
15	பணிப்பாளர் (காணி)	திரு. டி.ஏ.ஏ.யூ. குணசேகர
16	பணிப்பாளர் (நிறுவன அபிவிருத்தி)	திரு. மகேந்திர அபேவர்தன
17	பணிப்பாளர் (வணிக அபிவிருத்தி)	-
18	பணிப்பாளர் (பொறியியல் வடிவமைப்பு மற்றும் திட்டமிடல்)	பொறியியலாளர் (திருமதி) பி. தலகல
19	பணிப்பாளர் (ஆற்றின் கீழ் பிரதேச அபிவிருத்தி)	பொறியியலளர் (திரு) கே.ஜி. பெரேரா
20	பணிப்பாளர் (முதன்மை வேலைகள், நிர்வாகம் மற்றும் பராமரிப்பு)	-
21	பணிப்பாளர் (ஆற்று வடிநில முகாமைத்துவம்)	பொறியியலாளர் (செல்வி) சந்திரா செனரத்
22	பணிப்பாளர் (காணிப் பயன்பாட்டு திட்டமிடல்)	திரு. எச்.எச். லீலானந்த
23	பணிப்பாளர் (வனவளம் மற்றும் சுற்றாடல்)	திரு. ஏ.எம்.கே.பி. அத்தநாயக்க
24	பணிப்பாளர் (நீர் முகாமைத்துவ செயலகம்)	பொறியியலாளர் (செல்வி) ஜீ.கே.ரீ. சமரதுங்க
25	பணிப்பாளர் (திட்டமிடல் மற்றும் செயற்படுத்தல்)	திரு. மஹிந்த குணரத்ன
26	பணிப்பாளர் (தலைமை அலுவலக செயற்பாடுகள்)	திருமதி டீ.கே.வீ. விஜயவீர
27	பணிப்பாளர் (பாதுகாப்பு)	மேஜர் (திரு) எல்.பி.ஏ. ஜயவர்தன
28	பணிப்பாளர் (சட்டம்)	திருமதி ஆர்.எல். ராஜபக்ஷ
29	வதிவிடக் கருத்திட்ட முகாமையாளர் (வலயம் B)	திரு. எஸ்.ரி. தந்தநாராயண
30	வதிவிடக் கருத்திட்ட முகாமையாளர் (வலயம் C)	திரு. கே.ஏ.சீ. விமல்குமார
31	வதிவிடக் கருத்திட்ட முகாமையாளர் (வலயம் D)	திரு. எம்.எம். அசங்க குணதிலக
32	வதிவிடக் கருத்திட்ட முகாமையாளர் (வலயம் L)	திரு. எச்.கே.பீ ஜயநாத
33	வதிவிடக் கருத்திட்ட முகாமையாளர் (வலயம் G)	திரு. ஏ.எம்.எச். பண்டா
34	வதிவிடக் கருத்திட்ட முகாமையாளர் (வலயம் H)	திரு. ஐ.எம்.யூ.கே. குமார
35	வதிவிடக் கருத்திட்ட முகாமையாளர் (விக்டோரியா)	திரு. ஐ.எம்.யூ.கே. குமார
36	வதிவிடக் கருத்திட்ட முகாமையாளர் (ஹுருலுவெவ)	திரு. கே.ஏ. ஜயசிங்க
37	வதிவிடக் கருத்திட்ட முகாமையாளர் (ரம்பக்கன்ஓய)	திரு. ஏ.எம்.ஏ.பி.ஜி. குணவர்தன
38	வதிவிடக் கருத்திட்ட முகாமையாளர் (வளவே)	திரு. ஆர்.பி.சிரிசேன

2017 ஆம் ஆண்டு தொடர்பாக பணிப்பாளர் நாயகத்தின் மீளாய்வு குறிப்பு

மகாவலி பல்நோக்கு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தை அமுல் செய்வதற்கென 1979 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க சட்டத்தின் கீழ் இலங்கை மகாவலி அதிகார சபை ஸ்தாபிக்கப்பட்டது. நாட்டின் மொத்த நிலப்பரப்பில் சுமார் மூன்றில் ஒரு பங்கு பிரதேசத்தில் வியாபித்திருக்கும் மகாவலி பிரதேசத்தில் சுமார் பத்து இலட்சம் மக்கள் வாழ்ந்து வருகின்றார்கள். உலர் வலயத்தின் விவசாய, மீன்பிடி, மின்சாரம், கால்நடை வளங்கள் போன்ற துறைகளில் உற்பத்தித் திறனை அதிகரித்தல், வெள்ளக் கட்டுப்பாடு, புதிய தொழில்வாய்ப்புக்களை உருவாக்குதல் என்பவற்றுக்கு ஊடாக நாட்டின் சுய தேவைப் பூர்த்தியை எடுத்து வருவதே மகாவலி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் ஆரம்பக் குறிக்கோள்களாக இருந்து வந்தன. தற்பொழுது அந்த குறிக்கோள்களுக்கு அப்பால் சென்று விவசாய விளைதிறனை உயர்த்துதல், செயல்திறன் மிக்க நீர் முகாமைத்துவம், நீர்ப்பாசனக் கட்டமைப்புக்கள் மற்றும் அவற்றுடன் சம்பந்தப்பட்ட உட்கட்டமைப்பு வசதிகனை வினைத்திறன் மிக்க விதத்தில் பராமரித்து வருதல், இயக்குதல் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைளை தொடர்ச்சியாக முன்னெடுத்தல், சூரிய ஒளி மின் உற்பத்தி என்பவற்றை உள்ளடக்கும் விதத்தில் இக்குறிக்கோள்கள் விரிவாக்கப்பட்டுள்ளன. மகாவலி அபிவிருத்தி திட்டத்தில் முன்னர் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும், இதுவரையில் அமுல் செய்யப்படாதிருந்த மொரகஹகந்த களுகங்க கருத்திட்டம், வட மேல் மாகாண கால்வாய் அபிவிருத்தி கருத்திட்டம், வடமத்திய மாகாண கால்வாய் அபிவிருத்தி கருத்திட்டம், மாதுறுஓய வலதுகரை அபிவிருத்திக் கருத்திட்டம், மினிப்பே கால்வாய் அபிவிருத்தி கருத்திட்டம், மேல் எலஹர கால்வாய் அபிவிருத்திக் கருத்திட்டம் போன்ற கருத்திட்டங்களும் இப்பொழுது செயற்படுத்தப்பட்டு வருகின்றன. இது தவிர, வெலிஓய, ரிதிமாலியத்த மற்றும் உமாஓய பல்நோக்கு அபிவிருத்திக் கருத்திட்டங்கள் என்பனவும் அமுல் செய்யப்பட்டு வருகின்றன. உமாஓய பல்நோக்கு அபிவிருத்திக் கருத்திட்டத்தின் பணிகள் ஏற்கனவே மிகவும் வெற்றிகரமான விதத்தில் பூர்த்தியடைந்து வருகின்றன. இதன் மூலம் டயரபா மற்றும் புஹுல்பொல ஆகிய இடங்களில் இரண்டு நீர்த்தேக்கங்களை நிர்மாணித்து, உமாஓய ஆற்று வடிநிலத்தின் நீரை கிரிந்திஓய வடிநிலத்திற்கு எடுத்துச் செல்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதன் மூலம் வருடாந்தம் 120 மெகாவோட் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டு, தேசிய மின் கட்டமைப்புக்கு வழங்கப்படவுள்ளது. தற்பொழுது நாட்டில் பெருமளவுக்கு பின்தங்கிய ஒரு பிரதேசமாக இருந்து வரும் மொனராகலை மாவட்டத்திற்கு நீர் விநியோகத்தை பெற்றுக் கொடுப்பதன் மூலம் விவசாய நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்வதற்கும், அப்பிரதேசங்களில் வாழ்ந்து வரும் மக்களின் குடிநீர் தேவையை நிறைவேற்றி வைப்பதற்கும் இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

தற்பொழுது நீர்த்தேக்கங்களை துப்பரவு செய்யும் ஒரு பாரிய கருத்திட்டமும், நீரேந்து பிரதேசங்கள் மற்றும் ஆற்று வடிநிலங்கள் என்பவற்றை பாதுகாக்கும் ஒரு கருத்திட்டமும் அதிகார சபையின் சுற்றாடல் மற்றும் வனவளப் பிரிவினால் அமுல் செய்யப்பட்டு வருகின்றன. இது தவிர, உலக வங்கி கருத்திட்டத்தின் மூன்றாவது கட்டத்தைச் சேர்ந்த இவ்வருடம் தொடக்கம் அமுல் செய்யப்பட்டிருக்கும் ரூ 3000 மில்லியனுக்கு மேற்பட்ட முதலீடுகளைக் கொண்ட திட்டங்களுக்கு ஊடாக மகாவலி பிரதேசத்துக்குள் பாரிய அபிவிருத்தி கருத்திட்டங்கள் அமுல் செய்யப்படவுள்ளன. மொரகஹகந்த களுகங்க நீர்த்தேக்க திட்டம், மினிப்பே கால்வாய் திட்டம் என்பவற்றுக்கு ஊடாக வரலாற்றில் மேற்கொள்ளப்பட்ட மிகப்பெரிய நிதி முதலீடுகளுடன் மகாவலி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் மிகவும் வலுவான ஒரு பயணத்தை இப்பொழுது முன்னெடுத்து வருகின்றது. அதே போல, வருடாந்த ரூபா 3000 மில்லியன் வருமானத்தை ஈட்டும் இலக்குடன் மின்சாரம், வர்த்தக காணிகள், கனிப்பொருள் விநியோகம், 12 மகாவலி நீர்த்தேக்கங்களில் மிதக்கும் சூரிய ஒளித் தொகுப்புக்களை அமைத்தல் போன்ற நடவடிக்கைகள் இவ்வாண்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் நாட்டின் தேசிய மின் தொகுப்புக்கு மேலும்

அதிகளவிலான மின்சாரம் வழங்கப்படவுள்ளது. இச்செயற்பாடுகளுக்கு ஊடாக 3000 மில்லியன் ரூபா வருமானத்தை உருவாக்கிக் கொள்வதற்கும் எதிர்பார்க்கப்படுகிறது. அதன் பிரகாரம் இலங்கை மகாவலி அதிகார சபை மேல் மாகாணம் தவிர்ந்த நாட்டின் ஏனைய அனைத்து மாகாணங்களிலும் பரவலாக தனது செயற்பாடுகளை முன்னெடுக்கும் விதத்தில் பாரிய நிகழ்ச்சித் திட்டமொன்று அமுல் செய்யப்பட்டு வருகின்றது.

மேலே குறிப்பிடப்பட்ட பணிகளை நிறைவேற்றிக் கொள்வதற்குத் தேவையான தூரநோக்கு, வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனைகள் என்பவற்றை வழங்கி வரும் மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் விடயங்களுக்கு பொறுப்பான அமைச்சரான அதி மேதகு ஜனாதிபதி அவர்களிடமிருந்து எங்களுக்கு கிடைக்கும் ஊக்குவிப்பை பெருமளவுக்கு பாராட்டுகின்றோம். அதே போல, கௌரவ மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் ராஜாங்க அமைச்சர் மற்றும் அமைச்சின் செயலாளர் ஆகியோரின் நெறிப்படுத்தலுடன் மேலே குறிப்பிடப்பட்ட இலக்குகளை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்வதற்கென பணிகளை மேற்கொண்டு வரும் மகாவலி அதிகார சபையின் ஒட்டுமொத்த ஊழியர்களுக்கும், கருத்திட்ட ஊழியர்களுக்கும் இச்சந்தர்ப்பத்தில் எமது நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.



கலாநிதி டீ. எம். எஸ். திசாநாயக்க
பணிப்பாளர் நாயகம்
இலங்கை மகாவலி அதிகார சபை

பணிப்பாளர் சபையின் சுருக்கக் குறிப்பு

இலங்கை மகாவலி அதிகார சபையின் பணிப்பாளர் சபையின் அறிக்கையை 31.12.2017 திகதியில் நிறுவனத்தின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்களுடன் இத்துடன் சமர்ப்பிக்கின்றோம்.

வருடம் தொடர்பான மீளாய்வு

பணிப்பாளர் நாயகம் அவர்களினால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் மீளாய்வில் 2017 டிசம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த வருடத்தின் போது மேற்கொள்ளப்பட்ட நிறுவனத்தின் செயற்பாடுகள் தொடர்பான விரிவான ஒரு கூற்று உள்ளடக்கப்பட்டுள்ளது.

அதே போல நிறுவனத்தின் சொத்துக்களை பாதுகாத்தல், ஊழல், மோசடி மற்றும் ஏனைய முறைகேடுகள் என்பவற்றை கண்டறிதல் மற்றும் இடர்நேர்வுகளை குறைத்துக் கொள்ளல் என்பவற்றை நோக்காகக் கொண்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான ஒரு சிறந்த முகாமைத்துவத்துடன் நிறுவனம் செயற்பட்டுள்ளது.

மேலும், இலங்கை மகாவலி அதிகார சபையின் அனைத்து ஊழியர்களும், தம்மிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கும் பணிகளை நிறைவேற்றி வைக்கும் விடயத்தில் காட்டியிருக்கும் அதியுயர் அர்ப்பணிப்புணர்வு தொடர்பாக பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் என்ற முறையில் நாங்கள் எமது நன்றியினை அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கின்றோம்.



பொறியியலாளர் (திரு.) ஆர். எம். டப்ளியூ. ரத்நாயக்க
செயலாளர்,
நீர்ப்பாசன மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ அமைச்சு



பொறியியலாளர் (திரு.)
எஸ். எஸ். எல். வீரசிங்க
பணிப்பாளர் நாயகம்
நீர்ப்பாசன திணைக்களம்




பொறியியலாளர் (திரு.) எஸ். மோகனராஜா
பணிப்பாளர் நாயகம்
நீர்ப்பாசன திணைக்களம்



திரு. எம். டி. ஜே. சி. முரகே
உதவிச் செயலாளர்
வர்த்தக மற்றும் முதலீட்டுக் கொள்கைகள் திணைக்களம்



பொறியியலாளர் (திருமதி)
சீ.எச். தேவேந்திர
செயலாளர்
நீர்ப்பாசன திணைக்களம்



திரு. திலக் பண்டார மஹலேகம்
உறுப்பினர்

கணக்காய்வு கமிட்டியின் அறிக்கை – 2017

இலங்கை மகாவலி அதிகார சபையின் கணக்காய்வு கமிட்டி பணிப்பாளர் சபையின் நிறைவேற்றுத் தரம் சாராத மூன்று பணிப்பாளர்களை கொண்டு அமைக்கப்பட்டிருப்பதுடன், திறைசேரியை பிரதிநிதித்துவம் செய்யும் பணிப்பாளர் அக்கமிட்டியின் தலைவராக செயற்பட்டு வருகின்றார்.

<u>வருடத்தின் போது கணக்காய்வு கமிட்டியின் உறுப்பினர்கள்</u>

- திரு. எம் .டி. ஜே. சி. முரகே - கமிட்டியின் தலைவர் (திறைசேரி பிரதிநிதி)
- பொறியியலாளர் (திரு) என். ஏ. சிசிர குமார - உறுப்பினர்
- திரு. திலக் பண்டார மஹாலேகம் - உறுப்பினர்

<u>கமிட்டி கூட்டங்களில் பங்கேற்றவர்கள்</u>

- பிரதிப் பணிப்பாளர் (நிர்வாகம் மற்றும் நிதி)
- பணிப்பாளர் (நிதி)
- பணிப்பாளர் (உள்ளக கணக்காய்வு)
- கணக்காய்வாளர் நாயகத்தை பிரதிநிதித்துவம் செய்யும் அரசாங்க கணக்காய்வு அதிகாரி ஒருவர்
- தேவையின் பிரகாரம் அழைக்கப்படும் ஏனைய சம்பந்தப்பட்ட அதிகாரிகள்

<u>கமிட்டியின் பணிகள்</u>

- ❖ உள்ளகக் கட்டுப்பாட்டு செயன்முறையை கண்காணித்தல், மீளாய்வு செய்தல் மற்றும் தேவையான சந்தர்ப்பங்களில் மீளமைப்புச் செய்தல், வருடாந்த கணக்காய்வு திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்குதல்.

- ❖ கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை மற்றும் உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் என்பவற்றை மீளாய்வு செய்தல், ஐய வினாக்கள் மூலம் நிலவி வரும் பிரச்சினைகளை இனங்கண்டு, பிரச்சினைகளை தீர்த்து வைப்பதற்கு தேவையான அறிவுறுத்தல்களை வழங்குதல்.

- ❖ 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 142 (C) உட்பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் நாயகத்தினால் எழுப்பப்பட்டிருக்கும் விடயங்களை கவனத்தில் எடுத்து, அதிகார சபையின் உள்ளக கட்டுப்பாட்டு முறைகளை ஒழுங்குபடுத்திக் கொள்வதற்கு அறிவுறுத்தல்களை வழங்குதல்.

- ❖ நிறுவனத்தின் செயலாற்றுகை அறிக்கைகளை காலாண்டு அடிப்படையில் மீளாய்வு செய்து, இணக்கப்படுத்துதல்.

<u>உள்ளக கணக்காய்வு பிரிவு</u>

நிறுவனத்துக்குள் ஆக்கபூர்வமான செயலாற்றுகையை உறுதிப்படுத்திக் கொள்ளும் பொருட்டு நிதிக் கணக்காய்வு, தொகுதி பகுப்பாய்வு, செயலாற்றுகை பகுப்பாய்வு மற்றும் விசேட புலனாய்வுகள் என்பவற்றை மேற்கொள்ளும் நோக்கத்துடன் இலங்கை மகாவலி அதிகார சபையின் உள்ளக கணக்காய்வு பிரிவு ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. அப்பிரிவினால் 2017 ஆம் வருடத்தின் போது கணக்காய்வு கமிட்டியின் ஆலோசனையின் பிரகாரம், ஓர் உள்ளக கணக்காய்வு திட்டத்தின் மூலம் அதிகார சபையின் உள்ளக கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டதுடன், செயல்திறனற்ற நடைமுறைகளை இல்லாதொழித்தல், உள்ளக கட்டுப்பாட்டினை விருத்தி செய்தல், ஊழல் மற்றும் மோசடிகள் ஏற்படக் கூடிய வாய்ப்புக்களை

குறைக்கும் விதத்தில் செயற்படுதல் என்பவற்றுக்கென இப்பிரிவின் மூலம் தொகுதி கணக்காய்வு முறைமையியல் ஒன்றை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

2017 ஆம் வருடத்தின் போது இடம்பெற்ற முன்னேற்றம்

- உள்ளக கணக்காய்வு திட்டத்தின் கீழ் வருடத்தின் போது 19 கணக்காய்வு அறிக்கைகள் வெளியிடப்பட்டமை.

- 20 புலன் விசாரணைகள் நடத்தப்பட்டு, புலன் விசாரணை அறிக்கைகளை வழங்கியமை.

- கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கூட்டங்கள் 03 நடத்தப்பட்டமை.

- கணக்காய்வு ஐய வினாக்கள் தொடர்பாக வழங்கப்பட்ட பதில்கள் தொடர்பாக முன்னெடுக்கப்பட்டிருக்கும் நடவடிக்கைகளை கவனத்தில் எடுத்து, பரிந்துரைகளை அமுல் செய்வதற்கு அறிவுறுத்தல்களை வழங்குதல்.

பரிந்துரை

மேலே குறிப்பிடப்பட்ட செயற்பாடுகளின் போது இனங்காணப்பட்ட பிரச்சினைகளை சரி செய்து கொள்ளுமாறு அறிவுறுத்தல் வழங்கி கமிட்டியினால் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகளின் அடிப்படையில், முகாமைத்துவத்தினால் நிறுவனத்துக்குள் எதிர்காலத்தில் தவறுகளை நிவர்த்தி செய்து கொள்வதற்கென நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த 7 வருடங்களின் போது சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள்

	2017	2016	2015	2014	2013	2012	2011
	(ரூ.'000)	(ரூ.'000)	(ரூ.'000)	(ரூ.'000)	(ரூ.'000)	(ரூ.'000)	(ரூ.'000)
சொத்துக்கள்							
நடைமுறை அல்லாத சொத்துக்கள்							
இயந்திரம், உபகரணம், பொறித்தொகுதி	4,116,187	4,195,724	4,294,893	4,259,208	4,549,301	3,733,498	4,011,792
ஏனைய நிதிச் சொத்துக்கள்							
இடம்பெற்று வரும் வேலைகள்	78,552	41,301	74,286	62,506	48,362	12,821	
முதலீடுகள்	187,531	178,556	152,577	175,359	166,731	135,392	135,392
நடைமுறை அல்லாத சொத்துக்களின் மொத்தம்	**4,382,270**	**4,415,581**	**4, 521,756**	**4,497,093**	**34,764,394**	**3,881,711**	**4,47,184**
மூலதன சொத்துக்கள்	134,578	101,940					
பதிவழித்தல்கள்	859	859					
நடைமுறைச் சொத்துக்கள்							
பொருட்கள் / கையிருப்புக்கள்	184,815	168,173	157,428	180,890	174,028	161,801	157,725
வியாபார சொத்துக்கள்	15,875	22,630					
கிடைக்க வேண்டியவை	2,084,069	1,730,015	1,307,077	1,274,329	1,150,958	898,804	684,392
முன் கொடுப்பனவுகள்	3,896	8,754	5,172		38	1,548	19,470
வங்கி உத்தரவாதங்கள்	6,164	4,153	1,372	837	905	2,210	2,160
காசு, காசுக்கு இணையானவை	343,312	312,750	429,588	190,391	140,950	121,802	143,521
மொத்த நடைமுறை சொத்துக்கள்	2,638,131	2,246,475	1,900,637	1,646,447	1,466,879	1,186,165	1,007,268
மொத்த சொத்துக்கள்	**7,155,838**	**6,764,855**	**6,422,393**	**6,143,521**	**6,231,273**	**5,067,876**	**5,154,452**
நடப்பு பொறுப்புக்கள்							
செலுத்த வேண்டியவை	879,967	376,737	341,286	491,622	528,482	478,223	364,983
குத்தகைகள் - அலயன்ஸ் பினான்ஸ் கம்பெனி	2,153	3,080					
திரண்ட செலவுகள்	175,733	122,286	46,159	207,705	87,145	61,525	47,494
மொத்த நடைமுறை பொறுப்புக்கள்	1,057,853	502,103	387,445	699,327	615,627	539,748	142,477
பணிக்கொடைக்கான ஒதுக்குகள்	1,388,101	1498,288	1,551,379	1,311,876	1,157,688	1,077,205	1,022,674
வங்கி கடன்கள்		2455					
தாமதப்படுத்தப்பட்ட வரி	612	612	612	612	612	612	612
குத்தகைகள்	271	2,653	11,247	14,329	6,243	9,269	
மொத்த நடைமுறை அல்லாத சொத்துக்கள	1,388,984	1,495,008	1,563,838	1,326,817	1,164,543	1,087,086	1,023,286
மொத்த பொறுப்புக்கள்	**2,446,837**	**1,997,111**	**1,950,683**	**2,026,144**	**1,780,170**	**1,626,834**	**1,435,763**
மொத்த தேறிய சொத்துக்கள்	**4,709,001**	**4,767,744**	**4,471,710**	**4,117,386**	**4,451,103**	**3,441,042**	**3,718,689**
தேறிய சொத்துக்கள்							
திரண்ட நிதியம்	24,407,260	24,066,161	23,702,950	23,383,849	23,224,435	23,116,473	23,009,463
வருமான ஒதுக்கு	(23,755,208)	52,121	53,992	67,466	53,560	53,560	53,560
மீள் மதிப்பீட்டு இலாபம்	4,006,082	4,019,027	4,021,721	3,837,266	3,851,627	3,061,097	3,061,146
மு/கொ வருமான செலவுக் கணக்கு மீதி	50,865	(23,369,566)	(23,276,474)	(23,171,205)	(22,678,520)	(22,787,889)	(22,405,480)
மொத்த தேறிய சொத்துக்கள் / பங்கு மூலதனம்	**4,708,999**	**4,767,743**	**4,502,189**	**4,117,377**	**4,451,102**	**3,443,240**	**3,718,689**

இலங்கை மகாவலி அதிகார சபையின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் கம்பெனிகளின் பணிப்பாளர் சபை – 2017

வரிசை எண்	கம்பெனி	தலைவர்	பணிப்பாளர் சபை	தலைமை அலுவலக முகவரி
01	வ/ப மகாவலி கால்நடை வளங்கள் மற்றும் விவசாய தொழில்முயற்சிகள் (தனியார்) கம்பெனி		1.திரு. பராக்கிரம அபேவர்தன 2. திரு. எட்வர்ட் டி மெல் (பணிப்பாளர்) 3. திரு. ஒஸ்மன்ட் டி சில்வா (பணிப்பாளர்)	இல. 260/20, பேஸ்லைன் வீதி, கொழும்பு 09
02	வ/ப மகாவலி ஆலோசனை சேவைகள் பணியகம் (தனியார்) கம்பெனி	டாக்டர் ஹர்ஷ சமரவீர	1. திரு. கே. எல். எஸ். சஹபந்து 2. பொறியியலாளர் திரு. எல் . ஆர் எச். பெரேரா	இல. 11, ஜாவத்த வீதி, கொழும்பு 05
03	இயற்கை வளங்கள் முகாமைத்துவ சேவைகள் (தனியார்) கம்பெனி	பொறியியலாளர் (திரு.) ஏ.ஏ.வி. டயஸ்	1. பொறியியலாளர் திரு. பீ. டப். என்.டப். செனவிரத்ன பண்டா 2. திரு. என். எம்.கே.பி. அத்தனாயக்க 3. திரு. எல். எம். தர்மசிரி 4. திரு. எம்.ஜீ. அபேரத்ன பண்டார (கம்பனி செயலாளர்)	அணைக்கட்டு பிரதேசம், பொல்கொல்ல, கண்டி

நிர்வாக அறிக்கை

பாகம் I

முதலாவது அத்தியாயம்

இலங்கை மகாவலி அதிகார சபையின் ஸ்தாபிதம் மற்றும் அதன் உள்ளடக்கம்

1979 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் இலங்கை மகாவலி அதிகார சபை ஸ்தாபிக்கப்பட்டிருப்பதுடன், அச்சட்டத்தின் 12 ஆம் பிரிவின் கீழ் குறிப்பிட்ட ஒரு விசேட பிரதேசத்தில் அல்லது ஒரு விசேட பிரதேசம் தொடர்பாக அதிகார சபையின் கருமங்கள் பின்வரும் விதத்தில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன:

(அ) நீர்த்தேக்கங்கள், நீர்ப்பாசன நீர் விநியோக அமைப்புக்கள் என்பவற்றை நிர்மாணித்து, இயக்குதல் மற்றும் மின்சார உற்பத்தி, மின்சார விநியோகம் என்பவற்றுக்கான இயந்திர உபகரணங்களை நிறுவுதல் என்பவற்றையும் உள்ளடக்கிய விதத்தில் மகாவலி கங்கை அபிவிருத்தி திட்டத்தை திட்டமிடுதல் மற்றும் அமுல் செய்தல்.

எவ்வாறிருப்பினும், மின்சார விநியோகம் தொடர்பான கடமைகள், வேறேதேனும் எழுத்து மூலமான ஒரு சட்டத்தின் கீழ் அவ்வாறு செய்வதற்கென அதிகாரத்தை பெற்றிருக்கும் வேறு ஓர் அதிகார சபையினாலும் மேற்கொள்ளப்பட முடியும்.

(ஆ) முழுமையான, ஒருங்கிணைந்த அபிவிருத்தியை போஷித்து வளர்த்தல் மற்றும் அந்த அபிவிருத்தியை தக்க வைத்துக் கொள்ளல்.

(இ) விவசாயத் துறையின் உற்பத்தித்திறன் மற்றும் வேலைவாய்ப்பு ஆற்றல் என்பவற்றை உயர் மட்டத்தில் நிலை நிறுத்துதல். அத்துடன், விவசாய பொருளாதார அபிவிருத்தியை எடுத்து வருதல் மற்றும் உறுதிப்படுத்திக் கொள்ளல்.

(ஈ) பௌதீகச் சூழலை பாதுகாத்தல் மற்றும் பராமரித்து வருதல்.

(உ) பொதுமக்களின் நலனோம்பல் மற்றும் கலாசார முன்னேற்றம் என்பவற்றை விருத்தி செய்தல் மற்றும் நிர்வகித்தல்.

(ஊ) விவசாய அபிவிருத்தியில் உள் மற்றும் வெளியார் மூலதனத்தை பயன்படுத்துதல், மேம்படுத்துதல் மற்றும் உறுதிப்படுத்திக் கொள்ளல்.

(எ) மகாவலி கங்கை அபிவிருத்தி திட்டத்தை திட்டமிடுவதிலும், அமுல் செய்வதிலும் அரசாங்க திணைக்களங்கள், அரச நிறுவனங்கள், உள்ளூராட்சி நிறுவனங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சபைகள், தனியார் அல்லது வேறு எவரேனும் நபர்கள் ஆகிய தரப்புக்களின் ஒத்துழைப்பை பெற்றுக் கொள்ளல் மற்றும் உறுதிப்படுத்திக் கொள்ளல்.

இலங்கை மகாவலி அதிகார சபையின் கருமங்கள்

இலங்கை மகாவலி அதிகார சபையின் ஒவ்வொரு விடயப் பரப்பின் கீழும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் கருத்திட்டங்கள் மற்றும் கள அலுவலகங்கள் என்பவற்றின் செயற்பாடுகளை ஒருங்கிணைத்தல் செயற்பாடு பணிப்பாளர் நாயகத்தின் பணிப்புரையின் கீழ் பிரதிப் பணிப்பாளர் நாயகங்கள், பணிப்பாளர்கள், கருத்திட்ட பணிப்பாளர்கள் மற்றும் வதிவிட கருத்திட்ட முகாமையாளர்கள் ஆகியோரினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதன் பிரகாரம், பின்வரும் கருமங்களை இலங்கை மகாவலி அதிகார சபை நிறைவேற்றியுள்ளது:

- தொகுதி திட்டம் மற்றும் வருடாந்த செயல் திட்டம் என்பவற்றின் பிரகாரம் நிறுவனத்தின் முன்னேற்றத்தை மாதாந்த அடிப்படையில் மீளாய்வு செய்து, தேவையான தலையீடுகளின் மூலம் குறிப்பிட்ட இலக்குகளை நிறைவேற்றிக் கொள்ளல்.

- சொத்துக்களை பராமரித்தல் மற்றும் நிர்வகித்தல் தொடர்பான உரிய திட்டமொன்றின் பிரகாரம் செயற்படுவதன் மூலம் சொத்துக்களை கையுதிர்த்தல்.

- கால அட்டவணையின் பிரகாரம் மொறகஹகந்த - களுகங்க நீர்த்தேக்கம் மற்றும் கிவுல்ஓய நீர்த்தேக்கம் என்பவற்றை நிர்மாணித்தல்.

- வலயம் B வலது கரை மற்றும் வலயம் L என்பவற்றின் நீர்ப்பாசனத்தை பெற்றுக் கொள்ளும் நிலப்பரப்பினை அதிகரித்துக் கொள்வதற்கென பிரதேசங்களை இனங்கண்டு, பூர்வாங்க சுற்றாடல் ஆய்வுகளை மேற்கொள்ளல்.

- விவசாயத் துணைச் சேவைகளின் மேம்பாடு, விவசாய மேம்பாடு மற்றும் வருமான உருவாக்க நிகழ்ச்சித்திட்டங்களை விருத்தி செய்தல் மற்றும் நாட்டில் உணவுப் பாதுகாப்பினை ஏற்படுத்துதல்.

- நீர்ப்பாசன கட்டமைப்புக்களின் பராமரிப்பு, முகாமைத்துவம் என்பவற்றை விவசாயிகள் அமைப்புக்களிடம் ஒப்படைக்கக் கூடிய விதத்தில் விவசாயிகள் அமைப்புக்களை பலப்படுத்துவதற்கென உத்தியோகத்தர்கள் மற்றும் விவசாயிகள் பிரதிநிதிகள் ஆகியோருக்கு வலுவூட்டுதல்.

- "செல்வச் செழிப்புமிக்க தேசமொன்றுக்கு மகாவலி கால்நடை உற்பத்திகள்" என்ற தொனிப் பொருளின் கீழ் மகாவலி குடியேற்றவாசிகள் சமூகத்தினரின் வாழ்வாதார அபிவிருத்திக்கென கால்நடை வளங்கள் துறைக்கு வலுவூட்டுதல்.

- விவசாய நிலங்கள் தொடர்பாக பற்றாக்குறையை எதிர்நோக்கி வரும் மகாவலி குடியேற்றவாசிகளின் இரண்டாவது மற்றும் மூன்றாவது தலைமுறையினருக்கு பொருளாதார அபிவிருத்தியையும், தொழில் உருவாக்கத்தையும் எடுத்து வரும் பொருட்டு பாரம்பரிய விவசாயத் துறைக்கு வெளியிலான தொழில் முதலீட்டு கருத்திட்டங்களுக்கு அவர்களை நெறிப்படுத்துதல் மற்றும் வழிகாட்டுதல்.

- அனைத்து மட்டங்களையும் சேர்ந்த அதிகாரிகள் மற்றும் உத்தியோகத்தர்கள் ஆகியோரின் ஆற்றல் அபிவிருத்திக்கென செயற்படுதல்; ஊழியர்கள் தொடர்பான தகவல்களை கணினியில் உட்படுத்துதல் மற்றும் e - மனிதவள முகாமைத்துவ தொகுதியொன்றை அறிமுகம் செய்து வைத்தல்.


- மத்திய அரசு நிறுவனங்களுடன் கலந்துரையாடி, சாகுபடி பருவ செயற்பாட்டுத் திட்டமொன்றை தயாரித்து, நீர்ப்பாசனம், குடியிருப்புக்கள், நீர் மின் வலு உற்பத்தி, வீடுகளுக்கான மின்சார விநியோகம் மற்றும் வீடுகளுக்கான நீர் விநியோகம் என்பவற்றுக்கென முதன்மை நீர்த்தேக்கங்களிலிருந்து நீரை ஒதுக்குதல்.

- வலயங்கள் B, C, H, L, D மொறகஹகந்த, ஹுரூலுவெவ, வளவே, விக்டோரியா மற்றும் ஒரு புதிய வலயமாக பிரகடனம் செய்யப்பட்டிருக்கும் ரம்பக்கன்ஓயா ஆகிய கருத்திட்டங்களில் பயிர்பன்முகப்படுத்தல், சமூக, பொருளாதார அபிவிருத்தி மற்றும் தொழில் வாய்ப்புக்களின் உருவாக்கம் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

- நீர் முகாமைத்துவம், மனித வள அபிவிருத்தி, கால்நடை வள அபிவிருத்தி, விவசாய அபிவிருத்தி, மண் மற்றும் நீர் பாதுகாப்பு, நீர்ப்பிரி நிலங்களின் முகாமைத்துவம், சுற்றாடல் மாசடைதல் மற்றும் நீர் மாசடைதல் தொடர்பாக சமூகத்திற்கு அறிவூட்டுதல்.

- முதன்மை நீர்த்தேக்கங்களின் நீர் திசை திருப்பல் அளவுகளை பாதுகாப்பான விதத்தில் மேற்கொள்ளும் பொருட்டு பயனுள்ள செயற்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்களை உருவாக்குதல், அமுல் செய்தல் மற்றும் விவசாய அமைப்புக்களுக்கு அது தொடர்பாக அறிவூட்டுதல்.

1.1 இலங்கை மகாவலி அதிகார சபையின் நிர்வாக கட்டமைப்பு



மகாவலி வலயங்களின் கட்டமைப்பு மற்றும் நிர்வாகம்

மகாவலி கங்கை பள்ளத்தாக்கு அபிவிருத்தி பெருந்திட்டத்தின் பிரகாரம் உருவாக்கப்பட்டிருக்கும் குடியிருப்புக்களின் நிர்வாகம், நீர்ப்பாசன கட்டமைப்புக்களை இயக்குதல், பராமரித்தல் மற்றும் நிர்வகித்தல் என்பவற்றுக்கென மகாவலி பிரதேசம் 10 நிர்வாக அலகுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. மகாவலி பள்ளத்தாக்குடன் இணைந்த விதத்தில் அருகில் B,C,D,H, மொறகஹகந்த, விக்டோரியா, ஹுரூலுவெவ ஆகிய வலயங்களும், உடவளவே, வெலிஓயா (L வலயம்) மற்றும் ரம்பக்கன்ஓயா போன்ற விசேட வலயங்களும் உருவாக்கப்பட்டுள்ளன.

மகாவலி வலயங்கள் மற்றும் விசேட பிரதேசங்கள் என்பவற்றின் அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவ கருமங்கள் வதிவிட கருத்திட்ட முகாமையாளர்களின் அதிகாரங்களின் கீழ் ஒப்படைக்கப்பட்டுள்ளன. வதிவிட கருத்திட்ட முகாமையாளர்கள் நேரடியாக பணிப்பாளர் நாயகம் மற்றும் மேலதிக பணிப்பாளர் நாயகம் ஆகியோருக்கு பொறுப்புக் கூறுவதுடன், பிரதிப் பணிப்பாளர் நாயகங்களின் கண்காணிப்பின் கீழ் வலய மட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகளுக்கென தலைமை அலுவலகத்தில் ஒவ்வொரு விடயப் பரப்பு தொடர்பாகவும் நியமனம் செய்யப்பட்டிருக்கும் பணிப்பாளர்களின் ஒத்துழைப்பு அவர்களுக்கு கிடைக்கின்றது.

அதே போல ஒவ்வொரு வலயத்திலும் வதிவிட கருத்திட்ட முகாமையாளர் பிரதான நிறைவேற்று அதிகாரியாக இருந்து வருவதுடன், தொழில்நுட்பம், காணி, விவசாயம் மற்றும் அபிவிருத்தி ஆகிய துறைகளுக்கான கண்காணிப்பு உத்தியோகத்தர்களாக பிரதி வதிவிட கருத்திட்ட முகாமையாளர்கள் இணைக்கப்பட்டுள்ளார்கள். ஒரு சில அலகுகள் ஒன்றாக இணைக்கப்பட்டு ஒரு பிரிவு முகாமையாளர் அலுவலகம் அமைக்கப்பட்டிருப்பதுடன், அந்த அலுவலகத்தில் ஒவ்வொரு விடயப் பரப்பு தொடர்பாக பிரிவு முகாமையாளர்களின் நேரடியான கண்காணிப்பின் கீழ் ஒரு நீர்ப்பாசன பொறியியலாளர், நிறுவன அபிவிருத்தி உத்தியோகத்தர், விவசாய உத்தியோகத்தர் மற்றும் காணி உத்தியோகத்தர் ஆகியோர் அமர்த்தப்பட்டுள்ளனர். இந்த உத்தியோகத்தர்களின் கண்காணிப்பின் கீழ் அனைத்து விடயப் பரப்புக்கள் தொடர்பாகவும் கடமைகளை நிறைவேற்றி வைப்பதற்கென ஒவ்வொரு அலகுக்கும் ஒரு முகாமையாளர் வீதம் அமர்த்தப்பட்டுள்ளனர். குறிப்பாக, ஒவ்வொரு அலகிலும் காணிகளை பெற்றுக் கொண்ட சுமார் 250 – 300 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் குடியமர்த்தப்படுகின்றனர்.

காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டம் மற்றும் முடிக்குரிய காணிகள் கட்டளைச் சட்டம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட அரசாங்கத்தின் காணிக் கொள்கையின் பிரகாரம் மகாவலி வலயங்களில் காணி நிர்வாகம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கென அரச காணிகளை பகிர்ந்தளிப்பது தொடக்கம் அளிப்புப் பத்திரங்களை வழங்குவது வரையிலான அனைத்துச் செயற்பாடுகளும், அதே போல காணிகள் பகிர்ந்தளிப்புக்கு பின்னரான செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இது தவிர, வர்த்தக மற்றும் முதலீட்டு நோக்கங்களுக்கென காணிகளை குத்தகை அடிப்படையில் வழங்குவது தொடர்பான பூர்வாங்க நடவடிக்கைகளும், ஆரம்ப குடியேற்றவாசிகளுக்கு மேலதிகமாக இரண்டாவது அல்லது மூன்றாவது தலைமுறையினருக்கு காணிகளை பகிர்ந்தளிப்பதும் வலய அலுவலகங்களின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதே போல நீர்ப்பாசன நீர் முகாமைத்துவம், நிறுவன அபிவிருத்தியின் மூலம் நீர்ப்பாசன கட்டமைப்புக்களை பராமரித்தல், முகாமைத்துவம் மற்றும் மேலும் விருத்தி செய்தல் என்பனவும் இடம்பெறுகின்றன. விவசாய அபிவிருத்தியின் கீழ் விதை உற்பத்தி, பண்ணை அபிவிருத்தி, பயிற்சி மற்றும் மாதிரிப் பண்ணைகளை செயற்படுத்துதல், கால்நடை வளங்கள், கடற்றொழில்

மற்றும் சுற்றாடல் பாதுகாப்புச் செயற்பாடுகள், கருத்திட்ட அபிவிருத்தி, சிறிய மற்றும் நடுத்தர அளவு கடன் நிகழ்ச்சித்திட்டங்களை அமுல் செய்தல், விவசாய வர்த்தக தொழில் முயற்சிகளை நெறிப்படுத்துதல், விவசாய கைத்தொழில்கள் மற்றும் சுயதொழில் நிகழ்ச்சித்திட்டங்கள் என்பவற்றை செயற்படுத்தல் என்பனவும் வலயங்களின் நிர்வாகத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

1.3 <u>பணிப்பாளர் நாயகத்தின் கீழ் நேரடியாக நிர்வகிக்கப்பட்டு வரும் பிரிவுகள்</u>

- ❖ தலைமை அலுவலக செயற்பாடுகள் பிரிவு
- ❖ திட்டமிடல் மற்றும் இயக்குதல் பிரிவு
- ❖ உள்ளக கணக்காய்வு பிரிவு

1.3.1 தலைமை அலுவலக செயற்பாடுகள் பிரிவு

பணிகள்

- இலங்கை மகாவலி அதிகார சபையின் பணிப்பாளர் சபைக் கூட்டங்களை நடத்துதல், அதன் கருமங்கள் தொடர்பான சம்பந்தப்பட்ட அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளல்.
- நிறுவனத்திற்கு கிடைக்கும் தபால்கள் தொடர்பான ஒருங்கிணைப்பு, முகாமைத்துவம் மற்றும் தொடர் நடவடிக்கை.
- பணிப்பாளர் நாயகத்தினால் நடத்தப்படும் அனைத்து உள் மற்றும் வெளி கூட்டங்கள், மாநாடுகள் என்பவற்றை திட்டமிடுதல் மற்றும் நடத்துதல்.
- வலய, தேசிய, சர்வதேச மாநாடுகள் தொடர்பான நடவடிக்கைகளை ஏற்பாடு செய்தல் மற்றும் நெறிப்படுத்துதல், வெளிநாட்டு உதவிக் குழுவினர் மற்றும் தூதுக் குழுவினர் ஆகியோர் இங்கு வருகை தரும் பொழுது அது தொடர்பான ஒருங்கிணைப்பு செயற்பாடுகளை மேற்கொள்ளல்.
- வெளிநாட்டு புலமைப் பரிசில்கள், மாநாடுகள் மற்றும் செயலமர்வுகள் என்பவற்றுக்கு பெயர்களை முன்மொழிதல் மற்றும் அது தொடர்பான ஒருங்கிணைப்புச் செயற்பாடுகள்.
- இலங்கை மகாவலி அதிகார சபையின் செயற்பாடுகள் தொடர்பாக பாராளுமன்றம், ஜனாதிபதி அலுவலகம், நிதியமைச்சு என்பவற்றை உள்ளிட்ட ஏனைய அனைத்து அமைச்சுக்கள், திணைக்களங்கள், சர்வதேச நிறுவனங்கள் என்பவற்றுடன் ஒருங்கிணைப்பினை மேற்கொள்ளல்.
- அமைச்சரவை பத்திரங்கள், வரைவுகள் என்பவற்றை சமர்ப்பித்தல் மற்றும் அமைச்சரவையின் ஒப்புதலின் பிரகாரம் செயற்படுதல்.
- திணைக்கள பொருள் கொள்வனவு நடவடிக்கைகளை மேற்கொள்ளல், பிராந்திய மற்றும் கருத்திட்ட கொள்வனவு நடவடிக்கைகளின் முடிவுகளை உறுதிப்படுத்தல்.
- நிறைவேற்று முகாமைத்துவ / கணக்காய்வு கமிட்டிக் கூட்டங்களை ஒருங்கிணைத்தல், ஆவணப்படுத்தல் மற்றும் முடிவுகளை தெரியப்படுத்துதல்.
- விசேட கருத்திட்டங்கள் தொடர்பான வணிக செயற்பாட்டு கமிட்டி கூட்டங்கள் தொடர்பான ஒருங்கிணைப்பு.

1.3.2 திட்டமிடல் மற்றும் இயக்குதல் பிரிவு

பணிகள்

- நிறுவனத்தின் நோக்கு மற்றும் பணி என்பவற்றின் பிரகாரம் தொகுதித் திட்டமொன்றை தயாரித்தல் மற்றும் வருடாந்த திட்டத்தின் பிரகாரம் செயற்படுதல்.

- விசேட கருத்திட்டங்கள் தொடர்பான அறிக்கைகளை தயாரித்தல், பொருளாதார – சமூக மதிப்பீட்டாய்வுகள் மற்றும் பகுப்பாய்வு என்பவற்றை மேற்கொள்ளல்.

- செயல் திட்டம் மற்றும் கருத்திட்ட அறிக்கைகள் என்பவற்றின் முன்னேற்றத்தை மாதாந்த, காலாண்டு மற்றும் வருடாந்த அடிப்படையில் மீளாய்வு செய்தல், கருத்திட்ட மதிப்பீட்டை ஒருங்கிணைத்தல் மற்றும் இயக்குதல், மதிப்பீட்டுத் தொகுதி ஒன்றை உறுதிப்படுத்துதல்.

- தொழில்நுட்ப அறிக்கைகள், சாத்தியப்பாட்டு அறிக்கைகள், இயக்குதல் மற்றும் மதிப்பீட்டு அறிக்கைகள் என்பவற்றை பாதுகாத்து வைத்தல் மற்றும் உபயோகத்திற்கு வழங்குதல்.

- மகாவலி கணினி வலையமைப்பை நெறிப்படுத்துதல் மற்றும் பராமரித்தல், உத்தியோகபூர்வ இணையதளத்தை ஸ்தாபித்தல், இற்றைப்படுத்துதல் மற்றும் தகவல் தொழில்நுட்ப உதவியை வழங்குதல்.

- பாதிக்கப்படும் துறைகள் தொடர்பான ஆய்வுகளை ஒருங்கிணைத்தல்.

1.3.3 <u>உள்ளக கணக்காய்வு பிரிவு</u>

இலங்கை கணக்காய்வு தர நியமங்கள், நல்லாட்சிக்கான பொதுத் துறை தொழில் முயற்சிகள் கொள்கை தொடர்பான சுற்றறிக்கைகள், இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் நிதி ஏற்பாடுகள், நிதி மற்றும் கொள்கைத் திட்டமிடல் அமைச்சின் உள்ளக கணக்காய்வு கொள்கைகள் மற்றும் ஒழுங்குவிதிகள், முகாமைத்துவ முடிவுகள் என்பவற்றின் பிரகாரம் உள்ளக கணக்காய்வு விடயப் பரப்பை தயாரித்தல்.

தொழில்நுட்ப அல்லது கணக்கியல் பார்வைக்கு அப்பால், முகாமைத்துவ கோணத்திலிருந்து நிறுவனத்தின் செயற்பாட்டு பணிகளை பரீட்சித்துப் பார்த்தல், கணக்காய்வு செய்தல் மற்றும் அறிக்கையிடுதல்.

வேலைத் திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்கள் என்பவற்றின் முன்னேற்றம் மற்றும் அது தொடர்பான நிகழ்ச்சித்திட்டங்கள் உரிய காலப் பிரிவிற்குள் எந்த அளவுக்கு பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என்பதனை மதிப்பீடு செய்தல்.

உரிய காலப் பிரிவுக்குள் மேற்கொள்ளப்பட வேண்டிய வேலைகளின் அமுலாக்கம் தாமதமடைவதற்கு வழிகோலும் பிரச்சினைகள் தொடர்பாக உடனுக்குடன் உரிய இடத்திற்கு போய், பரிசீலனைகளை மேற்கொள்ளல்.

இயக்குதல் பணிகளை கண்காணிப்பதில் பயன்படுத்தப்பட்டு வரும் கட்டுப்பாட்டு முறைகளை மதிப்பீடு செய்தல் மற்றும் மீளாய்வு செய்தல்.

இரண்டாவது அத்தியாயம்
தொழில்நுட்பச் சேவைகள் பிரிவு

2.0 பணிகள்

1. தொகுதி திட்டம்/ வருடாந்த திட்டம் என்பவற்றின் பிரகாரம், அவற்றில் குறிப்பிடப்பட்டிருக்கும் இலக்குகளை நிறைவேற்றிக் கொள்ளும் பொருட்டு உபாய ரீதியான திட்டங்களை தயாரித்தல்.

2. தொழில்நுட்பத் திட்டங்கள் மற்றும் மதிப்பீடுகள் என்பவற்றை தயாரிப்பதற்கான வழிகாட்டுதல்களையும், நெறிப்படுத்தலையும் வழங்குதல்.

3. பிரதான அணைக்கட்டுக்கள், நீர் திசை திருப்பும் வழிகள் மற்றும் ஆற்றின் கீழ் பிரதேச நீர்ப்பாசன கட்டமைப்புக்கள் என்பவற்றையும் உள்ளடக்கிய பௌதீக வளங்களை உரிய விதத்தில் பராமரித்து, அவற்றின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துதல்.

4. நீர்த்தேக்கங்கள் மற்றும் நீர்ப்பாசன கட்டமைப்புக்கள் என்பவற்றுக்கு ஊடாக விவசாய நடவடிக்கைகளுக்கும், ஏனைய தேவைகளுக்கும் அவசியமான நீரை உரிய அளவில், உரிய காலத்தில் வழங்குவதற்கென முறையான திட்டங்களை தயாரித்துக் கொள்ளல்.

5. கருத்திட்டங்களை திட்டமிடுதல், சாத்தியப்பாட்டு ஆய்வுகளை மேற்கொள்ளல், நெறிப்படுத்தல் மற்றும் முன்னேற்றத்தை மீளாய்வு செய்தல்.

6. தனியார் துறையின் பங்களிப்புடன் சிறு அளவிலான நீர் மின் உற்பத்தி கருத்திட்டங்களை அபிவிருத்தி செய்தல்.

முதன்மையாக, இலங்கை மகாவலி அதிகார சபையின் தொழில்நுட்பச் சேவைகள் பிரிவு மேலே குறிப்பிடப்பட்டிருக்கும் முக்கியமான செயன்முறைகளை இலக்காகக் கொண்டு செயற்பட்டு வருகின்றது. அதன் பிரகாரம், 2017 ஆம் ஆண்டில் இப்பிரிவு பின்வரும் செயற்பாடுகளை மேற்கொண்டிருந்தது.

2.1 பொறியியல் நிர்மாண திட்டமிடல் பிரிவின் வகிபங்கு

2.1.1 நிர்ணயிக்கப்பட்டிருக்கும் பணிகள்

1. அபிவிருத்தி செய்யப்பட்டிருக்கும் மற்றும் உத்தேசிக்கப்பட்டிருக்கும் கருத்திட்டங்கள் தொடர்பாக பொறியியல் வடிவமைப்புக்கள் மற்றும் திட்டங்கள் என்பவற்றை தயாரித்தல்.

2. மேற்படி கருத்திட்டங்களில் உள்கட்டமைப்பு வசதிகளுக்குத் தேவையான திட்டங்கள் மற்றும் பொறியியல் வடிவமைப்புக்கள் என்பவற்றை திட்டமிடுதல்.

3. வடிவமைப்புக்கள் மற்றும் திட்டங்கள் என்பன தொடர்பான பொறியியல் செலவு மதிப்பீட்டு படிவங்களை பொருள் கொள்வனவுச் செயன்முறைக்கென ஒப்பந்த முகாமைத்துவ பிரிவில் சமர்ப்பித்தல்.

4. அரச மற்றும் தனியார் தொழில்முயற்சியாளர்களினால் முன்வைக்கப்படும் சிறு அளவு நீர் விநியோக கருத்திட்டங்கள் தொடர்பான முன்மொழிவுகள் மற்றும் திட்டங்கள் என்பவற்றை பகுப்பாய்வு செய்து, ஒப்புதலை பெற்றுக் கொள்வதற்கென சமர்ப்பித்தல்.

5. பொறியியல் வடிவமைப்பு மற்றும் திட்டமிடல் என்பன தொடர்பாக புதிய பொறியியலாளர்களுக்கு பயிற்சியளித்தல் மற்றும் திட்டமிடல் பிரிவை இலங்கை பொறியியல் கழகத்தின் அங்கீகரிக்கப்பட்டிருக்கும் தர நியமங்களின் கீழ் பராமரித்து வருதல்.

6. அபிவிருத்திச் செயன்முறையுடன் சம்பந்தப்பட்டிருக்கும் கட்டடங்கள் மற்றும் பூங்காக்கள் என்பவற்றின் அலங்கரிப்பு அபிவிருத்தி வேலைகளுக்காக சம்பந்தப்பட்ட கட்டடவாக்க திட்டமிடல் செலவு மதிப்பீடுகளைத் தயாரித்தல்.

2.1.2 2017 ஆம் ஆண்டில் பொறியியல் வடிவமைப்பு திட்டமிடல் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட பொறியியல் திட்டங்கள்

2.1.2 நீர்ப்பாசன கட்டமைப்பு திட்டங்கள் மற்றும் பெருந்தெருக்கள் தொடர்பான திட்டங்கள்

1. மெதிரிகிரிய - பளுகஸ்வெவ பிரதேசத்திற்கு நீர் விநியோகம் செய்வதற்கான திசை திருப்பல் கட்டமைப்புகளை உருவாக்குதல்.
2. மெதிரிகிரிய உப கிளைக் கால்வாய்க்கு ஊடாக கி.மீ 10 + 320 இடத்தில் ஒரு பாலத்தை அமைத்தல்.
3. மெதிரிகிரிய உப கிளைக் கால்வாய் கி.மீ 13 + 260, 14 + 650, 8+715, 8+290, 14+650, 1+600, 2+230, 0+653, 8+290 ஆகிய இடங்களில் நீர் வெளியேற்ற கட்டமைப்புக்களை (DUC) நிர்மாணித்தல்.
4. சுதுகங்கையில் அமைந்திருக்கும் பாலமொன்றை பழுது பார்ப்பதற்கான திட்டங்கள் மற்றும் செலவு மதிப்பீடுகளை தயாரித்தல்.
5. மெதிரிகிரிய தஹம்வெவ அலகின் குளம் இல. 2 இன் நீர் வெளியேற்ற அமைப்பு.
6. மெதிரிகிரிய நம்படவெவ அலகின் குளம் 4 இன் நீர் வெளியேற்ற அமைப்பு.
7. களுகங்கை வலது கால்வாய் D 2 நீர் திசைதிருப்பல் கட்டமைப்பு.
8. களுகங்கை வலது கால்வாய் கி.மீ. 0 + 653, 2 + 813, 3 + 810 ஆகிய இடங்களில் நீர் வெளியேற்ற கட்டமைப்புக்களை (DUC) நிர்மாணித்தல்.
9. மெதிரிகிரிய நம்படவெவ அலகின் குள இலக்கம் 1 ஐ திட்டமிடல் (அனைத்து கட்டுமானங்களுடனும்).
10. களுகங்கை வலது கால்வாய்க்கு ஊடாக கி.மீ. 1+ 240 இடத்தில் ஒரு பாலத்தை அமைத்தல்.
11. மெதிரிகிரிய உப கிளைக் கால்வாய் கி.மீ. 15+700 நீர் திசைதிருப்பல் கட்டுமானம்.
12. களுகங்கை வலது கால்வாய் கி.மீ. 0+976 இடத்தில் மழை நீர் சேரும் (Drain Inlet) கட்டுமானம்.
13. களுகங்கை வலது கால்வாய்க்கு ஊடாக கி.மீ. 3+300 இடத்தில் ஒரு பாலத்தை அமைத்தல்.
14. வெலிஓய பராக்கிரமபுர பாதையில் ஒரு பாகத்தை பழுது பார்த்தலுக்கென திட்டங்கள் மற்றும் செலவு மதிப்பீடுகள் என்பவற்றை தயாரித்தல்.
15. வெலிஓய ஹெலம்பவெவ பாதையின் திட்டத்தை இற்றைப்படுத்துதல்.
16. மெதிரிகிரிய பண்டாரவெவ அலகின் வயல் நிலங்களை துண்டுகளாக பிரிக்கும் திட்டம்.
17. மெதிரிகிரிய உப கிளைக் கால்வாயின் இறுதி ஒழுங்குமுறைப்படுத்தும் கட்டமைப்பு (End Regulator).
18. 'B' வலயத்தின் நன்னீர் மீன்பிடிப்பு நிலையத்துக்கு நீர் மானியை வழங்குதல்.

2.1.3 கட்டட நிர்மாணத் திட்டங்கள்

1. உத்தேச மெதிரிகிரிய விளையாட்டரங்கு மற்றும் பிரதான பார்வையாளர் கூடம், 4 உப பார்வையாளர் கூடங்கள் என்பவற்றுக்கான செலவு மதிப்பீடுகள்.
2. ரம்பக்கன்ஒய பயிற்சி நிலையம்.
3. மெதிரிகிரிய வதிவிட கருத்திட்ட முகாமையாளர் அலுவலகம்.
4. தாஸ்கிரிய ஆஸ்பத்திரியின் சமயலறை.
5. மெதிரிகிரிய கருத்திட்ட முகாமையாளர் உத்தியோகபூர்வ வாசஸ்தலம்.
6. மெதிரிகிரிய சுற்றுலா விடுதி.
7. மொரகஹகந்த ஆரம்ப பாடசாலைக்கான கணினி அறை, நூல் நிலையம் மற்றும் ஆசிரியர் ஓய்வறை.
8. லக்கல விளையாட்டரங்கு, பிரதான பார்வையாளர் கூடம், உப பார்வையாளர் கூடங்கள்.
9. மெதிரிகிரிய ஆஸ்பத்திரிக்கான உருக்குக் கூரை (Steel Roof Truss).

2.1.4 சிறு அளவிலான நீர் மின் உற்பத்தி கருத்திட்டங்களுக்கான திட்டங்களை பகுப்பாய்வு செய்தல்

1. கும்பல்ஒலுவ நீர் மின் உற்பத்தி கருத்திட்டம்.
2. திக்கல நீர் மின் உற்பத்தி கருத்திட்டம்.
3. லத்பந்துர நீர் மின் உற்பத்தி கருத்திட்டம்.
4. அம்பன்கங்கையில் மொரகொல்ல நீர் மின் உற்பத்தி கருத்திட்டம்.
5. மெதகம நீர் மின் உற்பத்தி கருத்திட்டம்.
6. கிவுல நீர் மின் உற்பத்தி கருத்திட்டம்.

2.1.5 வருடம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட திட்டங்கள்

2.2.4.1 நீர்ப்பாசன கட்டமைப்புக்களுக்கான திட்டங்கள்

1. களுகங்கை $RBMC_1$ கி.மீ. 0+ 000 – கி.மீ. 5+ 550
2. $RBMC_1$ கால்வாய் 0+650, 1+265, 3+700, 3+810, 4+ 350 5 ஆகிய இடங்களில் 5 கீழ் நீர் வெளியேற்ற கட்டமைப்புக்களை நிர்மாணித்தல்.
3. களுகங்கை LC_2 நீர் வெளியேற்ற கட்டமைப்பு (Outlet).
4. களுகங்கை LC_3 நீர் உள்வாங்கல் கட்டமைப்பு (Inlet) மற்றும் நீர் வெளியேற்ற கட்டமைப்பு (Outlet).
5. களுகங்கை $RBMC_1$ / FC_3 நீர் திசைதிருப்பல் கட்டமைப்பு.
6. களுகங்கை $RBMC_1$ / D_2 நீர் திசைதிருப்பல் கட்டமைப்பு.
7. களுகங்கை $RBMC_2$ கால்வாய் கி.மீ. 0+000 – கி.மீ. 3+260.
8. $RBMC_2$ / D_5, D_6 நீர் திசைதிருப்பல் கட்டமைப்புக்கள்.
9. $RBMC_2$ / FC_4, FC_5, FC_6 நீர் திசைதிருப்பல் கட்டமைப்புக்கள்.
10. $RBMC_2$ கால்வாய் கி.மீ. 3+260 கீழ் நீர் வெளியேற்ற கட்டமைப்பு.
11. $RBMC_2$ இறுதி முறைப்படுத்தல் பொறி.

2.1.6.1 கட்டட நிர்மாண திட்டங்கள்

1. அம்பன ஆஸ்பத்திரிக்கான OPD கட்டடம்.
2. அம்பன ஆஸ்பத்திரியின் பெண் / ஆண் வார்ட்டுக்கள்.
3. அம்பன ஆஸ்பத்திரியின் சமயலறை.
4. அம்பன ஆஸ்பத்திரியின் பிரேத அறை.
5. மெதிரிகிரிய விளையாட்டு மைதானத்துக்கான ஒலிம்பிக் தீபம் மற்றும் கொடிக் கம்பம்.
6. பொது மஹாவலி ஹெல பொஜுன்ஹல (உணவகம்).

2.1.7 <u>கட்டடக் கலை அலகு</u>

2.1.7.1 மொரகஹகந்த களுகங்கை கருத்திட்டம் தொடர்பாக

- லக்கல நகரத்தின் உத்தேச கலாசார மண்டபம் மற்றும் நாடக அரங்கு
- லக்கல நகரத்தில் அமைக்கப்படும் பாடசாலைக்கான ஒன்று கூடல் மண்டபம்
- புதிய விளையாட்டு மைதானத் தொகுதி – லக்கல.
  Including Main Pavilion, 4 No's of spectator galleries, Olympic Lamp & Flag Post, Entrance

2.1.7.2 மொரகஹகந்த – களுகங்கை கருத்திட்டம் தொடர்பாக (மெதிரிகிரிய – பிசோபுர)

- புதிய வதிவிட கருத்திட்ட முகாமையாளர் அலுவலகம் - RPM Office
- புதிய விளையாட்டு மைதானத் தொகுதி – மெதிரிகிரிய
  Including Main Pavilion, 4 No's of spectator galleries, Olympic Lamp & Flag Post, Entrance
- புதிய பேருந்து நிலையம்
- புதிய சந்தைக் கட்டடம்
  Including main building, Fish stall, toilets, washing area

2.1.7.3 மொரகஹகந்த – களுகங்கை கருத்திட்டம் தொடர்பாக (அம்பன)

- வெளி நோயளார் பிரிவு (OPD) – அம்பன ஆஸ்பத்திரி.
- பெண் / ஆண் வார்ட்டுகளின் கட்டடத் தொகுதி, சமயலறை, பிரேத அறை - அம்பன ஆஸ்பத்திரி.
- உப அஞ்சல் அலுவலகம்.
- புதிய சந்தை கட்டடத் தொகுதி.
  Including main building, Fish stall, toilets, washing area
- இரண்டு மாடிக் கட்டடம் - கூம்பியன்கஹஎல பாடசாலை
  Including 4 class rooms & conference Hall

2.1.8 Type Drawings and Estimates

- ஹெல பொஜுன்ஹல உணவகம்.
- Grade II உத்தியோகத்தர் வாசஸ்தலம்

2.1.2 கீழ் பள்ளாத்தாக்கு பகுதியின் அபிவிருத்தி நடவடிக்கைகள்

மகாவலி அதிகார எல்லை பிரதேசங்களில் இருந்து வரும் நீர்ப்பாசனக் கட்டமைப்புக்களை இயக்குதல் மற்றும் பராமரித்தல், கட்டடத் தொகுதிகளை பராமரித்தல் மற்றும் முகாமைத்துவம் செய்தல், வீதிக் கட்டமைப்புக்களின் பழுதுபார்ப்பு மற்றும் சம்பந்தப்பட்ட நிர்மாண வேலைகள், செலவு மதிப்பீடுகளை தயாரித்தல், நிர்மாண வேலைகளின் தரக் கட்டுப்பாடு மற்றும் முன்னேற்ற மீளாய்வு என்பன இந்தப் பிரிவின் முதன்மையான பணிகளாக இருந்து வருகின்றன.

- 2017 ஆம் ஆண்டு தொடர்பாக திறைசேரியினால் அந்தந்த மகாவலி வலயங்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகைகள் மற்றும் அவை செலவிடப்பட்ட விதம் என்பன குறித்த விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

2.1.3 கருத்திட்டங்களின் கீழ்:-

வரிசை எண்	கருத்திட்டம்	2017 ஆம் ஆண்டில் தொழில்நுட்ப சேவைகள் பிரிவுக்கென ஒதுக்கப்பட்ட தொகை (ரூ. மில்லியன்)	2017 ஆம் ஆண்டில் நிதிசார் முன்னேற்றம் (ரூ. மில்லியன்)	நிதிசார் முன்னேற்றம் %
1	ரிதிமாலியத்த அபிவிருத்தி கருத்திட்டம்	73	63.33	87%
2	ரம்பக்கன் ஓய அபிவிருத்தி கருத்திட்டம்	60.5	65.42	100%
3	வெலிஓய ஒருங்கிணைந்த அபிவிருத்தி கருத்திட்டம்	267.92	237	81%
4	ஒருங்கிணைந்த அபிவிருத்தி கருத்திட்டம் - B வலயம்	485.8	493.2	100%
5	மாதுறுஓய வலதுகரை அபிவிருத்தி கருத்திட்டம் - B வலயம்	140.9	135	95%
6	சிறிய மற்றும் நடுத்தர அளவு நீர்ப்பாசன கட்டமைப்புக்களை புனரமைப்புச் செய்யும் அபிவிருத்தி கருத்திட்டம்	273.50	233.56	85%
7	கிவுல்ஓய அபிவிருத்தி கருத்திட்டம்	25	18.75	75%

2.1.4 நிறுவன ரீதியான மூலதனத்தின் கீழ்:-

வரிசை எண்	கருத்திட்டம்	2017 ஆம் ஆண்டில் தொழில்நுட்ப சேவைகள் பிரிவுக்கென ஒதுக்கப்பட்ட தொகை (ரூ. மில்லியன்)	2017 ஆம் ஆண்டில் நிதிசார் முன்னேற்றம் (ரூ. மில்லியன்)	நிதிசார் முன்னேற்றம் %
வலயம்				
1	B	115	105	100%
2	C	144.1	105	75%
3	D	47.2	38.23	86%
4	G	31.44	24	72%
5	H	84.11	73.92	71%
6	L	9.689.8	9.83	101%
7	வளவே	86.3188.59	83.4	96%
8	ஹுருலுவெவ	91.2981.64	65.1	71%

9	ரம்பக்கன் ஓய	21.9	21.9	100%
10	விக்டோரியா	46.48	49.57	100%
பிரிவுகள்				
	தலைமை அலுவலகம் (தொ/சே)	92.93	87.0	94%
1	இயந்திர வேலைத்தலம் தம்புத்தேகம	5	5	100%
2	ஆற்றுப்பள்ளத்தாக்கு முகாமைத்துவப் பிரிவு	3	3	100%
3	முதன்மை வேலைகள், நிர்வாகம், இயக்குதல் மற்றும் பராமரிப்பு பிரிவு	175.5	204.45	100%

2.1.5 சிறு அளவிவான நீர் மின் உற்பத்தி கருத்திட்டங்களின் அபிவிருத்தி

மகாவலி கங்கை மற்றும் அதனுடன் இணைந்திருக்கும் கிளை நதிகள் என்பவற்றின் நீரைப் பயன்படுத்தி சிறு அளவிலான நீர் மின் உற்பத்தி நிலையங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. இவற்றின் மூலம் உற்பத்தி செய்யப்படும் மின்சாரம், இலங்கை மின்சார சபையின் கீழ் தேசிய மின் தொகுப்புக்கு (National Grid) வழங்கப்பட்டு வருகின்றது. மாதாந்தம் இவ்விதம் வழங்கப்படும் மின்சார அலகுகளின் பிரகாரம் இலங்கை மின்சார சபை அவ்விதம் வழங்கப்பட்ட மின் அலகுகளின் அளவின் பிரகாரம் சிறு அளவிலான நீர்மின் உற்பத்தி கருத்திட்டங்களின் முதலீட்டாளர்களுக்கு கொடுப்பனவுகளை வழங்கி வருகின்றது. மகாவலி ஆற்றின் நீரைப் பயன்படுத்துவது தொடர்பாக சம்பந்தப்பட்ட முதலீட்டாளர் இலங்கை மகாவலி அதிகார சபைக்கு குறிப்பிட்ட ஒரு தொகையை செலுத்துகிறார்.

இது வரை 11 சிறு அளவிலான நீர் மின் உற்பத்தி நிலையங்களின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. அவற்றின் மூலம் 33.35 மெகாவோட் மின்சாரம் தேசிய மின் தொகுப்புக்கு பங்களிப்புச் செய்யப்படுகின்றது. அதற்கூடாக இலங்கை மகாவலி அதிகார சபைக்கு மகாவலி நீரை திசைதிருப்பும் உரிமை தொடர்பாக குறிப்பிட்ட ஒரு சதவீதக் கொடுப்பனவு கிடைக்கின்றது. இது தவிர இலங்கை மகாவலி அதிகார சபையின் ஒப்புதலுடன் 10 சிறு அளவு நீர் மின் உற்பத்தி நிலையங்கள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன. (5.1)

இலங்கை மகாவலி அதிகார சபையின் அனுமதி இல்லாமல் உருவாக்கப்பட்டிருக்கும் சிறு அளவிலான 46 நீர் மின் உற்பத்தி நிலையங்கள் தற்போது இருந்து வருவதாக அறிக்கையிடப்பட்டிருப்பதுடன், மேலும் அத்தகைய நீர் மின் உற்பத்தி நிலையங்கள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன.

நிர்மாணிக்கப்பட்டு வரும் சிறு அளவிலான நீர் மின் உற்பத்தி நிலையங்களின் முன்னேற்ற அறிக்கை (வருடம் 2017)

வ. எண்	கருத்திட்டத்தின் பெயர்	முதலீட்டாளரின் பெயர்	கொள்ளளவு /MW	முன்னேற்றம்
1	Ukuwela	Onyx Hydro Power Company (Pvt) Ltd.	2.2	இலங்கை உபயோகப் பொருள் ஆணைக்குழுவினால் உருவாக்க உரிமத்தை (Generation License) பெற்றுக் கொள்ளும் செயற்பாடு இடம்பெற்று வருகின்றது
2	Ankanda	Escas Ankanda Power (Pvt) Ltd.	6.5	நிர்மாண வேலைகள் பெருமளவுக்கு பூர்த்தியடைந்துள்ளன.
3	Diggala	Escas Diggala Power (Pvt) Ltd.	4.4	நிர்மாண வேலைகள் இடம்பெற்று வருகின்றன.
4	Kiula	Escas Kiula Power (Pvt) Ltd.	2.8	திட்டத்தை மாற்றியமைத்ததன் காரணமாக ஒரு புதிய சுற்றாடல் தாக்க மதிப்பீட்டை

வ. எண்	கருத்திட்டத்தின் பெயர்	முதலீட்டாளரின் பெயர்	கொள்ளளவு /MW	முன்னேற்றம்
				(EIA) மேற்கொள்ள வேண்டியுள்ளது
5	Nayakkubura	Ralic Hydro Power Generation (Pvt) Ltd. / N.G.P. Panditharathna	0.5	இந்த கருத்திட்டம் தொடர்பாக இரு முதலீட்டாளர்கள் முன்வந்திருக்கும் காரணத்தினால், அந்தப் பிரச்சினையை தீர்த்துக் கொள்வதற்கென சட்டமா அதிபரின் ஆலோசணை கோரப்பட்டுள்ளது.
6	Chandrikawewa	Mahaweli Consultancy Bureau (Pvt) Ltd.	0.63	சுற்றாடல் மதிப்பீட்டு அறிக்கை (EIA) பூர்த்தியடைந்துள்ளது.
7	Kubaloluwa I	Noorwood Hydro Power (Pvt) Ltd.	2.4	இந்த இரு கருத்திட்டங்களும் சுதுகங்கைக்கு அருகில் அமைந்திருக்கும் காரணத்தினால் அவற்றை அமுல் செய்வதில் ஒரு சிக்கல் காணப்படுகிறது. இரு கருத்திட்டங்களினதும் சாத்தியப்பாட்டை ஆய்வு செய்யும் பொருட்டு ஒரு நில அளவையை (Survey) மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
8	Kubaloluwa II	Kumballoluwa Hydro Power (Pvt) Ltd.	1	
9	Maduruoya offtake of LBL3	Nippon Knit (Pvt) Ltd.	0.15	சுற்றாடல் மதிப்பீடு (EIA) இடம்பெற்று வருகிறது.
10	Moragolla Mini Hydro Power Project	Zhejiang Young Energy Co. (pvt) Ltd.	2.1	சுற்றாடல் மதிப்பீடு (EIA) இடம்பெற்று வருகிறது.

2.2 ஆற்றுப் பள்ளத்தாக்கு முகாமைத்துவ அலுவலகம்

ஆற்றுப் பள்ளத்தாக்கு அலுவலகத்தின் கீழ் நடத்தப்பட்டு வரும் நீரின் தரத்தை பரீட்சிக்கும் ஆய்வு கூடத்தின் மூலம் கலாவெவ, கண்டலம, தம்புலுஓயா, போவதன்ன மற்றும் சந்திரிகாவெவ ஆகிய நீர்த் தேக்கங்களினதும், மகாவலி வலயங்களில் காணப்படும் சிறிய நீர்த்தேக்கங்களினதும், மகாவலி வலயத்துடன் இணைந்திருக்கும் தெரிவு செய்யப்பட்ட நீர்த் தேக்கங்களினதும் நீரின் தரம் மாதாந்தம் பரீட்சிக்கப்பட்டு வருகின்றது. மகாவலி வலயங்களின் நீர்ப் பரப்புக்கள் மற்றும் அதற்கு வெளியிலிருக்கும் நீரோட்டங்கள் என்பவற்றின் நீர் மாதிரிகளை பரீட்சித்து, குடிநீரின் தரம் தொடர்பாக சமூகத்திற்கு அறிவூட்டல் மற்றும் கைத்தொழில்களுக்கென சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரத்தை பெற்றுக்கொள்வதில் அந்த நிறுவனங்களின் மூலம் விடுவிக்கப்படும் கழிவு நீர் தொடர்பான அறிக்கைகளை வழங்குதல் என்பன 2017ஆம் ஆண்டின் போது இந்தப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட புதிய நடவடிக்கைகளாக இருந்து வந்தன.

மேலே குறிப்பிடப்பட்ட பணிகளின் முன்னேற்றம் கீழே தரப்பட்டுள்ளது.

நிதிசார் முன்னேற்றம்

வ. எண்	விவரம்	ஒதுக்கப்பட்ட தொகை - ரூ. மில்லியன்	முன்னேற்றம்
01	மூலதனச் செலவுகள்	3,000	2966
02	மீள வரும் செலவுகள்	31.467	17.778

2.3 முதன்மை வேலைகள் நிர்வாகம், இயக்குதல் மற்றும் பராமரிப்பு பிரிவு

துரிதப்படுத்தப்பட்ட மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட பாரிய நீர்த்தேக்கங்கள், வடிநிலங்களுக்கு இடையிலான கால்வாய்த் தொகுதிகள், அணைக்கட்டுக்கள் போன்ற கட்டமைப்புக்களை தொடர்ச்சியாக இயங்கச் செய்யும் விதத்தில் அவற்றை உரிய விதத்தில் முகாமைத்துவம் செய்யும் பொருட்டு 1985 ஆம் ஆண்டு முதன்மை வேலைகள் நிர்வாகம், இயக்குதல் மற்றும் பராமரிப்பு பிரிவு ஸ்தாபிக்கப்பட்டது.

2.3.1 இந்தப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கும் முக்கியமான பணிகள்:

- **நிர்வாகம் :**
  அணைக் கட்டுக்கள் மற்றும் நீர்த் தேக்கங்கள் என்பவற்றின் நீர்ப்பரப்பு, பாதுகாப்பு வலயம் (100 m Buffer zones) மற்றும் அதனுடன் சம்பந்தப்பட்ட பாதுகாக்கப்பட்ட பிரதேசங்கள் என்பவற்றை பாதுகாத்துக் கொள்வதற்கென ஒழுங்குவிதிகளை அமுல் செய்து, நீர்த் தேக்கங்கள் மற்றும் பாதுகாக்கப்பட்ட பிரதேசங்களை நிர்வகித்தல்.
- **அமுல் செய்தல் :**
  நீர் முகாமைத்துவ செயலகத்தினால் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வரும் தீர்மானங்களை அமுல் செய்வதற்கென நீர்த்தேக்கங்கள் மற்றும் பள்ளத்தாக்குகளுக்கு இடையிலான கால்வாய்கள் என்பவற்றின் கதவுகளை இயக்குதல் மற்றும் நீர்த்தேக்கங்களின் மேல் மற்றும் கீழ் பள்ளத்தாக்குகளில் வெள்ளப் பெருக்கினை குறைக்கும் பொருட்டு வெள்ளக் கட்டுப்பாட்டிற்கென அணைக்கட்டுக் கதவுகளை இயக்குதல்.
- **பராமரிப்பு :**
  நீர்த்தேக்கங்கள் மற்றும் நீர்த்தேக்கங்களுடன் இணைந்த அணைக்கட்டுக்கள், கதவுகள், நீர்த் தேக்கங்களின் சுற்றுவட்டப் பிரதேசங்கள் மற்றும் நீர்த்தேக்கங்களுடன் சம்பந்தப்பட்ட அனைத்து விதமான கட்டமைப்புக்கள் என்பவற்றை சர்வதேச தரநியமங்களின் (ICOLD) பிரகாரம் பராமரித்தல் மற்றும் விருத்தி செய்தல்.

2.3.2 2017 ஆம் ஆண்டின் செயற்பாடுகள்:

- நீர்த்தேக்கங்கள், அணைக்கட்டுகள் மற்றும் அவற்றுடன் இணைந்த கட்டுமானங்கள் என்பவற்றின் பொதுவான பராமரிப்பை முழுமையாக மேற்கொண்டமை.

- அனைத்து அணைக்கட்டுகள் தொடர்பாகவும் திட்டமிடப்பட்டிருந்த பாதுகாப்பான இயக்குதல் செயற்பாடுகள் மற்றும் நிரந்தரப் பராமரிப்பு செயற்பாடுகள் என்பன பூர்த்தி செய்யப்பட்டமை.

- உபகரணங்களின் மூலம் திரட்டப்பட்ட தரவுகளை பகுப்பாய்வு செய்யும் செயற்பாடு திட்டமிடப்பட்ட விதத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- நீரின் தரத்தை பராமரிப்பது தொடர்பாக திட்டமிடப்பட்டிருந்த செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டமை.

- நீர்த்தேக்க பாதுகாப்பு நடவடிக்கைகள், ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் பிரதேசங்களை மீண்டும் கையகப்படுத்தல் என்பன தொடர்பான பூர்வாங்க நடவடிக்கைகள் பூர்த்தியடைந்துள்ளன.

- முதன்மை வேலைகள் நிர்வாகம், இயக்குதல் மற்றும் பராமரிப்பு அலகைச் சேர்ந்த பொறியியலாளர்கள் மூலம் நிறுவனப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டமை.

2.4 நீர் முகாமைத்துவ செயலகம்

நீர் முகாமைத்துவ செயலகத்தின் மூலம் வருடாந்த சிறுபோகம் மற்றும் பெரும்போகம் என்பன தொடர்பாக செயற்பாட்டுக் கொள்கைகள் பரிந்துரை செய்யப்படுவதுடன், மகாவலி வலயங்கள் தொடர்பான செயற்பாட்டுத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. இது அடிப்படை நீர்ப்பாசன மற்றும் வலுத் தேவைகளின் அடிப்படையில் நெல் மற்றும் உப உணவுப் பயிர்கள் என்பவற்றின் உற்பத்தி தொடர்பாக பரந்தளவிலான பங்களிப்பினை வழங்கி வரும் ஒரு தேசிய நிகழ்ச்சித்திட்டமாக இருந்து வருகின்றது. இதற்கான தொழில்நுட்ப நிபுணத்துவ அறிவுறுத்தல்களை வழங்கும் ஓர் அலகு என்ற முறையில் நீர் முகாமைத்துவ செயலகத்தின் மூலம் நீர் முகாமைத்துவக் கமிட்டியின் உறுப்பு நிறுவனங்கள் ஒருங்கிணைப்புச் செய்யப்படுகின்றன. இயக்குதல் தொடர்பான அனைத்துத் திட்டங்களும் வாராந்தம் கண்காணிக்கப்பட்டு, அதன் முன்னேற்றம் மீளாய்வு செய்யப்படுவதுடன், அடுத்து வரும் வாரங்களில் நீர் விநியோகத் திட்டங்களை அமுல் செய்வதற்குத் தேவையான அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டு வருகின்றன. விவசாய, மின்சார மற்றும் குடிநீர்த் தேவைகளையும் கருத்தில் கொண்டு ஒட்டுமொத்த மகாவலி வலயங்களுக்குள்ளும் பரிந்துரைக்கப்பட்ட நீர்த் தேவைகளை நிறைவேற்றி வைப்பதற்கென நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.


2.4.1 2016/2017 பெரும்போகம் (அக்டோபர் 01. 2016 - மார்ச் 31, 2017)

2016/2017 பெரும்போகத்திற்கான மகாவலி நீர் முகாமைத்துவ கமிட்டியின் கூட்டம் 2016 அக்டோபர் மாதம் 24 ஆந் திகதி பேராதனை கன்னொருவையில் அமைந்திருக்கும் தாவரங்கள் மற்றும் மரபணு வளங்கள் நிலையத்தில் நடத்தப்பட்டது.

2016/2017 பெரும்போகம் ஒரு சாதாரண பெரும்போகமாக எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும், எதிர்பார்க்கப்பட்ட பருவப் பெயர்ச்சிக் காற்று மழை கிடைக்காத காரணத்தினால் நீர் முகாமைத்துவ கமிட்டியின் மூலம் ஒப்புதல் வழங்கப்பட்ட பயிர்ச்செய்கை கால அட்டவணையை திருத்த வேண்டி நேரிட்டது. வலயங்கள் H, IH மற்றும் MH என்பவற்றில் பயிர்ச்செய்கையை 40% - 50% க்கு வரையறுக்க வேண்டியிருந்தது. 2017 ஜனவரி 02ஆம் திகதி அளவில்

நீர்த்தேக்கங்களின் நீர் மட்டம் கொத்மலை நீர்த்தேக்கத்தில் 45.7% ஆகவும், உடவளவை நீர்த்தேக்கத்தில் 38.5% ஆகவும் இருந்து வந்தது. அவ்வப்பொழுது கிடைத்த சிறு அளவிலான மழைவீழ்ச்சி காரணமாக மகாவலி C மற்றும் B வலயங்களுக்கு பயிர்ச் செய்கையை பாதுகாத்துக்கொள்ளக் கூடிய ஆற்றல் கிடைத்தது. ஒட்டுமொத்தமாக நோக்கும் பொழுது, 2016/2017 பெரும்போகம் நீர் பற்றாக்குறையுடன் கூடிய ஒரு போகமாக இருந்து வந்ததுடன், நாட்டின் நீர் மின் உற்பத்தியின் மீதும் ஒரு தாக்கத்தை எடுத்து வந்த ஒரு பெரும்போகமாக இருந்து வந்தது.

2016/2017 பெரும்போகத்தின் போது மகாவலி வலயங்கள் மூலம் 124 Gwh மின்சாரம் தேசிய மின்தொகுப்புக்கு வழங்கப்பட்டது. 2016/2017 பெரும்போகத்தில் மின் உற்பத்தி இடம்பெற்ற விதம் முதலாவது வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளது.



வரைபடம் 1


2016/2017 பெரும்போகம் - மின்சார உற்பத்தி

90% அனல் மின் உற்பத்தி

4% மகாவலி

6% களனி, ஏனையவை

நீர் முகாமைத்துவக் கமிட்டியின் கீழ் இருந்து வரும் வலயங்களில் 2016/2017 பெரும்போகத்தின் போது பயிர்ச்செய்கை திட்டமிடப்பட்ட விதம் மற்றும் அதன் முன்னேற்றம் என்பன வரைபடம் 2 இல் காட்டப்பட்டுள்ளது.




வரைபடம் 02

2.4.2 2017 சிறுபோகம் (ஏப்ரல் 01, 2017- செப்ரம்பர் 2017)

2017 சிறுபோகம் தொடர்பான மகாவலி நீர் முகாமைத்துவ கமிட்டிக் கூட்டம் 2017 ஏப்ரல் 03ஆம் திகதி பேராதனை, கன்னொருவையில் அமைந்திருக்கும் தாவரங்கள் மற்றும் மரபணு வளங்கள் நிலையத்தில் நடத்தப்பட்டது. அச்சந்தர்ப்பத்தில் கொத்மலை நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் 48.9% ஆகவும், மாதுறுஓயா நீர்த்தேக்கத்தின் நீர் மட்டம் 49.9% ஆகவும், கலாவெவ நீர்த்தேக்கத்தின் நீர் மட்டம் 45% ஆகவும், ஹுரூலுவெவ நீர்த்தேக்கத்தின் நீர் மட்டம் 6.1% ஆகவும் தாழ்ந்த மட்டங்களில் நிலவி வந்தன. பராக்கிரம சமுத்திரத்தின் நீர் மட்டம் உச்ச மட்ட அளவை எட்டியிருந்தது.

அதன் காரணமாக ஒட்டுமொத்தமாக சுமார் 60% சாகுபடி உச்ச மட்டத்தில் எதிர்பார்க்கப்பட்டதுடன், பராக்கிரம சமுத்திரம், கிரித்தலை, அல்லை மற்றும் ராஜாங்கன ஆகிய பிரதேசங்கள் தொடர்பாக 100% சாகுபடி உத்தேசிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2017 சிறுபோகத்தின் மொத்த சாகுபடி நிலப்பரப்பு 139,472 ஹெக்டெயர்களாக இருந்து வந்தது. இது மொத்தச் சாகுபடியில் சுமார் 73% ஆக காணப்பட்டது.

சிறுபோகத்தின் போது மகாவலி வலயங்களிலிருந்து 522 Gwt மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டது. 2017 சிறுபோகத்தின் போது மின்சார உற்பத்தி திட்டமிடப்பட்ட விதம் மற்றும் உற்பத்தி அளவு என்பன கீழே உள்ள வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளன.




வரைபடம் 03

அனல் மின்சாரம் 79%

மகாவலி 7%

களனி, ஏனையவை 14%

நீர் முகாமைத்துவக் கமிட்டியின் கீழ் இருந்து வந்த வலயங்களில் 2017 சிறுபோகத்தின் போது பயிர்ச் செய்கை திட்டமிடப்பட்ட விதம் மற்றும் அதன் முன்னேற்றம் என்பன கீழே உள்ள வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளன.



வரைபடம் 04

2.4.3 2017/ 2018 பெரும்போகம் - (அக்டோபர் 01, 2017 – 2017 டிசம்பர் வரையில்)


2017/ 2018 பெரும்போகம் தொடர்பான மகாவலி நீர் முகாமைத்துவ கமிட்டியின் கூட்டம் 2017 அக்டோபர் மாதம் 04 ஆம் திகதி பேராதனை, கன்னொருவையில் அமைந்திருக்கும் தாவரங்கள் மற்றும் மரபணு வள நிலையத்தில் நடத்தப்பட்டது. அச்சந்தர்ப்பத்தில் கொத்மலை, விக்டோரியா நீர்த்தேக்கத்தின் நீர் மட்டம் 36% ஆகவும், வளவை 9.5% ஆகவும், ஹுரூலுவெவ நீர் மட்டம் 7.5% ஆகவும், மாதுறு ஓயா நீர் மட்டம் 11.2% ஆகவும் தாழ்ந்த மட்டங்களில் காணப்பட்டன.

அச்சந்தர்ப்பத்தில் கிடைத்திருந்த இரண்டாவது பருவப்பெயர்ச்சி காற்றுக்களுக்கிடையிலான மழை வீழ்ச்சி மற்றும் தென் கிழக்கு பருவப்பெயர்ச்சி மழை வீழ்ச்சி என்பன எதிர்பார்க்கப்பட்டிருந்த பிரதேசங்களுக்கு கிடைக்காத காரணத்தினால் நீர் விநியோகம் தாமதப்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் வலயங்கள் G,D 01 என்பன தொடர்பாக நீர் விநியோகம் 2017 டிசம்பர் 15 ஆம் திகதி வரையில் தாமதப்படுத்தப்பட்ட பின்னரேயே ஆரம்பிக்கப்பட்டது. அதன் பிரகாரம் 2017/2018 பெரும்போகத்தின் போது சாகுபடி செய்யப்பட்ட மொத்த நிலப்பரப்பு 127,466 ஹெக்டெயர்கள் ஆகும். அதன்மூலம் 71% உச்ச மட்ட சாகுபடி எதிர்பார்க்கப்பட்டதுடன், பராக்கிரம சமுத்திரம், கிரித்தலை, அல்லை, ராஜாங்கன ஆகிய திட்டப் பிரதேசங்கள் தொடர்பாக 100% சாகுபடி எதிர்பார்க்கப்பட்டிருந்தது.

மேலும், மகாவலி வலயங்களுடன் புதிதாக சேர்க்கப்பட்ட மொறகஹகந்த நீர்த்தேக்கத்தின் அணைக்கட்டு, கதவுகள் மற்றும் மின் உற்பத்தி இயந்திரங்கள் என்பவற்றின் பரீட்சிப்பு நடவடிக்கைகளுக்கென அந்த நீர்த்தேக்கத்தை நிரப்பும் பொருட்டு பருவப் பெயர்ச்சி மழை வீழ்ச்சியிலிருந்து கிடைத்த நீரும், திசை திருப்பப்பட்ட நீரும் பயன்படுத்திக் கொள்ளப்பட்டது. 2017 டிசம்பர் 29ஆம் திகதியளவில் மொறகஹகந்த நீர்த்தேக்கத்தின் நீர் மட்டம் 98.7% ஆக உயர் அளவில் காணப்பட்டது.

இந்தப் போகத்தின் போது மகாவலி வலயங்களில் 390 Gwh மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டது. 2017/2018 பெரும்போகத்தின் போது மின்சார உற்பத்தி திட்டமிடப்பட்ட விதம் மற்றும் இடம்பெற்ற விதம் என்பன வரைபடம் ஐந்தில் காட்டப்பட்டுள்ளன.


2017/2018 பெரும்போகம் - மின்சார உற்பத்தி



வரைபடம் 05

அனல் மின் உற்பத்தி 65%
மகாவலி 13%
களனி, ஏனையவை 22%

நீர் முகாமைத்துவ கமிட்டியின் கீழ் இருந்து வந்த வலயங்களில் 2017/2018 பெரும்போகத்தின் போது சாகுபடி திட்டமிடப்பட்ட விதம் மற்றும் அதன் முன்னேற்றம் என்பன கீழே உள்ள வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளது.



வரைபடம் 06

2.5 காணிப் பயன்பாடு மற்றும் திட்டமிடல் பிரிவு


2.5.1 கருமங்கள்


- 2017ஆம் ஆண்டின் வருடாந்த செயற்திட்டத்தின் பிரகாரம் எமது பிரிவின் மூலம் குளங்களின் பாதுகாக்கப்பட்ட பிரதேசங்களின் எல்லைகள் அடையாளப்படுத்தப்பட்டன.
- நகர அபிவிருத்தி திட்டங்களை தயாரித்தல்.
- காணித் தூண்டுகள் தொடர்பான திட்டங்களை தயாரித்தல்.
- தர அளவீடுகளை தயாரித்தல் மற்றும் பௌதீக திட்டமிடல் அறிக்கைகளுக்கான பரிந்துரைகளை வழங்குதல்.

மகாவலி வலயங்களை சூழவுள்ள குளங்களின் பாதுகாக்கப்பட்ட பிரதேசங்களை காட்டும் எல்லைகளை அடையாளப்படுத்துதல்

மகாவலி வலயங்களை சூழவுள்ள குளங்களின் பாதுகாக்கப்பட்ட பிரதேசங்களை முறைப்படி அளவை செய்து, அடையாளப்படுத்தும் செயற்பாடு மேற்கொள்ளப்படாதிருந்த குளங்களை தெரிவு செய்து, அக்குளங்களின் பாதுகாக்கப்பட்ட பிரதேசங்களின் எல்லைகளை அடையாளப்படுத்தி, அவற்றை பாதுகாக்கும் முறைமைகளை அறிமுகப்படுத்தும் செயற்பாடு 2017ஆம் ஆண்டுக்கான வருடாந்த ஒதுக்குத் தொகைகளின் அடிப்படையில் திட்டமிடப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் ஒவ்வொரு வலயம் தொடர்பாகவும் குளங்கள் தொடர்பாக நில அளவை நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டு, சம்பந்தப்பட்ட பாதுகாக்கப்பட்ட பிரதேசங்களில் எல்லைக் கல்கள் வைக்கப்பட்டுள்ளன.


வலயம்	குளம்	நில அளவை முடிக்கப்பட்டுள்ள அளவு
வலயம் B	இப்பன் வெவ, தலுக்கான வெவ	02
வலயம் C	காசன் வெவ, விஜேபுர வெவ, அளுயட்டவல வெவ	03
வலயம் G	பட்டுஹேன வெவ, நிக்க வெவ	02
வலயம் H	லுனுவெவ, முசல்பிட்டிய வெவ, நாவக்குளம பளுகஸ் வெவ	04
வளவே வலயம்	ஆடியன்கம வெவ, ஜுல் வெவ, ஹத்போருவ வெவ, பெல்லகஸ் வெவ	04
மொத்தம்		**15**






2.5.2 சரிவு உயர வரைபடங்களை தயாரித்தல்

D வலயத்தில் சூரியபுர பிரிவில் சூரியபுர அலகின் ஹலம்பயாய பிரதேசத்தின் நீர்ப்பாசன நீரை வழங்க முடியாத, ஆனால் நீர்ப்பாசனக் காணிகளாக துண்டுகளை பிரிக்கக் கூடிய பிரதேசத்தை இனம் காண்பதற்கென சரிவு உயரத்தைக் காட்டும் வரைபடம் ஒன்றை தயாரித்து, அதன் பிரகாரம் நீர்ப்பாசன காணிகள் என்ற முறையில் நீரை வழங்கக்கூடிய பிரதேசம் தொடர்பான திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.



2.5.3 தர அளவீடுகளை தயாரித்தல்

ஹுரூலுவெவ வலயம் தொடர்பாக ஏற்கனவே இருந்து வரும் அனைத்து இறுதிக் குடியிருப்புக்களின் வரைபடங்களினதும், கிராமங்களின் வரைபடங்களினதும் வன் பிரதிகள் மென் பிரதிகளாக மாற்றப்பட்டுள்ளன. அந்த வரைபடங்களின் இலத்திரனியல் தரவுகளின் ஒரு தொகுப்பினை தயாரிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.
மேலும் தளுஹல்மில்லாவ, கிரானேகம, போகஸ்வெவ கிராமம் தொடர்பாக சுமார் 85 குடும்பங்களுக்கு காணி உரித்தினை பெற்றுக்கொடுப்பதற்கென திட்ட ஒழுங்குகளின் பிரகாரம் ஒரு காணித் தூண்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. இப்பொழுது அந்த குடியேற்றவாசிகள் நிலத்தில் குடியேறியிருக்கும் விதத்தைக் காட்டும் வரைபடம் ஒன்றின் தயாரிப்பு பூர்த்தியடைந்துள்ளது.




2.5.4 நகர்சார்ந்த உபாய ரீதியான திட்டங்களை தயாரித்தல்

தெல்தெனிய நகரத் திட்டத்தை இற்றைப்படுத்துவது தொடர்பாக ஒரு கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அந்த ஆய்விலிருந்து கிடைத்த தகவல்களை அடிப்படையாகக் கொண்டு தெல்தெனிய நகரம் தொடர்பாக ஒரு புதிய திட்டம் தயாரிக்கப்பட்டது. அதன் ஊடாக உபாய ரீதியான கருத்திட்டங்கள் அடையாளம் காணப்பட்டிருந்தன. அவ்விதம் அடையாளம் காணப்பட்ட கருத்திட்டங்கள் தொடர்பாக நகரத்திட்டத்தில் கருத்திட்டங்களை உள்வாங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதேபோல திகன நகரம் மற்றும் அம்பகோட்டே நகரம் என்பன தொடர்பாக இனங்கணப்பட்டிருக்கும் கருத்திட்டங்களை அமுல் செய்வது தொடர்பாக நீர் வடிகால் தொகுப்பினை உருவாக்குதல், நடைப் பயிற்சிக்கான வழிகளை தயாரித்தல் போன்ற நடவடிக்கைகள் பூர்த்தி




செய்யப்பட்டுள்ளன.

மொரகஹகந்த வலயத்திற்குள் அம்பன நகரத் திட்டத்தில் சேவை வசதிகளை உருவாக்கி, அபிவிருத்தி செய்வது தொடர்பான திட்டத்தை இற்றைப்படுத்தும் நடவடிக்கைகள் இதுவரையில் பூர்த்தியடைந்துள்ளன.





மெதிரிகிரிய அபிவிருத்தித் திட்டத்தில் குடியேற்ற திட்டமிடல் நடவடிக்கைகளுக்கான திட்டங்களை இற்றைப்படுத்தல் மற்றும் சேவை விநியோக வசதிகளை விருத்தி செய்தல் என்பன தொடர்பான திட்டத் தயாரிப்பு வேலை பூர்த்தியடைந்துள்ளது.



அதே போல 2017ஆம் ஆண்டின் நடுப் பகுதி தொடக்கம் பௌதீக திட்டமிடல் அறிக்கைகள் தொடர்பாக பரிந்துரைகளை பெற்றுக்கொடுப்பதற்கென நடவடிக்கைகள் ன்னெடுக்கப்பட்டதுடன், அவற்றின் அளவுகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

01.07.2017 தொடக்கம் 31.12.2017 வரையில்

வலயம் / பாதுகாக்கப்பட்ட பிரதேசம்	அனுப்பி வைக்கப்பட் டிருக்கும் கடிதங்களின் எண்ணிக்கை	அனுப்பி வைக்கப்பட் டிருக்கும் மொத்த இடங்களின் எண்ணிக்கை	பரிந்துர ை செய்யப்பட் டிருக்கும் எண்ணிக் கை	பரிந்துர ை செய்யப் படாதவ ை	மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்வதற்கென அனுப்பி வைக்கப்பட்டிருக்கும் எண்ணிக்கை	இ.ம. அ. சபையினால் செயற்படுத்தப்பட்ட கருத்திட்டங்கள் தொடர்பாக கனிப்பொருள் அகழ்வுகள் மேற்றகொள்ளப்பட்ட இடங்கள்
வலயம் B	25	54	53	-	1	60
வலயம் C	13	14	12	-	02 (01 - அறிக்கை பிரதிப் பணிப்பாளர் நாயகம் (தொழில்நுட்ப சேவைகள்) பரிந்துரைக்கென)	12
வலயம் D	16	21	19	1	கருத்திட்ட பணிப்பாளர் D க்கு ஓர் அறிக்கை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.	3
வலயம் G	33	35	35	-	-	-
வலயம் H	29	38	34	1	பணிப்பாளர் காணி பரிந்துரையை பெற்றுக்கொண்ட பின்னர் 03 அறிக்கைகள் பரிந்துரை வழங்குவதற்கென	9
வலயம் L	9	10	10	-	-	8
வளவே வலயம்	94	601 கணிகளுக்கென தெரிவு செய்யப்பட்ட 463 பேரையும் உள்ளடக்கிய விதத்தில்)	594	-	(4) காணிகள் பணிப்பாளரின் பரிந்துரைகளை பெற்றுக்கொண்ட பின்னர் மூன்று அறிக்கைகள் பரிந்துரைக்கென	2
ரம்பக்கன் ஓயா வலயம்	18	20	20	-	-	8
விக்டோரியா வலயம்	17	30	22	-	08 வன ஜீவராசிகள் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.	-
ஹுருலுவெவ	19	23	21	1	1	-
நதிகள் மற்றும் நீர்த் தேக்கங்கள் தொடர்பானவை	21	24	6	5	13	
மொத்தம்	**294**	**870**	**826**	**08**	**36**	**102**

2.6 வனவள மற்றும் சுற்றாடல் பிரிவு

இலங்கைக்கு பெருந்தொகையான சமூக, பொருளாதார அனுகூலங்களை பெற்றுக்கொடுக்கும் விதத்தில் மகாவலி பெருந்திட்டம் அமுல் செய்யப்பட்டதுடன், துரிதப்படுத்தப்பட்ட மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் எதிர்பார்க்கப்பட்ட நிலைத்து நிற்கக்கூடிய சுற்றாடல் பாதுகாப்பு செயற்திட்டம் ஒன்றின் கீழ் அதனை முன்னெடுத்துச் செல்வதற்கு அடிப்படையில் திட்டமிடப்பட்டிருந்தது. உத்தேச அபிவிருத்திச் செயன்முறையின் ஒவ்வொரு படிமுறையின் போதும் ஏற்படக்கூடிய சுற்றாடல் தாக்கம் மற்றும் மாற்றங்கள் என்பவற்றை குறைந்தபட்ச மட்டத்தில் வைத்துக்கொள்ளும் நோக்கத்துடன் இது மேற்கொள்ளப்பட்டது.

அதன் பிரகாரம், விவசாயக் குடியேற்றங்களாக அபிவிருத்தி செய்யப்பட்ட மகாவலி கீழ் பள்ளத்தாக்கு வலயங்களைப் போலவே மிகச் சிறந்த நீர் விநியோகத்திற்கென மேல் மகாவலி நீரேந்து பரப்புக்களும் பாதுகாக்கப்பட்டு, விருத்தி செய்யப்பட்டன. அவற்றின் இயற்கை வளங்களை மிகச் சிறப்பான விதத்தில் திட்டமிடுதல், முகாமைத்துவம் செய்தல் மற்றும் பராமரித்து வருதல் ஆகிய பணிகள் சுற்றாடல் மற்றும் வன வளப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கும் முதன்மையான பணிகளாக இருந்து வருகின்றன.

2.6.1 செயற்பாடுகள்

- மேல் மகாவலி நீரேந்து பிரதேசங்களை பாதுகாப்பது தொடர்பான செயற்பாடுகள்.
- மகாவலி கீழ்ப் பள்ளத்தாக்கு பிரதேசங்களிலும், ஏனைய மகாவலி பிரதேசங்களிலும் மேற்கொள்ளப்பட்டு வரும் சுற்றாடல் செயற்பாட்டு நிகழ்ச்சித்திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த கருத்திட்டம் என்பவற்றில் சுற்றாடல் நிகழ்ச்சித்திட்டங்களை அமுல் செய்தல்.
- மகாவலி அதிகார சபையினால் அமுல் செய்யப்பட்டு வரும் பாரிய கருத்திட்டங்களின் சுற்றாடல் பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பான சுற்றாடல் அனுமதிப் பத்திரத்தின் நிபந்தனைகளை அமுல் செய்வது தொடர்பான நடவடிக்கைகள் மற்றும் தொடர் கண்காணிப்பு;
- மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு மற்றும் மகாவலி அதிகார சபை என்பவற்றினால் உத்தேசிக்கப்பட்டிருக்கும் கருத்திட்டங்களின் தொழில்நுட்பக் கமிட்டிகள், நெறிப்படுத்தல் கமிட்டிகள் மற்றும் நிலையான கமிட்டிகள் என்பவற்றில் பிரதிநிதித்துவத்தை பெற்றுக் கொள்ளல்.
- தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழ் கருத்திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கும் ஒரு நிறுவனம் என்ற முறையில் சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு நடவடிக்கைகளை நிர்வகித்தல் மற்றும் தொடர் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- மத்திய அரசு நிறுவனங்களினால் அமுல் செய்யப்பட்டு வரும் அபிவிருத்திக் கருத்திட்டங்களின் தொழில்நுட்ப கமிட்டிகளில் பிரதிநிதித்துவம் பெற்றுக் கொள்ளல், தேசிய மட்டத்தில் அமுல் செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டிருக்கும் சுற்றாடல் செயற்பாடுகள் தொடர்பான கூட்டங்கள் மற்றும் செயலமர்வுகளில் மகாவலி அதிகார சபையை பிரதிநிதித்துவம் செய்தல் மற்றும் உள்ளகக் கமிட்டிகளில் பிரதிநிதித்துவத்தை பெற்றுக் கொள்ளல்.

2.6.2 நிதி ஒதுக்குகள் மற்றும் முன்னேற்றம் -2017

இல.	பிரிவு /வலயம்	ஆரம்ப நிதி ஒதுக்கீடு (ரூ. மில்லியன்)	திருத்தப்பட்ட நிதி ஒதுக்கீடு (ரூ. மில்லியன்	நிதிசார் முன்னேற்றம் (ரூ. மில்லியன்	சதவீதம்
01	சுற்றாடல் மற்றும் வனவளப் பிரிவு, கொத்மலை	38.00	30.12	30.23	100%
02	B,C,D,வளவை, ஹுரூலுவெவ, விக்டோரியா வலயங்கள்	28.00	22.07	22.63	100%
03	1) மகாவலி ஒருங்கிணைந்த கருத்திட்டம் 2) நம்பக்கன் ஓயா அபிவிருத்தித் திட்டம் 3) B வலயம் வலது கரை அபிவிருத்தி கருத்திட்டம் (மல்வென்ன, வெலித்தன்ன)	32.43	21.98	20.33	92.51%
	மொத்தம்	**98.43**	**74.17**	**73.19**	**98.14%**

2.6.3 மூலதனச் செலவுகள்

வரவு செலவுத் திட்ட குறியீட்டு இலக்கம்	**பிரிவு**	**திருத்தப்பட்ட மதிப்பீட்டுத் தொகை** **ரூ. மில்லியன்**	**செலவு** **ரூ. மில்லியன்**	**சதவீதம்**
2965	இயற்கை வளங்கள் பாதுகாப்பு பிரிவு	9.834	9.841	100.07%
2965	சுற்றாடல் கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவு	4.965	4.869	98.8%
2965	நீரியல் ஆய்வுப் பிரிவு	2.877	2.967	102%
	நீரின் தரம் குறித்த ஆய்வு	0.5	0.487	
2965	திசு வளர்ப்புப் பிரிவு	5.023	5.094	101.43%
2705/2113	நிலையான சொத்துக்களை கையகப்படுத்துதல்	0.35	0.338	96.4%
2383	வாகனங்களின் பராமரிப்பு மற்றும் திருத்த வேலைகள்	2.33	2.455	105.37%
2385	கட்டட பராமரிப்பு பிரிவு	4.145	4.117	99.33%
2386	அலுவலக உபகரணங்களை புதுப்பித்தல்	0.1	0.106	106.76%
மொத்தம்		**30.124**	**30.277**	**100.51%**

2.6.4 செயற்பாடுகள் - 2017

1. பண்ணைக்கு வெளியிலான மண் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டம் (தியகந்துறு மரங்களின் பாதுகாப்பு)
2. கன்றுகள் உற்பத்தி – நவதெவிட்ட மத்திய நாற்றுமேடை
3. மரம் வளர்ப்பு நிகழ்ச்சித்திட்டங்கள்
4. நீரேந்து பரப்பு பிரதேசங்களின் தரத்தினை உயர்த்துவதற்கான ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டம்
5. பசுமைக் கிராம நிகழ்ச்சித்திட்டம்
6. திசு வளர்ப்பு உற்பத்தி பிரிவு
7. ஆய்வு கூடத்திற்குள் வேறு பயிர்கள் தொடர்பான பரீட்சிப்புக்கள் - (Research and Development) விசேட மூங்கில் வகைகளின் உற்பத்தி :

   (i) மஞ்சள் வகை மூங்கில் *Bambusa venticosa* "Kemi")

   (ii) குழாய் மூங்கில் *Bambusaatra)*
8. சுற்றாடல் மேம்பாட்டு நிலையங்களை ஸ்தாபித்தல்
9. நாற்று மேடைகள் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட மற்றும் பராமரிக்கப்பட்ட கன்றுகளின் எண்ணிக்கை

2.6.5 மகாவலி வலயங்களுக்குள் செயற்படுத்தப்பட்டு வரும் சுற்றாடல் மற்றும் வனப் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டம் 2017

1. நிகழ்ச்சித்திட்டங்களுக்கென கன்றுகளை பெற்றுக்கொடுத்தல்.

2. சுற்றாடல் மற்றும் வன வளப் பாதுகாப்பு பிரிவினால் மேற்கொள்ளப்பட்டு வரும் ஏனைய விசேட நடவடிக்கைகள்.

மூன்றாவது அத்தியாயம்

அபிவிருத்திப் பிரிவு

அபிவிருத்திப் பிரிவு ஐந்து முக்கிய பிரிவுகளைக் கொண்டுள்ளது; அவை வருமாறு:

01. காணிப் பிரிவு
02. விவசாய அபிவிருத்திப் பிரிவு
03. கால்நடை அபிவிருத்திப் பிரிவு
04. நிறுவன அபிவிருத்திப் பிரிவு
05. வணிக அபிவிருத்திப் பிரிவு

3.1 காணிப் பிரிவு

காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டம், முடிக்குரிய காணிகள் கட்டளைச் சட்டம், உரித்தினை மீளப் பெற்றுக் கொள்ளும் சட்டம், வன கட்டளைச் சட்டம் போன்ற கட்டளைச் சட்டங்கள் மூலம் வழங்கப்பட்டிருக்கும் அதிகாரங்களின் பிரகாரம், இலங்கை மகாவலி அதிகார சபையின் அனைத்து வலயங்களிலும் உள்ள காணிகள் தொடர்பான கடமைகளை ஏற்பாடு செய்தல், காணிக் கச்சேரிகளை நடத்துதல் மற்றும் அத்துமீறி குடியேறியிருக்கும் காணிகள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளல், அத்தகைய அத்துமீறல்கள் தொடர்பாக வலயங்களிலிருந்து வரும் கோரிக்கைகளின் பிரகாரம் பணிப்பாளர் நாயகத்தின் முறையான அனுமதியை பெற்று, நடவடிக்கை எடுத்தல் மற்றும் அது தொடர்பாக அறிவித்தல் என்பன இப்பிரிவின் பணிகளாக இருந்து வருகின்றன. இச்செயற்பாடுகளை கண்காணிப்பதற்குத் தேவையான அறிவுறுத்தல்களை வழங்குவது இப்பிரிவின் மிக முக்கியமான ஒரு பொறுப்பாக இருந்து வருகின்றது.

3.1.2 2017 ஆம் வருடத்தின் போது முன்னெடுக்கப்பட்ட பணிகள்

01. மகாவலி விவசாயிகளுக்கு ஒரு இலட்சம் (100,000) காணி உறுதிகளை வழங்கும் துரிதப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டம்.
02. முடிக்குரிய காணிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் உரித்தினை ஒப்படைத்தல் - 2017
03. முடிக்குரிய காணிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் நீண்ட கால குத்தகைகளை வழங்குதல் -2017.
04. முடிக்குரிய காணிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் விஹாரஸ்தான அளிப்புப் பத்திரங்களை வழங்குதல் -2017.

01.மகாவலி விவசாயிகளுக்கு ஒரு இலட்சம் காணி உறுதிகளை வழங்கும் துரிதப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டம்

வலயம்	இலக்கு	31.12.2017 இல் முன்னேற்றம் அனுமதிப் பத்திரங்கள் / அளிப்புப் பத்திரங்கள் / நீண்ட கால குத்தகைகள்
B	25,600	25,533
C	17,700	26,360
D	2,800	444
H	12,500	8,729
L	8,600	7,816
மொறகஹகந்த	3,600	3,522
விக்டோரியா	2,800	3,299
ஹுருலுவெவ	4,100	2,119
வளவே	18,500	19,683
றம்பக்கன் ஓயா	3,800	2,568
மொத்தம்	**100,000**	**100,073**

02. முடிவுக்குரிய காணிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் உரித்தினை ஒப்படைத்தல் 2017

வலயம்	இலக்கு	முன்னேற்றம்
B	870	596
C	30	19
மொறகஹகந்த	204	182
H	400	365
L	-	-
உடவளவே	30	22
விக்டோரியா, கொத்மலை	200	167
மெதிரிகிரிய	4	1
ஹுருலுவெவ	-	-
ரம்பக்கன் ஓயா	15	9
மொத்தம்	**1,753**	**1,361**

03. நீண்ட குத்தகைகளை வழங்குதல் - 2017

வலயம்	இலக்கு	முன்னேற்றம்
B	25	14
C	30	24
மொறகஹகந்த	14	5
H	18	14
L	3	-
உடவளவே	33	22
விக்டோரியா, கொத்மலை	202	182
மெதிரிகிரிய	4	2
ஹுருலுவெவ	7	3
நம்பக்கன் ஓயா	4	-
மொத்தம்	**340**	**266**

04. முடிக்குரிய காணிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் விஹாரஸ்தான அளிப்பு பத்திரங்களை வழங்குதல் -2017

வலயம்	இலக்கு	முன்னேற்றம்
B	10	7
C	10	1
மொறகஹகந்த	4	3
H	20	3
L	-	-
உடவளவே	20	2
விக்டோரியா, கொத்மலை	30	7
மெதிரிகிரிய	-	-
ஹுருலுவெவ	5	4
நம்பக்கன் ஓயா	-	-
மொத்தம்	**99**	**27**

06. அரச நிறுவனங்களுக்கு காணிகளை வழங்குதல் - 2017

வலயம்	ஒப்படைப்புக் கட்டளைகள்		காணிகளை ஒப்படைத்தல்	
	இலக்கு	முன்னேற்றம்	இலக்கு	முன்னேற்றம்
B	10	4	50	47
C	15	13	-	-
மொறகஹகந்த	-	-	2	1
H	5	1	3	1
L	7	5	50	47
உடவளவே	-	-	-	-
விக்டோரியா, கொத்மலை	-	-	10	6
மெதிரிகிரிய	-	-	-	-
ஹுருலுவெவ	2	1	5	3
றம்பக்கன் ஓயா	-	-	-	-
மொத்தம்	**39**	**24**	**120**	**105**

3.2 விவசாய அபிவிருத்திப் பிரிவு

3.2.1 பணிகள்

- இலங்கை மகாவலி அதிகார சபைக்குச் சொந்தமான மகாவலி வலயங்களில் வசித்து வரும் விவசாயிகளின் பொருளாதாரத்தை பயனுள்ள விதத்தில் விருத்தி செய்யும் பொருட்டு சுற்றாடலுக்கு உசிதமான விவசாய தொழில்நுட்ப முறைகளை அறிமுகம் செய்து வைத்தல் மற்றும் பரவலாக்குதல்.
- உணவு உற்பத்தி தொடர்பான தேசிய இலக்குகளின் பிரகாரம் மகாவலி பிரதேசங்களில் நீர்ப்பாசனம் பெறும் காணிகளிலும், நீர்ப்பாசனம் பெறாத காணிகளிலும் பயிர்ச்செய்கை, விலங்கு உற்பத்தி மற்றும் விவசாய தொழில் முயற்சிகள் என்பவற்றை உருவாக்குவதற்கென வருடாந்த இலக்குகளை தயாரித்துக் கொள்ளல்.
- வருடாந்த பயிர் உற்பத்தி இலக்குகளை சாதித்துக் கொள்வதற்கென வழங்கப்படும் வருடாந்த நிதி ஒதுக்குகளின் பிரகாரம் விரிவாக்கல் இலக்குகள் மற்றும் உத்திகள் என்பவற்றை தயாரித்தல், அவற்றை வலய மட்டத்தில் ஒழுங்குபடுத்துதல், அமுல் செய்தல், தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளல், கண்காணிப்பு மற்றும் அறிக்கையிடல்.
- விவசாய அபிவிருத்தி நடவடிக்கைகளில் மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு, விவசாய அமைச்சு, விவசாய திணைக்களம், சிறு ஏற்றுமதிப் பயிர்கள் திணைக்களம், ஏனைய அரச நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் ஆகிய அனைத்து வெளி நிறுவனங்களுடனும் ஒருங்கிணைப்பினை மேற்கொள்ளல்.

3.2.2 செயற்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்

மேலே குறிப்பிடப்பட்டிருக்கும் குறிக்கோள்களை சாதித்துக் கொள்ளும் பொருட்டு 2017ஆம் ஆண்டின் போது ஒட்டுமொத்த மகாவலி வலயங்களிலும் முன்னெடுக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றம் கீழே தரப்பட்டுள்ளது.

நிகழ்ச்சித்திட்டம்	அலகு	இலக்கு	முன்னேற்றம்
நெல் உற்பத்தி மேம்பாடு			
மாதிரி வயல் வெளி நிகழ்ச்சித்திட்டம்	எண்ணிக்கை	100	94
அறுவடை மதிப்பீட்டாய்வுகள்*	மதிப்பீட்டாய்வு	300	289
புதிய தொழில்நுட்ப மாதிரிகள்	நிகழ்ச்சித்திட்டம்	100	125
நிகழ்ச்சித்திட்டம்	**அலகு**	**இலக்கு**	**முன்னேற்றம்**
செயற்திறன் மிக்க உரப் பாவனை தொடர்பான விவசாயிகள் பயிற்சி	விவசாயிகள்	11,965	9,530
பகிர்ந்தளிக்கப்பட்ட பரசூட் தட்டுக்களின் எண்ணிக்கை	எண்ணிக்கை	70,000	68,300
கன்றுகளை நடும் இயந்திரங்களை வழங்குதல்	எண்ணிக்கை	25	24
நிகழ்ச்சித்திட்டம்	**அலகு**	**இலக்கு**	**முன்னேற்றம்**
பயிர் பயிற்சி சேவைகள்/ கள நாட்கள்	எண்ணிக்கை	900	899
நிறக் குறிகாட்டிகளின் பயன்பாடு	ஹெக்டெயார்	2,000	1,853

சேதன உரப் பயன்பாடு	ஹெக்டெயார்	10,000	11,140
ஏயை களப் பயிர்கள்			
விவசாயிகள் பயிற்சி / கள நாட்கள் / பயிர்கள்	நிகழ்ச்சித்திட்டங்கள்	280	286
மாதிரி சாகுபடிகள்	நிகழ்ச்சித்திட்டங்கள்	500	534
பெரிய வெங்காய உற்பத்தி	கிலோ கிராம்	150,000	143,226
நுண் நீர் விநியோக தொகுதிகளை வழங்குதல்	எண்ணிக்கை	80	83
மழை கூரைகள்	எண்ணிக்கை	250	253
விவசாயக் கிணறுகள்	எண்ணிக்கை	100	120
பழச் செய்கை அபிவிருத்தி			
மா மர புனரமைப்பு நிகழ்ச்சித்திட்டங்கள்	எண்ணிக்கை	115	110
பழ வண்டு கட்டுப்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்கள்	எண்ணிக்கை	57	53
விவசாயிகள் பயிற்சி / கள நாட்கள் / பயிர் சேவை நிகழ்ச்சிகள்	நிகழ்ச்சித்திட்டங்கள்	260	241
தேன் உற்பத்தி நிகழ்ச்சித்திட்டம்	தேனீ குடியேற்றங்கள்	640	626
காளான் உற்பத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்	எண்ணிக்கை	50	53
மாதிரி வீட்டுத்தோட்ட நிகழ்ச்சித்திட்டம்	வீட்டுத் தோட்டங்கள்	4,000	4,110
விவசாயிகள் பயிற்சி	நிகழ்ச்சித்திட்டங்கள்	350	355
சேதன உரப் பாவனையை அதிகாரிக்கும் நிகழ்ச்சிட்டம்			
நிகழ்ச்சித்திட்டம்	**அலகு**	**இலக்கு**	**முன்னேற்றம்**
விவசாயிகள் பயிற்சி	நிகழ்ச்சித்திட்டங்கள்	240	228
கொம்போஸ்ட் உற்பத்தி மாதிரிகள்	நிகழ்ச்சித்திட்டங்கள்	2300	2355
நெல் உமி உற்பத்தி மாதிரிகள்	நிகழ்ச்சித்திட்டங்கள்	50	65
விவசாய விரிவாக்கல் செயற்பாடுகள்			
மூன்றாண்டு திட்டத்தை செயற்படுத்துதல்	நிகழ்ச்சித்திட்டங்கள்	500	492
சாகுபடி போட்டிகள் மற்றும் கண்காட்சிகள்	நிகழ்ச்சித்திட்டங்கள்	12	13
உத்தியோகத்தர் பயிர்சி			
சாகுபடி பருவத்திற்கு முன்னரான பயிற்சி	நிகழ்ச்சித்திட்டங்கள்	12	12
விசேட பயிற்சி	நிகழ்ச்சித்திட்டங்கள்	41	48

3.2.3 நிதிசார் முன்னேற்றம்

2017ஆம் ஆண்டில் இலங்கை மகாவலி அதிகார சபைக்கு அபிவிருத்திக் கருத்திட்டங்கள் தொடர்பாக ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ் மேலே குறிப்பிடப்பட்ட திட்டமிடப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களுக்கென இப்பிரிவுக்கு ரூ. 160 மில்லின் தொகை கிடைத்தது. வருடத்தின் போது அமுல் செய்யப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களுக்கென ரூ.157.65 தொகை செலவிடப்பட்டதுடன், அது 99% முன்னேற்றத்தைக் காட்டுகின்றது.

	நிகழ்ச்சித்திட்டம்	**ஒதுக்கப்பட்ட தொகை ரூ. மில்லியன்**	**செலவிடப்பட்ட தொகை ரூ. மில்லியன்**
1	நெல் உற்பத்தி விளைதிறன் மேம்பாடு	3.78	3.7
2	பயிர் பன்முகப்படுத்தல்	24.84	24.9
3	பழச் செய்கை அபிவிருத்தி	2.04	2
4	வீட்டுப் பொருளாதார வீட்டுத் தோட்ட அபிவிருத்தி	6.06	6.2
5	சேதனப் பொருட்களின் பாவனையை / உற்பத்தியை மேம்படுத்துதல்	0.96	0.95
6	விவசாய தொழில்நுட்ப விரிவாக்கல் நடவடிக்கைகள்	6.94	6.9
7	உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி	2.28	2.3
8	தொடர்பாடல் வசதிகள்	0.87	0.8
9	பண்ணை அபிவிருத்தி	94.57	92
10	நாற்றுமேடைகள் மற்றும் திசு வளர்ச்சி கன்று உற்பத்தி	9.35	9.45
11	காலநிலை மாற்றங்களுக்கு ஈடு கொடுக்கும் நிகழ்ச்சித்திட்டங்கள்	240	0.26
12	வறுமை ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள்	4.24	4.35
13	முகாமைத்துவச் செலவுகள்	3.85	3.84
	மொத்தம்	**160**	**157.65**

3.2.4 மகாவலி வலய மட்டத்தில் நிதிசார் முன்னேற்றம்

வலயம்	**ஒதுக்கப்பட்ட தொகை (ரூபா மில்லியன்)**	**முன்னேற்றம் (ரூபா மில்லியன்)**	**%**
B	33.4	30.4	91%
C	17.6	17.7	100%
D	3.5	3.5	100%
G	7.3	7.3	100%
H	45.4	46.7	1.3%
ஹுரூலுவெவ	7.0	6.6	94%
வளவே	42.0	42.0	100%
விக்டோரியா	2.0	0.8	90%
தலைமை அலுவலகம்	1.7	1.6	98%
றம்பக்கன் ஓயா	**160.0**	*** 157.6**	**99%**

3.2.5 விவசாய உற்பத்தியில் ஏற்பட்ட முன்னேற்றம் -2017

1. 2016/ 2017 பெரும்போக சாகுபடியில் ஏற்பட்ட முன்னேற்றம்

பயிர்	இலக்கு (ஹெக்டெயார்	முன்னேற்றம் (ஹெக்டெயார்)
நெல்	93,471	56,310
சோளம்	3,036	2,555
மிளகாய்	717	405
கௌப்பி	997	383
பயறு	1,028	331
உளுந்து	350	881
நிலக்கடலை	610	416
குரக்கன்	329	283
சோயா	660	2,151
மரக்கறி வகைகள்	4,209	4,152
பெரிய வெங்காயம் (விதை)	25	9
பழங்கள்	12,984	12,984
ஏனையவை	7,000	7,589
மொத்தம்	**125,416**	**88,449**

3.2.6 சிறுபோக சாகுபடியில் ஏற்பட்ட முன்னேற்றம் - 2017

பயிர்	இலக்கு (ஹெக்டெயார்	முன்னேற்றம் (ஹெக்டெயார்)
நெல்	35,481	42,621
சோளம்	3,344	814
மிளகாய்	424	183
கௌபி	761	209
பயறு	1,275	370
உளுந்து	520	690
நிலக்கடலை	766	213
குரக்கன்	328	156
சோயா	4,847	3,809
மரக்கறி வகைகள்	3,786	3,191
பெரிய வெங்காயம்	1,992	1,195
பழங்கள்	13,767	13,130
ஏனையவை	7,127	6,857
மொத்தம்	**74,418**	**73,438**

3.2.7 தேசிய உணவு உற்பத்திக்கு மகாவலி பிரதேசங்களின் பங்களிப்பு – 2017

பருவ காலப் பயிர்கள்

பயிர்	மகாவலி நிலப்பரப்பு	மகாவலி உற்பத்தி (மெற்றிக் தொன்)	தேசிய உற்பத்தி (மெற்றிக் தொன்)	மகாவலி பங்களிப்பு
நெல்	98,931	507,828	2,383,000	21%
சோளம்	3,369	14,012	195,744	7%
பயறு	702	1,157	9,392	12%
கௌபி	593	708	8,576	8%
சோயா	5,960	13,703	14,363	95%
பச்சை மிளகாய்	588	4,481	51,827	9%
நிலக்கடலை	629	1,203	22,475	5%
உளுந்து	1,572	2,300	7,329	31%
எள்ளு	64	49	7,754	1%
குரக்கன்	439	792	5,574	14%
பெரிய வெங்காயம்	1,204	24,066	53,603	45%

3.2.8 அமுல் செய்யப்பட்ட விசேட நிகழ்ச்சித்திட்டங்கள்

2017ஆம் ஆண்டின் போது நிலவி வந்த மோசமான காலநிலை நிலைமைகள் காரணமாக ஏற்பட்ட உணவுப் பற்றாக்குறைக்கு தீர்வு காணும் விதத்திலும், நிலத்திலிருந்தும், குறைந்தபட்ச நீர் வளங்களிலிருந்தும் உச்ச மட்ட விளைதிறனை பெற்றுக்கொள்ளும் நோக்கத்துடனும் ஒட்டுமொத்த மகாவலி வலயங்களிலும் ஒரு சில நிகழ்ச்சித்திட்டங்கள் செயற்பட்டுத்தப்பட்டன.

1. சோயா விதை உற்பத்தி
2. வீட்டுத் தோட்டங்களில் பாத்திரங்களில் பயிர்ச் செய்கை
3. விவசாயக் கிணறுகளின் கீழ் பயிர் சாகுபடி



சோயா விதை உற்பத்தி L வலயம்



பாத்திரங்களில் மிளகாய் செய்கை



விவசாயக் கிணறுகளை அமைத்தல்

4. தற்போதைய வாழைப் பயிர்ச்செய்கையை வறட்சியிலிருந்து பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்



- மகாவலி விளையாட்டு விழா செப்ரம்பர் மாதம் 09, 10 ஆகிய தினங்களில் பொலன்னறுவை தேசிய விளையாட்டு அரங்கில் நடத்தப்பட்டது.
- தடகளப் போட்டிகள் (ஆண் / பெண்) போட்டி
- சைக்கிள் ஓட்டப் போட்டிகள் (ஆண் / பெண்) நடத்தப்பட்டன

முன்னேற்றத்தின் சாரம்சம் - 2017

<table>
<tr><th></th><th>ஒதுக்கப்பட்ட தொகை</th><th>செலவிடப்பட்ட தொகை</th><th>மிகுதித் தொகை</th><th>விபரம்</th></tr>
<tr><td><u>மகாவலி பிரதிபா கலாசார நிகழ்ச்சித்திட்டம்</u></td><td>ரூ.4,200,000.00</td><td>ரூ.5,885,730.00</td><td>நிதிகள் இல்லை</td><td>மேலதிகமாக பணத் தொகைகள் செலவிடப்பட்டுள்ளன</td></tr>
<tr><td>வெசாக் பக்திப் பாடல்கள்</td><td>ரூ.77,000.00</td><td>ரூ.77,000.00</td><td>-</td><td>நிதிகள் இல்லை</td></tr>
<tr><td>அமரஸ கீ இசை நிகழ்ச்சி</td><td>ரூ.140,000.00</td><td>ரூ.140,000.00</td><td>-</td><td>நிதிகள் இல்லை</td></tr>
<tr><td>கலாசார படையினருக்கு</td><td>ரூ.1,000,000.00</td><td colspan="3" rowspan="2">இந்தப் பணத் தொகைகள் பிரதிபா கலாசார நிகழ்ச்சித்திட்டத்திற்கென செலவிடப்பட்டுள்ளன</td></tr>
<tr><td>மகாவலி விளையாட்டு கலாசார நடவடிக்கைகள</td><td>ரூ.500,000.00</td></tr>
<tr><td>அறிவிப்பாளர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்</td><td>ரூ.500,000.00</td><td>ரூ.500,000.00</td><td>-</td><td>நிதிகள் இல்லை</td></tr>
</table>

2017ஆம் ஆண்டில் கலாசார பிரிவின் பௌதீக முன்னேற்றத்தின் சாராம்சம்

மகாவலி பிரதிபா கலாசார நிகழ்ச்சித்திட்டம்	இந்நிகழ்ச்சி 27.04.2017அன்று கொழும்பு தாமரைத் தடாக அரங்கத்தில் வெற்றிகரமாக நடத்தப்பட்டது. இச்சந்தர்ப்பத்தில் அனைத்து மகாவலி வலயங்களையும் பிரதிநிதித்துவம் செய்யும் விதத்தில் மகாவலி குடியேற்றவாசி விவசாயிகளின் பிள்ளைகள் தமது திறமைகளையும், உள்ளார்ந்த ஆற்றல்களையும் தேசிய மட்டத்தில் அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் தலைமையில் எடுத்துக்காட்டுவதற்கான வாய்ப்புக் கிடைத்தது. இதற்கென பிரிவுகளுக்கு இடையிலும், வலயங்களுக்கு இடையிலும் ஆடல், பாடல் நடனப் போட்டிகள் நடத்தப்பட்டதுடன், அவற்றில் வெற்றியீட்டிய கலாசார குழுக்களின் நிகழ்ச்சிகள் தேசிய மட்டத்தில் அரங்கேற்றப்பட்டன.
வெசாக் பக்தி பாடல்கள் 'மெத்சரணி"	மகாவலி உத்தியோகத்தர்களின் ஆன்மீக அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்கும், சமயங்களுக்கு இடையிலான சகவாழ்வை வளர்ப்பதற்குமென வெசாக் போயா தினம் அன்று (09.05.2017) "மெத்சரணி" என்ற பெயரில் வெசாக் பக்திப் பாடல் நிகழ்ச்சி தலைமை அலுவலக வளவில் இடம்பெற்றது.
அமரஸ கீ இசை நிகழ்ச்சி	மகாவலி ஊழியர்கள் மற்றும் ஓய்வு பெற்ற மகாவலி உத்தியோகத்தர்கள் ஆகியோரின் மன ஆறுதலை கருத்தில் கொண்டு அமரஸ கீ என்ற பெயரில் ஒரு இசை நிகழ்ச்சி 10.03.2017 அன்று வெற்றிகரமாக நடத்தப்பட்டது.
அறிவிப்பாளர் பயிற்சி செயலமர்வு	அனைத்து மகாவலி வலயங்களையும் பிரதிநிதித்துவம் செய்யும் விதத்தில் விவசாயிகளின் பிள்ளைகளின் அறிவித்தல் திறன்களை மெருகூட்டுவதற்கும், அவ்விதம் திறமைகளை கொண்டிருப்பவர்களுக்கு வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பதற்கும், அவர்களுடைய திறைமைகளுக்கு பொருத்தமான தொழில் வாய்ப்புக்களை பெற்றுக்கொடுப்பதற்கும் இந்த நிகழ்ச்சியின் மூலம் வாய்ப்புக் கிடைத்தது. இந்தப் பயிற்சி செயலமர்வு இரு கட்டங்களாக நடத்தப்பட்டதுடன், முதல் செயலமர்வு மார்ச் 26, 27 மற்றும் 28 ஆகிய திகதிகளிலும், இரண்டாவது செயலமர்வு அக்டோபர் 27, 28 மற்றும் 29 ஆகிய திகதிகளிலும் நடத்தப்பட்டது.
கலாசார படையணியினருக்கு மகாவலி விளையாட்டு, கலாசார நடவடிக்கைகள்	2017 மகாவலி விளையாட்டு விழாவுடன் உடன் நிகழ்வாக மகாவலி கலாசார படை அணியினருக்கான கலாசார நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. அந்நிகழ்ச்சிகளுக்கான செலவுகளை சம்பந்தப்பட்ட வலயங்கள் பொறுப்பேற்றதுடன், அதற்கென ஒதுக்கப்பட்டிருந்த தொகைகள் மகாவலி பிரதிபா கலாசார நிகழ்ச்சித் திட்டத்திற்கென செலவிடப்பட்டன.

வெளியீட்டுப் பிரிவு

1.	தியவர சஞ்சிகைக்கென ஒதுக்கப்பட்ட தொகை	ரூ.400,000.00
	அதற்கென செலவிடப்பட்ட தொகை	ரூ. 316,250.00
2.	ஹெலவாரி புராவத நூலுக்கென ஒதுக்கப்பட்ட தொகை	ரூ. 500,000.00
	அதற்கென செலவிடப்பட்ட தொகை	ரூ. 424,060.00

கட்புல செவிப்புல பிரிவு

மகாவலி நிலையத்தின் அனைத்து கட்புல செவிப்புல குரல் பதிவுகள் மகாவலி நிலையத்தின் காமினி திஸாநாயக்க கேட்போர் கூடத்தில் மேற்கொள்ளப்படுகின்றன. இந்தக் கேட்போர் கூடம் அரச துறை நிறுவனங்களுக்கும், வெளி நிறுவனங்களுக்கும் வாடகை அடிப்படையில் வழங்கப்பட்டு வருகின்றது. இந்தப் பிரிவின் செயற்பாடுகள் சிரேஷ்ட கட்புல செவிப்புல உத்தியோகத்தரின் கண்காணிப்பின் கீழ் இடம்பெற்று வருகின்றன.

நீர்ப்பாசன அருங்காட்சியகம்

இந்த அருங்காட்சியகத்தின் பணிகளை முன்னெடுப்பதற்கென வெளியிலிருந்து ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தப் பிரிவினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை பெறுப்பேற்பதற்கென நிறுவன அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவர் பணியில் அமர்த்தப்பட்டுள்ளார்.

2017ஆம் ஆண்டின் போது இந்தப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டிருக்கும் பணிகள்

பாடசாலை பிள்ளைகளை தொடர்புபடுத்தி நீர்ப்பாசனம் மற்றும் நீரியல் தொழில்நுட்பம் தொடர்பான செயலமர்வுகளை நடத்துதல்.

28.08.2017

ஜெயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் 12 மாணவர்களை கொண்ட குழு ஒன்றுக்கு நிறுவன ரீதியான பயிற்சி வழங்கப்பட்டது.

29.09.2017

கொழும்பு பிரதேசத்தைச் சேர்ந்த பாடசாலைப் பிள்ளைகளுக்கு நீர்ப்பாசன வரலாறு தொடர்பான விரிவுரை நடத்தப்பட்டது.

பங்குபற்றியோர் எண்ணிக்கை 200

20.10.2017
மொத்தச் செலவு : ரூ. 91,170.00
பங்குபற்றியோர் எண்ணிக்கை: 200 (பாடசாலை மாணவ மாணவியர்)

23.11.2017

சுற்றாடல் படையணினருக்கு வலுவூட்டும் நிகழ்ச்சித்திட்டத்துடன் இணைந்த விதத்தில் ஒரு செயலமர்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

சுற்றாடல் தொடர்பான பாரம்பரிய ஆய்வுகள் குறித்த செயலமர்வு

பங்குபற்றியோர் எண்ணிக்கை (200 பல்கலைக்கழக மாணவர்கள்)

மொத்தச் செலவு: ரூ. 99,255.00

நீர்ப்பாசனத் துறையின் வரலாறு, நீரியல் தொழில்நுட்பம் போன்ற விடயங்களை எதிர்கால தலைமுறையினருக்கு எடுத்துச் செல்லும் நோக்கத்துடனேயே இந்த நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. அவற்றில் சுமார் 400 பாடசாலைப் பிள்ளைகளும், பல்கலைக்கழக மாணவர்களும் பங்குபற்றியுள்ளார்கள்.

4.5 போக்குவரத்துப் பிரிவு

போக்குவரத்துப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கும் அடிப்படைக் கருமங்கள் வருமாறு: இலங்கை மகாவலி அதிகார சபைக்குச் சொந்தமான அனைத்து வாகனங்கள் தொடர்பான பொறுப்பேற்றல், அனைத்து வாகனங்களினதும் பழுதுபார்ப்பு வேலைகள், பராமரிப்பு, வருமான அனுமதிப்பத்திரம் மற்றும் காப்புறுதி சான்றுதழ்கள் என்பவற்றை இற்றைப்படுத்துதல், தலைமை அலுவலகத்தில் இருக்கும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு வாகனங்களை ஒதுக்குதல், வாகனப் பராமரிப்பு மற்றும் எரிபொருள் என்பவற்றுக்கென வருடாந்த செலவு மதிப்பீடுகளை தயாரித்தல், வாகனங்களுக்கு எரிபொருளை பெற்றுக்கொள்ளல், அறிக்கைகளை பராமரித்தல் மற்றும் ஓட்ட பதிவுகளை பரீட்சித்தல், அதிகார சபைக்குச் சொந்தமான வாகனங்களின் ஒரு பட்டியலை தயாரித்தல் மற்றும் இற்றைப்படுத்துதல், வாகனங்கள் திடீர் விபத்துக்களை எதிர்கொள்ளும் சந்தர்ப்பங்களில் நடவடிக்கை எடுத்தல், காப்புறுதி நட்ட ஈட்டுத் தொகைகளை பெற்றுக்கொள்ளல் மற்றும் சம்பந்தப்பட்ட விடயம் தொடர்பான ஒருங்கிணைப்பு பணிகள்.

அதன் பிரகாரம் 2017ஆம் வருடத்தின் போது போக்குவரத்துப் பிரிவினால் பின்வரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. தலைமை அலுவலகத்தையும் உள்ளிட்ட விதத்தில் வலய அலுவலகங்களுக்கென 798 மோட்டார் வாகனங்கள் ஒதுக்கப்பட்டிருந்ததுடன், தலைமை அலுவலத்திற்கு 73 வாகனங்கள் ஒதுக்கப்பட்டிருந்தன. தலைமை அலுவலகத்தில் பணியாற்றி வந்த சாரதிகளின் எண்ணிக்கை 71 ஆகும்.

2017ஆம் வருடத்தின் போது மூலதனச் செலவாக ரூ. 16 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்ததுடன், அதில் சுமார் 10 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. அதில் ஏற்பட்டிருந்த முன்னேற்றம் 61.9% ஆகும்.

வருடத்தின் போது 122 வாகனங்கள் சேர்விஸ் செய்யப்பட்டதுடன், 320 வாகனங்களின் பழுதுபார்ப்பு வேலைகள் மேற்கொள்ளப்பட்டன.

அதிகார சபை தலைமை அலுவலகத்தின் அன்றாட கடமைகளுக்கென ஒதுக்கப்பட்டிருக்கும் வாகனங்களை வழங்குதல் மற்றும் களப் பயணங்கள் அனைத்தையும் ஏற்பாடு செய்தல் என்பன இந்தப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த வருடத்தின் போது 679 வெளிக்களப் பயணங்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. அதற்கான எரிபொருள் செலவு ரூ. 5,064,889.50 ஆகும். சாரதிகளுக்கு செலுத்திய மேலதிக நேர வேலைக் கொடுப்பனவு மற்றும் உணவு, தங்குமிடக் கொடுப்பனவுகள் என்பன ரூ.2,485,600.00 ஆகும்.
தலைமை அலுவலகத்திற்கு ஒதுக்கப்பட்டிருக்கும் வாகனங்களில் 14 வாகனங்கள் முழுமையாக காப்புறுதி செய்யப்பட்டுள்ளன. ஏனைய அனைத்து வாகனங்கள் தொடர்பாகவும் மூன்றாம் தரப்பு காப்புறுதி பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அதற்கென ரூ. 1,214,099.84 தொகை செலவிடப்பட்டிருந்தது. வருமான அனுமதிப் பத்திரங்களுக்கென செலவிடப்பட்ட தொகை ரூ. 341,584.00 ஆகும்.

இவ்வருடத்தின் போது 12 திடீர் வாகன விபத்துக்கள் தொடர்பான புலன் விசாரணைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன், 43 வாகனங்கள் கையுதிர்க்கப்பட்டிருந்தன. போக்குவரத்துப் பிரிவின் ஊழியர் அணி உதவிப் பணிப்பாளர் (போக்குவரத்து), இயந்திரப் பொறியியலாளர், பொறியியல் உதவியாளர், நிர்வாக உதவியாளர் ஆகியோரை உள்ளிட்ட 16 பேரைக் கொண்டிருப்பதுடன், அவர்கள் இப்பணிகளை முன்னெடுத்து வருகின்றார்.

ஐந்தாவது அத்தியாயம்

5.1 இலங்கை மகாவலி அதிகார சபையின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் கம்பனிகள்

இலங்கை மகாவலி அதிகார சபையினால் மேற்கொள்ளப்பட்டு வந்த வர்த்தக நடவடிக்கைகளின் ஒரு பாகம், கம்பெனிகள் சட்டத்தின் கீழ் முகாமைத்துவத்திற்கென பின்வரும் தனியார் கம்பெனிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

1. வ/ப மகாவலி கால்நடை வளங்கள் மற்றும் விவசாயத் தொழில் முயற்சிகள் (தனியார்) கம்பெனி
   (Mahawali Livestock & Agro Entreprices (Pvt) Ltd)

2. வ/ப மகாவலி ஆலோசனை சேவைகள் பணியகம் (தனியார்) கம்பெனி
   (**Mahawali Consultancy Bureau (Pvt) Ltd**)

3. வ/ப இயற்கை வளங்கள் முகாமைத்துவச் சேவைகள் (தனியார்) கம்பெனி
   (**Natural ResourcesManagement Services (Pvt) Ltd)**

இலங்கை மகாவலி அதிகார சபையின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் கம்பனிகளின் பணிப்பாளர் சபை – 2017

வரிசை எண்	கம்பனி	தலைவர்	பணிப்பாளர் சபை	தலைமை அலுவலக முகவரி
01	வ.ப மகாவலி கால் நடை வளங்கள் மற்றும் விவசாய தொழில் முயற்சிகள் (தனியார்) கம்பனி		1. திரு.பராக்கிரம அபேவர்தன 2.திரு. எட்வர்ட்டி மெல் (பணிப்பாளர்) 3.திரு. ஓஸ்மன்ட் டிசில்வா (பணிப்பாளர்)	இல 260/20, பேஸ்லைன் வீதி, கொழும்பு 09
02	வ.ப. மகாவலி ஆலோனை சேவைகள் பணியகம்	தலைவர் டாக்டர் ஹர்ச சமரவீர	1.கே. எல். எஸ். சகபந்து 2. பொறியியலாளர் எல். ஆர். எச். பெரேரா	இலக்கம் 11, ஜாவத்த வீதி கொழும்பு 05

2017 ஆம் வருடத்தின் போது கம்பெனிகளின் செயற்பாடுகள்

வரிசை எண்	கம்பெனி	வருடத்தின் போது மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள்/நிலை
01	வ/ப மகாவலி கால்நடை வளங்கள் மற்றும் விவசாய தொழில் முயற்சிகள் (தனியார்) கம்பெனி	❖ பிரதேசத்தைச் சேர்ந்த விவசாயிகளிடமிருந்து பாலை சேகரித்தல் மற்றும் சேவைகளை வழங்குதல். ❖ பால் மற்றும் பாலுடன் இணைந்த உற்பத்திப் பொருட்கள். ❖ நாட்டுக் கோழி வளர்ப்பு கருத்திட்டத்தின் மூலம் விவசாயிகளுக்கு கோழிக் குஞ்சுகளை வழங்குதல். ❖ விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்திற்கு பொலி காளைகளாக பயன்படுத்திக் கொள்வதற்கென மாடுகளை வழங்குதல். ❖ உயர் தரம் வாய்ந்த புறொய்லர் கோழி இறைச்சி உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல்.
02	வ/ப மகாவலி வென்ச்சர் கெப்பிட்டல் (தனியார்) கம்பெனி	மூடப்பட்டுள்ளது.
03	வ/ப மகாவலி ஆலோசனை சேவைகள் பணியகம் (தனியார்) கம்பெனி	சாத்தியப்பாட்டு ஆய்வுகளிலிருந்தும், ஒப்பந்த வேலைகளிலிருந்தும் 2017 ஆம் வருடத்தின் போது செயற்பாட்டு வருமானம் ஈட்டிக் கொள்ளப்பட்டுள்ளது.
04	வ/ப இயற்கை வளங்கள் முகாமைத்துவச் சேவைகள் (தனியார்) கம்பெனி	2017 ஆம் வருடத்தின் போது பின்வரும் செயற்பாடுகளிலிருந்து செயற்பாட்டு ஆதாயம் ஈட்டிக் கொள்ளப்பட்டுள்ளது: • விக்டோரியா மற்றும் கொத்மலை வலயத்தில் காணி அளவை மற்றும் திட்டங்களை தயாரித்தல் - ரூ. 213,800.00 • மண் ஆராய்ச்சி கருத்திட்டம் - ரூ. 1,018,479.01 • H – Q measurement of Nanuoya & Coledoniya gauging station – Rs. 437,472.00 • மாத்தளை மாவட்டத்தில் புவக்பிட்டிய மற்றும் இலுக்கும்புர சேதன விவசாயப் பண்ணை கருத்திட்டம் - 200,000.00 • ஹாத்தலே பெருந்தோட்ட கருத்திட்டம் - ரூ. 160,000.00 • அமர லெஷர் ஹோட்டல் பூர்வாங்க சுற்றாடல் மதிப்பீட்டு அறிக்கை தயாரிப்பு: ரூ 300,000.00

வருடாந்த கணக்குகள்

பாகம் II

நிதிசார் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

1. அறிக்கையிடும் கட்டமைப்பு

1979 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க சட்டத்தின் கீழ் இலங்கை மகாவலி அதிகார சபை ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இலங்கை மகாவலி அதிகார சபையின் கருமங்கள் அச்சட்டத்தின் 12 ஆவது பிரிவில் எடுத்துக் காட்டப்பட்டிருப்பதுடன், மகாவலி அபிவிருத்தி வேலைத்திட்டத்தை அமுல் செய்யும் பொறுப்பு அதன் மூலம் அதனிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மகாவலி சட்டத்தின் பிரகாரம், குறிப்பிட்ட ஒரு விசேட பிரதேசத்தில் அல்லது ஒரு விசேட பிரதேசம் தொடர்பாக அதிகார சபையின் கருமங்கள் பின்வரும் விதத்தில் அமைதல் வேண்டும்:

(அ) நீர்த்தேக்கங்கள், நீர்ப்பாசன நீர் விநியோக அமைப்புக்கள் மற்றும் மின்சார உற்பத்தி, மின்சார விநியோகம் என்பவற்றுக்கான இயந்திர உபகரணங்களை ஸ்தாபித்தல் மற்றும் அதனை மேற்கொள்ளல் என்பவற்றையும் உள்ளடக்கிய மகாவலி கங்கை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தை திட்டமிடுதல் மற்றும் அமுல் செய்தல்; எவ்வாறிருப்பினும், மின்சாரத்தை பகிர்ந்தளிக்கும் சம்பந்தப்பட்ட கருமத்தை, எழுத்து மூலமான சட்டத்தின் கீழ் அவ்வாறு செய்வதற்கென அதிகாரமளிக்கப்பட்டிருக்கும் வேறு ஏதேனும் ஓர் அதிகார சபையின் மூலம் மேற்கொள்ள முடியும்.

(ஆ) குறிப்பிட்ட ஒரு விசேட பிரதேசத்தில் முழுமையான, ஒருங்கிணைந்த அபிவிருத்தியை மேற்கொள்ளல் மற்றும் அந்த அபிவிருத்தியை தக்கவைத்துக் கொள்ளல்.

(இ) குறிப்பிட்ட ஒரு விசேட பிரதேசத்திற்குள் விவசாய உற்பத்தித் திறன் மற்றும் வேலை வாய்ப்புக்களை உருவாக்கும் ஆற்றல் என்பவற்றை உச்ச மட்டத்தில் பராமரித்து வருதல், பொருளாதார, விவசாய அபிவிருத்தியை ஏற்படுத்துதல் மற்றும் அந்த அபிவிருத்தியை தக்க வைத்துக் கொள்ளல்.

(ஈ) ஏதேனும் ஒரு விசேட பிரதேசத்திற்குள் பௌதீக சுற்றாடலை பாதுகாத்தல் மற்றும் அதனை பராமரித்து வருதல்.

(உ) ஏதேனும் ஒரு விசேட பிரதேசத்திற்குள் சமூகத்தின் சேமநலன் மற்றும் கலாசார முன்னேற்றம் என்பவற்றை விருத்தி செய்தல் மற்றும் அப்பிரதேசத்தை நிர்வகித்தல்.

(ஊ) உள் மற்றும் வெளி தனியார் மூலதனத்தை குறிப்பிட்ட ஒரு விசேட பிரதேசத்தில் பொருளாதார மற்றும் விவசாய அபிவிருத்தியில் பயன்படுத்துவதனை மேம்படுத்துதல் மற்றும் பாதுகாத்தல்.

(எ) மகாவலி கங்கை அபிவிருத்தி திட்டத்தை திட்டமிடுவதிலும், அதனை அமுல் செய்வதிலும், குறிப்பிட்ட ஒரு விசேட பிரதேசத்தை அபிவிருத்தி செய்வதிலும் அரசாங்க திணைக்களங்கள், அரச நிறுவனங்கள், உள்ளூராட்சி மன்றங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் தனியார் அல்லது அரசு சார் வேறு எவரேனும் நபர்கள் ஆகிய தரப்பினரின் ஒத்துழைப்பை பெற்றுக் கொள்ளல், அதனை மேம்படுத்தல் மற்றும் பாதுகாத்தல்.

இலங்கை மகாவலி அதிகார சபை அதன் கீழ் நிர்வகிக்கப்படும் நான்கு கம்பெனிகளையும், ஒரு இணைக் கம்பெனியையும் கொண்டுள்ளது. அவை வ/ப மகாவலி வென்ச்சர் கெப்பிட்டல்

(தனியார்) கம்பெனி, வ/ப இயற்கை வளங்கள் முகாமைத்துவச் சேவைகள் (தனியார்) கம்பெனி, வ/ப மகாவலி கால்நடை வளங்கள் மற்றும் விவசாய தொழில் முயற்சிகள் (தனியார்) கம்பெனி, வ/ப மகாவலி ஆலோசனை பணியகம் (தனியார்) கம்பெனி மற்றும் வ/ப மகாவலி கால்நடை வளங்கள் தொழில் முயற்சிகள் (தனியார்) கம்பெனி என்பனவாகும். அனைத்துக் கம்பெனிகளும் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பெனிகள் சட்டத்தின் கீழ் சட்டபூர்வமாக அமைக்கப்பட்டிருப்பதுடன், அவை பின்வரும் முக்கியமான பணிகளை நிறைவேற்றி வருகின்றன.

மகாவலி கம்பெனிகளின் முதன்மையான செயற்பாடுகள்

நிர்வகிக்கப்படும் கம்பெனிகள்

அ. வ/ப இயற்கை வளங்கள் முகாமைத்துவ சேவைகள் (தனியார்) கம்பெனி

i. இயற்கை வளங்கள் முகாமைத்துவப் பிரிவின் கீழ் கட்டுமானங்கள், திட்டங்கள், பொருட்கள் தொடர்பான மதிப்பீட்டாய்வுகள், நிலப் பயன்பாட்டு வரைபடங்கள், நீரேந்து பரப்பு பிரதேசங்களின் பாதுகாப்பு மற்றும் வன வளம் சம்பந்தப்பட்ட செயற்பாடுகள் என்பன தொடர்பாக தொழில்சார் ஆலோசனைகள் மற்றும் சேவைகள் என்பவற்றை வழங்குதல்.

ii. தகவல்கள் மற்றும் தரவுகளை வழங்குதல், சாத்தியப்பாட்டு ஆய்வுகளை தயாரித்தல், சுற்றாடல் மீதான தாக்கங்களை மதிப்பீடு செய்யும் ஆய்வுகள் மற்றும் பூர்வாங்க சுற்றாடல் மதிப்பீட்டு அறிக்கைகள் என்பவற்றை தயாரித்தல்.

ஆ. வ/ப மகாவலி கால்நடை வளங்கள் மற்றும் விவசாய தொழில் முயற்சிகள் (தனியார்) கம்பெனி

i. மகாவலி விவசாயிகளுக்கு உயர் தரம் வாய்ந்த விலங்குகளை வழங்குதல்.

ii. பால் மற்றும் இறைச்சி உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல்.

இ. வ/ப மகாவலி ஆலோசனை சேவைகள் பணியகம் (தனியார்) கம்பெனி

i. கட்டடங்கள், நீர்ப்பாசனம், காணி. நீர் வினியோகம், வீதிகள் போன்ற கட்டுமானச் சேவைத் துறைகள் தொடர்பாக ஆலோசனை சேவைகளை வழங்குதல்.

ii. கட்டங்கள், நீர்ப்பாசனம், காணி, நீர் வழங்கல் மற்றும் வீதி நிர்மாணம் என்பவற்றின் ஒப்பந்த வேலைகளை பொறுப்பேற்றல்.

இணைந்த கம்பெனி

வ/ப மகாவலி கால்நடை வளங்கள் தொழில் முயற்சிகள் (தனியார்) கம்பெனி

i. கோழி இறைச்சி (புரொய்லர்) உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல்.

ii. மகாவலி விவசாயிகளுடன், அவர்கள் உற்பத்தி செய்யும் புரொய்லர் கோழி இறைச்சியை கொள்வனவு செய்யும் ஒப்பந்தங்களில் ஈடுபடுதல்.

எவ்வாறிருப்பினும், மகாவலி வென்ச்சர் கெப்பிட்டல் தனியார் நிறுவனத்தை கலைத்து விடுவதற்கு 2012 இல் பணிப்பாளர் சபை தீர்மானித்தது. அதன் காரணமாக இக்கம்பெனியின் கணக்குகள் ஒருங்கிணைந்த கணக்கில் சேர்க்கப்படவில்லை. 31.12.2017 இல் உள்ளவாறு

சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான குறிப்பின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

2. கணக்கீட்டு அடிப்படை

2.1 இணங்கியொழுகும் கூற்று : நிதி நிலைமை குறித்த கூற்று, செயற்பாட்டு கூற்று, தேறிய சொத்துக்கள் மற்றும் உரித்துக்களில் ஏற்பட்ட மாற்றம் குறித்த கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்கள் தொடர்பான குறிப்புக்கள் என்பன இந்த நிதிக் கூற்றுக்களில் அடங்குகின்றன. இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் உருவாக்கப்பட்டிருக்கும் இலங்கை கணக்கீட்டுத் தர நியமங்களின் பிரகாரம் இந்தக் கணக்குக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. இக்கணக்குக் கூற்றுக்கள் முன்னைய நிதியாண்டில் பின்பற்றப்பட்ட தரநியமங்களை பின்பற்றுகின்றன.

2.2 கணக்கீட்டு அடிப்படை

சொத்துக்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் தொடர்பான வெளிப்படுத்துகைகள் தவிர, இந்நிதிக் கூற்றுக்கள் வரலாற்று ரீதியான செலவு அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன.

2.3 செயற்படுத்தப்படும் மற்றும் சமர்ப்பிக்கப்படும் நாணய வகை

இந்த நிதிக் கூற்றுக்கள் இலங்கை ரூபாவில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இங்கு குறிப்பிடப்படும் அனைத்து நிதித் தகவல்களும் மிகக் கிட்டிய ஆயிரம் ரூபா அளவில் காட்டப்பட்டுள்ளன.

2.4 மதிப்பீடுகள் மற்றும் முடிவுகள் என்பவற்றை பயன்படுத்துதல்

இலங்கை கணக்கீட்டு தர நியமங்களின் பிரகாரம் நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் பொழுது கணக்கீட்டுக் கொள்கைகள், சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவுகள் என்பவற்றின் வெளிப்படுத்தப்பட்ட பெறுமதிகளின் மீது ஒரு தாக்கத்தை ஏற்படுத்தும் சிறு முடிவுகள், மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்கள் என்பவற்றை முகாமைத்துவம் மேற்கொள்ள வேண்டியுள்ளது. வரலாற்று ரீதியான அனுபவங்கள் மற்றும் தற்போதைய நிலவரங்கள் என்பவற்றின் பிரகாரம் நியாயமானவை என நம்பக் கூடிய எதிர்பார்ப்புக்களையும் உள்ளடக்கும் விதத்தில் முடிவுகள் மற்றும் மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. நிலைமை இவ்வாறு இருப்பதனால், உண்மையான அனுபவங்கள் மற்றும் பெறுபேறுகள் அத்தகைய மதிப்பீடுகளிலிருந்து வேறுபட முடியும்.

இந்த மதிப்பீடுகள் மற்றும் அடிப்படை அனுமானங்கள் என்பவற்றை தொடர்ச்சியான அடிப்படையில் மேற்கொள்ள வேண்டியுள்ளது. கணக்கீட்டு மதிப்பீடுகளில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படுவதாக இருந்தால், அத்திருத்தங்கள் குறிப்பிட்ட காலப் பிரிவுக்கு உரியதாக இருந்து வரும் சந்தர்ப்பத்தில் மட்டுமே மேற்கொள்ளப்படுகின்றன.

2.5 கணக்கீட்டுக் கொள்கைகளில் மாற்றங்கள்

முன்னைய வருடங்களின் போது பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் இவ்வருடத்தின் போதும் தொடர்ச்சியாக பயன்படுத்தப்பட்டுள்ளன.

3. விசேட கணக்கீட்டுக் கொள்கைகள்

இந்தக் கணக்கீட்டு கூற்றுக்கள் செல்லுபடியாகும் ஒட்டுமொத்த காலப் பிரிவின் போது, கீழே குறிப்பிடப்பட்டிருக்கும் கணக்கீட்டுக் கொள்கைகள் தொடர்ச்சியாக பிரயோகிக்கப்பட்டுள்ளன.

3.1 ஒருங்கிணைக்கும் அடிப்படை

3.1.1 அதிகார சபை மற்றும் அதன் கீழ் நிர்வகிக்கப்பட்டு வரும் கம்பெனிகள் என்பவற்றின் நிதிக் கூற்றுக்களின் மீள் கணிப்பீடுகளையும் உள்ளடக்கிய விதத்தில் ஒருங்கிணைந்த நிதிக் கூற்றுக்கள் தொடர்ச்சியான முறையை பயன்படுத்தி தயாரிக்கப்பட்டுள்ளன. எனவே, இதன் மூலம் தெளிவாகும் விடயம், இந்த ஒருங்கிணைந்த நிதிக் கூற்றுக்களில் எடுத்துக் காட்டப்படும் நிதிசார் தகவல்கள் இலங்கை மகாவலி அதிகார சபையை ஒரு தனி பொருளாதார கட்டமைப்பாக பிரதிபலிக்கின்றன என்பதாகும்.

3.2 சொத்துக்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள்

3.2.1 சொத்துக்களின் கொள்விலை அல்லது நிர்மாணச் செலவு மற்றும் அச்சொத்தினை பயன்படுத்தும் நோக்கத்திற்கென அதனை தயாரித்துக் கொள்வதற்கு ஏற்பட்ட நேரடிச் செலவுகள் என்பன சொத்துக்களின் கொள்விலை எனக் குறிப்பிடப்படுகின்றன. மோட்டார் வாகனங்கள் மற்றும் தளபாடங்கள் என்பவற்றைத் தவிர, ஏனைய சொத்துக்கள் 2015 ஆம் வருடத்தில் மீள்மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன.

3.2.2 முழு உரித்து காணிகள் தவிர, ஏனைய அனைத்துச் சொத்துக்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் தொடர்பாகவும் கொள்விலையின் அடிப்படையில் அல்லது மீள் கணிப்பீட்டின் அடிப்படையில் எளிய நேர்கோட்டு முறையில் பெறுமானத் தேய்வுக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அச்சொத்தின் கொள்விலையை, அச்சொத்து வகையின் ஆயுள் காலத்துடன் ஒப்பிட்டு பெறுமானத் தேய்வு மேற்கொள்ளப்படுகின்றது. சொத்து பெற்றுக் கொள்ளப்பட்ட மாதம் தொடக்கம் பெறுமானத் தேய்வு கணக்கிடப்படுவதுடன், கீழ்க் காணும் பெறுமானத் தேய்வு விகிதங்களின் பிரகாரம் அது மேற்கொள்ளப்படுகின்றது:

			வருடாந்தம்
1.	கட்டடங்கள்	- அலுவலகம் - ஏனையவை	2½% 5%
2.	மோட்டார் வாகனங்கள்		20%
3	இயந்திர உபகரணங்கள்	அலுவலக உபகரணங்கள் மற்றும் நலன்புரி பண்டங்கள்	15%
4	இயந்திர உபகரணங்கள்	- மின்சார ஜெனரேட்டர்கள்	15%
5	இயந்திர உபகரணங்கள்	- கட்டுமான வேலை	15%
6	இயந்திர உபகரணங்கள்	- பொது	15%
7	தளபாடங்கள் மற்றும் பொருத்துக்கள்	-	10%
8	கணினிகள் மற்றும் துணை உறுப்புக்கள்	-	20%

3.3 முதலீடுகள்

3.3.1 இணைந்த கம்பெனியில் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகள்

இணைந்த கம்பெனியில் மேற்கொள்ளப்பட்ட முதலீடு கொள்விலையில் கணக்கிடப்பட்டு, ஐந்தொகையில் ஒரு நீண்ட கால முதலீட்டின் கீழ் புறம்பாக காட்டப்பட்டுள்ளது. இந்த முதலீட்டு கம்பெனியின் நிதி மற்றும் செயற்பாட்டு கொள்கை முடிவுகளின் மீது அதிகார சபை குறிப்பிடத்தக்க அளவிலான எத்தகைய செல்வாக்கையும் செலுத்த முடியாதிருப்பதனால் அதனை தனியொரு அலகு என்ற முறையில் கணக்கீட்டுக்கு பயன்படுத்துவது பொருத்தமற்றதாகும்.

3.3.2 ஏனைய முதலீடுகள்

ஏனைய முதலீடுகள் நீண்ட கால முதலீடுகளாக கருதப்பட்டு, கொள்விலையில் கணக்கிடப்பட்டு, ஐந்தொகையில் காட்டப்பட்டுள்ளன.

3.4 சரக்கு கையிருப்பு அறிக்கைகள்

சரக்கு கையிருப்புக்கள் குறைந்த கொள்விலை மற்றும் பெற்றுக் கொள்ளக் கூடிய தேறிய பெறுமதி என்பவற்றின் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன. அடிக்கடி விநியோகிக்கப்படாத, குறைபாடுகளுடன் கூடிய மற்றும் பழம்பாணியிலான பண்டங்கள் தொடர்பாக தேவையான இடங்களில் ஒதுக்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

3.5 வியாபார மற்றும் கிடைக்க வேண்டிய ஏனைய ஆதாயங்கள்

ஐயக் கடன்கள் மற்றும் வாராக் கடன்கள் என்பவற்றுக்கான ஒதுக்குகளை மேற்கொண்ட பின்னர் பெற்றுக் கொள்ளக் கூடிய, அனுமானிக்கத்தக்க பெறுமதியின் அடிப்படையிலேயே வியாபார மற்றும் கிடைக்க வேண்டிய ஏனைய ஆதாயங்கள் காட்டப்பட்டுள்ளன.

3.6 காசு மற்றும் காசுக்கு இணையானவை

காசு மற்றும் காசுக்கு இணையானவை, காசு நிலுவைகள் மற்றும் கேள்வியின் போது செலுத்தப்பட வேண்டிய வங்கி அதிகப் பற்றுக்கள் என்பவற்றை உள்ளடக்கிய விதத்தில் காட்டப்பட்டிருப்பதுடன், நிதிப் பாய்ச்சலை குறிப்பிடும் பொருட்டு இலங்கை மகாவலி அதிகார சபையின் நிதி முகாமைத்துவமும் ஒரு நிதிக் கூறாக காட்டப்பட்டுள்ளது.

3.8 பொறுப்புக்கள் மற்றும் ஒதுக்குகள்

ஐந்தொகையில் நடப்புப் பொறுப்புக்களின் கீழ் காட்டப்பட்டிருக்கும் பொறுப்புக்கள், கேள்வியின் போது செலுத்த வேண்டிய கடப்பாடுகள் மற்றும் ஐந்தொகை திகதியிலிருந்து ஒரு வருடத்திற்குள் செலுத்தித் தீர்க்க வேண்டிய தொகைகள் என்பனவாகும். நடப்பல்லாத பொறுப்புக்கள் என்பதன் மூலம் காட்டப்பட்டிருக்கும் அனைத்தும், ஐந்தொகை திகதியிலிருந்து ஒரு வருடம் முடிந்த பின்னரும் செலுத்தப்பட வேண்டியிருக்கும் கடப்பாடுகள் ஆகும்.

நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் பொழுது, அறிந்திருந்த அனைத்து பொறுப்புக்களும் கணக்கில் பதிவு செய்யப்பட்டு, சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

3.10 ஓய்வு அனுகூலத் திட்டம்

அனைத்து ஊழியர்களுக்கும் ஓய்வுப் பணிக்கொடையை வழங்குவதற்கென ஒதுக்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பணிக்கொடையை பெற்றுக் கொள்வதற்கு தகைமையை பெற்றுக் கொள்ளும் அரை மாதச் சம்பளம், முதல் பணியாண்டு தொடக்கம் ஒவ்வொரு வருட இறுதியிலும் கணக்கிடப்பட்டு, இதற்கான ஒதுக்குகள் மேற்கொள்ளப்படுகின்றன.

3.11 வருமானக் கூற்று

3.11.1 திறைசேரியிலிருந்து கிடைக்கும் நிதியளிப்புக்கள், இலங்கை மகாவலி அதிகார சபையின் நிர்வாகத்தின் கீழ் இருந்து வரும் காணிகளை குத்தகைக்கு விடுவதன் மூலம் கிடைக்கும் குத்தகைத் தொகைகள், உத்தியோகபூர்வ வாசஸ்தலங்களிலிருந்து கிடைக்கும் கட்டணங்கள், முதலீடுகளிலிருந்து கிடைக்கும் வருமானம் மற்றும் வட்டி என்பன இலங்கை மகாவலி அதிகார சபையின் வருவாயில் அடங்குகின்றன.

3.11.2 இலங்கை மகாவலி அதிகார சபைக்கு பொருளாதார பயன்கள் கிட்டும் அதிக வாய்ப்புக்களின் பிரகாரமும், நம்பகத் தன்மையுடன் கூடிய விதத்தில் அதனை அளவிடக் கூடிய ஆற்றலின் அடிப்படையிலும் வருவாய் கணக்கிடப்பட்டுள்ளது. குத்தகை வருமானங்கள், ஏனைய வாடகைகள், உரிமைப் பங்குத் தொகைகள் மற்றும் வட்டி வருமானம் என்பன திரண்டு வரும் அடிப்படையில் கணக்கிடப்பட்டுள்ளன.

3.12 செலவு

நிறுவனத்தின் நாளாந்தச் செலவுகள், சொத்துக்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் என்பவற்றை செயல்திறனுடன் பராமரித்து வருவதற்கு மேற்கொள்ளப்படும் செலவுகள் என்பவற்றையும் உள்ளடக்கிய விதத்தில் அனைத்துச் செலவுகளும் கவனத்தில் எடுக்கப்பட்டு, வருமானக் கூற்றில் குறிப்பிடப்படும் வருடத்தின் இலாபம் / நட்டம் கணக்கிடப்பட்டுள்ளது. வாராக் கடன்கள் மற்றும் ஐயக் கடன்கள், அறிந்திருக்கும் அனைத்துப் பொறுப்புக்கள், சொத்துக்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் என்பவற்றின் பெறுமானத் தேய்வு ஆகியவற்றுக்கென ஒதுக்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

3.13 ஐந்தொகை திகதியின் பின்னர் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள்

ஐந்தொகை திகதியின் பின்னர் இடம்பெற்ற அனைத்து பௌதீக செயற்பாடுகளும் அவசியமான விதத்தில் சீராக்கம் செய்யப்பட்டுள்ளன.

3.14 அவசர கால நிலைமைகள்

இலங்கை மகாவலி அதிகார சபைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டிருக்கும் வழக்குகள் தொடர்பாக 2017.12.31 திகதியன்று நிலவி வரும் அவசர நிலை பொறுப்புத் தொகை ரூ. 43.775 மில்லியனாக இருந்து வந்தது.

31.12.2017 இல் உள்ளவாறு ஒருங்கணைந்த நிதி நிலைமை தொடர்பான அறிக்கை

		குழுமம்		மகாவலி அதிகார சபை	
	ரூ. 000	ரூ. 000		ரூ. 000	ரூ. 000
	2017	2016		2017	2016
சொத்துக்கள்					
நடைமுறை அல்லாத சொத்துக்கள்					
சொத்துக்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள்	(1) 4,116,187	4,193,457		4,045,083	4,119,436
முதலீடுகள்	(2) 187,531	178,556		526,316	522,897
இடம்பெற்று வரும் வேலைகள்	78,552	41,301		78,552	41,301
நடைமுறை அல்லாத சொத்துக்களின் மொத்தம்	4,382,270	4,413,314		4,649,951	4,683,634
நடைமுறைச் சொத்துக்கள் - மூலதனம்	134,578	102,353		127,444	96,410
உத்தேச பதிவழிப்பு	859	859			
நடைமுறைச் சொத்துக்கள்					
கையிருப்புத் தொகைகள்	(3) 184,815	168,092		181,521	164,408
உயிர்ம சொத்துக்கள் -வர்த்தக	15,875	22,630		14,791	20,995
வியாபார மற்றும் ஏனைய கிடைக்க வேண்டிய தொகைகள்	(4) 2,084,069	1,782,898		1,962,173	1,726,422
முற்கொடுப்பனவுகள்	3,896	8,754		3,896	8,754
வங்கிப் பிணை முறி	6,164	4,153			-
காசு மற்றும் காசுக்கு இணையானவை	(5) 343,312	312,750		325,612	282,264
நடைமுறைச் சொத்துக்களின் மொத்தம்	2,638,131	2,299,277		2,487,993	2,202,843
அனைத்துச் சொத்துக்களின் மொத்தம்	7,155,838	6,815,803		7,265,388	6,982,887
பொறுப்புக்கள்					
நடைமுறைப் பொறுப்புக்கள்					
கடன் ஈந்தவர்களுக்கு கொடுக்க வேண்டிய தொகைகள்	(6) 879,967	378,262		766,474	331,898
லீசிங் - எலையன்ஸ் நிதிக் கம்பனி	2,153	3,080			
திரண்ட செலவுகள்	(7) 175,733	122,820		148,950	95,969
நடைமுறை பொறுப்புக்களின் மொத்தம்	1,057,853	504,162		915,424	427,867
பணிக்கொடைகளுக்கான ஒதுக்குதல்	(8) 1,388,101	1,489,288		1,376,517	1,478,830
வங்கிக் கடன்கள்	-	2,455		-	
குத்தகை	271	2,653		-	
திரண்ட வரி	612	612		-	
நடைமுறை அல்லாப் பொறுப்புக்களின் மொத்தம்	**1,388,984**	**1,495,008**		**1,376,517**	**1,478,830**
மொத்தப் பொறுப்புக்கள்	2,446,837	1,999,170		2,291,941	1,906,697
தேறிய சொத்துக்களின் மொத்தம்	**4,709,001**	**4,816,633**		**4,973,447**	**5,076,190**
தேறிய சொத்துக்கள் /உரித்துக்கள்					
திரண்ட நிதியம்	(9) 24,407,260	24,076,159		24,404,526	24,073,155
ஒதுக்கு : மு /கொ வருமான செலவுக்கணக்கு நிலுவை	(23,755,208)	(23,317,730)		(23,436,894)	(23,003,048)
வருமான ஒதுக்கு – கம்பனிகளின்	50,865	52,121		-	-
மீள் மதிப்பீட்டு இலாபம்	4,006,082	4,006,082		4,006,082	4,006,082
தேறிய சொத்துக்கள் / உரித்துக்களின் மொத்தம்	**4,708,999**	**4,816,632**		**4,973,714**	**5,076,189**

31.12.2017 இல் முடிவடைந்த வருடம் தொடர்பான காசுப் பாய்ச்சல் கூற்று

			குழுமம்		மகாவலி அதிகார சபை
			(ரூ 000)		**(ரூ. 000)**
இயக்குதல் செயற்பாடுகளிலிருந்து கிடைத்த காசுப் பாய்ச்சல்			(447,594)		(445,531)
	வரி செலுத்துதல்		(1,569)		
(கடந்த வருடம் தொடர்பான சீராக்கங்களுடன்)					
காசு அல்லாத கொடுக்கல் வாங்கல்கள்					
	பெறுமானத் தேய்வு		530,614		526,604
	பணிக்கொடைகளுக்கென ஒதுக்கப்பட்ட தொகை		(101,187)		(102,313)
	அதிகரித்த உயிர்மச் சொத்துக்களின் சம்பாத்தியங்கள்		(32,226)		(31,034)
	சொத்துக்களை மாற்றுதல்		(145,568)		(145,682)
	திரண்ட செலவுகளில் அதிகரிப்பு / குறைவு		52,913		52,981
இயக்குதல் செயற்பாடுகள்					
	கொடுக்க வேண்டிய தொகைகளில் அதிகரிப்பு / குறைவு		495,940		434,577
	கையிருப்பில் அதிகரிப்பு / குறைவு		(9,968)		(10,909)
	ஏனைய கிடைக்க வேண்டிய தொகைகளில் அதிகரிப்பு		(298,322)		(230,892)
இயக்குதல் செயற்பாடுகளிலிருந்து கிடைத்த தேறிய காசுப் பாய்ச்சல்			**43,033**		**47,801**
முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்து கிடைத்த காசுப் பாய்ச்சல்					
	சொத்துக்கள், இயந்திர உபகரணங்கள் என்பவற்றில் ஏற்பட்ட அசைவு		(332,309)		(331,101)
	சொத்துக்களை விற்பனை செய்வதன் மூலம் கிடைத்த தொகைகள்		36,218		36,218
	முதலீடுகள் மற்றும் இடம்பெற்று வரும் வேலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பு		(46,226)		(40,670)
முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்து கிடைத்த தேறிய காசுப் பாய்ச்சல்			**(342,317)**		**(335,553)**
நிதிச் செயற்பாடுகளிலிருந்து கிடைத்த காசுப் பாய்ச்சல்					
	மூலதன அளிப்புக்கள்		329,845		331,101
நிதிச் செயற்பாடுகளிலிருந்து கிடைத்த தேறிய காசுப் பாய்ச்சல்			**329,845**		**331,101**
காசு மற்றும் காசுக்கு இணையானவற்றில் தேறிய அதிகரிப்பு/ குறைவு			**30,562**		**43,348**
01.01.2017 இல் காசு மற்றும் காசுக்கு இணையானவற்றின் நிலுவை			312,750		282,264
31.12.2017 இல் காசு மற்றும் காசுக்கு இணையானவற்றின் நிலுவை			**343,312**		**325,612**

1.12.2017 இல் முடிவடைந்த வருடத்திற்கான நிதி செயலாற்றுகை தொடர்பான அறிக்கை

குழுமம்	அதிகார சபை					குழுமம்		அதிகார சபை
ரூ. 000	**ரூ. 000**					**ரூ. 000**		**ரூ. 000**
2016	**2016**		**பட்டியல்**			**2017**		**2017**
			வருமானம்	**(1)**				
270,109	270,109		வரிகள்			197,530		197,530
290,752	290,752		ஆக்க உரிமைத் தொகைகள்			159,984		159,984
43,355	-		ஒப்பந்த சேவைகள்			32,367		8
6,267	-		பண்ணை உற்பத்தி விற்பனைகள்			5,012		-
1,448	1,448		சுழல் வருமானம்			206		206
6,651	120		முதலீட்டு வருமானம் (MCB, & NRMS)			9,098		-
76,050	75,366		ஏனைய வருமானங்கள்			214,967		214,876
694,632	**637,795**		**உருவாக்கப்பட்ட வருமானம்**			**619,164**		**572,604**
2,680,000	2,680,000		திறைசேரி அளிப்புக்கள் - மீளவரும்			2,630,010		2,630,010
2,300,694	2,300,694		- மூலதன			2,345,477		2,345,477
5,675,326	5,618,489					**5,594,651**		**5,548,091**
			கழிக்க : செலவுகள்	**(2)**				
2,558,421	2,531,241		தனிப்பட்ட சம்பளங்கள்			2,502,206		2,474,372
39,470	39,234		பயணச் செலவு மற்றும் தங்குமிடக் கொடுப்பனவுகள்			42,932		42,606
164,663	160,251		வழங்கல் / போக்குவரத்து			129,398		126,347
95,980	94,531		பராமரிப்புச் செலவுகள்			60,504		58,706
108,095	107,188		ஒப்பந்த சேவைகள்			122,924		121,705
276	276		காப்புறுதி			293		293
69,979	54,922		ஏனைய செலவுகள்			80,311		69,278
471,953	468,608		பெறுமானத் தேர்வு			502,703		499,339
-	-		வருமான பதிவழிப்பு			-		-

2,227,532	2,227,532		புனரமைப்பு நிர்மாணம் ஏனைய பராமரிப்பு சமூக அபிவிருத்தி மற்றும் குடியேற்ற சேவைகள்	**(3)**		2,557,832		2,557,832
						-		-
12,520	12,520		சுற்றுலா விடுதி நட்டங்கள்			13,810		13,810
	-		இயந்திர வேலைத்தல நட்டங்கள்			9,168		9,168
29	29		அபிவிருத்தி பயிற்சி நிலையத்தின் நட்டம்			8,469		8,469
-	-		குடிநீர் கருத்திட்ட நட்டம்			2,267		2,267
101	101		நாற்றுமேடை நட்டம்	**(4)**		9,779		9,779
(40,118)	(40,118)		பண்ணை நட்டம்	**(5)**		(349)		(349)
5,708,901	5,656,315		**மொத்த இயக்குதல் செலவுகள்**			**6,042,247**		**5,993,622**
(33,575)	**(37,826)**		**இயக்குதல் செயற்பாடுகள் மூலம் கிடைத்த மிகை / (குறை)**			**(447,596)**		**(445,531)**
(25)	**(25)**		கூட்டுக: சொத்துக்களை விற்பனை செய்ததன் மூலம் கிடைத்த இலாபம் / (நட்டம்)	**(6)**		1,685		11,685
(1,000)			கழிக்கவும் : வரிகள்			**1,569**		-
(34,600)	(37,851)		**வரியின் பின்னர் மிகை / குறை**			**(437,480)**		**(433,846)**
			பங்கிலாபம்			-		
(23,283,130)	**(22,965,195)**		2017.01.01 இல் முன்கொண்டு சென்ற நிலுவை			(23,317,730)		(23,003,046)
(23,317,730)	**(23,003,046)**		முன்கொண்டு சென்ற தேறிய மிகை / (குறை)			**(23,755,210)**		**(23,436,892)**

உரித்துக்களில் ஏற்பட்ட மாற்றங்களை காட்டும் கூற்று

		குழுமம்		ரூ. 000
	திரண்ட நிதியம்	ஒதுக்குகள்	பிடித்து வைக்கப்பட்ட சம்பாத்தியங்கள்	மொத்தம்
01.01.2016 இல் நிலுவை	23,715,096	4,072,587	(23,334,844)	4,452,839
வருடத்தின் போது	361,063	(14,384)	17,114	363,793
31.12.2016 இல் நிலுவை	**24,076,159**	**4,058,203**	**(23,317,730)**	**4,816,632**
01.01.2017 இல் நிலுவை	24,076,159	4,058,203	(23,317,730)	4,816,632
வருடத்தின் போது	331,101	(1,256)	(437,478)	(107,633)
31.12.2017 இல் நிலுவை	**24,407,260**	**4,056,947**	**(23,755,208)**	**4,708,999**

உரித்துக்களில் மாற்றங்களை காட்டும் கூற்று		**மகாவலி அதிகா ரசபை**		**ரூ. 000**
	திரண்ட நிதியம்	ஒதுக்குகள்	பிடித்து வைக்கப்பட்ட சம்பாத்தியங்கள்	மொத்தம்
01.01.2016 இல் நிலுவை	23,712,092	4,019,027	(23,033,762)	4,697,357
வருடத்தின் போது	361,063	(12,945)	30,714	378,832
31.12.2016 இல் நிலுவை	**24,073,155**	**4,006,082**	**(23,003,048)**	**5,076,189**
01.01.2017 இல் நிலுவை	24,073,155	4,006,082	(23,003,048)	5,076,189
வருடத்தின் போது	331,101	-	(433,846)	(102,745)
31.12.2017 இல் நிலுவை	**24,404,256**	**4,006,082**	**(23,436,894)**	**4,973,444**

கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

பாகம் III

මගේ අංකය எனது இல. My No. } ஐஈஎன்/பீ/எம்ஏஎஸ்எல்/1/17/57

ඔබේ අංකය உமது இல. Your No. }

දිනය திகதி Date } 2018 சனவரி 06

பணிப்பாளர் நாயகம்
இலங்கை மஹாவலி அதிகாரசபை.

இலங்கை மஹாவலி அதிகாரசபையினதும் அதன் துணைக்கம்பனிகளினதும் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான திரட்டிய நிதிக்கூற்றுக்கள் மீதான 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.

இலங்கை மஹாவலி அதிகாரசபையினதும் அதன் துணைக்கம்பனிகளினதும் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதா எனவும்
எனது கணக்காய்விலிருந்து இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளக கட்டுப்பாட்டின் பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் ‘ கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டேன் என நான் நம்புகிறேன்.

1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 மற்றும் 2.3 ஆம் பந்திகளில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

2. நிதிக்கூற்றுக்கள்

2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம் - தொகுதி

இந்த அறிக்கையின் 2.2 மற்றும் 2.3 ஆம் பந்திகளில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை மஹாவலி அதிகாரசபையினதும் அதன் துணைக்கம்பனிகளினதும் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வியாபாரங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

முனைப்பழியுள்ள அபிப்பிராயம் - அதிகாரசபை

இந்த அறிக்கையின் 2.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை மஹாவலி அதிகாரசபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள் - தொகுதி

2.2.1 நிதிக்கூற்றுக்களை ஒன்றிணைத்தல்

(அ) அதிகாரசபையின் பூரண உரித்துடன் கூடிய அதன் 03 துணைக்கம்பனிகளும் ஒன்றிணைக்கப்பட்டு திரட்டிய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்ததுடன் ஒரு கம்பனியின் கலைப்பு ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அதில் கடன்கொடுத்தோருக்கு கணக்கு தீர்க்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் மஹாவலி வென்ஷர் கெப்பிடல் (தனி) கம்பனியின் ரூபா 15,550,577 ஆன சொத்துக்கள் மற்றும் ரூபா 394,657 ஆன பொறுப்புக்களையும் திரட்டிய நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மஹாவலி அதிகாரசபையினால் இலங்கை பொதுத்துறைக் கணக்கீடு நியமங்களையும் அன் துணைக் கம்பனிகள் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வியாபாரங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களையும் பின்பற்றியிருந்த போதிலும் அது தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

2.2.2 சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வியாபாரங்களுக்கான இலங்கைக் கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நியமத்தின் 17 ஆம் அத்தியாயத்தின் 17.19 ஆம் பிரிவின் பிரகாரம் மஹாவலி மதியுரை சேவைகள் பணியகம் (தனியார்) கம்பனியினதும் மஹாவலி கால்நடை வளங்கள் மற்றும் விவசாய முயற்சிகள் (தனியார்) கம்பனியினதும் நடைமுறையல்லாத சொத்துக்களுக்கான பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வாய்வு செய்யப்படாததன் காரணமாக ரூபா 3,035,306 தொகை மற்றும் ரூபா 7,313,171 தொகையான நிலையான சொத்துக்கள் முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்த போதிலும் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வந்தன. அதன் பிரகாரம் மதிப்பீட்டு வழுவினை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இயற்கை வளங்கள் முகாமைத்துவ சேவைகள் (தனியார்) கம்பனியால் நியமத்தின் 4 ஆம் அத்தியாயத்தின் 4.5 ஆம் பிரிவின் பிரகாரம் ஆறு மாதங்களில் முதிர்ச்சியடையும் ரூபா 5,802,607 ஆன நிலையான

வைப்புக்கள் நடைமுறைச் சொத்துக்களாக காண்பிக்கப்பட வேண்டிய போதிலும் நடைமுறையல்லாத சொத்துக்களாக காண்பிக்கப்பட்டிருந்தன.

(இ) நியமத்தின் 28 ஆம் அத்தியாயத்தின் 28.18 ஆம் பிரிவின் பணிக்கொடை ஒதுக்கீட்டின் போது எதிர்வுகூறப்பட்ட அலகு செலவு வைத்தல் முறைமை அல்லது அதற்குச் சமமான ஏனைய முறைமைகள் பின்பற்றப்பட வேண்டிய போதிலும் மஹாவலி மதியுரை சேவைகள் பணியகம் (தனியார்) கம்பனி மற்றும் மஹாவலி கால்நடை வளங்கள் மற்றும் விவசாய முயற்சிகள் (தனியார்) கம்பனியால் ஊழியர்கள் இறுதியாக பெற்றுக்கொண்ட சம்பளம் மற்றும் சேவைக்காலத்தின் அடிப்படையாக கொண்டு பணிக்கொடை ஒதுக்கீடு இடம்பெற்றிருந்தது. மேலும் மீளாய்வாண்டிற்குரியதாக மேற்கொள்ளப்பட்டிருந்த பணிக்கொடை ஒதுக்கீடும் முறையே ரூபா 1,609,568 மற்றும் ரூபா 1,216,096 குறைத்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

2.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள் - அதிகாரசபை

2.3.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள்

இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 01 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட ரூபா 134,578,000 பெறுமதியான விவசாய மற்றும் கால்நடை வளங்கள் இருப்பின் பெறுமதி மதிப்பிடப்பட்ட முறை குறிப்பொன்றின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

2.3.2 கணக்கீட்டுக் கொள்கை

அதிகாரசபையினால் மூலதன மானியங்களை கணக்கீடு செய்வது தொடர்பாக கணக்கீட்டு கொள்கையொன்றை அறிமுகப்படுத்தப்படாமையால் மூலதன மானியங்கள் படிப்படியாக பிற்போடப்பட்ட வருமானமாக இனங்காணப்படாதிருந்தமையால் மீளாய்வாண்டின் இறுதியில் மூலதன மானிய இறுதியில் மூலதன மானியக் கணக்கின் மீதி ரூபா 24,404 ஆக இருந்தது.

2.3.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அதிகாரசபையினால் 1984 - 1989 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 67,440,853 கிரயத்திலான 03 காணித் துண்டுகளின் நியாயமான பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்படாதிருந்ததுடன் அதில் 02 துண்டுக் காணி கட்டண கொடுப்பனவு இன்றி வெளித்தரப்பினரால் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருந்த போதிலும், அதற்காக கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நீராவிய பண்ணை மற்றும் மஹாவலி பீ மற்றும் எச் வலயங்களில் மீளாய்வாண்டின் போது கைவிடப்பட்ட ரூபா 7,305,230 ஆன மூலதனச் செலவினம் மீண்டெழும் செலவினமாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) திரட்டிய நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட வழியில் காசு மீதியினுள் ரூபா 38,251,826 ஆன ஏனைய கிடைக்க வேண்டிய மீதிகள் காண்பிக்கப்பட்டிருந்தன.

(ஈ) அதிகாரசபைக்கு சொந்தமாக உடவளவ வலயத்திற்குரிய 3 வீடுகள், 2 ஓய்வறைகள், விடுமுறைக் கேந்திரமொன்றும் கட்டிடமொன்றும் காணப்பட்டதுடன் அப்பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) அணைக்கட்டுப் பாதுகாப்பு மற்றும் நீர் வளங்கள் திட்டமிடல் செயற்திட்டத்திலிருந்து அதிகாரசபைக்கு கையளிக்கப்பட்டிருந்த ரூபா 671,503,748 தொகையான நிலையான சொத்துக்களில் பகுதியொன்று ரூபா 180,131,037 இற்கு மீள்மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் எஞ்சிய சொத்துக்கள் கணக்குகளிலிருந்து விடுவிக்கப்பட்டிருந்தது.

(ஊ) நீராவிய பண்ணையின் ஆண்டின் இறுதியில் காணப்பட்ட ரூபா 1,161,780 பெறுமதியான 24,750 கிலோகிராம் பசளை இருப்பினை இறுதி இருப்பாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(எ) மொரகஹகந்த செயற்திட்டத்திலிருந்தும் ஆற்றங்கரை பாதுகாப்பு அலுவலகத்திலிருந்தும் நீராவிய பண்ணைக்கு 2010 - 2016 காலப்பகுதியில் வழங்கப்பட்டிருந்த 12 மோட்டார் சைக்கிள்கள், 02 மல்டிஷொப்பர் இயந்திரங்கள், பால் போக்குவரத்து செய்யும் லொறியொன்று, 03 உழவு இயந்திரங்கள், 04 கோழி வளர்ப்பு கட்டிடங்கள், 02 இலத்திரனியல்

அளவீட்டு உபகரணங்கள், மற்றும் பேலின் மெஷின் என்பன முறையாக கையேற்பதற்கும் பெறுமதியை மதிப்பீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) விக்டோரியா வலயத்தின் 7,588 நூலகப் புத்தங்களின் பெறுமதி கணக்கிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) மீளாய்வாண்டின் போது முன்னைய ஆண்டுகளுக்காக கிடைத்திருந்த ரூபா 12,620,622 ஆன நிலுவை வாடகை வருமானம், மீளாய்வாண்டின் வருமானமாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. மேலும் 2016 ஆம் ஆண்டின் போது வருமானத்திற்கு எடுக்கப்பட்டிருந்த 2015 ஆம் ஆண்டில் நிலுவை வாடகை வருமானமான ரூபா 20,960,226 தொகை மீளாய்வாண்டின் போது சீராக்கும் போது அவ்வருமானம் திரண்ட நட்டத்திற்கு தவறாக செலவு வைக்கப்பட்டு கிடைக்க வேண்டிய வாடகைக் கணக்கு வரவு வைக்கப்பட்ட காரணத்தினால் திரண்ட நட்டம் மற்றும் கிடைக்க வேண்டிய வாடகை கணக்கு ரூபா 41,920,452 ஆலும் முறையே குறைத்தும் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஒ) மஹாவலி பீ வலயத்தின் காணிகளிலிருந்து கம்பனியொன்றனால் மீளாய்வாண்டின் போது பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த 75,941 கியூப் மணலுக்காக கிடைக்க வேண்டிய காணி பயன்பாட்டுக் கட்டணமான ரூபா 37,970,500 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஓ) காசு மற்றும் காசுக்குச் சமமானவற்றில் உள்ளடக்கப்பட்ட ரூபா 2,602,908 ஆக சேமிப்பு வைப்புக்கள், ரூபா 727,481 ஆன நிலையான வைப்புக்கள் மற்றும் ரூபா 1,000,000 ஆன குறுங்கால வைப்புக்களுக்காக கிடைக்க வேண்டிய வட்டி இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஔ) கடன் முன்மொழிவு நடைமுறைக்காக 2006 ஆம் ஆண்டின் போது திறைசேரியிடமிருந்து கிடைத்த லங்கா புத்ர அபிவிருத்தி வங்கியின் வைப்புச் செய்யப்பட்டிருந்த ரூபா 50,000,000 பணம் மற்றும் அதற்குரிய ரூபா 16,196,761 ஆன வட்டித் தொகை என்பன அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

2.3.4 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றின் பெறுமானத்தேய்வு மற்றும் மஹாவலி கால்நடை வளங்கள் கம்பனியின் முதலீடுகளின் கூட்டுப்பெறுமதி ரூபா 945,474,952 ஆக இருந்ததுடன் பயன்பாட்டு பதிவேடுகளில் அப்பெறுமதி ரூபா 915,514,765 என காண்பிக்கப்பட்டிருந்தமையால் ரூபா 29,960,187 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

(ஆ) வலயங்களுக்கு இடையே சொத்துக்கள் பரிமாற்றத்தின் போது உரிய வலயங்களில் நிலையான சொத்துக்கள் பெறுவனவு மற்றும் வழங்கல் கணக்குகளை ஒன்றிணைக்கும் போது சமப்படுத்தப்பட வேண்டிய போதிலும் வலயங்களிலிருந்து கிடைத்த சொத்துக்கள் ரூபா 409,983,931 எனவும் வலயங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்ட ரூபா 226,936,487 எனக் காண்பிக்கப்பட்டமையால் ரூபா 143,047,444 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

2.3.5 தொங்கல் கணக்குகள்

அதிகாரசபைக்குரிய துணைக் கம்பனியொன்றின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட ரூபா 14,117,550 ஆன தொங்கல் கணக்கு இனங்கண்டு தீர்வுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் அது திரட்டிய நிதிக்கூற்றுக்களில் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் கடன்பட்டோராக காண்பிக்கப்பட்டிருந்தது.

2.3.6 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

பின்வரும் கணக்கு விடயங்கள் தொடர்பாக அவற்றிற்கு எதிரே காண்பிக்கப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

கணக்கு விடயம்	விபரம்	பெறுமதி	சமர்ப்பிக்கப்படாத சான்றுகள்
		ரூபா	
முதலீடு - இலங்கை மஹாவலி அதிகாரசபை	மஹாவலி கால்நடை விவசாய முயற்சிகள் கம்பனி	10,000,000	
	மஹாவலி வென்ச்சர் கெப்பிடல் (தனியார்) கம்பனி	10,398,000	
	மஹாவலி மதியுரை பணியகம் (தனி) கம்பனி	64,000	பங்குச் சான்றிதழ்
	இயற்கை வளங்கள் முகாமைத்துவ சேவைகள் (தனி) கம்பனி	15,000	
சொத்துக்கள்	சேமிப்புக் கணக்கு	2,632,908	மீதி உறுதிப்படுத்தல் மற்றும் வங்கி பாஸ் புத்தகம்
	நிலையான வைப்புக்கள்	727,481	வைப்புச் சான்றிதழ் மற்றும் மீதி உறுதிப்படுத்தல்
வருமானம்	எச். உடவளவ மற்றும் விக்டோரியா, வலயங்களில் குத்தகை வருமானம்	518,363,565	நிலுவை குத்தகை பதிவேடு

2.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 712,249,000 ஆன கிடைக்க வேண்டிய வாடகை வருமானமாக இருந்ததுடன் அதில் ரூபா 24,776,000 தொகையில் 05 வருடங்களாகவும் ரூபா 10,463,000 தொகையும் 03 ஆண்டுகள் முதல் 05 ஆண்டு காலமொன்று மிகைத்திருந்தது. அதிகாரசபைக்குச் சொந்தமான காணியை குத்தகைக்கு வழங்கியதில் வருமான சேகரிப்பிற்காக நடைமுறையொன்று அறிமுகப்படுத்தப்படாதிருந்ததுடன் குத்தகை வருமானத்தை சேகரிப்பதற்குரிய நியதிகள் மற்றும் நிபந்தனைகள் செயற்படுத்தப்படாமை நிலுவை வருமானம் வருடாந்தம் அதிகரிப்பதற்கு காரணமாக இருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் வேலை ஆரம்பிப்பு முற்பணம் ரூபா 535,226,000 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 3,466,000 தொகை 05 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மின்சாரம், நீர் மற்றும் சுத்திகரிப்புச் செலவினங்கள் மீளளிப்புச் செய்யும் அடிப்படையில் அதிகாரசபைக்குரிய கட்டிடங்களை வெளித்தரப்பினருக்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் 05 தரப்பினரிடமிருந்துது 04 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக ரூபா 4,030,119 ஆன செலவினம் மீளளிப்பு செய்யப்பட்டிருக்கவில்லை. அவ்வாறு அதிகாரசபைக்குரிய ரூபா 104,394,675 பெறுமதியான 13 கட்டிடங்கள் வெளித்தரப்பினர்களால் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருந்த போதிலும் அதற்காக வாடகையொன்றை அறவிடுவதற்கு 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அதிகாரசபை தவறியிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் இறுதியில் செலுத்தவேண்டிய கணக்குகளின் பெறுமதி ரூபா 766,474,000 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 23,779,000 தொகை 05 ஆண்டுகளை கடந்திருந்தன. அம்மீதிகளில் உள்ளடக்கப்பட்ட ரூபா 9,857,000 ஆன நிறுத்தி வைத்தல் பணத்திற்குரிய ஒப்பந்த வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டதை உறுதிப்படுத்தி நிறுத்தி வைத்தல் பணத்தை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 2010 ஆம் ஆண்டின் போது அதிகாரசபைக்கு சொந்தமான கலங்குட்டிய பண்ணையில் 25 ஏக்கர் வேறொரு அமைச்சிற்குரிய கால்நடை வளங்கள் கம்பனிக்கு முறையாக குத்தகைக்கு வழங்கப்படாமல் இருந்ததுடன் 2010 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை அறவிடப்பட வேண்டிய குத்தகைத் தொகை ரூபா 10,035,000 ஆக இருந்தது.

2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு	இணங்காமைகள்
(அ) 2013 இன் 17 ஆம் இலக்க பெறுமதிசேர் வரி (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் திருத்திய 10 (ஆ) ஆம் பிரிவு	12 மாத கால எல்லைக்காக பொருட்கள் மற்றும் சேவை வழங்கல்களின் மொத்தப் பெறுமதி ரூபா 12 மில்லியனை விஞ்சுமாயின் சட்டத்தின் பெறுமதிசேர் வரிக்காக பதிவு செய்ய வேண்டிய போதிலும் அதிகாரசபையினால் குறித்த வருமான மூலகங்களிலிருந்து முன்னைய ஆண்டின் போது ரூபா 87 மில்லியன் மற்றும் மீளாய்வாண்டின் போது ரூபா 93 மில்லியன் வருமானம் சேகரிக்கப்பட்டிருந்த போதிலும் பெறுமதிசேர் வரிக்காக பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.
(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம்	
(i) நிதிப்பிரமாணம் 104(4)	12 வாகனங்கள் விபத்து தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து உரிய அறிக்கைகளை கணக்காய்விற்கு வழங்கப்படாதிருந்தமையால் நட்ட அளவு மற்றும் அதற்கு பொறுப்பான தரப்பினர் இனங்காணப்பட்டு நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்பதை பரீட்சிக்க முடியாதிருந்தது.
(ii) நிதிப்பிரமாணம் 757	அதிகாரசபையின் 08 வலயங்களில் நிலையான சொத்துக்கள் மெய்மையாய்வு அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.
(இ) 2015 . யூலை 10 ஆந் திகதிய 02/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை	சுற்றறிக்கையின் பிரகாரம் வாகனக் கைதவிர்ப்பினால் கிடைக்கும் வருமானம் திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது வாகன கைத்தவிர்ப்பிலிருந்து கிடைத்த ரூபா 36,521,474 தொகை அங்கீகாரமின்றி அதிகாரசபையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது.

(ஈ)	2007 ஏப்ரல் 05 ஆந் திகதிய 33 ஆம் இலக்க மற்றும் 2016 மார்ச் 24 ஆந் திகதிய 1/2016 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கைகளின் 3.2 ஆம் பந்தி மற்றும் 2.3.3 ஆம் பந்தி	சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக செயற்திட்டங்களுக்காக விடுவிக்கப்பட்டிருந்த 03 உத்தியோகத்தர்களுக்கு அங்கீகாரமின்றி செயற்திட்டத்திலிருந்து சேவை புரிந்த காலத்திற்காக அதிகாரசபையால் ரூபா 4,282,668 ஆன சம்பளம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.
(உ)	அதிகாரசபையின் நிதி செயற்பணிக் கோவையின் 1.5.1 ஆம் பிரிவு மற்றும் 2012 மார்ச் 15 ஆந் திகதிய 02/2012 ஆம் இலக்க உள்ளகச் சுற்றறிக்கையின் 05 ஆம் பிரிவு	முற்பணம் பெறப்பட்ட பணி முடிவடைந்து 07 நாட்களுக்குள் முற்பணம் தீர்க்கப்பட வேண்டியிருந்த போதிலும், 10 வலயங்கள் மற்றும் இரண்டு பிரிவுகளுக்குரிய ஓராண்டிற்கு மேற்பட்ட தீர்க்கப்படாத முற்பணங்களின் பெறுமதி ரூபா 156,851,005 ஆன வழங்கல் முற்பணமாக இருந்தது.

3. நிதி மீளாய்வு

3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட திரட்டிய நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது தொகுதியினதும் அதிகாரசபையினதும் நிதி விளைவுகள் முறையே 437,478,000 மற்றும் ரூபா 433,846,000 பற்றாக்குறையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை முறையே ரூபா 34,600,000 மற்றும் ரூபா 37,851,000 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவில் முறையே ரூபா 402,878,000 தொகை மற்றும் ரூபா 395,995,000 பற்றாக்குறையில் அதிகரிப்பொன்றைக் காட்டியது. அதிகாரசபையின் செலவினம் ரூபா 337,305,000 ஆல் அதிகரிப்பு பற்றாக்குறையில் அதிகரிப்பதற்கு அடிப்படையாக காரணமாக இருந்தது.

மீளாய்வாண்டினதும் கடந்த 05 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளைப் பகுப்பாய்வு செய்தபோது 2012 ஆம் ஆண்டில் ரூபா 350,271,000 ஆகக் காணப்பட்ட பற்றாக்குறை 2013, 2015 மற்றும் 2016 ஆண்டுகளில் குறைவடைந்து 2014 ஆம் ஆண்டின் போது அதிகரித்திருந்தது. நிதி விளைவுகளுக்கு ஊழியர் ஊதியம், நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமனத்தேய்வு மற்றும் வரி என்பவற்றைக் மீளச் சீராக்கம் செய்த போது 2012 ஆம் ஆண்டில் ரூபா 1,876,561,000 ஆகக் காணப்பட்ட அதிகாரசபையின் பங்களிப்பு 2013, 2014 மற்றும்

2015 ஆம் ஆண்டுகளில் தொடர்ச்சியாக அதிகரித்து 2016 ஆம் ஆண்டின் போதும், மீளாய்வாண்டின் போதும் குறைவடைந்து காணப்பட்டது.

3.2 அதிகாரசபைக்கு எதிராக அல்லது அதிகாரசபையால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்டரீதியான சம்பவங்கள்

வெளி நிறுவனங்களாலும், நபர்களினாலும் வீடுகளின் உரித்தை மீள பெற்றுக் கொள்வதற்கும் பணிக்கொடை கொடுப்பனவு மேற்கொள்ளப்படாமை தொடர்பில் அதிகாரசபைக்கு எதிராக 18 வழக்குகள் தொடரப்பட்டிருந்ததுடன் அதன் நிதி கடப்பாடு ரூபா 43.775 மில்லியனாக இருந்தது.

3.3 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வருமான சேகரிப்பின் போது காணப்படும் குறைபாடுகள் காரணமாக அரசிறை பெறுவனவுகள் மற்றும் வீடு / காணி வருமானம் 2016 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது ரூபா 203,347,000 குறைவாக கிடைத்திருந்தது.

(ஆ) மக்கள் கிராமங்களை புனரமைப்புச் செய்தல், மேம்படுத்துதல் மற்றும் பராமரிப்பு செலவினம் 2016 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டில் ரூபா 330,300,000 ஆல் அதிகரித்திருந்ததுடன். 2016/2017 ஆம் ஆண்டுகளின் போது "பீ" வலயத்தின் ஒன்றினைந்த அபிவிருத்தி செயற்திட்டத்தை செயற்படுத்தியமை இதற்கு காரணங்களாக இருந்தது.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 செயலாற்றல்

4.1.1 திட்டமிடல்

பொது முயற்சிகளின் வியாபார நடவடிக்கை குறுங்கால மற்றும் நீண்டகால நோக்குடன் முகாமைத்துவம் செய்யப்பட வேண்டிய் போதிலும் 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.1 ஆம் பிரிவின் பிரகாரம் குறைந்தது மூன்றாண்டு காலப்பகுதிக்காக கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டு அதன் பிரகாரம் உத்தேச இலக்கை நோக்கி

அடையக்கூடி வகையில் வியாபார தொழிற்பாட்டு பணிப்பாளர் சபையின் பூரண பொறுப்பாக இருந்த போதிலும் இலங்கை மஹாவலி அதிகாரசபையினால் அதன் பிரகாரம் கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டு பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், 2017 ஆம் ஆண்டிற்குரிய செயலாற்றலுக்கு இணங்க தயாரிக்கப்பட்ட திருத்திய செயல்நடவடிக்கைத்திட்டம் 2017 திசெம்பர் 21 ஆந் திகதி பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட அதிகாரசபையின் செயன்முன்னேற்ற அறிக்கை 2018 செப்தெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் கணக்காய்விற்கு வழங்கப்பட்டிருக்கவில்லை.

4.1.2 செயற்பாடும் மீளாய்வும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பாரிய மஹாவலி திட்டத்தின் பிரகாரம் மஹாவலி கங்கையின் 6,900 மில்லியன் கன மீற்றர் அளவில் நீர் மின்சார உற்பத்திக்கும் நீர்ப்பாசன நடவடிக்கைளுக்குமாக நீரினை வழங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே பாரிய மஹாவலி திட்டத்தின் பிரகாரம் 13 மஹாவலி வலயங்களில் 365,853 ஹெக்டேயர் காணிகளுக்கு நீர்ப்பாசன நடவடிக்கைளுக்குமாக நீரினை வழங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியில் 85,252 ஹெக்டேயர் காணிக்கு மாத்திரம் நீர் வசதிகள் வழங்கப்பட்டிருந்ததுடன் மின் உற்பத்திக்காக பயன்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்ட 11 நீர்த்தேக்கங்களில் 06 நீர்த்தேக்கங்கள் மாத்திரம் நீர் மின்சாரத்தை உற்பத்தி செய்திருந்தது.

(ஆ) காணி பிரிவினால் காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் கீழ் வீட்டுத்தோட்டம், நீர்ப்பாசனம் விவசாய மழை போசிப்பு நடவடிக்கைகளுக்காக முறையே 13,550, 2530 மற்றும் 580 காணி அனுமதிப்பத்திரங்கள் பகிர்ந்தளிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் முறையே 12,093, 2,032 மற்றும் 426 அனுமதிப்பத்திரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தன. வீட்டுத்தோட்டம், நீர்ப்பாசனம், விவசாய மழை போசிப்பு நடவடிக்கைகளுக்காக முறையே 10,260, 3,525 மற்றும் 3,070 மானிய பத்திரங்கள் பகிர்ந்தளிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் முறையே 8,668, 2,876 மற்றும் 2,568 அனுமதிப்பத்திரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தன. வர்த்தக நடவடிக்கைகள், முதலீட்டு செயற்திட்டங்கள் மற்றும் வீட்டு வாடகை அடிப்படையில் ரூபா 216,789,000 ஆன தொகையொன்றை சேகரிப்பதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும் ரூபா 189,084,000 மாத்திரம் சேகரிக்கப்பட்டிருந்தது.

(இ) அதிகாரசபையின் கீழ் செயற்படும் மீன்பிடி மற்றும் கால்நடை வளங்கள் பிரிவின் இலக்கிடப்பட்ட மற்றும் உள்ளவாறான அடையப்பட்ட செயன்முன்னேற்றம் தொடர்பாக தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(i) அதிகாரசபையின் 50 சதவீத பங்களிப்பின் அடிப்படையில் மக்கள் கிராமங்களுக்கு கோழிக்குஞ்சுகள் பகிர்ந்தளிப்பதற்காக ரூபா 3,065,000 ஆன நிதியேற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டு 37,716 குஞ்சுகள் பகிர்ந்தளிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும், ரூபா 2,679,000 செலவிடப்பட்டு 29,012 குஞ்சுகள் மாத்திரம் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தன.

(ii) மஹாவலி பால் பண்ணையாளர்களின் 158 கால்நடைகளை காப்புறுதி செய்வதற்காக ரூபா 191,000 நிதிஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன், ரூபா 36,000 செலவிடப்பட்டு 50 கால்நடைகள் மாத்திரம் காப்புறுதி செய்யப்பட்டிருந்தன.

(iii) அழகு மீன்கள் இனவிருத்திக்காக குஞ்சுகளை இனவிருத்தி செய்யும் 20 அலகுகளை தாபிப்பதற்காக ரூபா 1,970,000 நிதிஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன் ரூபா 474,000 செலவிடப்பட்டு 8 அலகுகள் மாத்திரம் தாபிக்கப்பட்டிருந்தது.

(ஈ) வியாபார அபிவிருத்தி செயற்திட்டத்திற்காக காணி வழங்கல்

(i) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட 06 வலயங்களின் தகவல்களின் பிரகாரம் குத்தகைக்கு வழங்கப்பட்ட 418 காணிகளில் நீண்டகாலமாக வெற்றிகரமாக வியாபாரங்களை நடாத்திச் செல்லும் 153 முதலீட்டாளர்கள் இருந்ததுடன் அவர்களுக்கு இடையே 28 முதலீட்டாளர்களிடமிருந்து 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய வாடகை ரூபா 21,194,183 தொகையை அறவிடுவதற்கு தவறியிருந்தது.

(ii) 158 காணிகள் அபிவிருத்தி செய்யப்படாமல் இருந்ததுடன் குத்தகைக்கு வழங்கப்பட்ட மொத்தக் காணியில் அது 38 சதவீதமாக இருந்தது. அதில் 38 வியாபாரங்களுக்காக ரூபா 6,891,708 ஆன நிலுவை மீதிகள் அறவிடப்பட வேண்டியிருந்ததுடன் அந்நிலுவை குத்தகையை அறவிடுவதற்கோ அல்லது அதிகாரசபைக்கு மீண்டும் கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) கைப்பற்றப்பட்ட, அத்துமீறி வியாபாரங்களை மேற்கொள்ளுகின்ற, மூடப்பட்டுள்ள, நிறுத்தப்பட்டுள்ள, வியாபாரங்களை ஆரம்பிக்காத அபிவிருத்தி அடைந்துவரும் 60 வியாபாரங்களில் 20 வியாபாரங்களுக்காக அறவிடப்பட வேண்டிய நிலுவை தொகை ரூபா 1,509,893 ஆக இருந்தது.

(iv) டீ மற்றும் பீ வலயங்களில் முதலீட்டு செயற்திட்டங்களுக்காக வழங்கப்பட்ட 3,489.19 ஏக்கர் காணியில் 1,334.09 ஏக்கர்கள் அதாவது மொத்தமாக வழங்கப்பட்ட காணியில் 38.23 சதவீதமாக இருந்த போதிலும் அதற்கு காரணங்களை கண்டு பிடித்து தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(v) "எல்" வலயத்திற்குரிய 755 ஏக்கர் அளவிலான பாரிய காணி 30 முதலீட்டாளர்களுக்கு 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வுத் திகதியான 2018 ஒக்தோபர் 31 ஆந் திகதி வரையிலும், எவ்வித அபிவிருத்தி வேலைகளும் செய்யப்பட்டிருக்கவில்லை. இவ்வாறான பெரிய காணியொன்றில் மரங்களை அகற்றி அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு காணி வழங்கப்பட்டிருந்த போதிலும், முதலீட்டாளர்களின் காணிகளில் இருந்த பயிர்ச்செய்கை காட்டு யானைகளால் சேதமாக்கப்பட்டிருந்ததாக அறிக்கைகளின் பிரகாரம் உறுதிப்படுத்தப்பட்டது. வியாபாரங்களுக்காக காணி வழங்குவதற்கு முன்னர் பொருத்தமான காணிகள் தெரிவு செய்யப்படாமையால் காட்டு மிருகங்களிடமிருந்து பயிர்ச்செய்கை சேதங்களை தவிர்க்க முடியாதிருந்த காரணத்தினால் காணி வழங்கப்பட்ட நோக்கங்கள் நிறைவேற்றப்படாதிருந்ததுடன் பாரிய சுற்றாடல் சேதங்களும் இடம்பெற்றிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(உ) வியாபார அபிவிருத்தி பிரிவின் மூலம் செயற்படுத்தப்பட்ட கடன் நிகழ்ச்சித்திட்டங்கள்

மஹாவலி சவிய கடன் நிகழ்ச்சித்திட்டத்திற்காக அதிகாரசபையினால் கிராம வாசிகளுக்கு கடன் வழங்குவதற்காக பிரதேச அபிவிருத்தி வங்கியுடன் மேற்கொண்ட ஏற்படுத்திக் கொண்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டின் போது ரூபா 72,750,000 வங்கிக்கு வழங்கப்பட்டிருந்தது. கடன் வழங்குவதற்கு பயன்படுத்தப்படாத நிதியத்திற்காக சாதாரண சேமிப்பின் வட்டிக்குச் சமமான வட்டியொன்று அதிகாரசபைக்கு கிடைக்க வேண்டிய

போதிலும், 2011 முதல் 2017 ஆம் ஆண்டு வரை ஒவ்வொரு ஆண்டுகளிலும் எஞ்சிய பண மீதிகளின் கூட்டுப்பெறுமதி ரூபா 335,850,255 தொகைக்காக மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் எவ்வித வட்டியொன்று பெற்றுக்கொள்ளப்படாதிருந்ததுடன் அம்மீதிகள் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. அம்மீதிகள் சபையின் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே 04 புர்ந்துணர்வு உடன்படிக்கையின் 04 ஆம் பிரிவிற்கு முரணாக அதிகாரசபையின் மூன்று உறுப்பினர்களுக்கு ம்ரூபா 650,000 கடன் வழங்கப்பட்டிருந்தது.

மக்கள் வங்கியுடன் 2013 சனவரி 07 ஆந் திகதி ஏற்படுத்திக்கொண்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் குடியிருப்பாளர்களுக்கு தொழில் முயற்சிகளை அபிவிருத்தி செய்வதற்கு கடன் வழங்குவதற்காக "மஹாவலி அருண" முன்மொழிவுத் திட்டம் செயற்படுத்தப்பட்டிருந்ததுடன் கடன்காரர் செலுத்தும் வட்டி மற்றும் வெளியிடப்பட்ட வட்டிக்கு இடையே வேறுபாட்டினை அதிகாரசபை ஏற்றுக்கொள்கின்றது. புரிந்துணர்வு உடன்படிக்கையின் 02 ஆம் பிரிவிற்கு முரணாக அதிகாரசபையின் மூன்று ஊழியர்களுக்கு ரூபா 600,000 கடன் வழங்கப்பட்டிருந்தது. இங்கு ' இலக்கிடப்பட்ட நோக்கத்திற்கு பயன்படுத்தப்பட்டிருந்ததா அதில் இருந்து உரிய நலன்கள் பெற்றுக்கொள்ளப்பட்டதா, கடன் திருப்பிச் செலுத்தலின் செயன் முன்னேற்றம் எவ்வாறு என்பது தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2015 ஆம் ஆண்டின் போது இலங்கை மஹாவலி அதிகாரசபை பிரதேச அபிவிருத்தி வங்கியுடன் ஏற்படுத்திக்கொண்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் மஹாவலி திரிய கடன் முன்மொழிவின் கீழ் ஒவ்வொரு வலயங்களிலும் விவசாய அமைப்புக்களின் அங்கத்தவர்கள் வாழ்கைக நிலைமையை மேம்படுத்துவதற்காக 02 வலயங்களுக்கு மாத்திரம் ரூபா 15,435,000 தொகை விடுவிக்கப்பட்டிருந்த போதிலும், 08 வலயங்களில் இந்நிகழ்ச்சித்திட்டம் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

அதில் ஒரு வலயமான "எச்" வலயத்தின் விவசாய அமைப்பொன்றின் மூலம் கடன்களுக்கு கூடிய கடன் எல்லையான ரூபா 200,000 ஐ மிகைத்து மூன்று குடியிருப்பாளர்களுக்கு அங்கீகாரமின்றி ரூபா 1,250,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

அதிகாரசபை, பிரதேச அபிவிருத்தி வங்கியுடன் ஏற்படுத்திக்கொண்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் 2017 ஆம் ஆண்டு முதல் செயற்படுத்தப்பட்டு வரும் மொரகஹகந்த வலயத்தில் வியாபார கைவிலங்கு கடன் முன்மொழிவு திட்டத்திற்காக 2016 ஆகஸ்ட் 04 ஆந் திகதி மொரகஹகந்த அபிவிருத்தி செயற்திட்டத்திலிருந்து கிடைத்த ரூபா 25 மில்லியனான தொகை அதிகாரசபையினால் உரிய செயற்பாடுகளுக்கு பயன்படுத்தாமல் நடைமுறைக் கணக்கொன்றில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. பின்னர் அது 2017 ஆம் ஆண்டில் வங்கியில் வைப்புச் செய்யப்பட்டிருந்த போதிலும், அது அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. புரிந்துணர்வு உடன்படிக்கைகளின் பிரகாரம் கடன் வழங்கப்படாத பணத்திற்காக சாதாரண சேமிப்புக் கணக்குகளின் வட்டிக்கு சமமான வட்டியொன்று அதிகாரசபைக்கு கிடைக்க வேண்டிய போதிலும், 2017 ஆம் ஆண்டின் இறுதியில் நிதியத்தின் சேமிப்பு மீதியான ரூபா 6,368,400 இற்காக வட்டியொன்றை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முதலீட்டாளர்களின் முன்மொழிவின் பிரகாரம் மஹாவலி மேல் நீரேந்து பிரதேசத்தின் மஹாவலி கங்கையின் பிரதான கிளை ஆறுகளின் நீர் மற்றும் ஒதுக்குக் காணிகளைப் பயன்படுத்தி செயற்படுத்தப்படுகின்ற சிறிய அளவிலான 46 நீர் மின் நிலையங்கள் காணப்பட்ட போதிலும், அதிகாரசபையின் 3(1), 12 மற்றும் 13 ஆம் பிரிவுகள் பிரகாரம் அரசிறையைப் பெற்றுக்கொள்வதற்கு வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே 2013 ஆம் ஆண்டின் போது 3 சிறிய அளவிலான நீர் மின் நிலையங்களை நிர்மாணிப்பதற்காக முதலீட்டாளர்களுக்கு வழங்கப்பட்டிருந்த காணியில் உடன்படிக்கையின் பிரகாரம் பெயரளவுப் பெறுமதியாக ரூபா 25,737,500 ஆன வாடகையொன்று அறவிடப்பட வேண்டியிருக்கையில் பின்னர் காணியின் அபிவிருத்தி செய்யப்படாத பெறுமதியின் பிரகாரம் இத்தொகையில் ரூபா 3,681,600 ஐ அறவிடுவதற்கு அதிகாரசபையில் நோட்டிஸ் அனுப்பியிருந்த போதிலும், இதுவரை அத்தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஜாவத்த பிரதேசத்தில் அமைந்துள்ள அதிகாரசபைக்கு உரித்தில்லாத காணிகளில் ரூபா 76,580,000 பெறுமதியான கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் அக்காணிகளில் உரித்தினை அதிகாரசபைக்கு கையேற்பதற்கு 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) அதிகாரசபையால் 05 துணைக் கம்பனிகளில் மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 439,000,000 ஆன முதலீட்டிற்கான வருடக் கணக்காக எவ்வித பிரதிபலனும் கிடைத்திருக்கவில்லை.

4.3 தொழிற்பாட்டு செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மஹாவலி சீ வலயத்தில் அமைந்துள்ள 03 கற்குழிகளிலிருந்து அகற்றப்பட்ட 1943 கியூப் கருங்கற்களுக்காக அதிகாரசபையின் உள்ளக சுற்றறிக்கையின் பிரகாரம் ஒரு கியூப்பிற்காக ரூபா 1,000 வீதம் அறவிடப்பட வேண்டிய போதிலும், ஒரு கியூப்பிற்கு ரூபா 300 வீதம் அறவிடப்பட்டதன் காரணமாக ரூபா 1,065,750 குறைத்து வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்க பணியகத்தினால் 20934 கியூப்களிற்காக அரசிறை அறவிடப்பட்டிருந்த போதிலும், அதிகாரசபையினால் 1943 கியூப் மாத்திரம் அகழ்வு செய்யப்பட்டதாக கருதி கட்டணங்கள் அறவிடப்பட்டமையால் ரூபா 20,206,750 குறைத்து வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மஹாவலி பீ வலயத்தின் சிங்கபுர வீடமைப்பு முகாமின் வீடுகளில் மின்சாரப்பட்டியல் நிலுவையாக காணப்பட்டமையால் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டிருந்ததுடன் நிலுவை மின்சாரப் பட்டியலை செலுத்த வேண்டிய வீட்டு உரிமையாளர்கள் இனங்காணப்பட்டு உரிய பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) அதிகாரசபையின் நீராவிய பண்ணைக்குரிய 26 ஏக்கர் காணி 1989 ஆம் ஆண்டின் போது அநுராதபுரம் காணி பதிவாளர் அலுவலகத்தினால் எல்/4/6/102 ஆம் இலக்க உடன்படிக்கையில் முப்பது வருட காலத்திற்கு மஹாவலி கால்நடை வளங்கள் மற்றும் விவசாய வர்த்தக கம்பனிக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. வெளித்தரப்பினரால் மேற்கொள்ளப்பட்டிருந்த இக்குத்தகை வழங்கல் சரி செய்யப்பட்டு அதிகாரசபைக்கு குத்தகை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 17 வெலிகந்த வலயத்தின் சிங்ஹபுர மற்றும் அசலபுர பிரிவுகளுக்குரிய 589.8 ஏக்கர் அளவிலான 12 காணித்துண்டுகள் வெள்ளை சந்தனச் செய்கை மற்றும் தென்னை செய்கைகளுக்காக முப்பதாண்டு குத்தகைக்கு அடிப்படையில் 12 பேருக்கு வழங்குவதற்கு 2013 யூன் 25 ஆந் திகதி பணிப்பாளர் சபை அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது.

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) எந்நேரமும் யானைகள் நடமாடும் காசன் குளம் மற்றும் மாதுறு ஓயா இடதுபக்க கால்வாய்க்கு அண்மித்த காட்டுப் பிரதேசத்தில் இந்த இடம் அமைந்துள்ளமை 2018 ஆகஸ்ட் 9 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட களப்பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டதுடன் சுற்றாடல் அதிகாரசபையினதும் வன சீவராசிகள் திணைக்களத்தின் அங்கீகாரம்ள் மற்றும் நியதிகளுக்கு இணங்க செயற்திட்டம் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) வலயத்தின் பௌதீக திட்டமிடலாளர், சுற்றாடல் உத்தியோகத்தர் மற்றும் வியாபார மேம்படுத்தல் உத்தியோகத்தர்களுடன் இணைந்து 2015 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட வெளிக்கள பரிசோதனை அறிக்கையின் பிரகாரம் 2137 ஆம் இலக்க காணியின் கீழ் 10 ஹெக்டேயர் நிலத்தில் சந்தனப் பயிர்செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும் 2018 ஆம் ஆண்டு வரை அங்கு பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. கணக்காய்வு பௌதீக பரிசோதனையின் போது மேலும் 40 ஹெக்டேயரில் எவ்வித பயிர்ச் செய்கையும் மேற்கொள்ளப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(iii) குத்தகையாளர்களால் பயிர்செய்கைக்காக அதிகாரசபைக்குரிய காசன் குளத்திலும் மாதுறு ஓயா, இடப்புற கால்வாயின் நீரை பயன்படுத்திய போதிலும் 2014 யூலை 17 ஆந் திகதி MASL/DDG/Dev/15 ஆம் இலக்க உள்ளக சுற்றறிக்கையின் பிரகாரம் கட்டணங்கள் அறவிடுவதற்கோ அல்லது வேறு நடவடிக்கைகளோ எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) 12 குத்தகை உறுதிகள் வணிக வங்கியொன்றில் அடகுவைக்கப்பட்டு ரூபா 780,000,000 ஆன கடன் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன் நீண்டகால குத்தகையின் நிபந்தனைகளின் பிரகாரம் அடகு வைக்கப்பட்ட நாட்கள் முதல் 21 நாட்களுக்குள் அடகு தொடர்பாக

அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம் தெரியப்படுத்தப் பட்டிருக்கவில்லை.

(உ) மஹாவலி பீ மற்றும் எல் வலயத்திற்காக 30 மீள் சுத்திகரிப்பு இயந்திரங்கள் வழங்கள், நிர்மாணம், பொருத்துதல், அதனுடன் அண்மித்த வசதிகளை வழங்குதல், பத்து ஆண்டு காலமான பராமரிப்பு மற்றும் நிர்ணயிக்கப்பட்ட நியமத்துடனான நீர் வழங்களை உறுதிப்படுத்துவதை நோக்காகக் கொண்டு ரூபா 80 மில்லியன் பெறுமதியான செயற்திட்டமொன்றை செயற்படுத்துவதற்காக அதிகாரசபை மற்றும் தேசிய சமூக நீர் வழங்கள் திணைக்களம் 2015 செப்தம்பர் 11 ஆந் திகதி உடன்படிக்கையில் கைச்சாத்திட்டிருந்தது.

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

(i) இதற்காக 2015 ஆம் ஆண்டில் பாதீட்டில் நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் ரூபா 80 மில்லியனான நிதி ஏற்பாடு இரண்டு வலயங்களின் இரண்டு செயற்திட்டங்களிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. மொத்த கிரய மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டிருக்க வில்லை. பெறுகை வழிகாட்டல் கோவையின் 2.14.1 மற்றும் பிற்சேர்க்கை 33 இன் பிரகாரம் ரூபா 100 மில்லியன் வரை திறந்த கேள்வி முறைமையின் கீழ் வழங்குனர் தெரிவு செய்யப்பட வேண்டிய போதிலும் மீள் சுத்திகரிக்கப்படக்கூடிய நீர் சுத்திகரிப்பு இயந்திரங்கள் போன்ற உபகரணங்களை வழங்கள் பொருத்துதல் மற்றும் பராமரிப்பிற்காக நேரடி ஒப்பந்த முறைமையில் வழங்குனர் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். பெறுகை வழிகாட்டல் கோவையின் 5.4.4 மற்றும் 5.4.8 இன் பிரகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய முற்பண பாதுகாப்பு மற்றும் செயலாற்றல் பாதுகாப்பு என்பன பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) உடன்படிக்கை காலம் 2015 நவம்பர் 30 இல் உள்ளவாறு முடிவடைந்திருந்த போதிலும் அத்திகதி வரை உடன்படிக்கை செய்யப்பட்ட செயற்பாடு முடிவடைந்திருக்கவில்லை. எவ்வாறாயினும் இதற்காக தாமத கட்டணங்கள் அறவிடுவதற்கு முடியுமான வகையில் நிபந்தனைகள் உள்ளடங்கப்பட்டிருக்கவில்லை.

(iii) வேலை முடிவடைந்த சுத்திகரிப்பு இயந்திரங்கள் / இயந்திரகூடம் மற்றும் உபபாகங்கள் தேசிய சமூக நீர் வழங்கள் திணைக்களத்திடமிருந்து அதிகாரசபையால் கையேற்கப்பட்டு முறையான உடன்படிக்கை மூலம் அதன் நிர்வாக நடவடிக்கைகளை

விவசாய அமைப்புக்களுக்கு கையளிக்க வேண்டிய போதிலும் வேலை பூர்த்தி செய்யப்பட்ட இயந்திர கூடம் தொடர்பாக அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை.

(iv) உடன்படிக்கையின் பிரகாரம் மஹாவலி அதிகாரசபையினால் நீரேந்து வளங்களான குழாய் கிணறுகளை நிர்மாணத்தல், தேவையான மேற்பார்வை நடவடிக்கைகள் மற்றும் வழிநடாத்தல் நீர் சுத்திகரிப்பு இயந்திரக் கூடத்திற்காக விவசாய அமைப்பினால் செலவிட நேர்கின்ற மின்சார கட்டணங்கள் ஊழியர் செலவினம் மற்றும் நீர் விற்பனையால் கிடைக்கும் வருமானம் தொடர்பாக அறிக்கையை வைத்துக் கொள்ளல் மற்றும் மேற்பார்வை செய்யப்பட்டிருக்கவில்லை.

(v) உடன்படிக்கையின் பிரகாரம் தேசிய சமூக நீர் வழங்கள் திணைக்களத்தினால் உத்தரவாதத்துடன் கூடிய நீர் சுத்திகரிப்பு இயந்திரங்களை வழங்குதல் மற்றும் பொருத்துதல், சுத்திகரிக்கப்பட்ட நீரின் நிலைமையை ஒரு மாதத்திற்கு ஒருமுறை உறுதிப்படுத்தி அப்பரிசோதனை அறிக்கையை மாதாந்தம் வதிவிட வியாபார முகாமையாளர் அலுவலகத்திற்கு சமர்ப்பித்தல் அத்தியவசிய பராமரிப்பு வேலைகள், சேவை வழங்கள் மற்றும் உதிரிப்பாகங்களை வழங்குதல் உப பாகங்கள் மற்றும் நீர் வடிகட்டிகள் என்பன 10 ஆண்டு காலம் பராமரிப்பு வேலைகள் செய்யப்பட்டிருக்கவில்லை.

(vi) சிறுநீரக நோயினால் அவதிப்படுகின்ற மஹாவலி மக்களுக்கு தேவையான பிரகாரம் சுத்தமான குடிநீர் வழங்குவதற்காக ரூபா 80 மில்லியனான தொகை செலவு செய்யப்பட்டு மூன்றாண்டிற்கும் அண்மித்த காலம் கடந்திருந்த போதிலும் அம் முதலீட்டு தொகையின் நலன்கள் உரிய கிராம மக்களுக்கு கிடைத்துள்ளதா அதன் செயன் முன்னேற்றம் எவ்வாறென்பதை ஆராய்ந்து பார்ப்பதற்கு பின்தொடர் நடவடிக்கை அதிகாரசபையினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும் மணலாறு வலயத்தில் பொருத்தப்பட்டிருந்த 12 நீர் சுத்திகரிப்பு இயந்திரங்களில் 03 இயங்காமல் இருந்ததுடன் 09 இயந்திரங்கள் மூலம் நீர் வழங்கப்பட்டிருந்த போதிலும் நீர் பொருத்தமான நிலைமையில் காணப்பட்டதா என மாதாந்தம் பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை. மணலாறு வலயத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்த 18 சுத்திகரிப்பு இயந்திரங்கள் 14 இயந்திர கூடங்கள் செயற்பாட்டு நிலைமையில் காணப்படவில்லை.

(ஊ) மஹாவலி எச், சீ மற்றும் எல் வலயங்களிலும் அதிகாரசபையின் ஆரம்ப வேலைகளை செயற்படுத்தும் பராமரிப்பு பிரிவில் காணப்படுகின்ற கட்டிடங்கள் மற்றும் 247 வீடுகள் முறையாக வெளித்தரப்பினருக்கு வழங்கப்படாமையினால் அதிகாரசபைக்கு உழைக்கக் கூடியதாக இருந்த வருமானம் இழக்கப்பட்டிருந்தது.

(எ) மஹாவலி பாதுகாப்பு படையணியிடமுள்ள ரூபா 26,030,780 பெறுமதியான கட்டிடமொன்று 03 பயிற்சி மண்டபங்கள் மற்றும் 24 உத்தியோகத்தர்கள் விடுதிகள் 2012 திசெம்பர் 24 ஆந் திகதி வரையிலும் தற்காலிக அடிப்படையில் கொத்மலை சர்வதேச பயிற்சி நிறுவனத்திற்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும் கையளிக்கப்பட்ட திகதியிலிருந்து எவ்வித கட்டணமொன்றும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஏ) காணிகளிலிருந்து குத்தகை அறவிடும் பொறுப்பு பணிப்பாளர் (காணி) மற்றும் பிரதிப் / உதவிப் பணிப்பாளரிற்கு (காணி) கையளிக்கப்பட்டிருந்த போதிலும் அப்பொறுப்பினை ஒவ்வொரு உத்தியோகத்திற்கு பொறுப்பான வதிவிட வியாபார முகாமையாளர்களுக்கும் வலயத்தின் உரிய உத்தியோகத்தர்களுக்கு பன்முகப்படுத்தி அவர்களின் கடமை பட்டியல்களில் உள்ளடக்கப்படாதிருந்ததுடன் வேறு வருமான மூலங்களிலிருந்து உழைக்க கூடிய வருமானம் சேகரிக்கும் பொறுப்பு எந்த உத்தியோகத்திரனது கடமை பட்டியலிலும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக சீ வலயம், எச் வலயம், விக்டோரியா வலயம் பிரதான அலுவலகம் மற்றும் வன, சுற்றாடல் பிரிவினால் மீளாய்வாண்டில் மதிப்பிடப்பட்ட வருமானத்தை சேகரிக்கும் செயன் முன்றேற்றம் 37 சதவீதத்திலிருந்து 66 சதவீதம் வரையான குறைந்த பெறுமதியொன்றை கொண்டிருந்தது.

4.4 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மண் அகழ்வுப் பிரதேசங்களை பரிசோதனை

(i) மஹாவலி அதிகாரப் பிரதேசத்திற்குரிய மஹாவலி கங்கையின் புதிய மணல் அகழும் இடங்களை ஆரம்பிப்பதற்கு பொருத்தமான இடங்களை பரிந்துரைப்பதற்கு 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் அதிகாரசபை, புவிச்சரிதவியல், மற்றும் கணிப்பொருள் பணியகம், வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம் மற்றும் மத்திய சுற்றாடல் அதிகாரசபையுடன் இணைந்து நடாத்தப்பட்ட ஒன்றிணைந்த வெளிக்கள பரிசோதனையில் பரிந்துரைக்கப்படாதிருந்த 50 இடங்களுக்காக சீ வலயத்தின் வதிவிட வியாபார முகாமையாளரின்

வேண்டுகோளின் பிரகாரம் வன சீவராசிகள் பணிப்பாளர் நாயகத்தினால் பின்னர் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அந்த அங்கீகாரத்தின் அடிப்படையில் அகழ்வு அனுமதிப்பத்திரங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டு மணல் அகழ்வு இடம் மெற்றிருந்தது.

(ii) காணி உரிமையாளி என்ற வகையில் அதிகாரசபையால் இது தொடர்பாக முறையான மற்றும் அடிக்கடி பின்தொடர் நடவடிக்கை எடுக்காமை காரணமாக அவ்வலயத்தின் 16 மணல் அல்லுமிடங்களில் பேணப்பட்டு செல்லும் போது சுற்றாடல் அதிகார சபை மற்றும் வன சீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தினால் விதிக்கப்பட்டிருந்த நிபந்தனைகள் மீறப்பட்டிருந்தமை கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

(iii) மாதமொன்றுக்குரிய காணிப் பயன்பாட்டுக் கட்டணம் மாத்திரம் செலுத்தி 12 மாத காலம் மணல் அகழ்வு இடம்பெற்றிருந்த போதிலும் 2015 அகஸ்ட் 24 ஆ திகதிய பீஎல்/1/1 ஆம் இலக்க மஹாவலி அதிகாரசபையின் உள்ளக சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் எஞ்சிய 11 மாதங்களுக்காக 386 அகர்வு அனுமதிப்பத்திரங்களிலிருந்து அகழப்பட்ட 807,194 கியுப்களுக்காக காணி பயன்பாட்டுக் கட்டணமாக ரூபா 509,861,400 அறவிடுவதற்கு சீ வலயத்தின் வதிவிட வியாபார முகாமையாளர் அலுவலக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை, பின் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தால் இதனை இனங்கண்டு தேவையான நடவடிக்கைகளை எடுக்க இயலுமை காணப்படுகின்றது.

(ஆ) விக்டோரியா கொத்மலே வலயத்தினால் 2013 ஆம் ஆண்டின் போது 3.593 களுத்துறை மாவட்ட செயலகத்தால் ஹெக்டேயர்களான 03 காணிகளில் சுண்ணாம்புக் கல் அகற்றுவதற்கு மூன்று நபர்களுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தன. அவர்களால் 2013 ஆம் ஆண்டுகள் முதல் 2016 ஆம் ஆண்டு வரை அகற்றப்பட்ட 31,684 கியுப் சுண்ணாம்புக் கற்களிற்காக புவிச்சரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகத்திற்கு அரசிறை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது அதன் பிரகாரம் 2015 ஆகஸ்ட் 24 ஆந் திகதிய அதிகாரசபையின் உள்ளக சுற்றறிக்கையின் பிரகாரம் 1 கியுப் இற்காக ரூபா 300 வீதம் 3,937,500 தொகை அதிகாரசபைக்கு கொடுப்பனவு செய்ய வேண்டியிருந்த போதிலும் ரூபா 1,004,580 மாத்திரம் செலுத்தப்பட்டிருந்தது. ஒரு குத்தகையாளருக்கு 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரை நிலுவை தொகையான ரூபா 3,973,500 இற்காக நோட்டீஸ் அனுப்பியிருந்த போதிலும் கொடுப்பனவு செய்யப்படாதிருந்த போதிலும் அதற்கு தேவையான சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மின்சார கம்பி முறைமை நிர்மாணம் மின்சார சபையால் மேற்கொள்ளப்பட வேண்டிய செயற்பாடொன்றாக இருந்த போதிலும் மாதுரு ஓயா மற்றும் 2 மின் நிலையங்களின் இயளலவினை அதிகரிப்பதற்காக புதிய மின் கம்பி முறைமையொன்று முதலீட்டாளர் ஒருவரினால் ரூபா 150,000,000 கிரயத்தில் நிறுவப்பட்டிருந்தது. இச்செலவினம் முதலீட்டாளர் மற்றும் அதிகார சபைக்கு இடையே அரசிறை 65.8 : 34.2 என்ற விகிதத்தில் பகிரப்பட வேண்டுமென அதற்காக நியமிக்கப்பட்ட குழுவினால் பரிந்துரைக்கப்பட்டிருந்தது. அவ்வாறே அதிகாரசபைக்கு முதலீட்டாளர்களிடமிருந்து கிடைக்கும் அரசிறை மற்றும் அதிகாரசபையினால் முதலீட்டாளருக்கு செலுத்த வேண்டிய பணத்தை ஈடு செய்வதற்காக மஹாவலி அதிகாரசபை, மின்சார சபை மற்றும் முதலீட்டாளருக்கு இடையே முத்தரப்பு ஒப்பந்தமொன்றும் மேற்கொள்ளப்பட வேண்டுமென பணிபாளர் சபை தீர்மானித்திருந்தது. குறித்த தரப்பினர் முத்தரப்பு ஒப்பந்தமொன்றை மேற்கொள்ளாமல் இருந்ததுடன் மேற்குறித்த குழுவின் பரிந்துரையின் பிரகாரம் முதலீட்டாளர் செலவிடப்பட்ட செலவித்தில் ரூபா 51,300,000 அதிகாரசபையினால் செலவிடப்பட வேண்டிய போதிலும் அதற்கு முரணாக ரூபா 75,000,000 அதிகாரசபைக்கு கிடைக்கும் அரசிறையில் கழித்துக் கொள்ளப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் போது தம்புத்தேகம வதிவிட வியாபார முகாமையாளர் அலுவலகத்திற்குரிய நீராவிய பண்ணையின் ரூபா 7,347,608 பெறுமதியான 383 விலங்குகள் கால்நடை வளங்கள் நீர்ப்பாசன மற்றும் நீர் வளங்கள் அபிவிருத்தி அமைச்சிற்கு கையளிக்கப்பட்டிருந்தன. விலங்குகளின் பெறுமதியை அறவிடுவதற்காக இருதரப்பினருக்கு இடையே இணக்கப்பாடொன்று இல்லாமையால் மீளாய்வாண்டின் இறுதி வரை விலங்குகளின் பெறுமதியை அறவிடுவதற்கு முடியாதிருந்ததுடன் அறவிட வேண்டிய தொகை நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) தம்புத்தேகம வதிவிட வியாபார முகாமையாளர் அலுவலகத்திற்குரிய எப்பாவெல பொஸ்டே படிவுடன் கூடிய 17.942 ஹெக்டேயர் அளவிலான காணி 1992 ஏப்ரல் 09 ஆந் திகதி உடன்படிக்கையின் பிரகாரம் 30 ஆண்டு காலப்பகுதிக்காக அரச சுரங்க அகழ்வு மற்றும் கணிப்பொருள் அபிவிருத்தி கூட்டுத்தாபனத்திற்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. காணி குத்தகைக்கு வழங்கல் மாகாண காணி ஆணையாளர் ஊடாக இடம் பெற்றிருந்ததுடன் உடன்படிக்கையின் பிரகாரம் குத்தகை வாடகை மாகாண காணி ஆணையாளுக்கு செலுத்தியிருந்ததால் 1992 ஆம் ஆண்டிலிருந்து 2017 ஆம் ஆண்டின் இறுதி வரை எவ்வித குத்தகைப்பணமும் மஹாவலி அதிகாரசபைக்கு அறவிடப்பட்டிருக்கவில்லை பின்னர் அதிகாரசபை 2016 சனவரி 01 ஆந் திகதி முதல் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை இரண்டு சந்தர்ப்பங்களில் கட்டணங்களை அறவிடுவதற்காக லங்கா

பொஸ்போட் கம்பனியுடன் உடன்படிக்கை செய்யப்பட்டு அகழப்படும் ஒரு கியுப் அபடைட்டிற்காக ரூபா 300 ஆன கட்டணமொன்று அறவிடப்படுவதற்கு இணங்கப்பட்டிருந்தது. இது தொடர்பான பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) கம்பனியால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் 2017 ஆம் ஆண்டில் அகழப்பட்ட 6,011 கியுப்களுக்காக ரூபா 1,809,738 அறவிடப்பட்டிருந்தது.

(ii) கம்பனியால் ஒப்பந்தகாரர்களுக்கும் புவிச்சரிதவியல் மற்றும் சுரங்க பணியகத்திற்கும் கொடுப்பனவு செய்யும் போது அகழப்பட்ட அபடைட் பார அளவினை அடிப்படையாக கொண்டிருந்ததுடன் மஹாவலி அதிகாரசபைக்கு கொடுப்பனவு செய்யும் போது அபடைட் கியுப் அளவினை அடிப்படையாகக் கொண்டிருந்தமையால் அதிகார சபைக்கு நிதி நட்டமொன்று ஏற்படுவதாக அவதானிக்கப்பட்டது.

(iii) 2015 நவம்பர் 23 ஆந் திகதிய LUS/SYS-H/PP/1-Vol-1-2015 ஆம் இலக்க இலங்கை மஹாவலி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் உரிய சேவைக் கட்டணங்களை அறவிடுவதற்காக நடைமுறையொன்றும் கூறுவிலை தயாரிக்கப்படும் வரை 01 கியுப் அபடைட்டிற்காக ரூபா 300 வீதம் அறவிடப்பட்டிருந்த போதிலும் மேலே கூறப்பட்டதன் பிரகாரம் சேவைக்கட்டணங்கள் அறவிடுவது தொடர்பாக முறையான நடைமுறையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

4.5 நிதியத்தின் குறைப்பயன்பாடு

2002 ஆம் ஆண்டில் கடன் முன்மொழிவு முறைமையொன்றை செயற்படுத்தும் நோக்கில சுழற்சி நிதியமொன்றை ஏற்படுத்தும் நோக்கில் ரூபா 48 மில்லியன் ஊவா அபிவிருத்தி வங்கியிலும் ரஜரட்ட அபிவிருத்தி வங்கியிலும் முதலீடு செய்யப்பட்டிருந்த போதிலும், அவ்வங்கிகளுடன் ஏற்படுத்திக் கொண்ட உடன்படிக்கை நிபந்தனைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே மீளாய்வாண்டின் இறுதியில் வைப்புக்களின் பெறுமதி ரூபா 84.5 மில்லியன் ஆக இருந்ததுடன் உடன்படிக்கையின் பிரகாரம் சாதாரண சேமிப்பிற்கான வட்டியினை விட 4 சதவீதமான வட்டியொன்றின் கீழ் இந்நிதியம் நீண்டகாலம் வங்கியில் நிறுத்திவக்கப்பட்டம சிக்கனமற்ற விடயமொன்றாக இருந்தது. மேலும் சுழற்சி நிதியத்திலிருந்து எதிர்பார்க்கப்பட்ட செயற்பாடு 2018 ஆம் ஆண்டு வரை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

4.6 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 செப்தம்பர் திகதியற்ற MA/Asset/Buid/Gen/01 நிதிப்பிரவின் அறிக்கையின் பிரகாரம் அதிகாரசபையின் 10 வலயங்களுக்குரிய மற்றும் 02 பிரிவுகளுக்குரிய 2017 ஆம் ஆண்டு வரை 1,055 கட்டிடங்கள் வெளித்தர்பினரால் பயன்படுத்தப்பட்டு வருவதுடன் 551 கட்டிடங்கள் மற்றும் 293 கட்டிடங்கள் விளைவற்ற வகையிலும் பயன்படுத்த முடியாத நிலைமையிலும் காணப்படுவதாக அவதானிக்கப்பட்டது.

(ஆ) நீராவிய பண்ணையில் 02 லொறிகள், 03 உழவு இயந்திரங்கள், இழுவை வண்டியொன்று, பவுசரொன்று மற்றும் மோட்டார் சைக்கிளொன்று 15 வீடுகள், 03 கட்டிடங்கள், 12 கோழிக் கூடுகள், 05 பன்றித் தொழுவங்கள், ஆட்டுத் தொழுவமொன்றும் விளைவற்றுக் காணப்பட்டதுடன் அச்சொத்துக்களை கைதவிர்ப்பதற்கு அல்லது பயன்பாட்டிற்கு எடுப்பதற்கும் முறையான வேலைத்திட்டமொன்று செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) பொல்கொல்லவில் அமைந்துள்ள பூகோள தகவல் முறைமை (GIS) பிரிவு 2007 ஆம் ஆண்டின் போது கொத்மலை சுற்றாடல் மற்றும் வனப் பாதுகாப்பு பிரிவிற்கு மாற்றப்பட்டிருந்தமையால் பிரிவுக்கு சொந்தமாகக் காணப்பட்ட 02 கணனிகள், மடிக் கணனியொன்று, 02 யூ.பீ.எஸ் உபகரணங்கள், 03 ஜீ.பீ.எஸ் உபகரணங்கள், 03 பிரின்டர்கள், டிஜிட்டல் கமராவொன்று, டிஜிட்டல் காப்பறையொன்று, ஸ்கேனர் ஒன்று என்பன விளைவற்றுக் காணப்பட்டன.

(ஈ) நீராவிய பண்ணையில் நிர்மாணிக்கப்பட்ட 02 நீர் பம்பி அறைகளுக்கு நீர்பம்பிகள் வழங்கப்படாத காரணத்தினால் பம்பயிறை நடவடிக்கைகளை செயற்படுத்த முடியாமல் காணப்பட்டது.

4.7 ஏனைய அரச நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரசபையின் வளங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 ஆம் ஆண்டில் மஹாவலி பாதுகாப்பு படையணிக்கு இணைக்கப்பட்டிருந்த உதவி பாதுகாப்பு மேற்பார்வையாளர்கள் 44 பாதுகாப்பு காப்பாளர்கள் வெளி அரச நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்டிருந்ததுடன் விடுவிக்கப்பட்ட திகதி முதல் மீளாய்வாண்டு

வரை அதிகாரசபையினால் செலுத்தப்பட்ட ரூபா 49,974,569 சம்பளம் மற்றும் ரூபா 21,571,442 ஆன மேலதிக நேரம் மற்றும் பிரயாணச் செலவினத்தை மீள் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அதிகார சபைக்குரிய 18 வாகனங்கள் வேறு அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களுக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் அவ்வாறு வழங்குவதற்கு வழங்கிய அங்கீகாரம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் இவ்வாகனங்களின் உள்ளவாறான நிலைமையையும் உறுதிப்படுத்தியிருக்கவில்லை. அவ்வாறே சனாதிபதி செயலகத்திற்கு தற்காலிகமாக வழங்கப்பட்டிருந்த ஒரு வாகனமொன்று விபத்திற்கு உட்பட்டு திருத்தம் செய்யப்படாமல் 2017 ஏப்ரல் 06 ஆந் திகதி முதல் ஜாவத்த பாதுகாப்பு உப பிரிவில் வைக்கப்பட்டிருந்தது.

(இ) 2015 ஆம் ஆண்டு முதல் பல்வேறு செயற்திட்டங்களுக்கு முழுநேரமாக விடுவிக்கப்பட்டிருந்த 09 உத்தியோகத்தர்கள் மற்றும் 09 ஊழியர்களுக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த சம்பளம் ரூபா 17,936,683 மற்றும் வரிசை அமைச்சிற்கும் ஏனைய நிறுவனங்களுக்கும் விடுவிக்கப்பட்ட 18 உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களுக்கும் செலுத்தப்பட்ட சம்பளம், மேலதிக நேரம் மற்றும் பிரயாணச் செலவினம் ரூபா 19,106,596 ஆன தொகையை மீள நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

4.8 பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அதிகாரசபையின் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் 14 வெற்றிடங்கள் மத்திய முகாமைத்துவ மட்டத்தில் 159 வெற்றிடங்கள் ஆரம்ப மட்டத்தில் 509 பதவிகளும் வெற்றிடங்களாக காணப்பட்டதுடன் மற்றும் 195 மிகையான பதவியணியினரொன்றாக இருந்தது. மேலும் அங்கீகரிக்கப்படாத பதவிகளுக்காக உட்படாத பதவிகளுக்காக தற்காலிகமாக 83 பேர் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தனர்.

(ஆ) அதிகாரசபையின் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் (அபிவிருத்தி) பணிப்பாளர் (காணி), பணிப்பாளர் (ஆளணி மற்றும் நிர்வாகம்), பணிப்பாளர் (கடற்றொழில் மற்றும் கால்நடை வளங்கள்) பணிப்பாளர் (அபிவிருத்தி) மற்றும் "சீ" வலயம், "பீ" வலயம், ஹுருலு வெவ வலயம், ரம்பகன்ஓயா வலயம் மற்றும் ஜீ வலயங்களின் பிரதி

வதிவிட வியாபார முகாமையாளர் ஆகிய பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் நிர்ணயிக்கப்பட்ட அட்சேர்ப்பு நடைமுறைகள் பின்பற்றப்பட்டு பொருத்தமான உத்தியோகத்தர்களை நிரந்தர அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. ஒப்பந்த அடிப்படையிலும் இரண்டாம் தர அடிப்படையில் அதிகாரசபைக்கு ஆட்சேர்ப்பு செய்யும் உத்தியோகத்தர்களிடமிருந்து நீண்டகாலமாக கிடைக்கும் சேவை மற்றும் உயர்ந்த செயலாற்றலை அடைந்துகொள்வதற்குமுள்ள சந்தர்ப்பம் இல்லாமல் போயிருந்தது.

4.9 வாகனங்கள் பயன்பாடு

ஆரம்ப வேலை கட்டுப்பாட்டு செயற்பாடுகள் மற்றும் பராமரிப்பு பிரிவு 2008 ஆம் ஆண்டிலிருந்து செயற்பாடற்றுக் காணப்பட்ட 10 வாகனங்கள் 2010 மார்ச் 09 மற்றும் 2014 சனவரி 22 ஆந் திகதிய ஆரம்ப வேலை கட்டுப்பாட்டு செயற்பாடுகள் பணிப்பாளரின் கடிததங்களின் மூலம் கையளிப்பதற்கும் கேள்வி மூலம் விற்பனை செய்வதற்கு பிரதிப் பணிப்பாளர் நாயகத்திற்கும் (நிர்வாகம் மற்றும் நிதி) பிரதிப் பணிப்பாளர் நாயகத்திற்கும் (தொழில்நுட்ப சேவைகள்) அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு தவறியிருந்தது.

05. நிலைபேறான அபிவிருத்தி

5.1 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்துகொள்ளல்

நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 "நிகழ்ச்சிநிரலின்" பிரகாரம், ஒவ்வொரு அரச நிறுவனத்தினாலும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டியதுடன், மீளாய்வாண்டில் அதிகாரசபையினால் தமது விடயப் பரப்பின் கீழ் எடுக்கப்படும் செயற்பாடுகள் தொடர்பாக எவ்வாறு செயற்படுத்துவது தொடர்பாக அறிந்திருக்கவில்லை. அவ்வாறு அறிந்திருக்காததன் காரணமாக தமது விடயப் பரப்பிற்கு உட்படும் செயற்பாடுகள் தொடர்பாக நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள், இலக்குகள் மற்றும் அந்த இலக்குகளை அடைந்து கொள்ள வேண்டிய மைல்கல்லையும் இலக்குகளை அளவிடுவதற்காக சுட்டிகளையும் இனங்கண்டிருக்கவில்லை.

6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

6.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்களையும் வரைவு ஆண்டறிக்கையும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் 06 மாதங்கள் தாமதித்து 2018 செப்தம்பர் 28 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் அதனுடன் வரைவு ஆண்டறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

6.2 உள்ளகக் கணக்காய்வு

2011 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு இறுதி வரை அதிகாரசபையின் உள்ளகக் கணக்காய்வாளர் (பணிப்பாளர்) பதவி வெற்றிடமாக காணப்பட்டதுடன் அப்பதவிக்காக தகைமையுடைய பணிப்பாளர் ஒருவரை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் அதன் கடமைகளை நிறைவேற்றுவதற்காக பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் நியமிக்கப்பட்டிருந்தார்.

6.3 பெறுகை மற்றும் ஒப்பந்த செயற்பாடு

6.3.1 ஒப்பந்த நிர்வாகத்திலான குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வெலிகந்த வதிவிட வியாபார முகாமைத்துவ அலுவலகத்திற்குரிய வேலை பிரிவினதும் அரலகங்வில விதை பண்ணையின் காவலாளி கூடத்தையும் மலசல கூடத்தையும் நிர்மாணிப்பதற்காக ரூபா 1,922,818 ஒப்பந்தமொன்று வழங்கப்பட்டிருந்ததுடன் 2017 நவம்பர் 07 ஆந் திகதி வேலை ஆரம்பிக்கப்பட்டு 90 நாட்களில் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தது. ஒப்பந்தக்காலம் 03 சந்தர்ப்பங்களின் போது நீடிக்கப்பட்டிருந்ததுடன் மூன்றாவது கால நீடிப்பு 2018 மே 22 ஆந் திகதி முதல் 2018 யூன் 2 வரையாக இருந்தது. எனினும் கணக்காய்வுத் திகதியான 2018 ஆஅகஸ்ட் 7 ஆந் திகதி வரையிலும் வேலை பூர்த்தி செய்யப்படாமல் இருந்ததுடன் அதற்காக ஒப்பந்த காலம் நீடிக்கப்பட்டோ அல்லது தாமதக் கட்டணமான ரூபா 34,610 அறவிடப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே நிர்மாணங்களின் போது தளபாடங்கள் மற்றும் அஸ்பஸ்டஸ் ககடிலான கூரையை தயாரிப்பதற்கு பதிலாக கொங்கிரீட் தளமொன்று இடல், மரக்கதவு யன்னல் என்பவற்றிற்கு

பதிலாக அலுமினியக் கதவு யன்னல்களை பொருத்துவதற்கு மதிப்பீடு திருத்தம் செய்யப்பட்டிருந்த போதிலும் திருத்திய மதிப்பீட்டை அங்கீகரித்துக் கொள்வதற்கு 2018 செப்தம்பர் 30 திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா 1,884,610 உடன்படிக்கை பெறுமதிக்கு றூஹணுகெத சுற்றுலா விடுதியைச் சுற்றி வேலி மற்றும் பிரதான நுழைவாயிலை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தமொன்று வழங்கப்பட்டிருந்ததுடன் கணக்காய்வுத் திகதியான 2018 ஆகஸ்ட் 7 வரையிலும் ரூபா 549,822 செலவிடப்பட்டு சுற்றுலா விடுதியச் சுற்றி வேலி நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் அது காட்டு யானைகளால் சேதமாக்கப்பட்டிருந்தமையால் அழிவடைந்திருந்தது. இப்பிரதேசம் எப்போதும் காட்டு யானைகள் நடமாடுவதால் வேலி நிர்மாணிப்பதற்கு முன்னர் சக்திவாய்ந்த மின்சார வேலி ஒன்று அமைக்கப்படாமல் கம்பி வேலி அமைக்கப்பட்ட காரணத்தினால் செலவிடப்பட்ட தொகை விளைவற்ற செலவினமொன்றாக இருந்ததாக அவதானிக்கப்பட்டது.

(இ) தம்புத்தேகம வலயத்தின் ஒப்பந்த கால வேலையை மிகைத்து இருந்த மூன்று ஒப்பந்தங்களின் செயற்பாடுகள் கணக்காய்வுத் திகதியான 2018 யூலை 18 ஆந் திகதி வரையில் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. வேலை பூர்த்தி செய்யப்படாதிருந்த இந்த ஒப்பந்தத்திற்காக கால நீடிப்பினை பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்பிக்கப்படாதிருந்ததுடன் ஒப்பந்த திகதியில் உள்ளவாறு ஒப்பந்தங்களை பூர்த்தி செய்வதற்கு தவறிய ஒப்பந்தக்காரர்களிடமிருந்து உடன்படிக்கையின் பிரகாரம் ரூபா 1,025,776 ஆன தாமதக் கட்டணத்தையும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

6.4 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 04 செலவின விடயங்களில் 81 சதவீதம் முதல் 38,445 சதவீதம் வரையான வீச்சில் பாதீடு செய்யப்பட்ட நிதிஏற்பாட்டு எல்லையை மிகைத்து உள்ளவாறான செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்காக நிதிஏற்பாடு மேற்கொள்ளப்படாதிருந்த 04 செயற்பாடுகளுக்காக ரூபா 27,968,000 செலவிடப்பட்டிருந்ததுடன் ரூபா 32,497,000 ஆன நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த 08 செயற்பாடுகளுக்காக எவ்வித செலவினமும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

6.5 ஆண்டறிக்கையை சபையில் சமர்ப்பித்தல்

2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளுக்காக அதிகாரசபையின் ஆண்டறிக்கை 2018 ஒக்தோபர் 30 ஆந் திகதி வரையிலும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

6.6 தீர்க்கப்படாதுள்ள கணக்காய்வுப் பந்திகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை மின்சார சபையின் மொத்த நீர்மின் உற்பத்தியில் 50 சதவீதம் அளவு மஹாவலி நீர்த்தேக்கத்துடன் அண்மித்தாக நிர்மாணிக்கப்பட்டுள்ள நீர் மின்நிலையங்கள் மூலம் உற்பத்தி செய்யப்படுவதுடன் பொல்கொல்ல, விக்டோரியா மற்றும் கொத்மலை ஆகிய நீர்த்தேங்கங்களின் அணைக்கட்டு மீதான மின் விளக்குகளுக்காகவும் அதிகாரசபையல் இலங்கை மின்சார சபைக்கு மின்சாரக் கட்டணத்தை செலுத்துவது அவதானிக்கப்பட்டது. நீர்த்தேக்கப் பராமரிப்பு மற்றும் மின்சார சபை பயன்படுத்திய நீருக்கான கட்டணமொன்று செலுத்தப்படாமையினால், இப் பிரதான அணைக்கட்டுக்களில் மின்சாரத் தேவையினை இலவசமாக பெற்றுக் கொள்வதற்கு அதிகாரசபையினால் கவனம் செலுத்தவேண்டி' இருந்தது.

(ஆ) பொல்கொல்ல, கொத்மலை, போவதென்ன, மாபாகட, மாதுறுஓயா மற்றும் விக்டோரியா நீர்த்தேக்கத்தை அண்மித்த பாதுகாக்கப்பட்ட நிலப் பிரதேசத்தில் அனுமதியற்ற 655 குடியிருப்பாளர்கள் வாழ்ந்து வருகின்றமை வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன், இந்த அனுமதியற்ற குடியிருப்பாளர்களை அகற்றுவதற்கும் மீண்டும் குடியேறும் அனுமதியற்ற குடியிருப்பாளர்களின் வருகையைத் தடுப்பதற்கும் அதிகாரசபை தவறியிருந்தது.

(இ) 1992 யூலை 08 மற்றும் 1992 ஒக்தோபர் 14 ஆந் திகதிய நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களின் பிரகாரம் திரைப்பட நிலையத் தொகுதியொன்றையும் செயற்பாட்டு இடமொன்றை நிர்மாணிப்பதற்கு மதிப்பீட்டு பெறுமதியில் 6 சதவீதம் அல்லது கூடியது 10 சதவீதத்திற்கு மேற்படாத நீண்டகால குத்தகை சதவீதத்திற்கு உட்பட்டு 50 ஆண்டுகளுக்கு அதிகாரசபையின் திகனயில் அமைந்துள்ள காணி மற்றும் கட்டிடத் தொகுதியை வழங்க அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. 1993 மே 21 ஆந் திகதி கம்பனியுடன் மேற்கொண்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் கட்டிடத் தொகுதி மற்றும் நிலம் ரூபா 20 மில்லியனுக்கு மதிப்பிடப்பட்டிருந்த போதிலும் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம்

கணக்காய்வின் மதிப்பீட்டின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய வாடகை ரூபா 28,800,000 மற்றும் உடன்படிக்கையின் பிரகாரம் வழங்கப்பட்ட 11 வீடுகளுக்காக அறவிடப்பட வேண்டிய வாடகை ரூபா 4,542,500 ஆக இருந்தது. தற்போது இச்சொத்துக்களின் உரித்தினை பெற்றுக் கொள்வதற்காக அதிகாரசபையினால் நீதிமன்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்த போதிலும் இறுதி திர்மானமொன்றை மேற்கொள்வதற்கு தவறியிருந்தது.

(ஈ) வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் தெற்கு அதிவேக அபிவிருத்தி செயற்திட்டத்திற்காக மண் வழங்கும் போது வளவ வதிவிட விடுதி வியாபார முகாமையாளரால் உரிய திட்டமொன்றின் பிரகாரம் காணி வழங்காமையால் அங்கீகரிக்கப்பட்ட எல்லையை மிகைத்து மண் வெட்டப்பட்டிருந்ததுடன் அளவீட்டு அறிக்கைகளின் பிரகாரம் மண் வெட்டுவதற்காக வழங்கப்பட்டிருந்த இரண்டு இடங்களிலிருந்து வெட்டி அகற்றப்பட்டிருந்த மண்ணின் அளவு 157,719 கியூப்களாக இருந்த போதிலும் 5,000 கியூப் மணலுக்காக மாத்திரம் ரூபா 2,800,000 ஆன காணி பயன்பாட்டுக் கட்டணங்கள் அதிகாரசபைக்கு கிடைத்திருந்தது. கூடுதலாக அகற்றப்பட்டிருந்த 152,719 கியூப் மண்ணிற்காக கிடைக்க வேண்டிய ரூபா 85,522,640 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. இப்பணத்தை அவிடுவதற்காக தேவையான சட்ட நடவடிக்கைகளை எடுப்பதில் தாமதம் காரணமாக பணம் அறவீடுகள் சந்தேகத்திற்குரியதாக இருந்தது. உரிய உத்தியோகத்தர்களுக்கு எதிராக எடுக்கப்பட்டிருந்த ஒழுக்காற்று நடவடிக்கைகளும் மந்தமான தன்மையில் காணப்பட்டது.

(உ) 2016 ஆம் ஆண்டின் போது விக்டோரியா வலயத்திற்கு கையேற்கப்பட்ட வாட்டர் பீல்ட் நிறுவனத்தின் கட்டிடங்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

7. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலான குறைபாடுகள் அவ்வப்போது அதிகாரசபையின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்தது. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விஷேட கவனம் கோரப்படுகின்றது.

	முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள்	அவதானிப்புக்கள்
(அ)	நிலையான சொத்துக்கள் முகாமைத்துவம்	சொத்துக்களின் நிலைத்திரு தன்மையை உறுதிப்படுத்துவுதற்காக வருடாந்தம் சொத்துக்கள் மெய்மையாய்வு செய்யப்பட்டிருந்த உரிய அறிக்கை சமர்ப்பிக்கப்படாமை, விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாட்டிற்குரிய சொத்துக்கள் தொடர்பாக முறையான நடவடிக்கை எடுக்காமை.
(ஆ)	காணி மற்றும் கட்டிடங்களின் பயன்பாடு	வெளித்தரப்பினரால் அதிகாரசபைக்குரிய கடடிடங்கள் வாடகையின்றி பயன்பாட்டிற்கு எடுத்தல் வலயங்களில் கட்டிடங்கள் விளைவற்றுக் காணப்பட்டமை மற்றும் கணிய வளங்களுடன் கூடிய காணி முறையாக முகாமை செய்யப்பட்டு வருமானம் உழைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமை.
(இ)	கணக்கீடு	வரி வருமானம் மற்றும் நிலஜவ வருமான சேகரிப்பிற்காக சரியான நடைமுறையொன்று இல்லாமல் இருந்ததுடன் குத்தகை வருமான சேகரிப்பிற்குரிய நியதிகள் மற்றும் நிபந்தனைகள் செயற்படுத்தியிருக்கவில்லை.
(ஈ)	முற்பணங்களை வழங்குதலும் தீர்ப்பனவு செய்தலும்	நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் பெறப்பட்ட முற்பணங்கள் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை
(உ)	ஒப்பந்த நிர்வாகம்	ஒப்பந்தக்காரர்களை தெரிவுசெய்யும் திணைக்கள பெறுகை குழுவிடமிருந்து நிறைவேற்றாமல் பிரதேச பெறுகை குழுவின் மூலம் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ள முடியுமான வகையில் எவ்வித அடிப்படையொன்று இல்லாமல் செயற்பாடுகளை ஒதுக்கப்பட்டிருந்தன.
(ஊ)	செயற்திட்ட முகாமைத்துவம்	செயற்திட்டத்தை செயற்படுத்துவதற்கு முன்னர் சுற்றாடல் மதிப்பீட்டு அறிக்கை மற்றும் ஏனைய உரிய நிறுவனங்களிடமிருந்து பெற்றுக்

		கொள்ளப்பட வேண்டிய அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாமை.
(எ)	பதவியணினர் முகாமைத்துவம்	சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் 14 வெற்றிடங்கள் மற்றும் ஏனைய பதவியணியில் மிகை பதவியணியினர் 195 காணப்பட்டமை.
(ஏ)	வாகனக் கட்டுப்பாடு	வெளித்தரப்பினரிடமுள்ள வாகனங்களை மீளப்பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமை மற்றும் வாகனங்கள் தொடர்பான வருடாந்த மெய்மையாய்வு மேற்கொள்ளப்படாமை.

எச்.எம்.காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை தொடர்பாக பணிப்பாளர் நாயகத்தின் விளக்கங்கள்

பாகம் IV

இலங்கை மகாவலி அதிகார சபை மற்றும் அதன் கீழ் நிர்வகிக்கப்பட்டு வரும் கம்பனிகள் என்பவற்றின் 2017 டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடம் தொடர்பான திரண்ட நிதிக் கூற்றுக்கள் குறித்த 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14 (2) (c) உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

மேற்குறித்த விடயம் தொடர்பாக தங்களால் எனக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கும் இல: IEN/B/MASL/01/17/57 மற்றும் 2019.01.06 திகதியிட்ட 1971ஆம் ஆண்டின் இலக்கம் 38 நிதிச் சட்டத்தின் 14 (2) (c) உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை தொடர்பான எனது பதிலை இத்துடன் அனுப்பி வைக்கின்றேன்.

2.2. நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக கருத்துத் தெரிவித்தல் - குழுமம்

2.2.1. நிதிக் கூற்றுக்களை ஒன்றுதிரட்டுதல்

அ) வரையறுக்கப்பட்ட மகாவலி வென்ச்சர் கப்பிட்டல் (தனியார்) கம்பனியை கலைத்து விடுவது தொடர்பான நடவடிக்கைகள் இறுதிக் கட்டத்தில் இருந்து வரும் காரணத்தினால் அக்கம்பனியின் தகவல்கள் ஒரு "கணக்கீட்டு குறிப்பாக" சமர்ப்பிக்கப்பட்டிருப்பதுடன், 2018 ஆம் ஆண்டில் தங்கள் அவதானிப்பின் பிரகாரம் செயற்படுவதற்கு குறித்துக் கொண்டுள்ளேன்.

ஆ) 2018 ஆம் வருடத்திற்கான நிதிக் கூற்றுக்களுடன் இணைந்த விதத்தில் சம்பந்தப்பட்ட வெளிப்படுத்துகைகளை மேற்கொள்வதற்கு குறிப்பிட்ட கம்பனிகளுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

2.2.2. சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில் முயற்சிகள் தொடர்பான இலங்கையின் கணக்கீட்டுத் தரநியமங்கள்

(அ) தமது நிலையான சொத்துக்களை மீள் பதிப்பீடு செய்து, 2018 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களுடன் இணைந்த விதத்தில் சம்பந்தப்பட்ட கணக்குக்களில் சீராக்கங்களை செய்து கொள்ள வேண்டுமென சம்பந்தப்பட்ட கம்பனிகளுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

(ஆ) 2018 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் உரிய திருத்தங்களை மேற்கொள்ளுமாறு அக்கம்பனிகளுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

(இ) 2018 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் உரிய திருத்தங்களை மேற்கொள்ளுமாறு அக்கம்பனிகளுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

2.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக கருத்துத் தெரிவித்தல் - அதிகார சபை

2.3.1 இலங்கை அரச துறை கணக்கீட்டுத் தர நியமங்கள்

(அ) ஏற்றுக்கொள்கிறேன். விவசாய கையிருப்புக்களை மதிப்பீடு செய்வதில் விவசாயத் திணைக்களத்தின் சமூக, பொருளாதார திட்டமிடல் பிரிவினால் 2012 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டிருக்கும் பழ வகைகள் மற்றும் மலர்ச் சாகுபடி பயிர்கள் தொழில் முயற்சியாளர் கைநூலில் (Source Crop Enterprise Budget of "Fruits & Floriculture Crops, Socio Economic and Planing Center Department of Agriculture at Peradeniya- August -2012") குறிப்பிடப்பட்டிருக்கும் கணிப்பு முறையை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீட்டு அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது. கால்நடை வளங்களின் கையிருப்புக்களை மதிப்பீடு செய்வதில் தேசிய கால்நடை அபிவிருத்திச் சபையினால் பின்பற்றப்படும் முறைமையியலின் பிரகாரம் (சுற்றறிக்கை) நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

2.3.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

மூலதன அளிப்புக்களை பயன்படுத்துவதன் மூலம் கொள்வனவு செய்யப்படும் நிலையான சொத்துக்கள் தொடர்பாக, அவற்றின் பயனுள்ள ஆயுள் காலத்தை அடிப்படையாகக் கொண்டு, முறையான ஒழுங்கில் அவற்றின் மூலம் உருவாக்கப்படும் வருமானத்தை இனங்கண்டு கொள்வதற்கென 2018ஆம் ஆண்டின் நிதி அறிக்கைகள் மூலம் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை தெரிவித்துக் கொள்கிறேன்.

2.3.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) ஐயவினாவில் குறிப்பிடப்பட்டிருக்கும் தலைமை அலுவலகத்தினால் கொள்வனவு செய்யப்பட்ட மூன்று காணித் துண்டுகளின் பெறுமதியை மதிப்பீடு செய்து, நிதிக்கூற்றுக்களில் அந்த மதிப்பீடு காட்டப்பட்டிருக்கவில்லை என்ற விடயத்தை ஏற்றுக் கொள்கின்றேன்.

இக்காணிகள் நிதிக் கூற்றுக்களில் கொள்வனவு செய்யப்பட்ட பெறுமதியில் (கொள்வனவு விலையில்) காட்டப்பட்டிருப்பதுடன், இக்காணிகளின் தற்போதைய பெறுமதியை மதிப்பீடு செய்து கொள்ளும் பொருட்டு அது விலை மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. தெமட்டகொட பேஸ்லைன் வீதியில் இல. 260/20 இல் அமைந்திருக்கும் காணியின் தற்போதைய பெறுமதி ரூ.296,000,000.00 ஆக விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் மதிப்பீடு செய்யப்பட்டு, அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அந்த மதிப்பீட்டுப் பெறுமதியை 2018ஆம் ஆண்டின் நிதிக் கூறுக்கள் மற்றும் நிலையான சொத்துக்களின் பட்டியல் என்பவற்றில் சேர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

மிகுதி 02 காணிகளின் - அதாவது, தலைமை அலுவலகம், ரீ.பீ. ஜாயா மாவத்தை, கொழும்பு 10 இல் அமைந்திருக்கும் காணி மற்றும் ரீ.பீ. ஜாயா மாவத்தை 493,493/1 ஆகிய இரு காணிகளினதும் - மதிப்பீட்டுப் பெறுமதியை பெற்றுக்கொள்வதற்கென விலை மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. எனினும், இது வரையில் அந்தத் திணைக்களத்தினால் சம்பந்தப்பட்ட அறிக்கை எமக்கு அனுப்பி வைக்கப்படவில்லை. அந்த அறிக்கை கிடைத்த பின்னர், அதனை நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை தெரிவித்துக் கொள்கின்றேன்.

தெமட்டகொடவில் அமைந்திருக்கும் காணியை, விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரின் கொள்கை முடிவு ஒன்றின் பிரகாரம் கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவ திணைக்களத்தின் தலைமை அலுவலகத்தை நிர்மாணிப்பதற்கென ஒப்படைப்பதற்கும், கடல்சார் சூழல் மாசாக்கலை தடுக்கும் அதிகார சபையின் தலைமை அலுவலகத்தை நிர்மாணிப்பதற்கு நீண்ட கால குத்தகை அனுமதிப்பத்திரத்தின் கீழ் வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதுடன், அதற்கு அமைச்சரவையின் ஒப்புதலை பெற்றுக் கொள்வதற்கென அமைச்சரவை பத்திரம் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

ரீ.பீ. ஜாயா மாவத்தை மாவத்தையில் அமைந்திருக்கும் இல. 493 மற்றும் 493/1 காணியில் அமைந்திருக்கும் கட்டடத்தில் மத்திய அரசு அமைச்சின் கீழ் செயற்பட்டு வருவதுடன், இலங்கை மகாவலி அதிகார சபையின் பணிகளுக்கு பெருமளவுக்கு பங்களிப்பை வழங்கி வரும் "நீர் பாதுகாப்பு முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம்" என்ற வெளிநாட்டு உதவியுடன் கூடிய கருத்திட்டத்தின் அலுவலகம் அமைக்கப்பட்டுள்ளது.

(ஆ) 2018 ஆம் ஆண்டு நிதிக் கூற்றுக்கள் மூலம் சம்பந்தப்பட்ட திருத்தங்களை மேற்கொள்வதற்கென குறித்துக் கொள்ளப்பட்டுள்ளது.

(இ) இந்த உருப்படிகளை எதிர்காலத்தில் திருத்தம் செய்து, கணக்குகளில் சேர்த்துக் கொள்வதற்கென அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

(ஈ) இக்கட்டடங்களின் பெறுமதியை மதிப்பீடு செய்து கொள்ளும் பொருட்டு எனது இல. MA/ASSET/2019/9 மற்றும் 2019/01/31 திகதியிட்ட கடிதத்தின் மூலம் விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தின் பிரதான விலை மதிப்பீட்டாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அந்த மதிப்பீடு கிடைத்த பின்னர் கணக்குகளில் உரிய சீராக்கங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பேன்.

(உ) அணைக்கட்டுப் பாதுகாப்பு மற்றும் நீர் வளங்கள் திட்டமிடல் கருத்திட்டத்தின் முதல் கட்டம் முடிவடைந்ததுடன் இணைந்த விதத்தில்இந்த நிலையான சொத்துக்களை

கையகப்படுத்திக் கொள்ளுமாறு இலங்கை மகாவலி அதிகார சபைக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும், அந்த நிலையான சொத்துக்களை கொள்வனவு செய்த திகதியிலிருந்து ஒப்படைக்கும் திகதி வரையில் பெறுமானத் தேய்வைக் கணிப்பீடு செய்து, உரிய திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

எனவே, அந்த நிலையான சொத்துக்களை மீண்டும் விலை மதிப்பீடு செய்ய வேண்டியிருப்பதுடன், அதற்கென சம்பந்தப்பட்ட ஆவணங்கள் விலை மதிப்பீட்டுத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டிருந்தன. தற்போது அந்த விலை மதிப்பீடுகள் கிடைத்து வருவதுடன், அந்தந்த வலயங்கள் தொடர்பாக சம்பந்தப்பட்ட பிராந்திய மதிப்பீட்டாளர்கள் மூலம் மதிப்பீட்டுடன் கூடிய அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டு வருகின்றன. இதுவரையில் போவதன்ன மற்றும் கலாஓயா ஆற்றுப் பள்ளத்தாக்குக்கு அலுவலகத்திற்குச் சொந்தமான நிலையான சொத்துக்கள் விலை மதிப்பீடு செய்யப்பட்டு, சம்பந்தப்பட்ட அறிக்கைகள் கணக்கில் சேர்க்கப்பட்டுள்ளன. சம்பந்தப்பட்ட அனைத்துப் பெறுமதி மதிப்பீட்டு அறிக்கைகளும், விலை மதிப்பீட்டுத் திணைக்களத்திலிருந்து கிடைக்கும் ஒழுங்கு வரிசையில் அவற்றை துரிதமாக பெற்று, அந்த நிலையான சொத்துக்களின் விலை மதிப்பீட்டினை கணக்கில் சேர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வேன்.

(ஊ) 2018 ஆம் ஆண்டில் பௌதீக ரீதியில் மீள் மதிப்பீடு செய்து, கணக்குகளில் சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன்.

(எ) இந்த நிலையான சொத்துக்களை எதிர்காலத்தில் உரிய விதத்தில் பொறுப்பேற்று, அவற்றின் பெறுமதிகளை மதிப்பீடு செய்ததன் பின்னர், கணக்குகளில் சேர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை தெரிவித்துக் கொள்கின்றேன்.

(ஏ) 2018 ஆம் ஆண்டில் இந்த நூல்நிலைய புத்தகங்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு, நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

(ஐ) 2018ஆம் ஆண்டு தொடக்கம் மீளாய்வு செய்யப்படும் ஆண்டில் வரி வருமானத்தை சரியாக இனங்கண்டு, கணக்கில் சேர்த்துக் கொள்வதற்கு குறித்துக் கொண்டுள்ளேன்.

(ஒ) இப்பணத் தொகைகள் சம்பந்தப்பட்ட சுற்றறிக்கை அறிவுறுத்தல்கள் பிழையாக பின்பற்றப்பட்டமை காரணமாக தோன்றியிருக்கும் ஒரு நிலுவையாக இருந்து வருகின்றது. இது அனுமதிப் பத்திரங்களை வழங்குவதில் சம்பந்தப்பட்ட அனுமதிப் பத்திரதாரர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ஒரு கட்டணமாக இருந்து வரவில்லை. அதனால் அத் தொகைகளை புவிச்சரிதவியல அளவை சுரங்கப் பணியகத்திற்கு செலுத்த முடியாதிருப்பதுடன், அது ஒரு போதும் அறவிட்டுக் கொள்ள முடியாத ஒரு நிலுவையாகவும் இருந்து வருகின்றது. அதன் காரணமாக அது தொடர்பாக சம்பந்தப்பட்ட நிலைமையை பொது தொழில்முயற்சிகள் தொடர்பான குழுவுக்கு தெரிவிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன்.

(ஒ) இது தொடர்பாக தேடிப் பார்த்து, திருத்தங்களை மேற்கொள்வதற்கு குறித்துக் கொள்ளப்படடுள்ளது.

(ஔ) 2018 ஆம் ஆண்டின் நிதி அறிக்கைகளில் தேவையான சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2.3.4 தெளிவுபடுத்தப்படாத மாற்றங்கள்

(அ) 2018 நிதிக் கூற்றுக்கள் மூலம் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஆ) இது தொடர்பாக பரீட்சிப் பார்த்து, 2018ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்வேன்.

2.3.5 தொங்கல் கணக்குகள்

வரையறுக்கப்பட்ட மகாவலி விவசாய மற்றும் கால்நடை வளங்கள் (தனியார்) கம்பனியின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கும் ரூ.14,117,550.00 தொங்கல் கணக்கினை உடனடியாக நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அக்கம்பனிக்கு எழுத்து மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2.3.6 கணக்காய்வுக்கு சான்றுகள் இல்லாமை

முதலீட்டு சொத்துக்கள்	இலங்கை மகாவலி அதிகாரசபை	இது தொடர்பாக தேடிப் பார்த்து, எதிர்காலத்தில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வேன்.

வருமானம் - பாக்கி வரிப் பட்டியல் - சம்பந்தப்பட்ட ஆவணங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. தேவையின் பிரகாரம் அவற்றை சமர்ப்பிக்க முடியும்.

2.4 வருமதியாகவுள்ள தொகைகள் மற்றும் செலுத்த வேண்டிய தொகைகள்

(அ) ஏற்றுக்கொள்கிறேன்.

காணிக் குத்தகைத் தொகைகளை அறிவிடுவது அரச காணிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் இடம்பெற்று வருகின்றது. அது தொடர்பாக காணி செயற்பாட்டு கையேட்டின் பிரகாரம் வீட்டுக் காணி குத்தகை வரிகள், வர்த்தக காணி குத்தகைகள் மற்றும் முதலீட்டு கருத்திட்ட குத்தகைகள் என வகைப்படுத்தப்பட்டு, குத்தகைத் தொகைகள் அறவிடப்பட்டு வருகின்றன. எனினும், துரிதப்படுத்தப்பட்ட மகாவலி நிகழ்ச்சித்திட்டத்தின் ஆரம்ப காலங்களில் அரசாங்கத்தின் விலை மதிப்பீடு இல்லாமல் காணிகள் பகிர்ந்தளிக்கப்பட்டிந்தன. அச்சந்தர்ப்பத்தில் தோராயமான மதிப்பீட்டின் அடிப்படையில்

ஒரு சிறு தொகை வருடாந்த குத்தகைத் தொகையாக அறிவிடப்பட்டு வந்தது. அரசாங்கத்தின் விலை மதிப்பீட்டை பெற்றுக்கொள்வதற்கு நீண்ட காலம் எடுக்கும் காரணத்தினாலும், அவ்விதம் அரசாங்க விலை மதிப்பீட்டை பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பத்தில் குத்தகைதாரர்கள் பாரியளவிலான பாக்கித் தொகைகளை செலுத்த வேண்டிய நிலைமை இருந்து வருவதனாலும் அந்த வரிச் சுமையை செலுத்துவதில் சம்பந்தப்பட்ட குத்தகைதாரர்கள் சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றார்கள். அதன் காரணமாக இந்நிலைமை தோன்றியுள்ளது.

எவ்வாறிருப்பினும், அந்தந்த வலயங்கள் தொடர்பாக ஒவ்வொரு பிரிவு மட்டத்திலும் வருமதியாக இருக்கும் பாக்கி குத்தகைத் தொகைகளை அறவிட்டுக் கொள்வதற்கென பிரிவு முகாமையாளர்களுக்கு இலக்குகள் மற்றும் திகதிகள் என்பன வழங்கப்பட்டுள்ளன. அத்தகைய பாக்கி குத்தகைத் தொகைகளின் அறவீட்டில் ஏற்பட்டுவரும் முன்னேற்றம் தொடர்பாக மாதாந்த அடிப்படையில் பிரிவு முகாமையாளர்கள் மட்டத்தில் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களை நடத்தும் செயற்பாடு இடம்பெற்று வருகின்றது. அது தவிர வதிவிட கருத்திட்ட முகாமையாளர், பிரதி வதிவிட கருத்திட்ட முகாமையாளர்கள் ஆகியோருக்கும், ஒட்டுமொத்த வலயம் தொடர்பான பாக்கி குத்தகைத் தொகைகளை அறவிட்டுக் கொள்வதற்கென இலக்குகள் வழங்கப்பட்டுள்ளன. அத்தகைய அறவீடுகளின் முன்னேற்றமும் காலத்திற்கு காலம் மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றது என்பதனை தெரிவித்துக் கொள்கின்றேன். அது மட்டுமன்றி, இத்தகைய பாக்கி குத்தகைத் தொகைகளை அறவிட்டுக் கொள்வது தொடர்பாக தேடிப் பார்த்து, துரித நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கென உள்ளகக் கமிட்டி ஒன்று நியமனம் செய்யப்பட்டு, அதற்கு ஊடாக முன்னேற்றம் மீளாய்வு செய்யப்பட்டு வருகின்றது என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

(ஆ) வேலை தொடங்குவதற்கு முன்னரான முற்பணத் தொகைகளில் ரூ. 34,66,000.00 மற்றும் ரூ. 22,31,00.00 ஆகிய தொகைகள் 05 வருடங்களுக்கு மேற்பட்ட, 'B' வலயத்தைச் 05 வருடங்களுக்கு மேற்பட்ட வேலைக்கு முன்னரான முற்பணத் தொகை நிலுவைகளாக இருந்து வருகின்றன. இத்தொகைகளை அறிவிட்டுக் கொள்வதற்கென சட்ட ரீதியாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக 'B' வலயத்தின் வதிவிட கருத்திட்ட முகாமையாளர் அறிவித்துள்ளார். மேலும், வேலை தொடங்குவதற்கு முன்னரான இந்த முற்பணங்கள், 'B' வலயத்தின் சவுதி அபிவிருத்தி நிதியத்தின் கீழ் செயற்படுத்தப்பட்டு வந்த கருத்திட்ட அலுவலகத்தின் கணக்கீட்டு பிரிவின் மூலம் வழங்கப்பட்டிருந்தன. பின்னர் அந்த அலுவலகம் மூடப்பட்ட காரணத்தினால் இந்த இறுதி நிலுவை மட்டும் 'B' வலயத்தின் நிதிக் கூற்றுகளில் நிலுவையாக இருந்து வந்துள்ளது.
மிகுதி வேலைக்கு முன்னரான முற்பணத் தொகைகள் தொடர்பாக தேடிப் பார்த்து, நடவடிக்கை எடுப்பதற்கு குறித்துக் கொண்டுள்ளேன்.

(இ) ஜாவத்தை வளவிலிருக்கும் கட்டடங்கள் தொடர்பாக இலங்கை மகாவலி அதிகார சபைக்கு ஏற்பட்ட செலவுத் தொகைகளை மீளளிப்புச் செய்யுமாறு பல்வேறு

சந்தரப்பங்களில் எமது இல MASL/FIN/EDB/16/01 மற்றும் 2018-03-21, 2018-05-22 தேதியிட்ட கடிதங்கள் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிறுவனங்களில் பின்வரும் நிறுவனங்கள் இலங்கை மகாவலி அதிகார சபையினால் அமுல் செய்யப்பட்ட கருத்திட்டங்களின் சாத்தியப்பாட்டு ஆய்வறிக்கைகளை தயாரித்தல் மற்றும் ஏனைய நடவடிக்கைகள் என்பவற்றுக்கென உருவாக்கப்பட்டிருந்த நிறுவனங்கள் ஆகும். நடவடிக்கைகள் பூர்த்தியடைந்த நிலையில் அந்த நிறுவனங்கள் ஏற்கனவே மூடப்பட்டுள்ளன.

1. புரோயறி ஆலோசனைச் சேவைகள் அலுவலகம்
2. வட மத்திய மாகாண கருத்திட்ட அலுவலகம்
3. வட மேல் மாகாண கருத்திட்ட அலுவலகம்

இந்த நிறுவனங்கள் தற்பொழுது முனைப்பான விதத்தில் செயற்படாதிருப்பதன் காரணமாக அவற்றிலிருந்து வருமதியாக இருக்கும் பாக்கித் தொகைகளை பதிவழிப்புச் செய்யும் விடயத்தை பரிசீலனை செய்வதற்கென பணிப்பாளர் சபையிடம் சமர்ப்பித்து, ஒப்புதலை பெற்றுக்கொள்வதற்கு இப்பொழுது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

அதே போல தற்பொழுது செயற்பட்டு வரும் நிறுவனங்களில் நீர்ப்பாசன மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ அமைச்சு, மகாவலி ஆலேசனைச் சேவைகள் (தனியார்) பணியக கம்பனி என்பன தொடர்பாக பொருத்தமான விதத்தில் பணத்தொகைகள் ஈடு செய்யப்பட்டு வருகின்றன. இப்பணத் தொகைகளை விரைவாக செலுத்துமாறு ஏனைய தரப்புக்களுக்கு அறிவித்தல் வழங்கப்பட்டிருந்த போதிலும் இதுவரையில் செலவுத் தொகைகள் ஈடு செய்யப்படவில்லை என்பதனை தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்த வளவில் அமைந்திருக்கும் கட்டடங்களின் மதிப்பீட்டு பெறுமதியை பெற்றுக்கொள்வதற்கென விலை மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருப்பதுடன், இந்தக் கட்டடங்கள் தொடர்பான விலை மதிப்பீடு இப்பொழுது கிடைத்துள்ளது. அதன் பிரகாரம், சம்பந்தப்பட்ட கட்டடங்களின் குத்தகைத் தொகைகளை செலுத்துவதற்கென அந்த நிறுவனங்களுக்கு கடிதங்களின் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஈ) ஐந்து வருடங்களுக்கு மேல் செலுத்தப்பட வேண்டியிருக்கும் கணக்கு நிலுவைகளின் பெறுமதி ரூ. 23.779,000 ஆகும் என்பதனை ஏற்றுக்கொள்கிறேன். அத்தொகையில் உள்ளடக்கப்பட்டிருக்கும் பிடித்து வைத்திருக்கும் கட்டணங்கள் தொடர்பாக பின்வரும் விதத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதனை தெரிவித்துக் கொள்கின்றேன்.

I) மகாவலி ஒருங்கிணைந்த கருத்திட்டம் - B வலயம்

பிடித்து வைத்திருந்த ரூ. 6,349,689 பணத் தொகைகள் 2018 ஆண்டில் பின்வரும் விதத்தில் விடுவிக்கப்பட்டுள்ளன:

* ரூ. 561,092.80 பணத் தொகைகள் ஒப்பந்த வேலைகள் பூர்த்தியடைந்ததனை அடுத்து விடுவிக்கப்பட்டது.

* பிடித்து வைத்திருந்த ரூ. 1,347,356.00 பணத் தொகை தொடர்பாக நீண்ட காலமாக கோரிக்கைகள் முன்வைக்கப்படாத காரணத்தினால் அது வருமானமாக அடையாளம் காணப்பட்டுள்ளது.

* ரூ. 438,453.00 பணத் தொகையை வருமானமாக அடையாளம் காண்பதற்கு முன்னர், அப்பணத் தொகைகயை விடுவித்துக் கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரர்களுக்கு எழுத்து மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தவிர, தற்போது நிலுவையில் இருந்து வரும் ரூ. 3,750,596.00 பிடித்து வைத்திருக்கும் பணத் தொகைகளை விடுவிப்பது தொடர்பாக சட்ட ரீதியான சிக்கல்கள் காணப்படுகின்றன. சட்ட ஆலோசனைகளைப் பெற்று அவற்றை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இது தவிர, றம்பக்கன்ஓய வலயம், B வலயம் மற்றும் முதன்மை வேலைகள் நிர்வாகம், இயக்குதல் மற்றும் பராமரிப்பு பிரிவு என்பன தொடர்பாக ஐயவினா மூலம் முன்வைக்கப்பட்டிருக்கும் "பிடித்து வைத்திருக்கும் பணத்தொகைகளை" வருமானமாக அடையாளம் கண்டு, கணக்குகளில் சேர்த்துக் கொள்வதற்கு குறித்துக் கொள்ளப்பட்டுள்ளது என்பதனை தெரிவித்துக் கொள்கிறேன்.

B வலயம் - ரூ. 7,544,874.00

'B' வலயத்தின் பண்டங்கள் வழங்கல் முற்பணத் தொகைகளில் 2016ஆம் வருடத்தில் மனம்பிட்டியாவில் ஹெலபொஜுன்ஹல (தேசிய உணவகம்) நிர்மாணிப்பதற்கென பொலன்னறுவை மாவட்டச் செயலாளருக்கு ரூ. 5 மில்லியன் வழங்கப்பட்டுள்ளது. அதன் கட்டுமான வேலைகள் தாமதமடைந்த காரணத்தினால் முற்பணங்களை திருப்பிச் செலுத்த முடியாதிருந்தது. கட்டுமான வேலைகள் 2018ஆம் ஆண்டில் முன்னெடுக்கப்பட்ட காரணத்தினால் 2017ஆம் ஆண்டில் அவற்றை செலுத்தித் தீர்க்க முடியாதுவிட்டாலும், இப்பொழுது அந்த முற்பணத் தொகைகள் செலுத்தப்பட்டுள்ளன.

மேலும், ரூ. 1,802,500.00 பணத் தொகை 2016ஆம் ஆண்டின் போது ஹேலீஸ் அக்ரோ நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. விவசாயிகளின் பங்களிப்பின் கீழ் விவசாயிகளுக்கு பரசூட் தட்டிகளை கொள்வனவு செய்வதற்கென இத்தொகை வழங்கப்பட்டுள்ளது. விவசாயிகளின் 50% பங்களிப்பு உரிய காலத்தில் கிடைக்காத காரணத்தினால் முற்பணத்தை செலுத்த முடியாத நிலைமை ஏற்பட்டிருந்த போதிலும், அப்பணத் தொகையில் 2018 டிசம்பர் மாதம் அளவில் ரூ. 126,542.50 தொகை மட்டும்

எஞ்சியிருந்து வருகின்றது. அப்பணத் தொகையையும் விவசாயிகளிடமிருந்து அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

(உ) இது தொடர்பாக அதிகார சபையின் உத்தியோகத்தர்கள் மற்றும் மகாவலி கால்நடை தொழில் முயற்சிக் கம்பனி, தேசிய கால்நடை அபிவிருத்திச் சபை என்பவற்றைச் சேர்ந்த அதிகாரிகள் ஆகியோர் 2019.04.11 திகதி அன்று கலந்துரையாடி இருப்பதுடன், இக்கலந்துரையாடலின் பிரகாரம் இப்பிரச்சினையை தீர்த்துக் கொள்ளும் பொருட்டு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பேன்.

2.5 சட்ட திட்டங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுக்கு இணங்கி ஒழுகாமை

(அ) பூர்வாங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதுடன், வற்வரி தொடர்பாக பதிவு செய்வதனை மிகத் துரிதமாக மேற்கொள்வதற்கென நடவடிக்கை எடுத்து வருகின்றேன்.

(ஆ) (i) ii) என்பன தொடர்பான அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன. தேவையின் பிரகாரம் அவற்றை சமர்ப்பிக்க முடியும் என்பதனை தெரிவித்துக் கொள்கிறேன்.

(இ)

வருடம் 2017	அரச கொடைகள் -ரூ மி.	கருத்திட்டங்கள்- ரூ மி.
மதிப்பீடு	1575.410	1810.000
கிடைத்த நிதிகள்	1253.730	1422.850
மூலதனச் செலவுகள்	1555.097	1496.442

2017ஆம் ஆண்டில் அரச அளிப்புக்கள் தொடர்பாக ரூ. 1575.41 மில்லியன் தொகையும், கருத்திட்டங்களுக்கு ரூ. 1810.00 மில்லியன் தொகையும் மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும், அரச அளிப்புக்கள் தொடர்பாக ரூ.1253.730 தொகையும் மற்றும் கருத்திட்டங்கள் தொடர்பாக ரூ.1422.850 தொகையும் மட்டுமே திறைசேரியினால் விடுவிக்கப்பட்டுள்ளது என்பதனை தெரிவித்துக் கொள்கிறேன்.

2017ஆம் வருடத்தின் தொடக்கத்தில் செயற்திட்டத்தின் பிரகாரம் வெளித் தரப்பினர் சம்பந்தப்பட்ட மூலதன வேலைகளுக்கென ஒப்பந்தங்களை செய்து கொள்ளல் மற்றும் அந்த ஒப்பந்தங்களின் பிரகாரம் சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளை ஆரம்பித்து, வருட இறுதியில் அவற்றை பூர்த்தி செய்தல் என்பன, நாட்டில் நிலவி வந்த அனர்த்த நிலைமைகள் காரணமாக ஒத்தி வைக்க முடியாத மூலதன வேலைகளை (கால்வாய் கட்டமைப்புக்களின் பழுதுபார்ப்பு வேலைகள் முதலியவற்றை) மேற்கொள்ள வேண்டியிருந்தமையாலும், ஒரு சில மூலதன வேலைகள் தொடர்பாக உரிய திகதியில் பணம் செலுத்தாதுவிட்டால் அபராதத் தொகைகளை செலுத்த வேண்டி நேரிடுவதனாலும் இந்த வாகனங்களை விற்பனை செய்ததன் மூலம் கிடைத்த பணத் தொகைகளை அதற்கென செலவிட வேண்டியிருந்தது என்பதை தெரிவித்துக்

கொள்கிறேன் (அதன் பிரகாரம் 2017ஆம் ஆண்டில் திறைசேரி அளிப்புக்களாக ரூ. 1,253.730 தொகை மட்டும் கிடைத்ததுடன், அச்சந்தர்ப்பத்தில் ஆரம்பிக்கப்பட்டிருந்த வேலைகளுடன் அரச நிதியளிப்புக்களுக்கான மூலதனச் செலவு ரூ. 1,555.097 மில்லியனாக இருந்து வந்தது).

(ஈ) கருத்திட்டங்களுக்கென விடுவிக்கப்பட்டிருந்த மூன்று உத்தியோகத்தர்கள் தொடர்பாக பின்வரும் விடயங்களை முன்வைக்கின்றேன்.

I) 2012 யூன் மாதம் 01 ஆம் திகதி தொடக்கம் கருத்திட்டச் சேவைக்கென விடுவிக்கப்பட்டிருந்த முகாமைத்துவ உதவியாளரின் சம்பளங்கள் இலங்கை மகாவலி அதிகார சபையினாலும், கொடுப்பனவுகள் கருத்திட்டத்தின் மூலமும் செலுத்தப்படும் அடிப்படையில் இக்கருத்திட்டத்திற்கு அவர் விடுவிக்கப்பட்டிருந்தார். 2017 மே 31ஆம் திகதியன்று ஐந்து வருட காலத்திற்கு முழு நேர அடிப்படையில் விடுவிக்கக் கூடிய காலப் பிரிவு முடிவடைந்த காரணத்தினால் அந்தப் பணத் தொகைகளை ஈடு செய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என்பதனை தயவாய் தெரிவுத்துக் கொள்கின்றேன்.

II) கருத்திட்ட சேவை தொடர்பாக விடுவிக்கப்பட்டிருந்த கணனி நிகழ்ச்சித்திட்ட தயாரிப்பாளர் 2010 ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி தொடக்கம் கருத்திட்டத்தில் இணைக்கப்பட்டிருந்தார். அதன் பிரகாரம், தெரிவிக்கப்பட்டிருக்கும் விதத்தில் விடயங்கள் உரிய விதத்தில் நிவர்த்தி செய்து கொள்ளப்படாதிருப்பதன் காரணமாக அதிகார சபையின் மூலம் சம்பளங்களை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் இத்தகைய இடமாற்றங்களை மேற்கொள்ளாதிருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என்பதனை தயவாய் தெரிவித்துக் கொள்கின்றேன்.

III) கருத்திட்ட சேவைக்கென விடுவிக்கப்பட்டிருந்த சிரேஷ்ட கணக்காளர் வாரம் ஒன்றுக்கு இரண்டு நாட்கள் மகாவலி நிலையத்தில் கடமைகளை மேற்கொள்ளக்கூடிய விதத்தில் 2008.08.04 ஆந் திகதி அன்று கருத்திட்டத்தில் இணைக்கப்பட்டிருந்தார். அதன் பிரகாரம் சம்பளத்தை ஈடு செய்ய வேண்டிய தேவை இருந்து வரவில்லை. 2016.05.02 ஆந் திகதி தொடக்கம் முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இல. 01/2016 இன் பிரிவு 2.3.3 (b) இன் கீழ் விடுவிக்கப்பட்டிருக்கும் காலப் பிரிவு தொடர்பான சம்பளங்களைச் செலுத்துதல் தொடர்பாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் காரணமாக குறிப்பிடப்பட்டிருக்கும் 2013 ஆகஸ்ட் மாதம் தொடக்கம் 2016 மே மாதம் வரையிலான காலப் பிரிவு தொடர்பான சம்பளத் தொகைகளை ஈடு செய்து கொள்ள வேண்டிய தேவை இருந்து வரவில்லை என்பதனை தயவாய் தெரிவித்துக் கொள்கிறேன்.

(உ) இந்த முற்பணங்களில் பெரும்பாலானவை இப்பொழுது தீர்த்து வைக்கப்பட்டுள்ளன. மிகுதித் தொகைகளையும் முடியுமான விரைவில் தீர்த்து வைப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் வழங்கப்படும் முற்பணங்கள் 07 நாட்களுக்குள் செலுத்தித் தீர்க்கப்பட வேண்டுமென மிகவும் ஆணித்தரமாக உள்ளக சுற்றிக்கை ஒன்றின் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

3. நிதி மீளாய்வு

3.1 ஏற்றுக்கொள்கின்றேன்

3.2 ஏற்றுக்கொள்கின்றேன்

3.3 (அ) அரச உரித்துத் தொகைகள் கிடைப்பனவுகள் மற்றும் வீட்டு வாடகை வருமானம் என்பன 2016ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் பொழுது மீளாய்வுக்குட்படுத்தப்படும் ஆண்டில் குறைந்துள்ளன என்பதனை ஏற்றுக்கொள்கின்றேன். எனினும், அரச உரித்துத் தொகைகள் தொடர்பான வருமானம் தளம்பல் வருமானம் ஒன்றாக இருந்து வருவதுடன், அது இந்த வருடத்தின் போது மணல், கருங்கல், சுண்ணாம்புக்கல், மண் ஆகிய கனிப்பொருட்களை அகற்றுவது தொடர்பாக வழங்கப்பட்ட உரிமங்களின் எண்ணிக்கை மற்றும் அகற்றப்பட்ட கனிப்பொருள்களின் அளவு என்பவற்றில் தங்கியிருந்து வருகின்றது. அதன் பிரகாரம் ஆண்டு தோறும் அரச உரித்துத் தொகைகள் தொடர்பாக குறைவு / அதிகரிப்பு ஏற்பட முடியும்.

(ஆ) ஏற்றுக்கொள்கின்றேன்.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 செயலாற்றுகை

4.1.1 ஏற்றுக்கொள்கின்றேன்

2014-2018 காலப் பிரிவு தொடர்பான தொகுதித் திட்டத்தை தயாரித்து, பணிப்பாளர் சபையின் ஒப்புதலைப் பெற்று, சுற்றறிக்கைகளின் பிரகாரம் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு பிரதிகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. 2019-2023 காலப் பிரிவு தொடர்பான தொகுதித் திட்டம், 2030 நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்தி குறிக்கோள்களை சாதித்துக் கொள்ளக்கூடிய விதத்தில் அரச தொழில்முயற்சிகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டிருக்கும் வழிகாட்டுதல்களின் பிரகாரம் தயாரிக்கப்பட்டுள்ளது.

2017ஆம் ஆண்டின் செயற்திட்டத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட செயலாற்றுகை அறிக்கை (முன்னேற்ற அறிக்கை) 2018.11.02 ஆந் திகதி கணக்காய்வாளர் நாயகத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

4.1.2 செயற்பாடு மற்றும் மீளாய்வு

(அ) ஏற்றுக்கொள்கின்றேன்.

(ஆ) 2017ஆம் ஆண்டின் போது காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் கீழ் 16,855 அளிப்பு பத்திரங்களை வழங்குவதற்கு இலகு நிர்ணயிக்கப்பட்டிருந்த போதிலும், வருட இறுதியில் சாதிக்கப்பட்ட முன்னேற்றம் கீழே தரப்பட்டுள்ளது.

வலயம்	இலக்கு	முன்னேற்றம்	சதவீதம் %
B	2110	1758	83
C	5800	4984	85
D	205	149	72
H	550	369	67
L	1000	593	59
விக்டோரியா	410	335	81
ஹுருலுவெவ	400	334	83
மொரகஹகந்த	750	650	86
வளவே	5500	4943	89
றம்பகன்ஓயா	130	107	82
மொத்தம்	**16855**	**14222**	**84**

காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் கீழ் அளிப்பு பத்திரம் ஒன்றை பெற்றுக்கொள்வதற்கென, காணியை வைத்திருப்பவர்கள் சம்பந்தப்பட்ட காணியை நன்கு அபிவிருத்தி செய்திருத்தல் வேண்டும். அவ்வாறு காணி அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது என கள உத்தியோகத்தர்கள் உறுதிப்படுத்துவதனை அடுத்தே காணி அளவீடு செய்யப்பட்டு, வரைபடம் தயாரிக்கப்படுகின்றது.

குறிப்பிட்ட ஒரு காணி தொடர்பாக அளிப்பு பத்திரம் ஒன்றை தயாரிப்பதற்கென மேலே குறிப்பிடப்பட்ட இரு தேவைகளும் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும். காணி அளவை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பெரும்பாலான காணிகளின் வரைபடங்கள் கிடைத்திருந்த போதிலும், எதிர்பார்த்த இலக்கினை நிறைவேற்றிக் கொள்ளக்கூடிய அளவுக்கு போதியளவிலான வரைபடங்கள் கிடைக்காத காரணத்தினால் 2017 ஆம் வருடத்தின் போது 14,222 அளிப்புப் பத்திரங்களை மட்டுமே தயாரிக்க முடிந்தது. எவ்வாறிருப்பினும், ஒட்டுமொத்தமாக நோக்கும் பொழுது அதில் 84% மட்டத்திற்கு முன்னேற்றத்தை எடுத்துவரக் கூடிய ஆற்றல் கிடைத்திருந்தது.

அரச காணிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் 340 நீண்ட கால குத்தகைகளை வழங்குவதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த போதிலும், அவற்றில் 266 குத்தகைகள் மட்டுமே வழங்கப்பட்டிருந்தன.

நீண்ட கால குத்தகை ஒன்றை பெற்றுக்கொள்ளும் பொருட்டு விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரின் ஒப்புதலை பெற்றுக் கொண்ட பின்னர் காணியை அளவீடு செய்து,

வரைபடம் ஒன்றை பெற்றுக்கொள்ள வேண்டும். அதன் பின்னர் விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் மதிப்பீட்டை பெற்றுக்கொள்ள வேண்டும்.

குத்தகை காணி ஒன்றை அளவை செய்து, நில அளவை திணைக்களத்திலிருந்து ஒரு வரைபடத்தை பெற்றுக்கொள்வதற்கென ஆகக்குறைந்தது இரண்டு மாத காலம் எடுக்கின்றது. அவ்விதம் வரைபடம் கிடைத்த பின்னர் சம்பந்தப்பட்ட காணியை விலை மதிப்பீடு செய்வதற்கென விலை மதிப்பீட்டு திணைக்களத்திடம் ஓர் வேண்டுகோள் முன்வைக்கப்படுகின்றது. விலை மதிப்பீட்டுத் திணைக்களத்திடமிருந்து மதிப்பீட்டு அறிக்கையை பெற்றுக்கொள்வதற்கு பெரும்பாலும் 06 மாத காலம் எடுக்கின்றது.

அதன் பிரகாரம், குத்தகை ஒப்பந்தம் ஒன்றை தயாரிக்கும் செயன்முறையின் போது, மகாவலி அதிகார சபைக்கு வெளியில் உள்ள நிறுவனங்களின் செயற்பாடுகளுக்கென ஆகக் குறைந்தது 08 மாத காலம் எடுக்கின்றது. அதன் காரணமாக குத்தகை ஒப்பந்தங்களை தயாரித்துக் கொள்ளும் பொருட்டு சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு இடையில் தொடர்ச்சியாக தொடர்புகளை பாராமரித்து, கடுமையான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டிய ஒரு தேவை காணப்படுகின்றது. இதன் காரணமாக 2017ஆம் வருடத்தில் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை நிறைவேற்றிக் கொள்வது சிரமமானதாக இருந்து வந்தது. எவ்வாறிருப்பினும், குத்தகை ஒப்பந்தங்கள் மற்றும் இலவச அளிப்புப் பத்திரங்கள் என்பவற்றை தயாரிக்கும் செயற்பாட்டில் ஏற்பட்டிருக்கும் ஒட்டுமொத்த முன்னேற்றம் 78% மட்டத்தில் இருந்து வந்துள்ளது.

அரச காணிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் குறிப்பிட்ட ஒரு காணியை குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கு ஒப்புதல் கிடைத்த பின்னர் அது தொடர்பான தோராயமான ஒரு மதிப்பீட்டின் அடிப்படையில் வருடாந்த அனுமதிப் பத்திரம் வழங்கப்படுகின்றது. பின்னர் விலை மதிப்பீட்டுத் திணைக்களத்திடமிருந்து பெறுமதியை பெற்றுக்கொண்ட பின்னர், குத்தகைத் தொகை கணிப்பீடு மேற்கொள்ளப்படுகின்றது.

அப்பொழுது பெரும்பாலான சந்தர்ப்பங்களில் விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் வழங்கப்படும் மதிப்பீட்டு அளவிலும் பார்க்க, மிகக் குறைந்த ஒரு பெறுமதியாக தோராயமான மதிப்பீடு கணிக்கப்பட்டிருப்பதன் காரணமாக, விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தின் பெறுமதி மதிப்பீடு கிடைத்த பின்னர் அதன் பிரகாரம் குத்தகைத் தொகைகளை செலுத்துமாறு குத்தகைதாரர்களிடம் தெரிவிக்கப்படுகின்றது. அதன் பின்னர் செலுத்த வேண்டிய குத்தகைத் தொகை உயர் மட்டத்தில் இருந்து வருகின்றது எனக் கூறி, பெரும்பாலான சந்தர்ப்பங்களில் குத்தகைத் தொகைகளை அவர்கள் செலுத்தத் தவறும் நிலைமை ஏற்படுகின்றது.

அதற்கு ஒரு தீர்வாக 2016ஆம் ஆண்டு தொடக்கம் தோராயமான மதிப்பீட்டின் அடிப்படையில் வருடாந்த அனுமதிப் பத்திரங்களை வழங்கும் செயற்பாட்டை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தின் மதிப்பீட்டின் அடிப்படையில் நீண்ட கால குத்தகைகளை வழங்கும் செயற்பாடு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இது தவிர, வரி வருமானத்தை சேகரிப்பதற்கென குத்தகை வாரங்களை நடத்துதல் போன்ற பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களை வலய மட்டங்களில் நடத்தி, குத்தகை

வருமானங்களை சேகரித்துக் கொள்வதற்கு உச்ச மட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், 2017ஆம் ஆண்டில் இதில் பின்வரும் விதத்தில் முன்னேற்றம் சாதித்துக் கொள்ளப்பட்டிருந்தது.

விடயம்	இலக்கு (ரூ.)	முன்னேற்றம் (ரூ.)	சதவீதம் (ரூ.)
நடப்பு வருடத்தின் குத்தகை வருமானம்	136,797,010.00	119,049,600.00	87
குத்தகை வருமானப் பாக்கி	**79,998,110.00**	**70,034,690.00**	**88**

அதன் பிரகாரம், 2017ஆம் வருடம் தொடர்பான குத்தகை வருமானத்தில் 87% ஐயும், பாக்கி குத்தகை வருமானத்தில் 88% ஐயும் சேகரித்துக் கொள்ளக் கூடிய வாய்ப்பு கிடைத்திருந்தது.

(இ) (i).

வரிசை எண்	வலயம்	இலக்கு	வழங்கப்பட்ட குஞ்சுகளின் எண்ணிக்கை	நிதிசார் இலக்கு ரூ. "000"	நிதிசார் முன்னேற்றம் ரூ. "000"	பௌதிக முன்னேற்றம் குறைவடைதற்கான காரணங்கள்
1.	வலயம் B	12000	12000	1500	1500	-
2.	வலயம C	4786	4539	225	180.08	**பண்ணையில் உற்பத்தி செய்யப்பட்ட குஞ்சுகள் வழங்கப்பட்டுள்ளன**
3.	வலயம D	2800	2628	295	281.04	-
4.	வலயம G	3000	3000	105	100	-
5.	வலயம H	3000	771	240	205.05	**முட்டைகளை சூடேற்றும் இயந்திரம் செயற்படாத நிலை ஏற்பட்டமையும், தாய் பரம்பரை தொடர்பாக புதிய விலங்குகளை அறிமுகம் செய்தமையும் காரணமாக குஞ்சுகளின் உற்பத்தி குறைவடைந்துள்ளது.**
6.		4000	1600	-	-	

7.	வளவே வலயம்	2000	2120	550	318	-
8.	விக்டோரியா	6430	2354	150	95.14	**வெளியிருந்து கொள்வனவு மேற்கொள்ளப்படுவதனால் முன்னுரிமைப் பட்டியலின் பிரகாரம் குஞ்சுகளை பெற வேண்டியுள்ளது..**
	மொத்தம்	**37716**	**29012**	**3065**	**2679**	

(ii). தெரிவு செய்யப்பட்ட காப்புறுதி நிறுவனங்களை ஒருங்கிணைப்பதில் ஏற்பட்ட நடைமுறைச் சிக்கல்கள் காரணமாக விலங்குகளை காப்புறுதி செய்யும் விடயத்தில் விவசாயிகளின் உற்சாகம் குறைவடைந்திருந்தமை, மகாவலி பங்களிப்புடன் கூடிய விதத்தில் வழங்கப்பட்ட விலங்குகள் தொடர்பான காப்புறுதியை சம்பந்தப்பட்ட விவசாயிகள் மேற்கொண்டமை காரணமாக செலவுகள் ஏற்படாமை போன்ற காரணிகள் செல்வாக்குச் செலுத்தியிருப்பதாக பணிப்பாளர் (விவசாயம்) உறுதிப்படுத்தி உள்ளார்.

(iii). அலங்கார மீன் வகைகளின் இனப்பெருக்க மற்றும் சேகரிப்பு நிலையத்தின் கட்டுமான வேலைகளுக்கென நிதி ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், அதற்கென பணத்தொகைகளை செலுத்துவதற்கு போதுமான அளவில் நிதிகள் சம்பந்தப்பட்ட வருடத்தின் போது கிடைக்கவில்லை. அத்துடன், 2018 ஆம் ஆண்டில் அந்த நிதிகளை திருப்பிச் செலுத்த வேண்டி நேரிட்டமை, தெரிவு செய்யப்பட்ட பண்ணைகளின் அபிவிருத்தித் திட்டம் தாமதமடைந்தமை, ஒரு சில வலயங்களில் ஒரு பண்ணை மட்டும் செயற்பட்டமை போன்ற காரணிகள் செல்வாக்குச் செலுத்தியிருப்பதுடன், தெரிவு செய்யப்பட்ட பண்ணைகளை குஞ்சு பொறிப்பதற்கென மேலும் அபிவிருத்தி செய்ய வேண்டிய தேவையிருந்து வருகின்றது. அது தொடர்பான முறையான ஒரு திட்டத்தை தயாரிப்பதற்கு வழிகாட்டுவதாக பணிப்பாளர் (விவசாயம்) தெரிவித்துள்ளார்.

(ஈ) வணிக அபிவிருத்திப் பிரிவின் கருத்திட்டங்களுக்கென காணிகளை பெற்றுக்கொடுத்தல்

1,2,3,4 மற்றும் 5

ஏற்றுக்கொள்கிறேன்.

முதலீட்டு நடவடிக்கைகளுக்கென நீண்ட கால குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்ட காணிகள் தொடர்பாக பரீட்சித்துப் பார்த்து, அது தொடர்பான பரிந்துரைகளை முன்வைப்பதற்கென 2016ஆம் ஆண்டில் என்னால் பிரதிப் பணிப்பாளர் நாயகம் (நிர்வாகம் மற்றும் நிதி) அவர்களின் தலைமையில் உள்ளக கமிட்டி ஒன்று நியமனம் செய்யப்பட்டது. அக்கமிட்டியின் மூலம் அபிவிருத்தி செய்யப்படாத காணிகள், பாக்கி குத்தகைத் தொகைகளை கொண்டிருக்கும் காணிகள் முதலிய விடயங்கள் தொடர்பாக

பரிந்துரைகளை பெற்று, அப்பரிந்துரைகளின் பிரகாரம் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கும், அரச காணிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கமிட்டியின் மூலம் அனைத்து முதலீட்டு கருத்திட்டங்கள் தொடர்பாகவும் மதிப்பீட்டாய்வொன்றை மேற்கொண்டு, அந்த மதிப்பீட்டாய்வு அறிக்கையின் பிரகாரம் அபிவிருத்தி செய்யப்படாத காணிகள் மற்றும் குத்தகைத் தொகைகள் செலுத்தப்படாதிருக்கும் காணிகளை என்பவற்றை இரத்து செய்தல் போன்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. அது தவிர 2018ஆம் ஆண்டின் போது அனைத்து வலயங்களிலும் மேற்கொள்ளப்பட்ட களப் பரிசோதனைகளின் பிரகாரம் மீண்டும் இரத்து செய்வதற்கென முதலீட்டு கருத்திட்டங்களின் பெயர் பட்டியல் ஒன்று தயாரிக்கப்பட்டது. அதே போல, அபிவிருத்தி செய்யப்படாத மற்றும் பாக்கி குத்தகைத் தொகைகளுடன் கூடிய அனைத்து முதலீட்டாளர்களையும் மகாவலி நிலையத்திற்கு வரவழைத்து அவர்களுக்கு அறிவூட்டும் ஒரு நிகழ்ச்சித்திட்டமும் நடத்தப்பட்டது.

அது தவிர, தற்பொழுது வலய மட்டத்தில் அபிவிருத்தி செய்யப்படாத காணிகள், ஓரளவு அபிவிருத்தி செய்யப்பட்டிருக்கும் மற்றும் பாக்கி குத்தகைத் தொகைகளைக் கொண்டிருக்கும் காணிகள் என்பவற்றின் முதலீட்டாளர்களை வரவழைத்து, வலய மட்டத்தில் இப்பொழுது எனது தலைமையின் கீழ் சந்திப்புக்கள் நடத்தப்பட்டு வருகின்றன. அச்சந்திப்புக்களில் சம்பந்தப்பட்ட பாக்கி குத்தகைத் தொகைகளை அறவிட்டுக் கொள்வதற்கும், அபிவிருத்தி செய்யப்படாத காணிகளை அபிவிருத்தி செய்வதற்கும், அவர்களுக்கு அந்தக் காணிகள் இனிமேலும் தேவைப்படாவிட்டால் மீண்டும் பாக்கி குத்தகைத் தொகைகளுடன் இலங்கை மகாவலி அதிகார சபைக்கு அவற்றை ஒப்படைப்பதற்கும் நடவடிக்கை எடுக்குமாறு அவர்களுக்கு அறிவூட்டல் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்பதனை தெரிவித்துக் கொள்கின்றேன்.

(உ) வணிக அபிவிருத்திப் பிரிவின் மூலம் அமுல் செய்யப்பட்டு வரும் கடனளிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள்

"மகாவலி சவிய" கடன் நிகழ்ச்சித்திட்டம்

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரகாரம் கடன்களை வழங்குவதற்கென பயன்படுத்தப்படாத நிதிகள் தொடர்பாக சாதாரண சேமிப்புக் கணக்குகளுக்கு வழங்கப்படும் வட்டியை இலங்கை மகாவலி அதிகார சபைக்கு வழங்குவதாக பிரதேச அபிவிருத்தி வங்கி எழுத்து மூலம் தெரியப்படுத்தி உள்ளது.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரகாரம், விவசாயிகள் வகுப்பைச் சேராத மகாவலி குடியேற்றவாசிகள் மற்றும் பெண் தொழில்முயற்சியாளர்கள் ஆகியோருக்கான நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் இலங்கை மகாவலி அதிகார சபையின் அலகு முகாமையாளர், பிரிவு முகாமையாளர் மற்றும் வதிவிட கருத்திட்ட முகாமையாளர் ஆகியோரின் பரிந்துரைகளின் அடிப்படையிலே கடன்கள் வழங்கப்பட்டு வருகின்றன. அதன் பிரகாரம், அறிக்கையில் குறிப்பிட்டப்பட்டிருக்கும் இலங்கை மகாவலி அதிகார சபையின் ஊழியர்கள் மகாவலி வலயங்களின் குடியேற்றவாசிகளாக இருந்து வரும்

காரணத்தினால் இந்தக் கடன் தொகைகள் வழங்கப்பட்டிருப்பதாக பணிப்பாளர் (வணிக அபிவிருத்தி) தெரிவித்துள்ளார்.

“மகாவலி அருண” கடன் நிகழ்ச்சித்திட்டம்

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரகாரம் கடன்களை வழங்குவதற்கென பயன்படுத்தப்படாத நிதிகள் தொடர்பாக சாதாரண சேமிப்புக் கணக்குகளுக்கு வழங்கப்படும் வட்டிக்கு இணையான வட்டியை இலங்கை மகாவலி அதிகார சபைக்கு வழங்குவதாக பிரதேச அபிவிருத்தி வங்கி எழுத்து மூலம் தெரிவித்துள்ளது.

ஒவ்வொரு வலயத்தையும் சேர்ந்த தொழில் முயற்சியாளர்களான குடியேற்றவாசிகளுக்கென கடன்கள் வழங்கப்பட்ட கருத்திட்டங்கள் தொடர்பான முன்னேற்றத்தை கண்டறியும் செயற்பாடு, சம்பந்தப்பட்ட வலயங்களின் வணிக அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. எவ்வாறிருப்பினும், கடந்த காலப் பிரிவின் போது ஒரு சில வலயங்களில் வணிக அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் தட்டுப்பாடு நிலவி வந்த காரணத்தினால் கண்காணிப்பு, மீளாய்வுப் பணிகள் உரிய விதத்தில் மேற்கொள்ளப்படவில்லை என்பதனை தெரிவித்துக் கொள்கின்றேன்.

“மகாவலி திரிய” கடன் நிகழ்ச்சித்திட்டம்

இந்தக் கடன் நிகழ்ச்சித்தட்டத்திற்கென இலக்காகக் கொள்ளப்பட்டிருக்கும் பிரிவினர் அனைத்து மகாவலி வலயங்களையும் சேர்ந்த விவசாய கழகங்கள் ஆகும். அதன் பிரகாரம், ஒவ்வொரு வலயத்திலும் செயற்பட்டு வரும் விவசாயிகள் கழகங்கள் பூர்த்தி செய்ய வேண்டிய தகைமைகளின் பிரகாரம் தொகுதிக் கடன்கள் வழங்கப்பட்டு வருகின்றன. அதன் பிரகாரம் முறையான மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அளவுகோல்களின் கீழ் தகுதி வாய்ந்த விவசாயிகள் கழகங்கள் தெரிவு செய்யப்படுகின்றன.

இந்தக் கடன் நிகழ்ச்சித்திட்டத்திற்கென வங்கியினால் விவசாயிகள் கழகத்திற்கு ஒரு தொகுதிக் கடன் வழங்கப்படுகின்றது. விவசாயிகள் கழகம் உப கடன் கருத்திட்டங்களுக்கென இக்கடன்களை வழங்குகின்றது. இங்கு வழங்கப்படக் கூடிய உச்ச மட்டக் கடன் தொகை ரூ. 200,000.00 ஆகும். விவசாயிகள் கழகங்களினால் கடன்களை வழங்கும் விடயம் சரியான விதத்தில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பது தெரிய வந்துள்ளது.

“வியாபாரிக அத்வெல” கடன் நிகழ்ச்சித்திட்டம்

மொறகஹகந்த களுகங்கை புதிய அபிவிருத்திக் கருத்திட்டம் காரணமாக பாதிப்புக்களை எதிர்கொண்டிருக்கும் விவசாயிகளை மீள் குடியேற்றும் செயற்பாடுகளை திட்டமிட்ட விதத்தில் உரிய முறையில் மேற்கொள்ள முடியாதிருந்தது. அதன் காரணமாக இக்குடியேற்றவாசிகளுக்கு கடன்களை வழங்குவதில் தாமதங்கள் ஏற்பட்டிருந்தன என்பதனை தெரிவித்துக் கொள்கிறேன்.

4.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்

(அ) இது தொடர்பாக விடயங்களைத் தேடிப் பார்த்த போது, இந்த சிறு அளவிலான நீர்மின் உற்பத்தி நிலையம் அமைந்திருக்கும் காணிகள் உள்ள பிரதேசம் தொடர்பாக பிரதேச செயலாளருக்கும் உரித்து இருந்து வரும் விடயம் தெரிய வந்தது. அதன் காரணமாக, சம்பந்தப்பட்ட முதலீட்டாளர்கள் பிரதேச செயலாளருக்கும் குத்தகைத் தொகைகளை செலுத்தி வருவதாக அறிக்கையிடப்பட்டுள்ளது. எவ்வாறிருப்பினும், எமது நிறுவனம் மகாவலி நீரை உபயோகிப்பது தொடர்பாக அந்த முதலீட்டாளர்களிடமிருந்து தொடர்ந்து ஒரு கட்டணத்தை அறவிட வேண்டியிருந்து வருவதனால் அது தொடர்பாக தேடிப் பார்த்து, தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பிரதிப் பணிப்பாளர் நாயகம் (தொழில்நுட்ப சேவைகள்) அவர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. தற்பொழுது சம்பந்தப்பட்ட தரப்பினர் கூடி, இது தொடர்பாக பூர்வாங்க நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றார்கள்.

(ஆ) இக் காணிகளை மகாவலி அதிகார சபையிடம் ஒப்படைக்குமாறு இலங்கை மகாவலி அதிகார சபை பணிப்பாளர் நாயகத்தின் 2007/1/22, 2007/03/05, 2007/03/13 திகதியிட்ட கடிதங்கள் மூலம் திம்பிரிகஸ்யாய பிரதேச செயலாளர், காணி ஆணையாளர் - காணி ஆணையாளர் அலுவலகம் ஆகியோருடம் வேண்டுகோள்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. அந்த நிறுவனங்கள் இதுவரையில் அதற்கு பதிலளித்திருக்கவில்லை. அதே வேளையில், வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளரின் EA/AD/MU/07/12 இலக்கம் கொண்ட 2017-11-20 திகதியிட்ட கடிதத்தின் பிரகாரம், சம்பந்தப்பட்ட காணியை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் உபயோகத்திற்கென பெற்றுக்கொடுப்பதற்கு அமைச்சரவை உப கமிட்டியின் மூலம் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. அதனால் இக்காணியை இலங்கை மகாவலி அதிகார சபைக்கு பெற்றுக்கொள்ளும் நடவடிக்கைகளை தற்காலிகமாக நிறுத்த வேண்டிய நிலை ஏற்பட்டது.

(இ) இலங்கை மகாவலி அதிகார சபையினால் நிர்வகிக்கப்பட்டு வரும் கம்பனிகளில் மேற்கொள்ளப்பட்டிருந்த முதலீடுகளை கவனத்தில் எடுக்கும் பொழுது, அவ்விதம் நிர்வகிகப்பட்டு வரும் கம்பனிகளில் வரையறுக்கப்பட்ட மகாவலி ஆலோசனை சேவைகள் பணியகம் (தனியார்) கம்பனியைத் தவிர நிர்வகிக்கப்பட்டு வரும் ஏனைய அனைத்து கம்பனிகளும் கடந்த காலப் பிரிவின் போது நட்ட நிலையை அறிக்கையிட்டுள்ளன. அதன் காரணமாக அந்தக் கம்பனிகளிலிருந்து இலங்கை மகாவலி அதிகார சபைக்கு பங்கிலாபங்களாக எத்தகைய அனுகூலங்களும் கிடைத்திருக்கவில்லை. வரையறுக்கப்பட்ட மகாவலி ஆலோசனை சேவைகள் பணியகம் (தனியார்) கம்பனியிலிருந்து 2015/2016 ஆண்டு தொடர்பாக பங்கிலாபங்களாக முறையே ரூ.120,000.00 தொகையும், 2016/2017 ஆண்டு தொடர்பாக பங்கிலாபங்களாக ரூ. 585,000.00 தொகையும் இலங்கை மகாவலி அதிகார சபைக்கு கிடைத்திருந்தன.

4.3 இயக்குதல் செயற்பாடுகள்

(அ) இது தொடர்பாக ஐயவினாவின் மூலம் குறிப்பிடப்படிருக்கும் விடயங்களை மேலும் தேடிப்பார்த்து, மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பதற்கு குறித்துக் கொண்டுள்ளேன்.

(ஆ) இந்த உத்தியோகபூர்வ வாசஸ்தலங்கள் 30 வருடங்களுக்கு முன்னர் நிர்மாணிக்கப்பட்ட வாசஸ்தலங்களாக இருந்து வருவதுடன், கடந்த காலத்தில் அப்பிரதேசத்தில் நிலவி வந்த போர் சூழலின் கீழ் இந்த வாசஸ்தலங்களில் வசித்து வந்த ஆட்கள் சம்பந்தப்பட்ட காலப் பிரிவு தொடர்பாக மின்சார கட்டணப் பட்டியல்களை செலுத்தாதிருந்தமை காரணமாக இந்தப் பாக்கித் தொகைகள் தோன்றியுள்ளன. ஏற்கனவே அந்த உத்தியோகபூர்வ வாசஸ்தலங்களுக்கான மின்சார இணைப்பு துண்டிக்கப்பட்டுள்ளது. ஆனால், பிரதேசத்தில் நிலவிவந்த போர் நிலைமை (எல்லைக் கிராமங்களாக இருந்து வந்த) காரணத்தினால் அந்த மின்சார கட்டணப் பட்டியல் தொடர்பாக பொறுப்புக்கூற வேண்டிய தரப்புக்களை திட்டவட்டமாக இனங்கண்டு கொள்ள முடியாதுள்ளது. எவ்வாறிருப்பினும், இந்த நிலைமை தொடர்பாக மின்சார சபைக்கு தெரியப்படுத்தி, மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுக்குமாறு சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

(இ) சம்பந்தப்பட்ட காணிகள் மகாவலி கால்நடை வளங்கள் தொழில் முயற்சிகள் கம்பனிக்கு 1989 ஆம் ஆண்டில் நீண்ட கால குத்தகையின் கீழ் வழங்கப்பட்டிருக்கும் காணிகள் ஆகும். 30 வருட காலப் பிரிவு இப்பொழுது முடிவடைந்துள்ளது. எவ்வாறிருப்பினும், இந்தக் கம்பனி தற்பொழுது தேசிய கால்நடை வளங்கள் அபிவிருத்தி சபையின் கீழ் செயற்பட்டு வரும் ஒரு கம்பனியாக இருந்து வரும் காரணத்தினால் இந்தச் செயற்பாட்டில் நிலவி வரும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கென இலங்கை மகாவலி அதிகார சபை, தேசிய கால்நடை வளங்கள் சபை மற்றும் மகாவலி கால்நடை வளங்கள் தொழில் முயற்சிகள் கம்பனி ஆகிய நிறுவனங்களின் தலைமை அதிகாரிகளுடன் என்னுடைய தலைமையின் கீழ் ஒரு கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அக்கலந்துரையாடலின் போது இது தொடர்பாக விரிவாக கலந்துரையாடி, எதிர்காலத்தில் இப்பிரச்சினையை நிறுவன மட்டத்தில் தீர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை தெரிவித்துக் கொள்கின்றேன்.

(ஈ) I. இந்தக் காணிகள் ஒவ்வொரு நபருக்கும் 50 ஏக்கர்களுக்கு குறைவான விதத்தில் பகிர்ந்தளிக்கப்பட்டிருப்பதுடன், ஒரு நபருக்கு 50 ஏக்கருக்கு மேற்பட்ட காணியை வழங்குவதாக இருந்தால் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் மூலம் ஒரு சுற்றாடல் மதிப்பீட்டு அறிக்கை பெற்றுக்கொள்ளப்படுகின்றது. இக்காணிகளில் தென்னை மற்றும் வெள்ளை சந்தனம் என்பன பயிர் செய்யப்பட்டிருப்பதுடன். அப்பயிர்கள் விவசாய சாகுபடிகளாக இருந்து வருகின்றன. மேலும், அவை சுற்றாடலுக்கு உசிதமான பயிர்களாகவும் உள்ளன. மகாவலி ஆள்புல பிரதேசத்திற்கென வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டிருக்கும் காணி முதலீட்டுக் கருத்திட்டங்கள் தொடர்பாக தலைமை அலுவலகத்தின் காணி பயன்பாட்டு, திட்டமிடல் பிரிவின் ஒப்புதலின் கீழ் காணிகள் வழங்கப்பட்டு வருகின்றன. அடிப்படை திட்டத்திற்கு வெளியில் எத்தகைய காணிகளும் வழங்கப்படுவதில்லை. இக்காணிகள் வன பாதுகாப்பு வலயங்களாக பிரகடனப்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதனை தெரிவித்துக் கொள்கிறேன்.

II. இந்தக் காணித் துண்டுகளை அபிவிருத்தி செய்யுமாறு BL/TX/SLO/11/16/AS/05,06.07 மற்றும் 2008.11.06 ஆம் திகதியிட்ட கடிதங்களின் மூலம் சம்பந்தப்பட்ட குத்தகைதாரர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

III. சம்பந்தப்பட்ட காணிகள் தொடர்பாக தேவையற்ற நீரை பெற்றுக்கொள்வதனை தடுக்குமாறு அனைத்து பிரிவு முகாமையாளர்களுக்கும் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. அவ்விதம் நீர் பெற்றுக்கொள்ளப்பட்டால் MASL/DDG/(DEV)15 சுற்றறிக்கையின் பிரகாரம் கட்டணங்களை அறவிடுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

IV. சம்பந்தப்பட்ட குத்தகையை அடகு வைத்த தினத்திலிருந்து 21 நாட்களுக்குள் வதிவிட கருத்திட்ட முகாமையாளருக்கு தெரிவிக்குமாறு BE 2/2/அ/23,24,25,26 மற்றும் B/E/2/2/5in/70,71,72,73,74,75,78,79 இலக்கம் கொண்ட 2016.02.26 ஆந் திகதியிட்ட கடிதங்கள் மூலம் குத்தகைதாரர்களுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. அதனை அடுத்து, மீண்டும் சம்பந்தப்பட்ட குத்தகைதாரர்களுக்கு அந்த ஈட்டு உறுதிகளின் பதிவு செய்யப்பட்ட பிரதிகளை பெற்றுத் தருமாறு BL/TX/SLO/11/16/AS/04”05”06”07 மற்றும் BL/TX/SLO/11/16/SI/03,04,05,06,07, 08,09,10 இலக்கம் கொண்ட 2018.11.06 ஆந் திகதியிட்ட 12 கடிதங்களின் மூலம் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

(உ) I. தொடக்கம் VI வரையில்

இலங்கை மகாவலி அதிகார சபை மற்றும் ஒருங்கிணைந்த தேசிய சமூக நீர் விநியோக திணைக்களம் என்பவற்றினால் மகாவலி B மற்றும் L வலயங்களில் பொருத்தப்பட வேண்டியிருந்த 30 நீர் சுத்திகரிப்பு இயந்திரங்களின் வேலைகளை பூர்த்தி செய்து, அவை உரிய விதத்தில் செயற்படும் நிலைமையில் இருந்து வருகின்றனவா என்பதனை பரீட்சித்துப் பார்த்து, 2019.02.15 ஆந் திகதி அன்று தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் இலங்கை மகாவலி அதிகார சபையிடம் DNCWS/PD/09/02/-iii மற்றும் 2019.02.15ஆம் திகதியிட்ட கடிதத்தின் மூலம் இரு தரப்புக்களினாலும் உரிய விதத்தில் ஒப்படைத்தல் / பொறுப்பேற்றல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(ஊ) முதன்மை வேலைகள் நிர்வாகம், இயக்குதல் மற்றும் பராமரிப்பு பிரிவுக்குச் சொந்தமான வெளித் தரப்புக்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் கட்டடங்கள் மற்றும் வீடுகள், அவை வழங்கப்பட்டிருக்கும் நபர், அந்த இடங்களில் தற்பொழுது வசித்து வரும் நபர், அது தொடர்பாக செலுத்தப்பட்டு வரும் வாடகைத் தொகை போன்ற தகவல்களை தேடிக் கண்டறியும் நோக்கத்துடன், இது தொடர்பாக கண்டறிந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கென அப்பிரிவின் பிரதிப் பணிப்பாளர் (சிவில்) அவர்களையும் உள்ளடக்கிய உள்ளக கமிட்டி ஒன்று நியமனம் செய்யப்பட்டிருந்தது. அந்தக் கமிட்டியின் அறிக்கை இப்பொழுது கிடைத்திருப்பதுடன், அதில் குறிப்பிடப்பட்டிருக்கும் பரிந்துரைகளின் பிரகாரம்

நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஏனைய வலயங்களிலும் இதற்கு இணையான நடவடிக்கைகளை எதிர்காலத்தில் மேற்கொள்ளும் பொருட்டு சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

(எ) மகாவலி பாதுகாப்பு படைக்குச் சொந்தமான கொத்மலையில் அமைந்திருக்கும் தற்பொழுது நீர்ப்பாசனத் திணைக்களத்தின் சர்வதேச பயிற்சி நிறுவனம் செயற்பட்டு வரும் கட்டடங்களை பணத் தொகைகளை செலுத்தாமல் நீர்ப்பாசனத் திணைக்களத்திடம் ஒப்படைப்பதற்கென 1989.08.31 திகதியிட்ட திறைசேரி சுற்றறிக்கை இல. 269 ஐ பயன்படுத்திக் கொள்ள முடியும். தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் இல. BD/EE198/9/1 மற்றும் 2018.02.05 திகதியிட்ட கடிதத்தின் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் அச்சுற்றறிக்கையின் அடிப்படையில் தற்போதைய ஒப்படைப்புக்கள் தொடர்பாக எதிர்காலத்தில் மேற்கொண்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

(ஏ) சம்பந்தப்பட்ட கடமைப் பட்டியல்களை தயாரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

4.4 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

(அ) மணல் அகழும் இடங்கள் தொடர்பான பரிசோதனை

(i) இலங்கை மகாவலி அதிகார சபை புவிச்சரிதவியல் அளவை சுரங்கப் பணியகம், சுற்றாடல் அதிகார சபை மற்றும் வன விலங்குகள் பாதுகாப்பு திணைக்களம் ஆகிய நிறுவனங்கள் 2015 மற்றும் 2016 ஆகிய ஆண்டுகளில் இணைந்து மேற்கொண்ட மணல் அகழும் இடங்கள் தொடர்பான பரிசோதனையின் போது, வலயம் 'C' வதிவிடக் கருத்திட்ட முகாமையாளரினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த பட்டியலில் குறிப்பிடப்பட்டிருக்கும் ஆட்களுக்கு மணல் அகழும் இடங்களை பெற்றுக் கொடுப்பதற்கென ஒருங்கிணைந்த பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட்ட சந்தர்ப்பத்தில் இலங்கை மகாவலி அதிகார சபை, புவிச்சரிதவியல் அளவை சுரங்கப் பணியகம், மத்திய சுற்றாடல் அதிகார சபை என்பவற்றினால் பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. இந்தப் பரிசோதனை சம்பந்தப்பட்ட தற்காலிக காரணங்களின் அடிப்படையில் வன விலங்குகள் பாதுகாப்பு திணைக்களத்தை பிரதிநிதித்துவம் செய்த உத்தியோகத்தரின் பரிந்துரை கிடைக்காத காரணத்தினால் மட்டும் பரிந்துரை செய்யப்படாத மணல் அகழ்வு இடங்களாகும். அந்த இடங்களை பெற்றுக்கொடுப்பதற்கென அனைத்து இறங்குதுறை உரிமையாளர்களும் பூர்த்தி செய்ய வேண்டிய நிபந்தனைகள் அச்சந்தர்ப்பத்தில் வழங்கப்பட்டன. அந்த நிபந்தனைகள் ஒருங்கிணைந்த களப் பரீட்சிப்பு அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருப்பதாக 'C' வலய வதிவிட கருத்திட்ட முகாமையாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம், ஒருங்கிணைந்த களப் பரிசோதனையின் பின்னர் இந்த நிபந்தனைகளை பூர்த்தி செய்திருந்த மணல் அகழ்வு இடங்களின் உரிமையாளர்கள், தமது மணல் அகழ்வு இடங்கள் நிராகரிக்கப்பட்டமை தொடர்பாகவும், அவற்றுக்கு அருகில் அல்லது

இரு பக்கங்களிலும் இருக்கும் அதே வன விலங்கு, சுற்றாடல் பாதுகாப்பு நிலைமைகளில் அமைந்திருக்கும் மணல் அகழ்வு இடங்களுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டிருந்தமை தொடர்பாகவும், 'C' வலய வதிவிட கருத்திட்ட முகாமையாளரிடம் முறைப்பாடுகளை செய்திருந்தனர். மணல் அகழ்வு இடங்களின் உரிமையாளர்கள் சங்கத்தின் மூலம் வதிவிட கருத்திட்ட முகாமையாளரிடம் இது தொடர்பாக வேண்டுகோள்கள் முன்வைக்கப்பட்டிருந்தன. அதன் பிரகாரம், ஒருங்கிணைந்த பரிசோதனையில் பங்கேற்ற இந்த மணல் அகழ்வு இடங்களின் விண்ணப்பதாரிகளின் அகழ்வு இடங்கள் தொடர்பாக வன விலங்குகள் பாதுகாப்புத் திணைக்களம் மற்றும் மத்திய சுற்றாடல் அதிகார சபை என்பவற்றின் புறம்பான பரிந்துரைகளை பெற்றுக்கொள்ள வேண்டும் என அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருப்பதாக 'C' வலயத்தின் வதிவிட கருத்திட்ட முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

அதன் பிகரகாரம், வன விலங்குகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளரிடம் (வலய அலுவலகம், ரண்டம்பே) இந்த இடங்களில், இந்த அனைத்து ஆட்களும் புறம்பான விதத்தில் மணல் அகழ்வு இடங்களை பராமரித்து வருவது தொடர்பான ஆட்சேபணையை அல்லது உடன்பாட்டை தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. உடன்பாட்டைக் கோரி அதன் பிரகாரம் தயாரிக்கப்பட்ட கடிதத்தில் ''சம்பந்தப்பட்ட இடத்தை மணல் அகழ்வு இறங்குதுறை ஒன்றாக பாரமரித்து வருவதற்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது'' என குறிப்பிட்டிருக்கின்றது; எமது அதிகார சபை மணல் அகழ்வு இடங்கள் தொடர்பாக காணித் துண்டுகளை வழங்குவதற்கு பரிந்துரை செய்யும் கருத்துடனேயே அவ்வாறு செய்யப்பட்டுள்ளது. மேலும், கடிதத்தின் இரண்டாவது பந்தியில் மணல் அகழ்வு இடங்களை பராமரித்து வரும் விடயம் தொடர்பாக எதிர்ப்பு அல்லது உடன்பாடு தெளிவாக வழங்கப்பட வேண்டும் என கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

பிழையான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன என்ற விதத்தில் அந்தக் கடிதத்தில் முன்னர் குறிப்பிடப்பட்ட பிரிவில் உங்களுடைய அறிக்கையின் மூலம் கருதப்பட்டிருக்கும் காரணத்தினால், எதிர்காலத்தில் இத்தகைய கடிதம் ஒன்றை தயாரிக்கும் பொழுது மிகவும் எச்சரிக்கையுடன் நடந்து கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. மணல் அகழ்வு இடங்களை பராமரித்து வருவது தொடர்பாக வன விலங்குகள் திணைக்களத்தின் (மத்திய வலய) உதவிப் பணிப்பாளரினால் ஆட்சேபணை இல்லையென பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டிருந்த ஆட்கள் தொடர்பாக மட்டும் மணல் அகழ்வு அனுமதிப் பத்திரங்களை பெற்றுக்கொடுப்பதற்கு தேவையான விதத்தில் மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை என்ற விடயத்தை வலியுறுத்துவதாக 'C' வலய வதிவிட கருத்திட்ட முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

(மத்திய வலய) உதவிப் பணிப்பாளரிடமிருந்து வன விலங்குகள் திணைக்களம் பரிந்துரைகளை பெற்றுக்கொண்டிருப்பதுடன், எமது வேண்டுகோளின் பிரகாரம் முன்வைக்கப்பட்ட கிராந்துருகோட்டே வனச்சரக பாதுகாவலரின் அவதானிப்புக் குறிப்புக்கள், அந்த அனைத்து மணல் அகழ்வு இடங்கள் தொடர்பாகவும்

பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தன. அந்த உத்தேச இடங்கள் வன விலங்குகள் சரணாலயத்திற்கு அல்லது பாதுகாப்பு வலயத்திற்கு உரித்தானவையாக இருந்து வரவில்லை என்றும், மணல் அகழ்வு இடங்களுக்கான அனுமதிப் பத்திரங்களை வழங்குவதற்கு ஆட்சேபணை இல்லை என்றும் பரிந்துரையில் தெளிவாக குறிப்பிடப்பட்டிருந்ததாக 'C' வலய வதிவிட கருத்திட்ட முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

(ii) மணல் அகழ்வு இடங்களுக்கான அனுமதிப் பத்திரங்களை வைத்திருப்பவர்கள் பராமரித்து வரும் அகழ்வு இடங்கள், அந்த அனுமதிப் பத்திரத்தின் விதிமுறைகளை மீறும் விதத்தில் பராமரிக்கப்பட்டு வருகின்றனவா என்பது தொடர்பான கண்காணிப்பினை மேற்கொள்வதற்கான பொறுப்பு புவிச்சரிதவியல் அளவை சுரங்கப் பணியகத்திடம் இருந்து வருகின்றது. இலங்கை மகாவலி அதிகார சபை மணல் அகழ்வு தொடர்பாக காணித் துண்டுகளை பெற்றுக்கொடுக்கும் விடயத்திலேயே முக்கியமாக பங்கேற்றுள்ளது. அதன் பிரகாரம், முன்னைய சந்தர்ப்பங்களில் இறங்குதுறை உரிமையாளர்கள் நிபந்தனைகளை மீறியிருப்பதாக அந்த நிறுவனங்கள் எமக்குத் தெரியப்படுத்திய சந்தர்ப்பங்களில் காணி உரிமையாளர் என்ற முறையில் அந்த மணல் அகழ்வு இடங்களை தடுத்து நிறுத்துவதற்கென எம்மால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

கிராந்துருகோட்டே பிரிவில் மகாவலி கங்கையை அண்மித்த பிரதேசத்தில் உலக சுற்றாடல் தின நிகழ்ச்சித்திட்டத்துடன் இணைந்த விதத்தில் 2017.06.06 ஆம் திகதி மகாவலி கங்கையின் மணல் இறங்குதுறைகளை சூழவுள்ள பிரதேசங்களில் 1000 திசு வளர்ச்சி மூங்கில் கன்றுகளை நடும் நிகழ்ச்சித்திட்டத்தை செயற்படுத்தி, மகாவலி கங்கையின் இரு பக்கங்களினதும் கரைகளை பாதுகாப்பதற்கென நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. மணல் அகழ்வு இடங்களின் உரிமையாளர் சங்கம், இலங்கை பொலிஸ், புவிச்சரிதவியல் அளவை சுரங்கப் பணியகம் மற்றும் மத்திய சுற்றாடல் அதிகார சபை ஆகிய நிறுவனங்களின் உத்தியோகத்தர்கள் மற்றும் மணல் அகழ்வு இடங்களின் உரிமையாளர்கள் ஆகியோரின் பங்கேற்புடன் இந்நிகழ்வு இடம்பெற்றது.

மணல் அகழ்வு இடங்களின் உரிமையாளர்கள் தொடர்பான பட்டியலை புவிச்சரிதவியல் அளவை சுரங்கப் பணியகம், மத்திய சுற்றாடல் அதிகார சபை ஆகிய நிறுவனங்களுக்கு அனுப்பி வைத்து, அகழ்வு அனுமதிப் பத்திரங்களின் நிபந்தனைகளை மற்றும் சுற்றாடல் அல்லது ஜீவராசிகள் தொடர்பான நிபந்தனைகளை மீறியிருக்கும் ஆட்களின் அனுமதிப் பத்திரங்களை இரத்து செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மகாவலி அதிகார சபையின் 'C' வலயத்தில் கள உத்தியோகத்தர்களின் தட்டுப்பாடு நிலவி வருவதுடன், கிராந்துருகோட்டே பிரிவில் கடமையில் இருந்து வரும் ஒரு சில கள உத்தியோகத்தர்களின் அதிகாரப் பிரதேசங்களில் அமைந்திருக்கும் சுமார் 500 இற்கு மேற்பட்ட மணல் அகழ்வு இடங்கள் தொடர்பாக தொடர்ச்சியான விதத்தில் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் விடயம் நடைமுறைச் சாத்தியமற்ற ஒரு காரியமாக இருந்து வருகின்றது. அந்த உத்தியோகத்தர்களிடம் காணிப் பிரிவு தொடர்பான கடமைகளுக்கு மேலதிகமாக எமது அதிகார சபையின் தொழில்நுட்ப சேவைகள் பிரிவு, விவசாயப் பிரிவு, மனித வள மற்றும் நிறுவன அபிவிருத்திப் பிரிவு

போன்ற அனைத்துப் பிரிவுகளினதும் பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. எவ்வாறிருப்பினும், மணல் அகழ்வு இடங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட வேண்டிய தொடர் நடவடிக்கைகளை தொடர்ச்சியாக மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு ஏற்கனவே அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

(iii) மகாவலி பிரதேசங்களைச் சேர்ந்த காணிகளிலிருந்து அகற்றப்படும் கனிப் பொருட்களுக்கான கட்டணங்களை அறவிடுவது தொடர்பாக இலங்கை மகாவலி அதிகார சயினால் வெளியிடப்பட்டிருக்கும் DL/1/1 மற்றும் 2015 -08-24 திகதியிட்ட உள்ளகச் சுற்றறிக்கையின் பிரகாரம், காணிப் பாவனை கட்டணங்களை அறவிடுவதில் 210 கியுப் வருடாந்த அனுமதிப் பத்திரத்தை வைத்திருக்கும் ஒருவர் ஆண்டொன்றுக்கு 2250 கியுப் அளவு தொடர்பாக செலுத்த வேண்டிய காணிப் பாவனை கட்டணம் ரூ.1,512,000.00 ஆகும்.

மணல் அகழ்வு இடங்களை பெற்றுக்கொண்டிருப்பவர்கள் ஒரு சிலர் தவிர, பெரும்பாலான ஏனையவர்கள் செல்வந்த வர்த்தகர்களாக இருந்து வரவில்லை. ஒரு சுயதொழில் மார்க்கமாக மணல் அகழ்வு இடங்களை பராமரித்து வருபவர்களாக அவர்கள் இருந்து வருகின்றார்கள். அத்துடன் குறைந்த வருமானப் பிரிவைச் சேர்ந்த சமுர்த்தி உதவி பெறுபவர்கள் பின்வரும் அசௌகரியங்களை எதிர்கொள்ள நேரிட்ட விடயத்தை 'C' வலய வதிவிட கருத்திட்ட முகாமையாளர் அவதானித்துள்ளார்.

- ஒருங்கிணைந்த பரிசோதனையில் பங்குபற்றிய, வன விலங்குகள் திணைக்களம், மத்திய சுற்றாடல் அதிகார சபை ஆகிய நிறுவனங்களின் பரிந்துரைகள் மற்றும் கடமை தொடர்பான அனைத்து கடித ஆவணங்களை தயாரித்து முடித்த பின்னர், இலங்கை மகாவலி அதிகார சபையினால் இறுதிப் பரிந்துரைகளின் அடிப்படையில் அனுமதிப் பத்திரங்களை பெற்றுக் கொடுப்பதற்கென புவிச்சரிதவியல் அளவை சுரங்கப் பணியகத்திடம் சமர்ப்பிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில், எதிர்பாராத விதத்தில் ரூ. 1,512,000.00 போன்ற பெரிய தொகையை செலுத்த வேண்டி நேரிட்டமையின் காரணமாக அசௌகரியத்தை எதிர்கொண்டமை.
- மணல் அகழ்வு இடங்கள் தொடர்பான விண்ணப்பங்களை முன்வைக்கும் சந்தர்ப்பம் தொடக்கம் இலங்கை மகாவலி அதிகார சபையினால் இறுதி பரிந்துரைகள் வழங்கப்படும் காலப் பிரிவு வரையில் விண்ணப்பதாரர்கள் அது தொடர்பாக தமது பணத் தொகைகளை செலவிட்டிருக்கும் நிலையில், பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கும் மணல் அகழ்வு இடங்களிலிருந்து எந்தவொரு வருமானத்தையும் ஈட்டுவதற்கு முன்னர் ஒரு பெருந்தொகையை செலுத்துவதற்கு நேரிடுவதனால் பணத்தை தேடிக் கொள்வதில் எதிர்கொள்ளும் சிரமம்.
- புவிச்சரிதவியல் அளவை சுரங்கப் பணியகத்தினாலும் அரச உரிமைத் தொகையாக இவ்விதம் பாரிய பணத் தொகைகள் மணல் அகழ்வு இட உரிமையாளர்களிடமிருந்து அறவிடப்படும் நிலை.

அதன் பிரகாரம், ஒருங்கிணைந்த பிரசோதனைகளை பூர்த்தி செய்து, கடமை தொடர்பான அனைத்து நடவடிக்கைகளையும் முடித்து, அனுமதிப் பத்திரங்களை வழங்குவதற்கென இலங்கை மகாவலி அதிகார சபையினால் இறுதிப் பரிந்துரைகளை அனுப்பி வைக்கும் விடயத்தில் சுமார் நான்கு மாத கால

தாமதம் ஏற்பட்டிருந்தது. அந்த நிலையில், மணல் அகழ்வு இடங்களுக்கான விண்ணப்பதாரிகள் மத்தியில் நிலவி வந்த பதற்ற நிலை மற்றும் அவர்களுடைய வேண்டுகோள்கள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு, ஒருங்கிணைந்த பரிசோதனையில் இலங்கை மகாவலி அதிகார சபை பங்கேற்ற முதல் தடவை தொடக்கம் சம்பந்தப்பட்ட திருத்தங்கள் மேற்கொள்ளப்படும் வரையில் தற்காலிகமாக சுமார் ஒரு மாத காலப் பிரிவுக்கு கட்டணங்களை அறவிட்டு, சம்பந்தப்பட்ட பரிந்துரைகளை முன்வைப்பதற்கும், சம்பந்தப்பட்ட மாதாந்தக் கட்டணங்களை அறவிட்டுக் கொண்ட பின்னர் புவிச்சரிதவியல் அளவை சுரங்கப் பணியகத்திற்கு பரிந்துரைகளை அனுப்பி வைத்த பின்னர் மாதாந்த அகழ்வு அனுமதிப் பத்திரங்களை புதுப்பித்துக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

அதன் பிரகாரம், 2013 ஆம் ஆண்டு தொடக்கம் புவிச்சரிதவியல் அளவை சுரங்கப் பணியகத்தின் பணிப்பாளர், அகழ்வு பொறியியலாளர், புவிச்சரிதவியல் அளவை சுரங்கப் பணியக அலுவலகம் - பதுளை ஆகிய உத்தியோகத்தர்களுக்கு தொடர்ந்தும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருப்பதாக 'C' வலயத்தின் வதிவிட கருத்திட்ட முகாமையாளர் எனக்குத் தெரியப்படுத்தியுள்ளார். மணல் அகழ்வு இடங்களின் விண்ணப்பதாரர்கள் தொடர்பாக பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படும் அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் இந்தக் கட்டணம் அறவிடுவது தொடர்பாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், புவிச்சரிதவியல் அளவை சுரங்கப் பணியகத்தின் (பதுளை) மாகாண அலுவலகம் விண்ணப்பதாரர்கள் தொடர்பாக ஆண்டு முழுவதும் இதே விதத்தில் அனுமதிப் பத்திரங்களை வழங்கி உள்ளது.

இறுதி களப் பரிசோதனை நடவடிக்கைகள் பூர்த்தி அடைந்த பின்னர் மணல் அகழ்வு இடங்களின் விண்ணப்பதாரிகளிடமிருந்து கட்டணங்களை அறவிடுவதில் மேலே குறிப்பிடப்பட்ட நடவடிக்கை முறையே மேற்கொள்ளப்பட்டுள்ளது. அத்துடன் இப்பிரச்சினைக்கு இதுவரையில் நிரந்தரமான ஒரு தீர்வு கிடைக்காதிருப்பதனால் 2017ஆம் ஆண்டின் பின்னர் காணிப் பயன்பாட்டு கட்டணத் தொகையை முழுமையாக செலுத்தி தீர்க்கும் வரையில் எந்தவொரு மணல் அகழ்வு அனுமதிப் பத்திரத்தையும் புதுப்பித்தல் தொடர்பான பரிந்துரைகளை வழங்குவதில்லை என 'C' வலயத்தின் வதிவிட கருத்திட்ட முகாமையாளர் தெரிவித்துள்ளார். 2018 ஆம் ஆண்டு முடிவில் அனைத்து மணல் அகழ்வு அனுமதிப் பத்திரங்களினதும் காலப் பிரிவு முடிவடைகின்றது. மொத்த மணல் அகழ்வு அனுமதிப் பத்திரதாரர்கள் 443 பேரில் 60 பேர் மட்டுமே ஏற்கனவே முனைப்பான விதத்தில் செயற்பட்டு வருவதாக 'C' வலயத்தின் வதிவிட கருத்திட்ட முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

(ஆ) அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ள மணல் கியுப்களின் அளவு சரியானதாக இருந்து வருவதுடன், பணிப்பாளர் நாயகத்தின் 2011.06.30 ஆந் திகதியிட்ட கடிதத்தின் மூலம் 01 கியுப் மணல் தொடர்பாக ரூ. 300.00 சேவைக் கட்டணம் ஒன்றை அறவிடுமாறு

கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய பாக்கி சேவைக் கட்டணத் தொகை ரூ. 9,505,200.00 ஆகும். இதுவரையில் அத்தொகையில் ரூ. 2,854,580.00 செலுத்தப்பட்டிருப்பதுடன், ரூ. 6,.650,620.00 நிலுவைத் தொகையாக இருந்து வருகின்றது. இது தொடர்பான வழக்குகளை தாக்கல் செய்வதற்கு அவசியமான ஆவணங்கள் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

(இ) இது தொடர்பாக பின்வரும் விடயங்களை முன்வைக்கின்றேன்:

(I) மின் இணைப்புக்களின் தொகுதி தொடர்பாக முதலீட்டாளருக்கு ஏற்பட்டிருக்கும் செலவுத் தொகையில் ரூ. 75 மில்லியனை 2013.10.25 ஆம் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்தின் தீர்மானம் இல. 2013/247/3688 பிரகாரம் அதிகார சபை பொறுப்பேற்றிருந்தது.

(II) இது தொடர்பாக மகாவலி அதிகார சபை, முதலீட்டாளர் மற்றும் மின்சார சபை ஆகிய தரப்புக்களுக்கு இடையில் ஒரு முத்தரப்பு ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் மின்சாரம் உற்பத்தி செய்வது தொடர்பாக மின்சார சபையினால் மகாவலி அதிகார சபைக்கு செலுத்த வேண்டியிருக்கும் தொகையிலிருந்து ரூ.75 மில்லியன் தொகையை முதலீட்டாளருக்குச் செலுத்துவதற்கு உடன்பாடு எட்டப்பட்டுள்ளது.

(III) ஒரு நீர் மின் உற்பத்தி நிலையத்தின் உற்பத்தித் திறன் நீரத்தாரையின் உயரம் மற்றும் விடுவிக்கப்படும் நீரின் கொள்ளளவு என்பவற்றில் தங்கியிருந்து வருகின்றது. கமிட்டி அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கும் எதிர்பார்க்கப்படும் வருடாந்த வருமானமான ரூ. 131,157,653.00 தொகை, கடந்த வருடங்களில் இக்காலப் பிரிவில் நிலவிய நிலைமைகளின் பிரகாரம் மதிப்பிடப்பட்டிருக்கும் ஒரு தொகையாகும். எவ்வாறிருப்பினும், சம்பந்தப்பட்ட காலப் பிரிவில் நிலவிய குறைந்த அளவிலான நீர் விடுவிப்பு என்பவற்றையும் உள்ளடக்கிய பௌதீக நிலைமைகளின் அடிப்படையில் மின் உற்பத்தி குறைவடைந்திருப்பதுடன், அதன் மூலம் கிடைக்கும் வருமானம் ரூ. 62,865,408.00 ஆக மாற்றமடைந்துள்ளது.

(IV) மாதுறுஓயா 01 நீர் மின் உற்பத்தி நிலையத்தின் மீற்றரில் காணப்படும் ஒரு குறைபாடு காரணமாக 2015 டிசம்பர் 12 ஆம் திகதி தொடக்கம் 2016 ஜனவரி 06ஆம் திகதி வரையிலான காலப் பிரிவின் போது குறைவாக கணிக்கப்பட்டிருக்கும் மின் அலகுகள் தொடர்பாக அறவிடப்பட வேண்டிய ரூ. 4,128,992.00 பணத் தொகையை செலுத்துமாறு 2016.05.20 ஆம் திகதி மின்சார சபையிடம் ஒரு வேண்டுகோள் முன்வைக்கப்பட்டுள்ளது. அது தொடர்பாக மேலும் நினைவூட்டல் ஒன்றை அனுப்பி, அத்தொகையை அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பேன்.

(ஈ) இரு தரப்புக்களினதும் உடன்பாட்டின் அடிப்படையில் இந்த விலங்குகளை தேசிய கால்நடை அபிவிருத்தி சபை பொறுப்பேற்றிருப்பதாக அந்த நிறுவனத்தின் பொது முகாமையாளரின் இல. NLDB/GM/21 மற்றும் 2019.05.31 திகதியிட்ட கடிதத்தின் மூலம் ஊர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் இந்த விலங்குகள் அவர்களுடைய களஞ்சிய ஆவணங்களில் உள்ளடக்கப்பட்டிருப்பதாக தெரிய வருகின்றது. இந்த விலங்குகளின் பெறுமதியை ஆதனப் பட்டியல்களிலிருந்தும், கணக்கேடுகளிலிருந்தும் அகற்றுவதற்கென பூர்வாங்க அனுமதியை பெற்றுக்கொள்வதற்கு பணிப்பாளர் சபையிடம் ஒரு பத்திரத்தை சமர்ப்பிப்பிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(உ) இல. 377 கொண்ட உறுதியின் இல. 68 துண்டின் 17.942 ஹெக்டெயார் பரப்பளவைக் கொண்ட காணிப் பிரிவு 1992 ஏப்ரல் மாதம் 09 ஆம் திகதி கையொப்பமிடப்பட்ட ஒப்பந்தம் ஒன்றின் மூலம் 30 வருட காலத்திற்கு அரச சுரங்க அகழ்வு மற்றும்

கனிப்பொருள் அபிவிருத்தி கூட்டுத்தாபனத்திற்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. இக்காணியில் ஒரு பொஸ்பேற் தொழிற்சாலை நடத்தப்பட்டு வருகின்றது. அதே போல இல. 327 கொண்ட காணித் துண்டு இலக்கம் 67 இல் காட்டப்பட்டிருக்கும் 09 ஹெக்டெயார் பரப்பளவைக் கொண்ட காணித்துண்டில் பொஸ்பேற் கம்பனியால் அப்டைட் அகழ்வு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

மேலே குறிப்பிடப்பட்ட காணிகளை இலங்கை மகாவலி அதிகார சபை பொறுப்பேற்றுக் கொண்ட போதிலும், 2015ஆம் ஆண்டு வரையில் முறையாக செயற்படுத்தப்பட்டிருக்க வில்லை என்பதனை தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலே குறிப்பிடப்பட்ட உறுதி இல. 377 கொண்ட 68ஆம் இலக்க பொஸ்பேற் தொழிற்சாலை நடத்தப்பட்டு வரும் காணி, பிரதேச செயலாளரினால் 1992.04.09 ஆந் திகதியிட்ட 88/14/410இலக்கம் கொண்ட நீண்ட கால குத்தகை ஒப்பந்தத்தின் பிகாரம் குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் குத்தகை அறவிடப்பட்டிருப்பதுடன், இது தொடர்பாக மகாவலி அதிகார சபை தெரிந்து கொண்ட பின்னர் இக்காணி மகாவலி அதிகார சபைக்கு வதிவிட கருத்திட்ட முகாமையாளரினால் பொறுப்பேற்கப்பட்டுள்ளது. அது தொடர்பாக வரி அறவிடும் பொறுப்பு வழங்கப்பட வேண்டுமென மாகாண காணி ஆணையாளரிடம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. இது மாண்புமிகு ஜனாதிபதி அவர்களின் கையொப்பத்துடன் வழங்கப்பட்டிருக்கும் ஒரு நீண்ட கால குத்தகையாக இருந்து வரும் காரணத்தினால், அதனை மீறிச் செல்லக்கூடிய ஒப்பந்தம் ஒன்றை சமர்ப்பிக்குமாறு மாகாண காணி ஆணையாளர் இந்த வேண்டுகோளுக்கு பதிலளித்துள்ளார். எவ்வாறிருப்பினும், இது வரையில் பின்வரும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன:

I. மேலே குறிப்பிடப்பட்ட காணி தொடர்பாக குத்தகைகளை அறவிட்டுக் கொள்வது தொடர்பாக சட்ட அறிவுறுத்தல்களை பெற்று, மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பேன்.
II. 2016 மற்றும் 2017 ஆகிய வருடங்களுக்கான காணிப் பாவனை கட்டணமாக முறையே ரூ. 1,803,300.00 தொகையும், ரூ. 1,809,738.00 தொகையும் செலுத்தப்பட்டுள்ளது.
III. இது தொடர்பாக முறையான ஒரு ஒப்பந்தத்தை தயாரித்து, இது தரப்புக்களும் கையொப்பமிடுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.
IV. 2018.09.11 தொடக்கம் அகழ்வு அனுமதிப் பத்திரம் புதுப்பிக்கப்பட்டுள்ளது.
V. மத்திய சுற்றாடல் அதிகார சபை மற்றும் தொல்பொருள் திணைக்களம் என்பவற்றிலிருந்து உரிய அனுமதி பெறப்பட்டுள்ளது.
VI. சம்பந்தப்பட்ட காணியை முறைப்படி வழங்கும் பொருட்டு ஏற்கனவே காணி அளவை செய்யப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட வரைபடங்கள் கிடைத்த பின்னர், பெறுமதி மதிப்பீட்டு அறிக்கைகளை பெற்று, முறையான நீண்ட கால குத்தகை ஒன்றை வழங்க முடியும் எனத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

4.5 நிதிகளின் குறைந்த அளவிலான பாவனை

2002 ஆம் ஆண்டில் ஊவா அபிவிருத்தி வங்கி மற்றும் ரஜரட்ட அபிவிருத்தி வங்கி என்பவற்றுக்கு வழங்கப்பட்டிருந்த ரூ. 44.00 மில்லியன் தொகையின் தற்போதைய நிலுவை ரூ. 88.00 மில்லியன் ஆகும். இத்தொகையை மீண்டும் மகாவலி அதிகார சபைக்கு பெற்றுக்கொள்வதற்கென 2019.01.31 ஆம் திகதி இடம்பெற்ற 304 ஆவது

பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் ஒப்புதல் கிடைத்துள்ளது. அப்பணத் தொகைகளை இலங்கை மகாவலி அதிகார சபைக்கு விடுவிக்குமாறு எமது இல. MASL/ENT.DEV/71 மற்றும் 2019.03.29 திகதியிட்ட கடிதத்தின் மூலம் பிரதேச அபிவிருத்தி வங்கியின் பொது முகாமையாளருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. அது தொடர்பாக ஏற்கனவே இரு தரப்பினருக்கும் இடையில் துரித கதியில் கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன.

4.6 செயற்படாத மற்றும் குறைந்த அளவில் பயன்படுத்தப்படும் சொத்துக்கள்

(ஆ) இலங்கை மகாவலி அதிகார சபையின் வலய / பிரிவு அலுவலகங்கள் தொடர்பாக பயன்படுத்தப்பட்டு வந்த 551 கட்டடங்கள் பயன்படுத்தப்படாதிருந்து வந்தன என்பதனை ஏற்றுக்கொள்கின்றேன். அதற்கு அடிப்படைக் காரணம், இலங்கை மகாவலி அதிகார சபையின் மீள் கட்டமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 1998 ஆம் ஆண்டில் சுமார் 8000 ஊழியர்கள் நட்ட ஈடு பெற்று, சுயவிருப்பில் ஓய்வு பெற்றுச் சென்றிருப்பதாகும்.

இவ்விதம் உத்தியோகபூர்வ வாசஸ்தலங்கள் மற்றும் கட்டடங்கள் என்பன பெருமளவில் பயன்படுத்தப்படாதிருந்து வருவதன் காரணமாக, அது தொடர்பாக உரிய வேலைத்திட்டம் ஒன்றை தயாரிக்குமாறு 2017.07.03 ஆம் திகதி இலங்கை மகாவலி அதிகார சபை தலைமை அலுவலகத்தில் இடம்பெற்ற கூட்டமொன்றில் விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரான மாண்புமிகு ஜனாதிபதி அவர்களினால் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் இலங்கை மகாவலி அதிகார சபையின் அனைத்து வலயங்களில் / பிரிவுகளில் / கருத்திட்ட அலுவலகங்களில் இருந்து வரும் பயன்படுத்தக் கூடிய, ஆனால் பயன்படுத்தப்படாதிருக்கும் உத்தியோகபூர்வ வாசஸ்தலங்கள் மற்றும் கட்டடங்கள் என்பவற்றை மத்திய அரசின் அல்லது மாகாண அரச நிறுவனங்களின் தேவைகளுக்கென வழங்கும் நோக்கத்துடன் ‘‘பயன்படுத்தக்கூடிய, ஆனால் பயன்படுத்தப்படாதிருக்கும் உத்தியோகபூர்வ வாசஸ்தலங்கள் மற்றும் கட்டடங்கள் என்பவற்றை அரச நிறுவனங்களுக்கு விடுவித்தல்’’ என்ற தலைப்பில் ஒரு நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக என்னுடைய அறிவுறுத்தலின் பிரகாரம் 2017.09.27ஆம் திகதி அனைத்து வலய / பிரிவு மற்றும் கருத்திட்ட அலுவலகங்களிலிருந்தும் பயன்படுத்தக்கூடிய, ஆனால் பயன்படுத்தப்படாத உத்தியோகபூர்வ வாசஸ்தலங்கள் மற்றும் கட்டடங்கள் தொடர்பான தகவல்கள் கோரப்பட்டிருந்தன.

அதன் பிரகாரம், மேலே குறிப்பிடப்பட்ட நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக 2017ஆம் ஆண்டு யூன் மாதத்தில் இடம்பெற்ற மாவட்டச் செயலாளர்களின் கருத்தரங்கின் போது வருகை தந்திருந்த (கண்டி/ குருணாகல் /இரத்தினபுரி / அம்பாறை / பொலன்னறுவை / அநுராதபுரம் ஆகிய மாவட்டங்களின்) அரசாங்க அதிபர்களுக்கு வாய்மூலம் தெரியப்படுத்தியிருப்பதுடன், 2017.11.16 / 17 திகதிகளில் இந்த அரசாங்க அதிபர்கள் அனைவருக்கும் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டன.

மேலும் சேகரிக்கப்பட்டிருக்கும் தகவல்களின் அடிப்படையில் மேலே குறிப்பிடப்பட்ட நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக அறிவூட்டும் விதத்தில் 2018.03.19 மற்றும் 2018.05.10

ஆகிய திகதிகளில் பின்வரும் நிறுவனங்களுக்கு கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன:

1. மாகாண கல்விப் பணிப்பாளர் - சப்ரகமுவ மாகாணம், இரத்தினபுரி / கிழக்கு மாகாணம், திருகோணமலை / வட மத்திய மாகாணம், அநுராதபுரம்
2. மாகாண சுகாதாரப் பணிப்பாளர் - சப்ரகமுவ மாகாணம், இரத்தினபுரி / கிழக்கு மாகாணம், திருகோணமலை / வட மத்திய மாகாணம், அநுராதபுரம்

மேலே குறிப்பிடப்பட்ட அறிவூட்டல் செயற்பாட்டின் பிரகாரம் ஒரு சில நிறுவனங்களிடமிருந்து எதிர்வினைகள் கிடைத்திருந்தன. அந்த எதிர்வினைகள் போதியதாக இல்லாதிருந்து வந்த காரணத்தினால் 2019.01.09 ஆந் திகதி மீண்டும் மேலே குறிப்பிடப்பட்ட அனைத்து அரசாங்க அதிபர்கள் மற்றும் மாகாண சுகாதார மற்றும் கல்விப் பணிப்பாளர்கள் ஆகியோருக்கு நினைவூட்டல்கள் அனுப்பி வைக்கப்பட்டிருந்தன. அதில் உத்தியோகபூர்வ வாசஸ்தலங்கள் மற்றும் கட்டடங்கள் தொடர்பாக மேலும் தேவை இருந்து வந்தால் 2019.01.28 திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு தெரிவிக்கப்பட்டிருந்தது.

அந்த நிறுவனங்களிலிருந்து இதுவரையில் கிடைத்திருக்கும் வேண்டுகோள்கள் பின்வருமாறு:

	பன்படுத்தப்படாத உத்தியோகபூர்வ வாசஸ்தலங்களை கேட்டிருக்குத் நிறுவனங்கள்	**கேட்கப்பட்டிருக்கும் எண்ணிக்கை**
1	பிரதேச செயலாளர் அலுவலகங்கள் (16+2)	18
2	பிரதேச சுகாதாரப் பணிப்பாளர் சேவை அலுவலகங்கள் (2+63)	65
3	மாகாண கல்விப் பாணிப்பாளர் அலுவலகங்கள்	12
4	தேசிய சமூக நீர் விநியோக திணைக்களம்	1
5	புனர்வாழ்வளிப்பு ஆணையாளர் நாயகம் பணியகம்	1
6	ஆரம்ப கைத்தொழில்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு	1
7	விவசாயிகள் கழகங்கள்	1
		99

ஏறஏற்கனவே இந்த உத்தியோகபூர்வ வாசஸ்தலங்கள் மற்றும் கட்டடங்கள் என்பவற்றில் ஒரு சில பின்வரும் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன:

01. 'C' வலயத்தின் கிராந்துருகோட்டே பிரிவைச் சேர்ந்த ஒரு கட்டடத்தை சிவில் பாதுகாப்பு திணைக்களத்திற்கு ஒப்படைப்பதற்கு அனுமதி கிடைத்துள்ளது.

02. 'B' வலயம் வெலிகந்தையில் அமைந்திருக்கும் அறலகன்வில MRTC நிலையத்தை பொலிஸ் பயிற்சி நிலையம் ஒன்றை அமைக்கும் பொருட்டு பொலிஸ் திணைக்களத்திடம் ஒப்படைப்பதற்கு 2018.01.26ஆம் திகதி இடம்பெற்ற 292 ஆவது பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் 2018/292/4352 தீர்மானத்தின் மூலம் ஒப்புதல் கிடைத்துள்ளது. அதன் பிரகாரம் ஒப்படைப்பதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

"உபயோகத்திற்கு எடுக்கக்கூடிய, எனினும் உபயோகிக்கப்படாதிருந்து வரும் உத்தியோகபூர்வமான வாசஸ்தலங்கள் மற்றும் கட்டடங்கள் என்பவற்றை அரச நிறுவனங்களுக்கு வழங்குதல்" என்ற தலைப்பில் ஆரம்பிக்கப்பட்டிருந்த நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக அரச நிறுவனங்களிடமிருந்து வந்த வேண்டுகோள்கள் வரையறுக்கப்பட்ட அளவில் இருந்து வந்த காரணத்தினால், வேண்டுகோளை முன்வைத்திருந்த அரச நிறுவனங்களுக்கு சம்பந்தப்பட்ட உத்தியோகபூர்வ வாசஸ்தலங்கள் மற்றும் கட்டடங்கள் என்பவற்றை வழங்குவதற்கும், அதன் பின்னர் எஞ்சியிருக்கும் உத்தியோகபூர்வ வாசஸ்தலங்கள் மற்றும் கட்டடங்கள் என்பவற்றை இலங்கை மகாவலி அதிகார சபைக்கு வருமானத்தை ஈட்டும் நோக்கில் தனியார் துறைக்கு வாடகை அடிப்படையில் வழங்குவதற்கும் அனுமதியைக் கோரி 2019.03.11 திகதி இடம்பெற்ற 305ஆவது பணிப்பாளர் சபைக் கூட்டத்திற்கு பணிப்பாளர் சபை பத்திரம் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவு (தீர்மானம் இல. 2019/305/4575), இந்த விடயம் தொடர்பாக பின்வரும் நிறுவனங்களுக்கு மேலும் அறிவூட்டலை மேற்கொள்ள வேண்டும் என்பதாகும். அதன் பிரகாரம் 2019.03.19 மற்றும் 2019.03.25 ஆகிய திகதிகளில் பின்வரும் நிறுவனங்களுக்கு கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன:

1. நீர்ப்பாசனத் திணைக்களம்
2. சுகாதாரம், போஷாக்கு மற்றும் உள்நாட்டு மருத்துவத் திணைக்களம்
3. விவசாயத் திணைக்களம்
4. கமத்தொழில் அபிவிருத்தி திணைக்களம்
5. விவாசயம், கிராமிய பொருளாதார நடவடிக்கைகள், கால்நடை வளங்கள் அவிவிருத்தி, நீர்ப்பாசன, மீன்பிடி மற்றும் நீர் வளங்கள் அபிவிருத்தி அமைச்சு

விடயத்திற்கு பொறுப்பான அமைச்சர் என்ற முறையில் மாண்புமிகு ஜனாதிபதி அவர்களின் தலைமையில் 2019.05.27ஆம் திகதி ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் முன்னேற்ற மீளாய்வு கூட்டத்தின் போது, மேலே குறிப்பிடப்பட்ட உபயோகத்திற்கு எடுத்துக் கொள்ளக்கூடிய ஆனால் உபயோகப்படுத்தப்படாதிருந்து வரும் கட்டடங்களை வெகு விரைவில் உடைத்து அகற்றுமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் அந்த விடயங்களுடன் சேர்த்து 2019.06.16ஆம் திகதி இடம்பெற்ற அதிகார சபையின் 308 ஆவது பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் ஒரு சபை பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டது. அதன் பிரகாரம் மேலே குறிப்பிடப்பட்டிருக்கும் கட்டடங்கள் தொடர்பாக வேண்டுகோள்களை முன்வைக்குமாறு அரச நிறுவனங்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் மூன்று மாத காலப் பிரிவின் போது அது தொடர்பாக வேண்டுகோள்களை முன்வைப்பதற்கு மேலும் வாய்ப்புக்களை

வழங்குவது என்றும், அதன் பின்னரும் வேண்டுகோள்கள் கிடைக்காத உத்தியோகபூர்வ வாசஸ்தலங்கள் மற்றும் கட்டடங்கள் என்பவற்றை முறையான கழித்தொகுக்குதல் மற்றும் களஞ்சியப்படுத்தல் ஒழுங்கு விதிகளை பின்பற்றி, உடைத்து அகற்றுவது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம், அதன் முன்னேற்றத்தின் அடிப்படையில் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை தெரிவித்துக் கொள்கின்றேன்.

மகாவலி அதிகார சபையினால் உபயோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட அந்தக் கட்டடங்கள் 293 தற்பொழுது பயன்படுத்த முடியாத மட்டத்தில் இருந்து வரும் காரணத்தினாலும், அவற்றை பழுது பார்ப்பதற்கு அதிக தொகைகளை செலவிட வேண்டியிருப்பதனாலும் பின்வரும் வலயங்களில் /பிரிவு அலுவலகங்களில் அமைந்திருந்த கட்டடங்கள் பணிப்பாளர் சபை ஒப்புதலின் பேரில் அழிக்கப்பட்டன. அக் கட்டடங்களில் பழுது பார்த்து, உபயோகத்திற்கு எடுத்துக் கொள்ளக்கூடிய கட்டடங்கள் ஒரு சில வெளி நிறுவனங்களுக்கும், வெளி நபர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

ஐயவினாவின் மூலம் குறிப்பிடப்பட்டிருக்கும் வலயங்களில் வாடகை அடிப்படையில் வழங்கப்பட்டிருக்கும் வீடுகள் மற்றும் கட்டடங்கள் தொடர்பாக அந்த நிறுவனங்களிலிருந்து குறைந்த வாடகைத் தொகைகள் அறவிடப்பட்டு வருகின்றன என்பதனை ஏற்றுக்கொள்கின்றேன். இலங்கை மகாவலி அதிகார சபையினால் வெளியிடப்பட்டிருக்கும் உள்ளக சுற்றறிக்கைகளின் பிரகாரம் இந்த வாடகைத் தொகைகள் அறவிடப்பட்டு வருகின்றன. வீடுகள் / கட்டடங்கள் தொடர்பாக பிரதம விலை மதிப்பீட்டாளரிடமிருந்து விலை மதிப்பீட்டை பெற்றுக்கொள்வதற்கென விலை மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு ஏற்கனவே விவரங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அந்த விலை மதிப்பீட்டு அறிக்கை கிடைத்தவுடனே உத்தியோகபூர்வ வாசஸ்தலங்களின் / கட்டடங்களின் வாடகைத் தொகைகள் உரிய விதத்தில் திருத்தப்படும் என்பதனை தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) இலங்கை மகாவலி அதிகார சபைக்கு சொந்தமான பாவனையிலிருந்து ஒதுக்குவதற்கு உத்தேசிக்கப்பட்டிருக்கும் வாகனங்கள் தொடர்பான தகவல்கள் 2018ஆம் ஆண்டு தொடர்பாக உதவிப் பணிப்பாளரினால் (போக்குவரத்து) தயாரிக்கப்பட்டு வருவதுடன், நீராவிய பண்ணைக்குச் சொந்தமான ஐயவினாவில் குறிப்பிடப்பட்டிருக்கும் வாகனங்களும் அதில் உள்ளடக்கப்பட்டுள்ளன. அதன் பிரகாரம் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவிருக்கும் கழித்தொதுக்கும் செயன்முறையின் மூலம் அந்த வாகனங்களை கழித்தொதுக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். கோழிக் கூடுகளுக்கு மின்சாரத்தை வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன் பின்னர் அவற்றை பயன்பாட்டுக்கு எடுத்து, மீண்டும் விலங்கு உற்பத்திகளை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பன்றிகள், ஆடுகள் மற்றும் கோழி அடைப்புக்கள் என்பவற்றிலிருந்த விலங்குகளை அகற்றியமையின் காரணமாக இந்த நிலைமை தோன்றியுள்ளது. மீண்டும் கால்நடை வளங்கள் அபிவிருத்தி சபையினால் (NLDB) பெறப்பட்ட விலங்குகளின் பெறுமதிக்கு உயர் ரக விலங்குகளை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

அவ்விதம் விலங்குகள் பெறப்பட்ட பின்னர், மேலே குறிப்பிடப்பட்ட கட்டட வளவு மீண்டும் உபயோகத்திற்கு எடுக்கப்படும் என்பதனை தயவாய் தெரிவித்துக் கொள்கின்றேன்.

(இ) இந்தப் பொருள்களில் தற்பொழுது உபயோகத்திற்கு எடுக்கக்கூடிய பொருட்களை அடையாளம் கண்டு, அவற்றை பயனுள்ள விதத்தில் சம்பந்தப்பட்ட பிரிவுகளுக்கு / வலயங்களுக்கு வழங்குவதற்கும், அவ்வாறில்லாத பொருட்களை முறையான கழித்தொதுக்குதல் முறைமை ஒன்றை பயன்படுத்தி கழித்தொதுக்குவதற்கும் தேவையான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு, அது தற்பொழுது செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

(ஈ) நீராவிய பண்ணையில் நிர்மாணிக்கப்பட்ட 2 நீரேற்றும் பம்புகள், நீர் பம்புகள் வழங்கப்படாதிருந்த காரணத்தினால் செயலற்றுக் கிடக்கின்றன. தற்பொழுது இந்த நீரேற்றும் நிலையங்களுக்கு மின்சாரத்தை பெற்றுக்கொள்வதற்கு தேவையான மின்சார வயர்களை பொருத்தும் நடவடிக்கைகள் மின்சார சபையினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சந்தையிலிருந்து மின்சார நீர்ப்பம்புகள், PVC தண்ணீர் குழாய்கள் மற்றும் துணை உறுப்புக்கள் என்பவற்றை கொள்வனவு செய்வதற்கு சுமார் 10 இலட்சம் ரூபாய் தொகை தேவைப்படுகின்றது. 2018ஆம் வருடத்தில் போதியளவிலான நிதி ஒதுக்கீடுகள் கிடைக்காத காரணத்தினால் நீர் பம்புகளை பொருத்த முடியாதிருந்தது.

4.7 வேறு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் அதிகார சபை வளங்கள்

(அ) ஒவ்வொரு உத்தியோகத்தரும் விடுவிக்கப்பட்ட திகதியிலிருந்து சம்பளங்கள், மேலதிக நேர வேலைக் கொடுப்பனவுகள், கூட்டுக் கொடுப்பனவுகள் மற்றும் பிரயாணச் செலவுகள் என்பவற்றை ஈடு செய்யுமாறு சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு அத்தகைய பணத் தொகைகளை ஈடு செய்யுமாறு இடையறாது அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது. பாதுகாப்பு அமைச்சுக்கு விடுவிக்கப்பட்டிருக்கும் ஏழு ஊழியர்கள் தொடர்பாக 2016ஆம் வருடத்தின் மேலதிக நேர வேலைக் கொடுப்பனவு மற்றும் கூட்டுக் கொடுப்பனவுகள் ஏற்கனவே ஈடு செய்யப்பட்டுள்ளன.

ஒவ்வொரு உத்தியோகத்தரும் அவ்விதம் விடுவிக்கப்பட்ட திகதி தொடக்கம் அவர்களுடைய சம்பளங்கள், மேலதிக நேர வேலைக் கொடுப்பனவுகள், கூட்டுக் கொடுப்பனவு மற்றும் பிரயாணச் செலவு என்பன தொடர்பாக செலவிடப்பட்டிருக்கும் தொகைகளை ஈடு செய்து கொள்வதற்கென சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு அறிவுறுத்தல் வழங்கி, அவர்களை விடுவித்துக் கொள்வதற்கும், அதன் பின்னர் மேற்கொள்ளப்படும் இத்தகைய விடுவிப்புக்களின் போது சரியான விதத்தில் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் குறித்துக் கொள்ளப்பட்டுள்ளது என்பதனை தயவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) வெளி நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டிருந்த வாகனங்கள் மீளப் பெறப்பட்டுள்ளன. விவசாய அமைச்சில் இணைக்கப்பட்டிருக்கும் இல. 65-2516 மற்றும் 65-2514 ஆகிய

வாகனங்களை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளருக்கு மாற்றிக் கொடுக்குமாறு ஒரு வேண்டுகோள் முன்வைக்கப்பட்டிருப்பதனால் அது தொடர்பாக மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

(இ) காலநிலை தாக்கங்களை குறைக்கும் கருத்திட்டத்திற்கு (CRIP) முழு நேர அடிப்படையில் விடுவிக்கப்பட்டிருக்கும் பூகர்ப்பவளங்கள் பொறியியலாளர் மூன்று பேர் மற்றும் சாரதிகள் மூன்று பேர் ஆகியோர் தொடர்பாக 2015 மார்ச் மாதம் தொடக்கம் 2018 யூலை மாதம் வரையில் சம்பளங்களாக செலுத்தப்பட்டிருக்கும் தொகைகள், (CRIP) கருத்திட்ட பணிப்பாளரின் இல. CRIP/FIN/MASL/ 2018.11.13 ஆந் திகதியிட்ட கடிதத்தின் மூலம் இல. 567248 மற்றும் 567261 கொண்ட காசோலைகளுக்கு ஊடாக முறையே 2018.11.09 மற்றும் 2018.11.12 ஆகிய திகதிகளில் ஈடு செய்யப்பட்டுள்ளன என்பதனை தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேல் கால்வாய் கருத்திட்டத்திற்கு விடுவிக்கப்பட்டிருக்கும் உத்தியோகத்தர்களுக்கு 2015, 2016 மற்றும் 2017 வருடங்கள் தொடர்பாக செலுத்தப்பட்டிருந்த சம்பளத் தொகைகளை ஈடு செய்து கொள்வது தொடர்பாக நிதி ஒதுக்குகள் இல்லாத காரணத்தினால் 2019ஆம் வருடத்துக்கான ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்ட பின்னர் அவற்றை செலுத்துவதாக நிகழ்ச்சித்திட்ட பணிப்பாளரின் இல. MMDE/MWSIP/PMU/ACC/69 மற்றும் 2018.09.12 ஆந் திகதியிட்ட கடிதத்தின் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் 2018 ஜனவரி மாதம் தொடக்கம் 2018 யூலை மாதம் வரையில் சம்பளங்களாக செலுத்தப்பட்ட தொகைகள், இல. 439994 மற்றும் 547504 காசோலைகள் மூலம் ஈடு செய்யப்பட்டுள்ளன என்பதனை தெரிவித்துக் கொள்கின்றேன்.

மத்திய அமைச்சுக்கும், ஏனைய அரச நிறுவனங்களுக்கும் விடுவிக்கப்பட்டிருக்கும் அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் தொடர்பாக சம்பளங்கள், மேலதிக நேர வேலைக் கொடுப்பனவுகள், பிரயாணச் செலவுகள் என்பவற்றுக்கு செலவாகியிருக்கும் பணத் தொகைகளை ஈடு செய்யுமாறு சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு தொடர்ச்சியாக எழுத்து மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

4.8 ஆளணி நிர்வாகம்

(அ) 31.12.2017 இல் உள்ளவாறு இலங்கை மகாவலி அதிகார சபையின் முகாமைத்துவ மட்டத்தில் பின்வரும் வெற்றிடங்கள் இருந்து வந்தன:

மேலதிக பணிப்பாளர் நாயகம்
பணிப்பாளர் (ஆளணி மற்றும் நிர்வாகம்)
பணிப்பாளர் (உள்ளகக் கணக்காய்வு)
பணிப்பாளர் (மகாவலி நிலையம்)
பணிப்பாளர் (மீன்பிடி மற்றும் கால்நடை வளங்கள்)
பணிப்பாளர் (காணி)
பணிப்பாளர் (திட்டமிடல் மற்றும் ஒழுங்கு முறைப்படுத்தல்)
வதிவிட கருத்திட்ட முகாமையாளர் (ஹுரூலுவெவ)

வதிவிட கருத்திட்ட முகாமையாளர் (வலயம் C)

வதிவிட கருத்திட்ட முகாமையாளர் (வலயம் B)

வதிவிட கருத்திட்ட முகாமையாளர் (வலயம் D)

வதிவிட கருத்திட்ட முகாமையாளர் (வளவே வலயம்)

வதிவிட கருத்திட்ட முகாமையாளர் (மொரகஹகந்த வலயம்)

வதிவிட கருத்திட்ட முகாமையாளர் (றம்பக்கன்ஓயா வலயம்)

அதன் பிரகாரம், இலங்கை மகாவலி அதிகார சபையின் HM 1-1 பணியாட்டொகுதியில் பணிப்பாளர் மற்றும் வதிவிட கருத்திட்ட முகாமையாளர் பதவிகளில் அவ்வப்பொழுது வெற்றிடங்கள் ஏற்படும் சந்தர்ப்பங்களில் உள்ளக விண்ணப்பங்களும் மற்றும் பத்திரிகை விளம்பரங்களை வெளியிடுவதன் மூலம் வெளியிலியிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன. அது தொடர்பாக தகைமைகளை கொண்டிருக்கும் உத்தியோகத்தர்கள் விண்ணப்பங்களை அனுப்பி வைக்காத காரணத்தினால் இந்தப் பதவிகள் வெற்றிடமாக இருந்து வந்துள்ளன.

2013.06.12ஆம் திகதியிட்ட இலங்கை மகாவலி அதிகார சபைக்கான ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறையின் பிரகாரம், அவ்வப்பொழுது அதில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருப்பதற்கு அமைவாக, முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 2013.10.31 திகதி வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின் பிரகாரம் ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறை மீண்டும் திருத்தப்பட்டிருந்தது. அதன் காரணமாக பணிப்பாளர் (மீன்பிடி மற்றும் கால்நடை வளங்கள் பதவி தொடர்பாக ஆட்சேர்ப்பு செய்வதற்கான கல்வித் தகைமைகள் மற்றும் அனுபவம் என்பன தொடர்பாக ஊழியர்களால் முன்வைக்கப்பட்டிருந்த வேண்டுகோள்களை கருத்தில் கொண்டு, அந்த யோசனை முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. அதற்கு ஒப்புதல் பெறுவதற்கு கால தாமம் இடம்பெற்ற காரணத்தினால் மேற்படி பதவிகள் தொடர்பாக ஆட்சேர்ப்புச் செய்வதில் தாமதம் இடம்பெற்றிருந்தது. இந்த நிலையில் இவ்வெற்றிடங்களை நிரப்ப முடியாது போய்விட்டது. இக்காரணத்தின் நிமித்தம் உள்ளக நிர்வாக நடவடிக்கைகளை தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்வதற்கென ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறையில் உள்ளடக்கப்பட்டிருக்கும் ஏற்பாடுகளின் அடிப்படையில், சேவைக்கு வேறு நிறுவனங்களிலிருந்து உத்தியோகத்தர்களை சேர்த்துக்கொள்ளும் அடிப்படையில் உத்தியோகத்தர்களை இணைத்துக் கொள்வதற்கும், அந்தப் பதவிகளில் பதில் கடமை ஆற்றுவதற்கு உள்ளக உத்தியோகத்தர்களை அமர்த்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

31.12.2017 இல் உள்ளவாறு இலங்கை மகாவலி அதிகார சபையின் நடுத்தர முகாமைத்துவ மட்டத்தின்)MM 1-1 (பணியாட்டொகுதியில் இருந்து வந்த ஊழியர் எண்ணிக்கை 347ஆகும். கனிஷ்ட முகாமைத்துவ தரத்தில் JM 1-1 இருந்து வந்த ஊழியர் எண்ணிக்கை 321 ஆகும். அதன் பிரகாரம் இந்தப் பணியாள் தொகுதிகளின் மொத்த ஊழியர் எண்ணிக்கை 668ஆக இருந்து வருவதுடன், அவற்றில் 141 வெற்றிடங்கள் நிலவி வருகின்றன. நடுத்தர முகாமைத்துவ மட்டத்தின் பணியாள் தொகுதியின் உத்தியோகத்தர்களின் வெற்றிடங்களை நிரப்புவதில் பெரும்பாலான பதவிகளுக்கென (பொறியியலாளர், புள்ளிவிபரவியலாளர், புவிச்சரிதவியலாளர்,

சமூகவியலாளர், நில அளவையாளர், கால்நடை மருத்துவர் போன்ற பதவிளுக்கு) தொழில்சார் மட்டதில் வெளியிலிருந்து ஆட்களை ஆட்சேர்ப்பு செய்ய வேண்டிய தேவை காணப்படுகிறது. அவர்களை இந்த நிறுவனத்தில் தொடர்ந்து தக்க வைத்துக்கொள்வதில் எதிர்கொள்ள நேரிடும் சிரமங்களின் அடிப்படையில் (சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் போதியளவில் இல்லாதிருந்து வருதல்) வெற்றிடங்களை நிரப்புவது சிரமமானதாக இருந்து வந்துள்ளது. எவ்வாறிருப்பினும், இந்தப் பதவிகளில் வெற்றிடங்களை நிரப்புவதற்கென ஒரு சில சந்தர்ப்பங்களில் உள்ளக மற்றும் வெளி ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதனை தயவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல கனிஷ்ட முகாமைத்துவத் தொகுதியில் (JM 1-1) வெற்றிடங்களை நிரப்புவதில் உள்ளக ஆட்சேர்ப்பு மற்றும் வெளி ஆட்சேர்ப்பு என்பவற்றுக்கென குறிப்பிட்ட சதவீத அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்வதற்கென 2013.10.31ஆம் திகதி ஒப்புதலளிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறைக்குள் ஏற்பாடுகள் குறிப்பிடப்பட்டுள்ளன. அதேபோல பெரும்பாலான பதவிகளுக்கு வெளி ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருப்பதால் (பூகோள தகவல் தொகுப்பு உத்தியோகத்தர்கள், நீர்த்தர உத்தியோகத்தர்கள், திசு வளர்ச்சி வல்லுனர்கள், விசேட ஆய்வு உத்தியோகத்தர்கள், நகர மற்றும் கிராம நிர்மாணத் திட்டமிடலாளர்கள் போன்ற பதவிகள்) பத்திரிகைகளில் விளம்பரங்களை வெளியிடுவதன் மூலம் மட்டும் ஆட்சேர்ப்பினை மேற்கொள்ள வேண்டியுள்ளது. ஏனைய உத்தியோகத்தர்களில் பெரும்பாலானவர்கள், புதிய ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறைக்கு ஒப்புதல் கிடைப்பதற்கு முன்னர் நிலவி வந்த பழைய ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறையின் தகைமைகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டவர்களாக இருந்து வருகின்றார்கள். அவர்கள் ஒப்புதல் அளிக்கப்பட்டிருக்கும் புதிய ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறையில் குறிப்பிடப்பட்டிருக்கும் பட்டப்படிப்போ அல்லது அது சம்பந்தப்பட்ட தொழில் தகைமைகளோ அற்றவர்களாக இருந்து வருகின்றனர். அதன் காரணமாக பணிக் காலத்தை அடிப்படையாகக் கொண்டு மட்டும் அவர்களுக்கு பதவி உயர்வுகளை வழங்க வேண்டிய தேவை காணப்படுவதால் கனிஷ்ட முகாமைத்துவ பதவிகளை பெற்றுக் கொள்ளும் விடயத்தில் அவர்கள் வரையறுக்கப்பட்ட வாய்ப்புக்களையே கொண்டுள்ளார்கள். மேலும், கனிஷ்ட முகாமைத்துவ மட்டத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் முகாமைத்துவ சேவை (MM 1-1) பணியாள் தொகுதியின் பதவிகளுக்கு பதவி உயர்த்தப்படுவதனால், உள்ளக பதவி உயர்வுகள் காரணமாக அவர்கள் பணியாற்றியிருக்கும் பதவிகளில் அனைத்து சந்தர்ப்பங்களிலும் வெற்றிடங்கள் ஏற்படுவது சாதாரண நிலைமை ஆகும்.

31.12.2017 இல் உள்ளவாறு ஆரம்ப மட்டத்தில் (MA 3 தொடக்கம் PL – 1 வரை) ஒப்புதல் அளிக்கப்பட்டிருக்கும் ஊழியர் ஆணி 4017 ஆக இருந்து வருகின்றது. தற்போதைய நிரந்தர ஊழியர் எண்ணிக்கை 3708 ஆகும். அதன் பிரகாரம் 309 வெற்றிடங்கள் காணப்படுகின்றன. இந்தப் பணியாள் தொகுதிகளில் பெரும்பாலான பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு தகைமையாக தேசிய தொழில் திறன் மட்டம் (NVQ) குறிப்பிடப்பட்டிருத்தல் மற்றும் அந்த மட்டத்தைச் சேர்ந்த பாடநெறிகள் மூன்றாம் நிலை

கல்வி ஆணைக்குழுவால் அத்தாட்சிப்படுத்தப்பட்டிராத நிலை போன்ற காரணங்களால் இந்தப் பதவிகள் தொடர்பாக ஆட்சேர்ப்புச் செய்வதில் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்படடுள்ளது. குறிப்பாக திட்டமிடல் தொழில்நுட்பவியலாளர், கணக்கு வைப்பவர், திசு வளர்ச்சி தொழில்நுட்பவியலாளர், விளையாட்டு உதவியாளர் போன்ற பதவிகளுக்கென ஆட்சேர்ப்பு செய்யும் விடயத்தில் தேசிய தொழில் திறன் மட்ட (NVQ) பாடநெறிகள் இல்லாதிருந்து வருகின்றன. அதன் காரணமாக முகாமைத்துவச் சேவை திணைக்களத்திற்கு அடிக்கடி அந்த விடயங்களை அனுப்பி வைத்து, அறிவுறுத்தல்கள் மற்றும் உடன்பாடுகள் என்பவற்றை பெற்றுக்கொள்ள வேண்டியுள்ளது. பதவி உயர்வுகளை வழங்குதல் மற்றும் ஆட்சேர்ப்பு செய்தல் என்பன இவ்விதமாக இடம்பெற்று வரும் நிலையில் வெற்றிடங்களை நிரப்புவதில் தாமதங்கள் ஏற்பட்டுள்ளன. இந்நிலைமையை நிவர்த்தி செய்து கொள்வதற்கென தற்பொழுது முகாமைத்துவச் சேவைகள் திணைக்களம் அறிவுறுத்தல்களை வழங்கியிருப்பதனால் அதன் பிரகாரம் செயற்படுவதற்கு வழிமுறைகள் எடுக்கப்பட்டுள்ளன என்பதனை தயவாய் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) "அ" வின் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் காரணங்களும் இதில் செல்வாக்குச் செலுத்தியுள்ளன. அந்தப் பதவிகளில் பணிகளை தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்வதற்கெனவும், நிறுவனத்தின் தேவைகளை கருத்தில் கொண்டும் வேறு நிறுவனங்களிலிருந்து விடுவிக்கப்பட்டு, சேவையில் இணைக்கப்பட்டிருக்கும் உத்தியோகத்தர்கள் மூலம் சம்பந்தப்பட்ட கருமங்களை நிறைவேற்றி வைப்பதற்கும், பணிப்பாளர் (உள்ளக் கணக்காய்வு) பணிப்பாளர் (மீன்பிடி மற்றும் கால்நடை வளங்கள்) பணிப்பாளர் (நிறுவன அபிவிருத்தி) போன்ற பதவிகளின் பணிகளை உள்ளக மட்டத்திலிருக்கும் சிரேஷ்ட அதிகாரிகளைக் கொண்டு மேற்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே பிரதிப் பணிப்பாளர் நாயகம் (அபிவிருத்தி), பணிப்பாளர் (காணி), பணிப்பாளர் (ஆளணி மற்றும் நிர்வாகம்), பணிப்பாளர் (நிறுவன அபிவிருத்தி போன்ற பதவிகள் தொடர்பாக உள்ளக ரீதியில் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இது தொடர்பாக மேற்கொண்டு நடவடிக்கைகளை எடுப்பதற்கென படிமுறைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதுடன், பணிப்பாளர் (உள்ளக் கணக்காய்வு), பணிப்பாளர் (மீன்பிடி மற்றும் கால்நடை வளங்கள்) ஆகிய பதவிகள் தொடர்பாக உள்ளக ரீதியில் விண்ணப்பங்களை கோரி, உரிய விதத்தில் நேர்முகப் பரீட்சைகளை நடத்துவதன் மூலம் தகுதி வாய்ந்தவர்களை தெரிவு செய்து, இந்தப் பதவிகளில் இருக்கும் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதேபோல பிரதிப் பணிப்பாளர் நாயகம் (அபிவிருத்தி) பதவி தொடர்பாக திருத்தியமைக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு ஒப்புதல் பெறப்பட்டிருப்பதுடன், 09.03.2016 அன்றுள்ளவாறு அது தொடர்பாக தகைமைகளை கொண்டிருக்கும் உத்தியோகத்தர்கள் உள்ளக மட்டத்தில் இருந்து வரவில்லை.

எனினும், பிரதிப் பணிப்பாளர் நாயகம் (அபிவிருத்தி) பதவி தொடர்பான கருமங்களில் காணி, விவசாயம், வணிக அபிவிருத்தி மற்றும் நிறுவன அபிவிருத்தி ஆகிய

துறைகளின் அனைத்துக் கருமங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன. மகாவலி வலயங்களுக்குள் குடியேற்றப்பட்டிருக்கும் அனைத்து குடியேற்றவாசிகள் தொடர்பாகவும் அவர்களுடைய காணி உரித்துக்களுக்கு அளிப்பு பத்திரங்களை பெற்றுக்கொடுக்கும் இலக்குடன் கூடிய ஒரு நிகழ்ச்சித்திட்டம் குறிப்பாக மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சுக்கு பொறுப்பான அமைச்சர் என்ற முறையில் மாண்புமிகு ஜனாதிபதி அவர்களினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அத்துடன், விவசாயத் துறையில் புதிய தொழில்நுட்ப முறைகளை அறிமுகம் செய்து வைத்து, தேசிய உற்பத்திக்கு மகாவலி பிரதேசத்தின் பங்களிப்பை அதிகரிக்கும் நோக்கத்துடன் குடியேற்றவாசிகளின் சமூக பொருளாதார அபிவிருத்தியை எடுத்து வருவதற்கெனவும் இந்தப் பதவி தொடர்பாக உத்தியோகத்தர் ஒருவரை நியமனம் செய்வது அத்தியாவசியமான ஒரு தேவையாக இருந்து வருகின்றது. இந்த அடிப்படையில் வணிக அபிவிருத்தி துறையின் ஒரு பணிப்பாளராக பல வருட காலம் அனுபவத்தை பெற்றுக் கொண்டிருப்பதுடன், களப் பணி அனுபவத்தின் பிரகாரம் (வணிக அபிவிருத்தி) பணிப்பாளராக செயற்பட்டு வந்த அதிகாரி ஓய்வுபெற்றுள்ளார். அதனையடுத்து அந்த அதிகாரி பணிப்பாளர் சபையின் ஒப்புதலுக்கு அமைவாக, (அபிவிருத்தி) பிரதிப் பணிப்பாளர் நாயகம் பதவிக்கு ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தார். எனினும், தற்பொழுது அவர் அந்தப் பதவியிலிருந்து விலகி, ஒரு விசேட கருத்திட்டல் இணைந்து, தனது பணிகளை மேற்கொண்டு வருகின்றார்.

அதனால் வெற்றிடமாக இருக்கும் இந்தப் பதவி தொடர்பாக உள்ளக அதிகாரிகளிடமிருந்து விண்ணப்பங்களை கோருவதற்கு மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதனை தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

வதிவிட கருத்திட்ட முகாமையாளர் பதவிகள் தொடர்பாக நிலவி வரும் வெற்றிடங்களை நிரப்புவதற்கென அவ்வப்பொழுது உள்ளக ரீதியிலும், வெளியிலிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன. ஆனால், தகைமை வாய்ந்த உத்தியோகத்தர்கள் அப்பதவிகள் தொடர்பாக விண்ணப்பம் செய்திருக்கவில்லை. அதேபோல மீளாய்வுக்கு உட்படுத்தப்படும் இவ்வாண்டின் போது வதிவிட கருத்திட்ட முகாமையாளர் மூவர் தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்டிருந்தனர். அவர்கள் தொடர்பான முறையான ஒழுக்காற்று விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. அதன் பிரகாரம் மூன்று பதவிகளை நிரப்ப முடியாத நிலைமை காணப்படுவதுடன், அவை தொடர்பாக பதில் கடமைகளை ஆற்றுவதற்கென உள்ளக சிரேஷ்ட உத்தியோகத்தர்கள் பணியில் அமர்த்தப்பட்டுள்ளார்கள். வலய அலுவலகங்களுக்குள் மேற்கொள்ளப்பட்டு வரும் காணி, நீர்ப்பாசனம், விவசாயம் மற்றும் நிறுவன அபிவிருத்தி போன்ற அத்தியாவசியப் பணிகளை, குடியேற்றவாசிகளுக்கு எத்தகைய சிரமங்களும் இல்லாத விதத்தில் முன்னெடுப்பதற்கென ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அதேபோல திருத்தியமைக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறையின் ஏற்பாடுகளின் அடிப்படையில், நாடெங்கிலும் பணியாற்றி வரும் உத்தியோகத்தர்களுக்கு வாய்ப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன. மகாவலி B மற்றும் C வலயங்கள் தொடர்பாக வெளியிலிருந்து இணைத்துக்கொள்ளும் அடிப்படையில் வதிவிட கருத்திட்ட முகாமையாளர் பதவியின்

பணிகளை மேற்கொள்வதற்கு இரு உத்தியோகத்தர்கள் அமர்த்தப்பட்டுள்ளார்கள் என்பதனை தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

4.9 வாகனங்களின் பாவனை

முதன்மை வேலைகள் நிர்வாகம், இயக்குதல் மற்றும் பராமரிப்பு அலகின் மூலம் கழித்தொகுக்குவதற்கென குறிப்பிடப்பட்டிருந்த வாகனங்களில் 50-2641,36-3573, 42-03889 ஆகிய வாகனங்கள் 2017ஆம் ஆண்டில் கழித்தொகுக்கப்பட்டுள்ளன. ஏனைய வாகனங்களின் பதிவு உரித்து மற்றும் பதிவு விபரங்கள் என்பவற்றில் பொருத்தமின்மைகள் நிலவி வந்த காரணத்தினால் 2017ஆம் ஆண்டில் அவற்றை கழித்தொதுக்க முடியவில்லை. ஆலோசனைச் சேவைகளை வழங்கிய நிறுவனங்களான IAZAMATODA – SKANSKA ஆகிய நிறுவனங்களின் பெயர்களில் அந்த வாகனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்நிறுவனங்கள் தற்பொழுது இலங்கையில் செயற்பட்டு வரவில்லை. அதன் காரணமாக நிதியமைச்சுக்குள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் கட்டுப்பாட்டாளர் அதிபதி அலுவலகத்திற்கு ஊடாக செயற்பட்டு, மேற்படி வாகனங்களை கழித்தொகுக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை தெரிவித்துக் கொள்கிறேன்.

5.1 நிலைத்து நிற்கக்க கூடிய அபிவிருத்தி

நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகள் அமைப்பின் 2030ஆம் ஆண்டுக்கான நிகழ்ச்சி நிரல் தொடர்பாக அனைத்து அரச நிறுவனங்களும் நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டியிருந்த போதிலும், அது தொடர்பாக இலங்கை மகாவலி அதிகார சபைக்கு உரிய விதத்தில் விளக்கங்களை அளிப்பதற்கு சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அதன் காரணமாக இது தொடர்பாக இணையத்திற்கு ஊடாக இலங்கை மகாவலி அதிகார சபை விளக்கங்களை பெற்றுக்கொண்டுள்ளது என்பதனை தெரிவித்துக் கொள்கின்றேன். அதன் பிரகாரம் சம்பந்தப்பட்ட வினாக்கொத்துக்கு பதில் அளிக்க முடியாதிருந்தது.

நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகள் அமைப்பின் வருடம் 2030 நிகழ்ச்சி நிரலை அமுல் செய்வது தெடர்பாக 2018.03.12ஆம் திகதி PED/2017/SDG/05 இலக்கம் கொண்ட கடிதத்தின் மூலம் தகவல்களை பெற்றுக்கொள்வதற்கென ஒரு வினாக் கொத்து சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், மேலே (1) மூலம் தெரிவித்துள்ளவாறு, அது தொடர்பான விளக்கம் அளித்தல் அடிப்படையில் குறிப்பிட்ட காலப் பிரிவுக்குள் அதற்கு பதிலளிக்க முடியாதிருந்தது. எனினும், 2018 அக்டோபர் மாதம் 05ஆம் திகதி அளவில் சம்பந்தப்பட்ட வினாக் கொத்து எமக்கு கிடைத்த பின்னர் அது தொடர்பாக சம்பந்தப்பட்ட பிரிவுகளுடன் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டு, பதில்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

வருடம் 2030 நிகழ்ச்சி நிரல் தொடர்பாக இலங்கை மகாவலி அதிகார சபை இணையத்திற்கு ஊடாக விளக்கங்களை பெற்றுக்கொண்ட பின்னர், எமது நிறுவனத்திற்கு பொருந்தக் கூடிய நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்தி குறிக்கோள்கள், இலக்குகள் மற்றும் குறிகாட்டிகள் என்பவற்றை தயாரித்து சம்பந்தப்பட்ட பிரிவுகளுக்கு விளக்கமளிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்குகள் என்பவற்றை தயாரித்து, அந்த இலக்குகளை நிறைவேற்றிக் கொள்வதற்கென சம்பந்தப்பட்ட பணிகளை முன்னெடுப்பதற்கு தேவையான நிதி ஒதுக்குகளையும் உள்ளடக்கிய விதத்தில் 2019 ஆம் ஆண்டு தொடர்பான செயற்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

6. கணக்கு நடைமுறை மற்றும் நல்லாட்சி

6.1 கணக்குக் கூற்றுக்களை சமர்ப்பித்தல்

ஏற்றுக்கொள்கின்றேன்.

இலங்கை மகாவலி அதிகார சபையின் இறுதிக் கணக்குகள் 10 வலய அலுவலகங்கள், பிரதான பிரிவுகள் மற்றும் அத்துடன் ஏனைய ஒரு சில பிரிவுகளுடன் இணைந்த விதத்தில் மத்தியமயப்படுத்தப்பட்டிருக்கும் கணக்கு முறைமை இயலின் கீழ் கணணி மயப்படுத்தப்பட்ட ஒரு கணக்கு முறையை பயன்படுத்தாது, கையால் இயக்கப்படும் (Manual System) முறையை பயன்படுத்தி தயாரிக்கப்பட்டு வருகின்றன. அத்துடன் இலங்கை மகாவலி அதிகார சபையின் கீழ் இருந்து வரும் மகாவலி கம்பனிகளின் கணக்குகளை ஒன்று திரட்டுவதில் சம்பந்தப்பட்ட வலயங்கள் / பிரிவுகள் மற்றும் கம்பனிகள் என்பவற்றில் காணப்படும் கணக்கீட்டு ரீதியான குறைபாடுகள் நிலவி வந்த காரணத்தினால் அவற்றை திருத்த வேண்டிய தேவையும் இருந்து வந்தது. இந்த நிலையில் ஐந்தொகையில் தளபாடங்கள் மற்றும் பொருத்துக்கள் தொடர்பான பெறுமானத் தேய்வு முடிவடைந்த நிலையில் 2018 ஆம் ஆண்டில் அவற்றை மீள் பெறுமதி மதிப்பீடு செய்து (Revaluation), கணக்குகளில் சீராக்கங்களை செய்ய வேண்டியிருந்தது. இதன் காரணமாக திரண்ட கணக்குகளை தயாரித்து, சமர்ப்பிப்பதில் ஒரு தாமம் ஏற்பட்டிருந்தது.

6.2 உள்ளக் கணக்காய்வு

தற்பொழுது பணிப்பாளர் (உள்ளக் கணக்காய்வு) பதவி தொடர்பாக நிரந்தர அடிப்படையில் பெண் உத்தியோகத்தர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

6.3 கொள்வனவு மற்றும் ஒப்பந்த செயன்முறை

(அ) ஒப்பந்தம் தொடர்பான இறுதிக் கால நீட்டிப்பு திகதியான 2018 யூலை 02ஆம் திகதியின் பின்னர் ஒப்பந்த தரப்பினரால் மேலும் காலநீடிப்பு தொடர்பாக வேண்டுகோள்

விடுக்கப்படாதிருந்த காரணத்தினால், 2018.08.15 ஆந் திகதி அன்று ஒப்பந்த வேலைகள் முடிவடைந்துள்ளதாக சான்றிதழ்கள் வழங்கப்பட்டு, கட்டணப் பட்டியல்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட கடிதங்களின் பிரகாரம், இறுதியாக கால நீட்டிப்பு செய்யப்பட்ட திகதியிலிருந்து 2018 ஆகஸ்ட் மாதம் 15 ஆந் திகதி வரையில் தாமதக் கட்டணமாக ரூ.103,336.31 தொகை முதலாவது மற்றும் இறுதி கட்டணப் பட்டியல்களில் அறவிடப்பட்டுள்ளது.

செலவு மதிப்பீடுகளை தயாரிப்பதில் காவலரணை தரையில் நிர்மாணிப்பதற்கென சம்பந்தப்பட்ட உருப்படிகள் சேர்க்கப்பட்டு, செலவு மதிப்பீடுகளுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டிருந்தது. ஆனால், பாதுகாப்பு பிரிவின் அந்த இடத்தில் பணியாற்றும் உத்தியோகத்தர்கள் அண்மைக் காலம் வரையில் அடிக்கடி யானைகளின் நடமாட்டம் நிலவி வந்ததன் காரணமாக அவர்களுடைய அரண்களின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு, உயர்ந்த இடத்தில் காவலரணை நிர்மாணித்து தருமாறு ஒரு வேண்டுகோளை முன்வைத்திருந்தார்கள். அதனை அடுத்து ஒப்புதல் வழங்கப்பட்டிருந்த செலவு மதிப்பீட்டுக்கு ஒரு புரிய உருப்படி சேர்த்துக் கொள்ளப்பட்டது. திருத்தியமைக்கப்பட்ட செலவு மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருப்பதாக பிரதி வதிவிட கருத்திட்ட முகாமையாளர் (தொழில்நுட்பச் சேவைகள்) உறுதிப்படுத்தியுள்ளார்.

திருத்தப்பட்ட செலவு மதிப்பீடொன்றை தலைமை அலுவலகத்தில் சமர்ப்பித்து, அதற்கு ஒப்புதலை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. செலவு மதிப்பீட்டை தயாரிக்கும் பொழுது காவல் அரணை தரைக்கு மேல் நிர்மாணிப்பதற்கென சம்பந்தப்பட்ட உருப்படிகளை உள்ளடக்கி, செலவு மதிப்பீட்டுக்கு ஒப்புதல் பெறப்பட்டிருந்தது. எனினும், அந்த இடத்தில் பணி புரிந்து வரும் பாதுகாப்பு பிரிவின் ஊழியர்கள் அந்த இடத்திற்கு அடிக்கடி யானைகள் நடமாட்டம் காணப்படுவதல், தமக்கு யானைகளை விரட்டும் வெடிபொருட்கள் வழங்கப்படாத நிலை என்பன காரணமாக பாதுகாப்பு காவல் அரணை உயர்ந்த இடம் ஒன்றில் அமைத்து தருமாறு வேண்டுகோள் விடுத்திருந்தார்கள். அதனை அடுத்து ஒப்புதல் அளிக்கப்பட்டிருந்த செலவு மதிப்பீட்டில் ஒரு புதிய உருப்படி சேர்த்துக்கொள்ளப்பட்டு, செலவு மதிப்பீடு திருத்தப்பட்டது. மேலும், வலயத்தில் பணி புரிந்து வரும் தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவிகளில் நிலவி வரும் வெற்றிடங்கள் மற்றும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்கள் மிகக் குறைந்தபட்ச வசதிகளுக்கு மத்தியில் தமது பணிகளை மேற்கொண்டு வரும் நிலை என்பவற்றின் காரணமாக ஒரு சில சந்தர்ப்பங்களில் உரிய காலப் பிரிவுகளுக்குள் ஒப்புதலுக்கென ஆவணங்களை சமர்ப்பிப்பதற்கு முடியாதிருந்தது. பெரும்பாலான சந்தரப்பங்களில், தேவைப்படும் முன்னேற்றத்தை பெற்றுக்கொள்வதற்கென அத்தியாவசியப் பணியாகக் கருதி, பிரதி வதிவிட கருத்திட்ட முகாமையாளர் (பொறியியல்) ஏனைய உத்தியோகத்தர்களுடன் இணைந்து வெளிக்களத்தில் அளவீட்டுப் பணிகளில் ஈடுபட வேண்டி நேரிடுகின்றது.

அனைத்து நிர்மாண வேலைகளும் தொடர்பான தரக் கட்டுப்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்கள் ஏற்கனவே அமுல் செய்யப்பட்டு வருவதுடன், கட்டுமானத் துறையில் இடம்பெறும் தவறுகளை குறைத்துக்கொள்வதற்கென நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என்பதனை மேலும் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். வதிவிட கருத்திட்ட

முகாமையாளர் (தொழில்நுட்ப சேவைகள்) இதனை உறுதிப்படுத்தியிருப்பதாக (B வலயம்) வதிவிட திட்ட முகாமையாளர் எமக்குத் தெரிவித்துள்ளார்.

(ஆ) றுகுணுகெத்த சுற்றுலா விடுதியின் கட்டுமான வேலைகள் இடம்பெற்று வந்த பொழுது யானைகளால் ஏற்பட்ட சேதம் குறித்த அறிக்கைகள் கிடைத்திருக்கவில்லை. அதன் காரணமாக ஒரு சாதாரண வேலி அமைக்கப்பட்டிருந்தது. இப்பிரதேசத்தில் யானைகளால் ஏற்படும் சேதங்கள் தொடர்பாக அங்கு பணி புரிந்த உத்தியோகத்தர்களுக்கு நல்ல அனுபவம் இருந்து வரும் காரணத்தினால், அவ்விதம் யானைகள் வருவதாக அவதானிக்கப்பட்டிருந்தால் அது தொடர்பாக அவர்கள் நிவர்த்தி நடவடிக்கைகளை எடுத்திருப்பார்கள். எவ்வாறிருப்பினும், இத்தகையை நிலைமைகள் எதிர்காலத்தில் தோன்றாதிருப்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளும் பொருட்டு சம்பந்தப்பட்ட தரப்பினர் அனைவருக்கும் விளக்கங்களை அளிப்பது பொருத்தமானதாகும்.

(இ) SYH/FD/37 இஹல தலாவ குளத்தின் நீர் வினியோக கால்வாய் -

இந்த ஒப்பந்த வேலை 2017.10.13ஆம் திகதி வழங்கப்பட்டிருந்தது. ஒப்பந்த காலப் பிரிவு 90 நாட்கள் ஆகும். செயலாற்றுகை பிணை 2018.02.23 ஆம் திகதி முடிவடைந்திருந்தது. ஆனால், அக்காலப் பிரிவு 2017/ 2018 பெரும்போக சாகுபடிக்கென நீர் விநியோகம் இடம்பெற்று வந்த காலப் பிரிவாக இருந்து வந்தது. H வலயத்தின் நீர்ப்பான நீரை வழங்கும் காலப் பிரிவின் போது ஏழு நாட்கள் அல்லது எட்டு நாட்கள் நீர் வினியோக முறை அமுல் செய்யப்பட்டு வந்த போதிலும், இஹல தலாவ குளத்தின் நீர் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் பிரதானமாக குளத்துடன் சம்பந்தப்பட்ட விவசாய அமைப்புக்களினாலேயே மேற்கொள்ளப்பட்டு வருவதாக வதிவிட கருத்திட்ட முகாமையாளர் (H வலயம்) தெரிவித்துள்ளார்.

பெரும்பாலும் இந்த நான்கு நாள் நீர் வினியோகத்தை பெற்றுக்கொண்டு, மூன்று நாட்களுக்கான நீர் வினியோக முறை பின்பற்றப்படுவதில்லை. எனினும், இது திட்டவட்டமான விதத்தில் இடம்பெற்றிருக்கவில்லை. ஒரு சில மாற்றங்களின் அடிப்படையில் ஒப்பந்தத்தின் வேலைகளை உரிய திகதியில் மேற்கொள்ள முடியாதிருந்தது. ஒப்பந்தாரர்கள் 2018.02.26 ஆந் திகதி, 2018.09.25, 2018.10.01 ஆந் திகதியிட்ட கடிதங்களின் மூலம் காலப் பிரிவை நீட்டித்து தருமாறு வேண்டுகோள் விடுத்திருந்தார்கள். செயலாற்றுகை பிணைக் காலத்தை 2018.09.30 திகதி ஆந் திகதி வரையில் குறிப்பிட்டு, அதனை மீண்டும் 2018.10.31 ஆந் திகதி வரையில் நீட்டிப்பதற்கு இலங்கை வங்கியிடம் கடிதங்கள் ஒப்படைக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்த ஒப்பந்தம் தாமதமடைவதற்கு முக்கியமான காரணம் நீர் விநியோக கால்வாய்களுக்குள் தொடர்ச்சியாக நீர் விநியோகம் இடம்பெற்றிருந்தமையாகுமென வதிவிட கருத்திட்ட முகாமையாளர் (H வலயம்) தெரிவித்துள்ளார்.

- நொச்சியாகம பஹல மில்லாவ குளம் -

இந்தச் செயலாற்றுகை பிணை 2018 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 20 ஆந் திகதி முடிவடைகின்றது என்பது உண்மையாகும். 2017/ 2018 பெரும்போகம் தொடர்பாக நீர் விநியோக வேலைகள் இடம்பெற்று வந்த காரணத்தினால் இதன் நிர்மாண வேலைகளை தற்காலிகமாக நிறுத்த வேண்டி நேரிட்டதாக (H வலயத்தின்) வதிவிட கருத்திட்ட முகாமையாளர் உறுதிப்படுத்தியுள்ளார். மேலும், 2017/ 2018 பெரும்போகத்திற்கான நீர் வினியோக நடவடிக்கைகள் மார்ச் மாத முடிவரையில் இடம்பெற்று வந்தன. 2018 ஏப்ரல் மாத இறுதிப் பாகத்திலும் மற்றும் மே மாதம் நெடுகிலும் மழை வீழ்ச்சி இடம்பெற்ற காரணத்தினால் நிர்மாண வேலைகளை மேற்கொள்ள முடியாதிருந்தது. 2018 ஆம் ஆண்டு மே மாதம் சிறு போகத்திற்கென நீர் விநியோக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டமையினால் நிர்மாண வேலைகளில் தாமதம் ஏற்பட்டது. இந்த ஒப்பந்தம் தொடர்பான நிர்மாண நடவடிக்கைகள் 2018 ஆகஸ்ட் மாதமளவில் முடிவடைந்துள்ளன. அத்துடன் இக்காலப் பிரிவு வரையில் ஒப்பந்த காலத்தை நீட்டிப்பதற்கு இந்தக் காரணிகள் போதுமானவையாகும். ஒப்பந்ததாரர் இதுவரையில் இறுதிக் கட்டணப் பட்டியல்களை பூர்த்தி செய்திருக்கவில்லை. இறுதிக் கட்டணப் பட்டியலை பெற்றுக்கொள்வதற்கு முன்னர் செயலாற்றுகை பிணையை சமர்ப்பிக்க வேண்டியுள்ளது.

- பாளுகம கால்வாய் -

இந்த ஒப்பந்தத்தின் செயலாற்றுகை பிணை 2018.05.26ஆம் திகதி முடிவடைவதுடன், அக்காலம் அளவில் ஒப்பந்தத்தின் கட்டுமான வேலைகளில் 90% இற்கு மேல் முன்னேற்றம் ஏற்பட்டிருந்தது. பிரதான உருப்படிகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. சுற்றிலும் நிரப்பும் செயற்பாடு (Back filling) மற்றும் நிர்மாண கழிவுப் பொருட்களை துப்பரவு செய்தல் ஆகிய வேலைகள் மட்டுமே எஞ்சியிருந்தன. அதன் பிரகாரம், மேற்படி ஒப்பந்த வேலை தொடர்பாக, ஒப்பந்தம் போதியளவில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது என்ற சான்றிதழை வழங்குவதற்கு 2018.05.26 ஆம் திகதி நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

மேலே குறிப்பிடப்பட்ட விடயங்களின் அடிப்படையில் ஒப்பந்தம் தொடர்பான காலப் பிரிவை நீட்டிப்பது நியாயமானதாக இருந்து வந்த காரணத்தினால் அதற்கான தாமதக் கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை என H வலயத்தின் வதிவிட கருத்திட்ட முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

6.4 வரவுசெலவுத்திட்ட கட்டுப்பாடு

(அ) ஏற்றுக்கொள்கிறேன்.

அந்தந்த செலவுத் தலைப்புக்களின் கீழ் ஒதுக்கப்பட்டிருக்கும் மூலதன ஒதுக்குகளின் உச்ச வரம்புக்குள் செயற்படுமாறு அனைத்து பிரிவுத் தலைவர்களுக்கும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருந்தன. 2019 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்குகளின் உச்ச வரம்புக்குள் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு குறித்துக்கொள்ளப்பட்டுள்ளது.

(ஆ) ஏற்றுக்கொள்கிறேன்.

2018ஆம் ஆண்டின் நிதி ஒதுக்குகளை அந்தந்த வலயங்களுக்கு / பிரிவுகளுக்கு பிரித்துக் கொடுப்பது தொடர்பாக வலயங்களுக்கு / பிரிவுகளுக்கு விளக்கமளிக்கப்பட்ட போது, ஒதுக்குகள் மேற்கொள்ளப்படாதிருப்பின் எத்தகைய செலவுகளையும் மேற்கொள்ள வேண்டாமென அனைத்து பிரிவுத் தலைவர்களுக்கும் எழுத்து மூலம் தெரிவிக்கப்பட்டிருந்தது. அந்தந்த செலவுத் தலைப்புக்களின் கீழ் ஒதுக்கப்பட்டிருக்கும் மூலதன ஒதுக்குகளின் உச்ச வரம்புக்குள் செயற்படுமாறு அனைத்து பிரிவு தலைவர்களுக்கும் தெரிவிக்கப்பட்டிருந்தது. அத்துடன் 2018 ஆம் ஆண்டில் போலவே 2019ஆம் ஆண்டிலும் ஒதுக்கப்பட்டிருக்கும் நிதி ஒதுக்குகளின் உச்ச வரம்புக்குள் நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு குறித்துக் கொள்ளப்பட்டுள்ளது.

இந்த உருப்படி தொடர்பான நிதி திறைசேரியிலிருந்து கிடைக்கவில்லை. அதன் காரணத்தினால் எந்தவொரு செலவையும் மேற்கொள்ள முடியவில்லை என்பதனை தயவுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

6.5 ஆண்டறிக்கையை சபையில் சமர்ப்பித்தல்

ஒரு தாமம் ஏற்பட்டுள்ளது என்பதனை ஏற்றுக்கொள்கின்றேன். எதிர்காலத்தில் இந்நிலைமையை நிவர்த்தி செய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை தெரிவித்துக்கொள்கின்றேன்.

6.7 தீர்க்கப்படாதிருக்கும் கணக்காய்வு விடயங்கள்

(அ)(ஆ) இது தொடர்பாக மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பதற்கு குறித்துக் கொள்ளப்பட்டுள்ளது.


(இ) இது தொடர்பான நீதிமன்ற நடவடிக்கைகள் இன்னமும் முடிவடையவில்லை. நீதிமன்ற தீர்ப்பின் பிரகாரம் மேற்கொண்டு நடவடிக்கைகளை மேற்கொள்வேன்.

(ஈ) இந்தச் சம்பவத்துடன் சம்பந்தப்பட்டிருக்கும் மூன்று உத்தியோகத்தர்களும் தற்காலிகமாக பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். அது தொடர்பான முறையான ஒழுக்காற்று விசாரணை ஒன்று ஏற்கனவே இடம்பெற்று வருகின்றது. இந்த விடயம் சட்ட நடவடிக்கைகளுக்கென அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

(உ) இந்தக் கட்டடங்களின் பெறுமதியை கணக்கேடுகளுக்குள் எடுத்து வருவதற்கு முன்னர், அவற்றை விலை மதிப்பீடு செய்ய வேண்டிய தேவை இருந்து வருகின்றது. விலை மதிப்பீட்டை மேற்கொள்வதற்கென ஏற்கனவே விலை மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட விலை மதிப்பீடு கிடைத்த பின்னர், உரிய பெறுமதியை கணக்கேடுகளில் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன்.

7. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

அ இலிருந்து ஏ வரையில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் விடயங்கள் தொடர்பாக விசேடமாக கவனம் செலுத்தி, நடவடிக்கை எடுப்பதற்கென குறித்துக் கொள்ளப்பட்டுள்ளது.



கலாநிதி டி.எம்.எஸ். திசாநாயக்க
பணிப்பாளர் நாயகம்,
இலங்கை மகாவலி அதிகார சபை

பிரதிகள் -

செயலாளர் - மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு - தகவலுக்காக

செயலாளர் - நிதி மற்றும் ஊடக அமைச்சு - தகவலுக்காக

பணிப்பாளர் (உள்ளகக் கணக்காய்வு) - தகவல் மற்றும் உரிய நடவடிக்கைகளுக்காக

இலங்கை மகாவலி அதிகார சபையின் செயலாற்றுகை அறிக்கை மற்றும் முதலீட்டு திட்டம்

2017

2017 ஆம் வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திச் செயற்பாடுகள்

1.1 திரண்ட நிதிசார் முன்னேற்றம்

2017 ஆம் வருடம் தொடர்பாக மொத்த மூலதன முதலீடு ரூ. 3,385.40 மில்லியன் ஆகும். 2017 ஆம் ஆண்டின் முடிவின் போது நிலவிய நிதிசார் முன்னேற்றம் கீழே அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

விவரணம்	வரவுசெலவுத்திட்ட ஒதுக்கு	விடுவிக்கப்பட்ட தொகை (2017 டிசம்பர் முடிவு வரையில் (ரூ. மில்லியன்)	செலவு (2017 டிசம்பர் முடிவு வரையில் (ரூ. மில்லியன்)
மகாவலி கருத்திட்டங்கள்	**1,810.00**	**1,422.85**	**1,422.85**
மகாவலி ஒருங்கிணைந்த கருத்திட்டம் (ஒருங்கிணைந்த நிதியம்)	500.00	433.00	433.00
B வலயத்தின் மாதுறுஓயா வலது கரை அபிவிருத்திக் கருத்திட்டம் (ஒ.நி)	150.00	109.00	109.00
ரிதிமாலியத்த ஒருங்கிணைந்த அபிவிருத்திக் கருத்திட்டம் (ஒ.நி)	110.00	79.90	79.90
றம்பக்கன்ஓயா ஒருங்கிணைந்த அபிவிருத்திக் கருத்திட்டம் (ஒ.நி)	115.00	92.68	92.68
வெலிஓயா ஒருங்கிணைந்த அபிவிருத்திக் கருத்திட்டம் - L வலயம் (ஒ.நி)	400.00	316.42	316.42
மகாவலி கெட்டம்பே ஆற்றங்கரையோரத்தை பாதுகாக்கும் நிகழ்ச்சித்திட்டத்திற்கு செயல் வடிவம் கொடுத்தல் (ஒ.நி)	16.50	15.50	15.50
அவசர உள்கட்டமைப்பு புனரமைப்பு வேலையையும் உள்ளடக்கிய பெரிய மற்றும் நடுத்தர அளவு நீர்ப்பாசன கருத்திட்ட புனரமைப்பு (ஒ.நி)	273.50	180.67	180.67
விவசாய மற்றும் கால்நடை வளங்களின் அபிவிருத்திக் கருத்திட்டம் (ஒ.நி)	220.00	179.55	179.55
கிவுல்ஓயா அபிவிருத்திக் கருத்திட்டம் (ஒ.நி)	25.00	16.13	16.13
நிர்வாகம் மற்றும் பராமரிப்பு (ஒ.நி)	**1,575.40**	**1,560.77**	**1,339.00**
மொத்தம்	**3,385.40**	**2,983.62**	**2,761.85**

1.2 மகாவலி கருத்திட்டங்கள்

1.2.1 மகாவலி ஒருங்கிணைந்த கருத்திட்டம்

நிதி ஒதுக்கீடு : உள்நாட்டு நிதிகள்

மதிப்பிடப்பட்ட செலவுத் தொகை : ரூ. மில்லியன் 4,910 (திருத்தப்பட்ட செலவு ஒதுக்கீடு)

கருத்திட்ட காலப் பிரிவு: 2007-2018

மகாவலி ஒருங்கிணைந்த கருத்திட்டம் நீர்ப்பாசன நீர் விநியோகத்தை உறுதிப்படுத்தி, விவசாயப் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு ஊடாக மாதுறுஓயா இடது கரைப் பிரதேசத்தில் வாழ்ந்து வரும் கிராமிய சமூகத்தினரின் பொருளாதார அபிவிருத்தியை எடுத்து வரும் குறிக்கோளுடன் ஆரம்பிக்கப்பட்டது. இந்தக் கருத்திட்ட செயற்பாடுகளின் கீழ் 1982 - 1986 காலப் பிரிவின் போது நிர்மாணிக்கப்பட்ட நீர்ப்பாசனக் கட்டமைப்புக்களை புனரமைப்புச் செய்வதும் அடங்குகின்றது. (அ) மாதுறுஓயா வலது கரை நீர்ப்பாசன புனரமைப்புத் திட்டத்தின் கீழ் 52 கிலோ மீற்றர் நீளமான பிரதான கால்வாய், 65கிலோ மீற்றர் நீளமான கிளைக் கால்வாய்கள், 459 கிலோ மீற்றர் நீளமான நீர் விநியோகக் கால்வாய்கள், 138 வயல் நீர்ப்பாய்ச்சல் கால்வாய்கள், 54 கிலோ மீற்றர் நீளமான நீரை எடுத்துச் செல்லும் கால் வாய்கள், 80 கிலோ மீற்றர் நீளமான கிராமியப் பாதைகள் என்பவற்றின் இயக்குதல் மற்றும் பராமரிப்புச் செயற்பாடுகளையும், சிறிய குளங்களின் புனரமைப்புச் செயற்பாடுகளையும் உள்ளடக்கிய விதத்தில் நீர் முகாமைத்துவத்திற்கென மாதுறுஓயா இடது கரையில் 1981 - 1986 காலப் பிரிவில் நிர்மாணிக்கப்பட்ட நீர்ப்பாசன கட்டமைப்புக்களை புனரமைப்புச் செய்தல்; (ஆ) கிராமிய சுய உதவிக் கருத்திட்டங்களின் கீழ் உருவாக்கப்பட்டிருக்கும் தெரிவு செய்யப்பட்ட நீர் விநியோகச் சேவைகளை முறைப்படுத்தி, மேம்படுத்துதல்; (இ) விவசாய அபிவிருத்திக்கு உதவியளித்தல், அதே போல விவசாய அமைப்புக்களை வலுப்படுத்தல்; மற்றும் (ஈ) பொருத்தமான சுற்றாடல் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டங்களை அமுல் செய்தல் என்பன இதில் அடங்குகின்றன.

இல.	விவரணம்	31.12.2017 இல் பௌதீக முன்னேற்றம்
01	வினியோகக் கால்வாய்களின் நிர்மாணம், புனரமைப்பு	13 km
02	வயல் கால்வாய்களின் நிர்மாணம் /புனரமைப்பு	103 km
03	கிராமிய குளங்களை விருத்தி செய்தல்	05
04	கிளைக் கால்வாய்களை புனரமைப்புச் செய்தல் (LBR1)	2.5 km
05	நீரை எடுத்துச் செல்லும் கால்வாய்களின் புனரமைப்பு /அபிவிருத்தி	42 km
06	அறலகன்வில புதிய ஆஸ்பத்திரியின் வார்ட் கட்டடத் தொகுதிக்கான பாதையில் கொங்கிறிட் கற்களை பதித்தல்	0.14 km
07	கட்டடங்களை புதுப்பித்தல்	10
08	அறலகன்வில விதைப் பண்ணையின் மீன் தடாகத்தை நவீனமயமாக்குதல்	01

2017ஆம் வருடத்திற்கான நிதி ஒதுக்கீடு ரூ. 500 மில்லியன் ஆகும். இதில் சுமார் ரூ. 433 மில்லியன் திறைசேரியினால் விடுவிக்கப்பட்டிருந்ததுடன், 2017 ஜனவரி தொடக்கம் டிசம்பர் வரையிலான காலப் பிரிவின் போது மொத்த பணத் தொகைகளும் பயன்படுத்தப்பட்டிருந்தன. மேலும் ரூ. 61.57 மில்லியன் வரவுத் தொகையாக நிலுவையிலிருந்து வருகின்றது.





1.2.2 B வலயத்தின் மாதுறுஓயா வலது கரை அபிவிருத்திக் கருத்திட்டம் (மல்வென்ன மற்றும் மகாவலி தன்ன)

நிதி ஒதுக்கீடு : உள்நாட்டு நிதிகள்
மதிப்பிடப்பட்ட செலவுத் தொகை : ரூ மில்லியன் 935.49
கருத்திட்ட காலப் பிரிவு : 2014 – 2018

பொலன்னறுவை மற்றும் மட்டக்களப்பு நிர்வாக மாவட்டங்களில் மகாவலி B வலயத்தை உள்ளடக்கும் சிங்கபுர மேல் பிரிவில் மகாவலிதன்ன மற்றும் மல்வென்ன மகாவலி வலயங்கள் அமைந்திருப்பதுடன், அவை இக்கருத்திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றன. இப்பிரதேசத்தில் கடந்த ஒரு சில தசாப்தங்களின் போது நிலவி வந்த நெருக்கடி சூழ்நிலை காரணமாக மீளக் குடியேற்றப்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் உள்ளக ரீதியில் இடம்பெயர நேரிட்டது. அதன் விளைவாக மீள்குடியேற்றப்பட்ட சுமார் 1200 குடும்பங்கள் திரும்பவும் அவர்களுடைய சொந்தக் கிராமங்களுக்கு திரும்பிச் சென்றிருந்தார்கள்.

நெருக்கடி நிலைமை தணிந்ததனையடுத்து 2014ஆம் வருடத்தில் இந்த விசேட கருத்திட்டத்தின் கீழ் மீள் குடியேற்றம் மற்றும் புனரமைப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன. இங்கு சிங்கபுர பிரிவில் மல்வென்ன மற்றும் மகாவலிதன்ன அலகுகளில் 859 வீட்டுத் தோட்டக் காணிகளையும், 859 நீர்ப்பாசனக் காணிகளையும் அபிவிருத்தி செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தது. பின்வருவன இக்கருத்திட்டத்தின் முதன்மையான செயற்பாடுகளாக இருந்து வந்தன: (அ) 859 இடம்பெயர்ந்த குடும்பங்களை சிங்கபுர பிரிவில் மீளக்குடியேற்றுதல் மற்றும் அவர்களுடைய குடியேற்றத்தை மீள ஸ்தாபித்தல்; (ஆ) தற்பொழுது நிலவி வரும் நீர்ப்பாசனத்தை அடிப்படையாகக் கொண்ட 521 ஹெக்டெயார் நிலப்பரப்பை விவசாயத்திற்கென அபிவிருத்தி செய்தல்; மற்றும் 174 ஹெக்டெயார் நிலப்பரப்பை வீட்டுத் தோட்டங்களுக்கென அபிவிருத்தி செய்தல்; (இ) மகாவலிதன்ன குளம் மற்றும் ஏனைய நீர்ப்பாசனக் கட்டமைப்புக்கள் என்பவற்றை நிர்மாணித்தல்.

2017ஆம் வருடத்திற்கான (திருத்தப்பட்ட) நிதி ஒதுக்கீடு ரூ. 500 மில்லியன் ஆகும். இத்தொகையில் சுமார். ரூ. 109 மில்லியன் தொகை மட்டும் திறைசேரியினால் விடுவிக்கப்பட்டிருந்தது. 2017 ஜனவரி தொடக்கம் டிசம்பர் வரையிலான காலப் பிரிவின் போது அந்த முழுத் தொகையும் பயன்படுத்தப்பட்டிருந்தது. மேலும், ரூ. 28.04 மில்லியன் வரவுத் தொகையாக நிலுவையிலிருந்து வருகின்றது.

இல.	விவரணம்	31.12.2017 இல் பௌதீக முன்னேற்றம்
01	நீர் விநியோகக் கால்வாய்களின் நிர்மாணம் /புனரமைப்பு	1.5 km
02	வயல் கால்வாய்களின் நிர்மாணம் /புனரமைப்பு	7.7 km
03	சந்தை மற்றும் கிராமிய பாதைகளின் நிர்மாணம்	2.62 km
04	வீதியில் கொங்கிறிட் கற்களை பதித்தல்	1.16 km
05	நீர் நிலையங்களை அணுகும் பாதையை திருத்தியமைத்தல்	111 m
06	நீரை எடுத்துச் செல்லும் கால்வாய்களின் அபிவிருத்தி / தோண்டுதல்	7.5 km
07	கிராமிய வீதிகள்	12





1.2.3 ரிதிமாலியத்த ஒருங்கிணைந்த அபிவிருத்திக் கருத்திட்டம்

நிதி ஒதுக்கீடு : உள்நாட்டு நிதிகள்

மதிப்பிடப்பட்ட செலவுத் தொகை : ரூ. 1100 மில்லியன்

கருத்திட்ட காலப் பிரிவு : 2012-2018

குடிசனவியல், புள்ளிவிபரத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட குடும்ப வருமானம் மற்றும் செலவு மதிப்பீட்டாய்வின் பிரகாரம் பதுளை நிர்வாக மாவட்டத்தில் அமைந்திருக்கும் ரிதிமாலியத்த பிரதேச செயலாளர் பிரிவு மிகவும் தொலைதூரத்தில் அமைந்திருப்பதுடன், மிக உயரளவிலான வறுமை நிலவும் பிரதேச செயலாளர் பிரிவாக இனங்காணப்பட்டுள்ளது. எனவே, இப்பிரதேசத்தை அபிவிருத்தி செய்யும் நோக்கத்துடன் இலங்கை மகாவலி அதிகார சபையினால் ஐந்தாண்டு முதலீட்டுத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டது. இப்பிரதேசத்தின் உள்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்தல், இப்பிரதேசங்களில் வாழ்ந்து வரும் குடும்பங்களுக்கு விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட பயனுள்ள, அதே போல நிலைத்து நிற்கக்கூடிய பொருளாதார செயற்பாடுகளை ஏற்படுத்திக் கொடுத்தல் என்பன இக்கருத்திட்டத்தின் அடிப்படை நோக்கங்களாகும். இதன் கீழ் (அ) வர்த்தகப் பயிர்களின் உற்பத்தியை விருத்தி செய்தல், (ஆ) கால்நடை வளங்களின் அபிவிருத்தி, (இ) தொழில் முனைவு அபிவிருத்தி போன்ற விடயங்கள் தொடர்பாக முதன்மையாக கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது.

இந்த வரும் தொடர்பான ரூபா 110 மில்லியன் நிதி ஒதுக்கீட்டில் திறைசேரினால் ரூ. 79.90 மில்லியன் விடுவிக்கப்பட்டிருந்தது. 2017ஆம் ஆண்டின் போது இந்த முழுத் தொகையும் பயன்படுத்தப்பட்டது. மேலும், ரூ.14.48 மில்லியன் வரவு நிலுவையாக இருந்து வருகின்றது.

இல.	விபரம்	31.12.2017 இல் பௌதீக முன்னேற்றம்
01	வீதி திருத்த வேலைகள்	2.7 km
02	நீர்ப்பாசனக் கட்டமைப்புக்களின் புனரமைப்பு	3 km
03	விவசாயக் கிணறுகளை அமைத்தல்	19
04	குடிநீர் கிணறுகளை அமைத்தல்	65
05	பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்	11





1.2.4 நம்பக்கன்ஓயா ஒருங்கிணைந்த அபிவிருத்திக் கருத்திட்டம்

நிதி ஒதுக்கீடு : உள்நாட்டு நிதிகள்

மதிப்பிடப்பட்ட செலவுத் தொகை: ரூ.1,086 மில்லியன்

கருத்திட்ட காலப் பிரிவு : 2012-2019

நம்பக்கன்ஓயா ஒருங்கிணைந்த மகாவலி கருத்திட்டத்தின் மூலம் அம்பாறை மாவட்டத்தில் மகாஓயா மற்றும் பதியதலாவ பிரதேச செயலாளர் பிரிவுகளின் நீர்த்தேக்கங்கள் மற்றும் நீர்ப்பாசன அபிவிருத்தி தொடர்பாக முக்கியமாக கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது. இந்தக் கருத்திட்டத்தின் அடிப்படை நோக்கங்கள் வருமாறு: (அ) சிறிய மற்றும் நடுத்தர அளவு குளங்கள் மற்றும் அணைக்கட்டுக்கள் என்பவற்றை புனரமைத்தல்; (ஆ) 70 கிலோ மீற்றர் நீளமான கிராமியப் பாதைகளை புனரமைத்தல். (இ) விவசாய உற்பத்தியை 50% ஆக அதிகரித்தல் (ஈ) குடிநீர் கிணறுகளை அமைப்பதற்கு ஊடாக நீர் விநியோகம் (உ) கிணறுகள் மற்றும் பொதுச் சுகாதார பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் (கழிப்பறைகளை) அமைத்தல்.

2017ஆம் வருடம் தொடர்பாக இதற்கான நிதி ஒதுக்கீடு ரூ. 115 மில்லியன் ஆகும். இதில் ரூ. 92.86 மில்லியன் திறைசேரியினால் விடுவிக்கப்பட்டிருந்ததுடன், 2017 ஜனவரி - டிசம்பர் காலப் பிரிவின் போது மொத்தத் தொகையும் இதற்கென செலவிடப்பட்டிருந்தது. மேலும், ரூ.22.32 மில்லியன் தொகை வரவு நிலுவையாக இருந்து வருகின்றது.

இல.	விபரம்	31.12.2017 இல் பௌதீக முன்னேற்றம்
01	வீதிகளை திருத்தி அமைத்தல்	1.65 km
02	குளங்களையும், அணைக்கட்டுக்களையும் புனரமைப்புச் செய்தல்	3
03	விவசாயக் கிணறுகளை அமைத்தல்	5
04	குடிநீர் கிணறுகளை அமைத்தல்	33
05	பொதுச் சுகாதார வசதிகளை வழங்குதல்	121
06	யானை வேலிகளை அமைத்தல்	2 Km





1.2.5 வெலிஓயா ஒருங்கிணைந்த அபிவிருத்திக் கருத்திட்டம் - L வலயம்

நிதி ஒதுக்கீடு : தேசிய உள்நாட்டு நிதிகள்

மதிப்பிடப்பட்ட செலவுத் தொகை: 3,957 மில்லியன்

கருத்திட்ட காலப் பிரிவு : 2012-2018

அநுராதபுரம், வவுனியா, முல்லைத்தீவு மற்றும் திருகோணமலை ஆகிய நிர்வாக மாவட்டங்களை உள்ளடக்கும் விதத்தில் மகாவலி வலயத்தின் அபிவிருத்திக்கென இந்தக் கருத்திட்டம் அமுல் செய்யப்பட்டு வருகின்றது. இடம்பெயர்ந்திருக்கும் 6,788 குடும்பங்களுக்கான வீட்டுத் தோட்டச் செய்கை, நீர்ப்பாசனக் காணிகள், தேவையான பௌதீக மற்றும் சமூக உள்கட்டமைப்பு வசதிகள் என்பவற்றை வழங்குதல் இக்கருத்திட்டத்தின் நோக்கங்களாகும்.

இதன் கீழ் (அ) 11 கிராமங்களில் 6,788 கும்பங்களை மீளக்குடியேற்றுதல்; (ஆ) 4,187 ஹெக்டெயார் விவசாயக் காணிகளை அபிவிருத்தி செய்தல்; (இ) சந்தைகள் மற்றும் கிராமிய வீதிகள் என்பவற்றை விருத்தி செய்தல்; மற்றும் (ஈ) சமூக உள்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்தல் என்பன மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்கென 2017ஆம் ஆண்டு தொடர்பான நிதி ஒதுக்கீடு ரூ. 400 மில்லியன் ஆகும். இதில் ரூ. 316.42 தொகை திறைசேரியினால் விடுவிக்கப்பட்டிருந்ததுடன். 2017 ஜனவரி - டிசம்பர் காலப் பிரிவின் போது இத்தொகையில் 100% பயன்படுத்தப்பட்டிருந்தது. மேலும், ரூ. 28.50 மில்லியன் வரவு நிலுவையாக இருந்து வருகின்றது.

இல.	விபரணம்	31.12.2017 இல் பௌதீக முன்னேற்றம்
01	காணிகளை அடையாளப்படுத்துதல் மற்றும் அளவை செய்தல்	துண்டுகள் 2040
02	நீர்ப்பாசனக் கால்வாய்களை புனரமைத்தல்	3.5 km
03	கழிப்பறைகளை அமைத்தல்	300
04	வீதிகளை அமைத்தல்	25 Km
05	குழாய்க் கிணறுகளை அமைத்தல்	41
06	அலங்கார மீன் உற்பத்தி	தொட்டிகள் 15
07	கட்டடங்களின் நிர்மாணம்	8





1.2.6 மகாவலி கெட்டம்பே ஆற்றங்கரையை பாதுகாக்கும் கருத்திட்டம்

நிதி ஒதுக்கீடு : உள்நாட்டு நிதிகள்

மதிப்பிடப்பட்ட செலவுத் தொகை : ரூ. 698.97 மில்லியன் (திருத்தப்பட்டது)

கருத்திட்டக் காலப் பிரிவு : 2013 – 2017

2013 ஆம் வருடத்தில் ஆரம்பிக்கப்பட்ட இந்தக் கருத்திட்டத்தின் மூலம் கண்டி நிர்வாக மாவட்டத்தின் பேராதனை கெட்டம்பே பிரதேசத்தில் மகாவலி கங்கை ஆற்றோரப் பகுதியில் இடம்பெற்று வந்த தீவிரமான மண் அரிப்பை கருத்தில் கொண்டு, விலங்கு உற்பத்தி சுகாதார திணைக்கள கட்டடம் தொடக்கம் மகிந்த ராஜபக்ஷ தகவல் தொழில்நுட்ப நிலைய வளவு வரையில் 15 மீற்றர் உயரத்துடன் கூடிய 499 மீற்றர் நீளமான கேபியன் மதில் ஒன்றை நிர்மாணிப்பது அடிப்படை நோக்கமாக இருந்து வருகின்றது.

2017ஆம் வருடம் தொடர்பான நிதி ஒதுக்கீடு (திருத்தப்பட்ட தொகை) ரூ. 16.5 மில்லியன் ஆகும். இதில் ரூ. 15.50 மில்லியன் தொகை திறைசேரியினால் விடுவிக்கப்பட்டிருப்பதுடன், 2017ஆம் ஆண்டின் முடிவின் போது அந்த முழுத் தொகையும் பயன்படுத்தப்பட்டிருந்தது. மேலும் ரூ. 1.0 மில்லியன் தொகை வரவு நிலுவையாக இருந்து வருகின்றது. சுற்றாடல் சிக்கல்கள் காரணமாக கட்டுமான வேலைகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருப்பதுடன், இப்பொழுது ஒரு சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகின்றது.

1.2.7 அவசர உள்கட்டமைப்பு வசதிகள் புனரமைப்பையும் உள்ளடக்கிய விதத்தில் பெரிய மற்றும் நடுத்தர அளவு நீர்ப்பாசனக் கருத்திட்டங்களை புனரமைப்புச் செய்தல்

நிதி ஒதுக்கீடு: உள்நாட்டு நிதிகள்

மதிப்பிடப்பட்ட செலவு : ரூ. 825 மில்லியன்

கருத்திட்ட காலப் பிரிவு : 2015-2018

இந்தக் கருத்திட்டத்தின் நோக்கங்கள் வருமாறு: (அ) பூர்வாங்க வேலைகள், நீர்த்தேக்கங்களின் பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு; (ஆ) நீர்ப்பாசன உள்கட்டமைப்பு வசதிகளை புனரமைப்புச் செய்தல்; மற்றும் (இ) இலங்கை மகாவலி அதிகார சபையின் கீழ் வரும் ஹுரூலுவெவ, உடவளவே, மகாவலி D C H L வலயங்கள், முதன்மை வேலைகள் நிர்வாகம், இயக்குதல் மற்றும் பராமரிப்பு பிரிவு என்பவற்றின் கீழ் வரும் பொறுப்பு பொறியியல் பிரிவுகளில் நீர்ப்பாசன நீர் பிரிப்பு கால்வாய்களுக்கு மத்தியில் வீதிகளை நிர்மாணித்தல் மற்றும் புனரமைப்புச் செய்தல். 2017ஆம் ஆண்டுக்கான (திருத்தியமைக்கப்பட்ட) நிதி ஒதுக்கீடு ரூ. 273.5 மில்லியன் ஆகும். இத்தொகையில் திறைசேரியினால் 181 மில்லியன் விடுவிக்கப்பட்டிருந்ததுடன், 2017ஆம் வருடத்தின் முடிவின் போது அந்த முழுத் தொகையும் பயன்படுத்தப்பட்டிருந்தது. மேலும், ரூ. 80.09 மில்லியன் தொகை வரவு நிலுவையாக இருந்து வருகின்றது.

இல.	விபரணம்	31.12.2017 இல் பௌதீக முன்னேற்றம்
01	முதன்மை நீர்த்தேக்கங்களுடன் சம்பந்தப்பட்ட உள்கட்டமைப்பு வசதிகளின் புனரமைப்பு	8 முதன்மை நீர்த் தேக்கங்களில் 95%
01	2017ஆம் வருடத்திற்கான ஆற்றின் கீழ் பிரதேச நீர்ப்பாசன உள்கட்டமைப்பு வசதிகளின் புனரமைப்பு	90%

1.2.8 விவசாய மற்றும் கால்நடை வளங்கள் அபிவிருத்தி கருத்திட்டம்

நிதி ஒதுக்கீடு : உள்நாட்டு நிதிகள்

மதிப்பிடப்பட்ட செலவு: ரூ. 220 மில்லியன்

கருத்திட்ட காலப் பிரிவு: ஒரு வருடம் (01.01.2017- 31.12.2017)

தேசிய உணவு உற்பத்தி நிகழ்ச்சித்திட்டத்துடன் உடன் நிகழ்வாக நாட்டில் உணவுப் பாதுகாப்பினை உறுதிப்படுத்திக் கொள்ளும் பொருட்டு தேசிய விவசாய இறக்குமதிகளை குறைப்பதற்கு வகை செய்யக்கூடிய விதத்தில் உள்நாட்டு உணவுப் பயிர்ச் செய்கை மற்றும் கால்நடை உற்பத்தி என்பவற்றை முழுமையாக விருத்தி செய்வதற்கென இக்கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

2017ஆம் வருடம் தொடர்பாக விவசாயத் துறையின் முன்னுரிமைகள் வருமாறு: பயிர் பன்முகப்படுத்தல், மகாவலி L வலயத்திற்கென பொருத்தமான மிளகாய் வகைகளை அறிமுகம் செய்து வைத்தல், தரமான விதைகளை உற்பத்தி செய்வதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள், பழ

மரங்கள் புனரமைப்பு நிகழ்ச்சித்திட்டங்கள், சேதன உர வகைகளின் பாவனையை அதிகரித்தல், வரட்சியுடன் கூடிய காலநிலைக்கு ஈடுகொடுக்கக்கூடிய விவசாயக் கிணறுகளை அமைத்தல் மற்றும் புனரமைப்புச் செய்தல், உள்நாட்டு பொருளாதார அபிவிருத்திக்கான நிகழ்ச்சித்திட்டம் மற்றும் நீரின் செயல்திறனை உயர்த்துதல். மேலும், விருத்தி செய்யப்பட்ட கால்நடை அபிவிருத்தி வேலைத் திட்டம், திரவப் பால் உற்பத்தி, கோழி உற்பத்தி, நன்னீர் மற்றும் அலங்கார மீன் உற்பத்தி நடவடிக்கைகள் என்பன தொடர்பாக விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயலமர்வுகள் நடத்தப்பட்டன.

2017ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடு 220 மில்லியனாக இருந்து வந்ததுடன், திறைசேரியினால் இது தொடர்பாக ரூ. 179.55 மில்லியன் தொகை விடுவிக்கப்பட்டிருந்தது. 2017ஆம் ஆண்டின் முடிவின் போது அந்த நிதிகள் 100 % பயன்படுத்திக் கொள்ளப்பட்டிருந்தன. மேலும் ரூ. 33.52 தொகை வரவு நிலுவையாக இருந்து வருகின்றது.

விவசாயப் பயிர்களின் சாகுபடி

2016/ 2017 பெரும்போகத்தின் போது மகாவலி பிரதேசங்களில் நெற்சாகுபடி மேற்கொள்ளப்பட்ட நிலப்பரப்பு 56,310 ஹெக்டெயார்களாகும். மகாவலி வலயங்களில் நெல் உற்பத்தி சுமார் 290,816 மெற்றிக் தொன்களாக இருந்து வந்தது. இந்த வருடத்தின் போது மகாவலி வலயங்களில் சராசரி நெல் அறுவடை ஹெக்டெயார் ஒன்றுக்கு 5.13 மெற்றிக் தொன்களாக இருந்து வந்தது (குடிசனவியல், புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் அறுவடை அறிக்கைகளின் பிரகாரம்). 2017 சிறுபோகத்தின் போது நெற்சாகுபடி மேற்கொள்ளப்பட்ட நிலப்பரப்பின் அளவு 42,621 ஹெக்டெயார்களாக இருந்து வந்ததுடன், அறிக்கையிடப்பட்டிருக்கும் நெல் உற்பத்தி 217,011 மெற்றிக் தொன்களாகும். 2016/ 2017 பெரும்போகம் மற்றும் 2017 சிறுபோகம் என்பவற்றில் அறிக்கையிடப்பட்டிருக்கும் மொத்த நெல் உற்பத்தி 507,828 மெற்றித் தொன்களாகும்.

ஏனைய பயிர்களின் சாகுபடி (களப் பயிர்கள், பழ வகைகள், மறிக்கறிகள் மற்றும் நிரந்தப் பயிர்கள் என்பவற்றின் சாகுபடி) 43,414 ஹெக்டெயார் நிலப்பரப்பில் மேற்கொள்ளப்பட்டிருந்தது. சோயா போஞ்சி 5,960 ஹெக்டெயார்களிலும், சோளம் 3,369 ஹெக்டெயார்களிலும், பெரிய வெங்காயம் 1,204 ஹெக்டெயார்களிலும், மிளகாய் 588 ஹெக்டெயார்களிலும், கறுப்புக் கௌப்பி 1,572 ஹெக்டெயார்களிலும், கௌப்பி 593 ஹெக்டெயார்களிலும், நிலக்கடலை 629 ஹெக்டெயார்களிலும் பயிரிடப்பட்டிருந்தன. மேலும் 13,130 ஹெக்டெயார்களில் பழவகைகளும், 6,322 ஹெக்டெயார்களில் நிரந்தரப் பயிர்களும் சாகுபடி செய்யப்பட்டிருந்தன.

விவசாயத் திணைக்களத்தின் தரவுகளின் பிரகாரம் இக்காலப் பிரிவின் போது பயிர்களின் அறுவடை பின்வருமாறு காணப்பட்டது: நெல் 21%, சோயா போஞ்சி 95.4% , பெரிய வெங்காயம் 50% மற்றும் கறுப்பு கௌப்பி 31%. இந்த வகையில் உள்நாட்டு உற்பத்தி மற்றும் அபிவிருத்தி என்பன தொடர்பான செயற்பாடுகளில் இலங்கை மகாவலி அதிகார சபை உயர் பங்களிப்பினை வழங்கி வருகின்றது.

பால் பண்ணை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

இலங்கை மகாவலி அதிகார சபையின் கால்நடை வளங்கள் அபிவிருத்திப் பிரிவுக்கு ஊடாக மகாவலி பிரதேசங்களில் மேலதிக வருமான மார்க்கங்களை அறிமுகம் செய்து வைத்தல் மற்றும் மகாவலி குடியேற்றவாசிகளின் போஷணை நிலைமையை உயர்த்துதல் என்பவற்றை நோக்கமாகக் கொண்டு பால் பண்ணை மேம்பாட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. மகாவலி வலயங்களில் பால் உற்பத்தியை அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் அதனை நெறிப்படுத்தல் என்பன இலங்கை மகாவலி அதிகார சபை கால்நடை வளங்கள் அபிவிருத்திப் பிரிவின் பொறுப்பாக இருந்து வருகின்றன.

2017ஆம் ஆண்டின் போது மகாவலி பிரதேசங்களில் காணப்பட்ட கால்நடைகளின் எண்ணிக்கை 110,830 ஆக இருந்து வந்ததுடன், அக்காலப் பிரிவின் போது தோராயமாக 29.4 மில்லியன் லீற்றர் பால் உற்பத்தி செய்யப்பட்டிருந்தது.

இக்காலப் பிரிவின் போது 157 மாட்டுக் கொட்டில்கள் நிர்மாணிக்கப்பட்டதுடன், விலங்குகளின் இனப்பெருக்க ஆற்றலை விருத்தி செய்வதற்கென 23 இனப்பெருக்க நிலையங்கள் ஸ்தாபிக்கப்பட்டிருந்தன. மேலும், மாதிரிப் பண்ணைகளுக்கு 23 பால் கறக்கும் இயந்திரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தன. விலங்கு சிகிச்சை நிலையங்கள் மற்றும் ஊசி மருந்தேற்றல் நிகழ்ச்சித்திட்டங்கள் 66 மேற்கொள்ளப்பட்டிருந்தன.

பசும்பால் நுகர்வினை மேம்படுத்துவதற்கென 21 "பால் வாரம்" நிகழ்ச்சித்திட்டங்கள் இவ்வருடத்தின் போது நடத்தப்பட்டதுடன், பாடசாலைப் பிள்ளைகள், விவசாயிகள் மற்றும் உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கென 82 ஆளுமை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டிருந்தன.

நன்னீர் மீன் உற்பத்தி மற்றும் அலங்கார மீன் வளர்ப்பு

மகாவலி குடியேற்றவாசிகளின் போசணை மற்றும் பொருளாதார நிலைமை என்பவற்றை மேம்படுத்தும் விடயத்தில் மகாவலி நீர்த் தேக்கங்களில் நன்னீர் மீன்பிடித் தொழில் துறையை அபிவிருத்தி செய்தல் ஒரு முக்கியமான செயற்பாடாக இருந்து வருகின்றது. 2017ஆம் வருடத்தின் போது மீன் உற்பத்தி 15,102 மெற்றிக் தொன்களாக இருந்து வந்தது. மீன் உற்பத்தியை அதிகரிக்கும் பொருட்டு 657,000 மீன் தொட்டிகளும், 04 இனப்பெருக்க நிலையங்களும் ஸ்தாபிக்கப்பட்டிருப்பதுடன், 75 மீன்பிடி உபகரணத் தொகுதிகளும் உருவாக்கப்பட்டுள்ளன. அலங்கார மீன் உற்பத்தியை விருத்தி செய்வதற்கென சம்பந்தப்பட்ட காலப் பிரிவின் போது 82 சேற்று பொய்கைகளும், 18 சிமெந்து தொட்டிகளும் நிர்மாணிக்கப்பட்டிருந்தன. மீன்பிடி சமூகத்தினரை மேலும் வலுவூட்டுவதற்கென 2017 ஜனவரி மாதம் தொடக்கம் டிசம்பர் மாதம் வரையிலான காலப் பிரிவின் போது 11 விவசாய சங்கங்கள் உருவாக்கப்பட்டிருந்தன.

1.3 பராமிப்பு மற்றும் அபிவிருத்தி

தேசிய உணவு உற்பத்தி நிகழ்ச்சித்திட்டத்துடன் உடனிகழ்வாக விவசாயத்தை அபிவிருத்தி செய்யும் நோக்கத்துடன் இலங்கை மகாவலி அதிகார சபை அதன் பத்து வலயங்களில் 106,876 ஹெக்டெயார் நீர்ப்பாசனம் பெறும் நிலப் பரப்புக்களுக்கு நீர் விநியோகத்தை உறுதிப்படுத்திக்

கொள்ளும் பொருட்டு 479 பெரிய, நடுத்தர மற்றும் சிறிய அளவு நீர்த்தேக்கங்களுடன் கூடிய 10,021 கிலோமீற்றர் தூரமான நீர்ப்பாசன வலையமைப்பை இயக்குதல் மற்றும் பராமரித்தல் என்பவற்றுக்கான பொறுப்பினை கொண்டிருக்கும் நிறுவனமாகும். அத்துடன் 300,000 க்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு பயன்களை வழங்கும்பொருட்டு மகாவலி வீதி கட்டமைப்பு மற்றும் ஏனைய உள்கட்டமைப்பு வசதிகளை பராமரித்தல் மற்றும் புனரமைப்புச் செய்தல் என்பனவும் இலங்கை மகாவலி அதிகார சபையின் பணிகளாக இருந்து வருகின்றன.

மேலும், இப்பிரதேசங்களில் தற்பொழுது வசித்து வரும் மக்கள் மற்றும் எதிர்காலத் தலைமுறையினர் ஆகியோரின் மேம்பாட்டைக் கருத்தில் கொண்டு செயல்திறன் மிக்க விதத்தில் காணி நிர்வாகம், தொழில்முனைவு அபிவிருத்தி, சுற்றாடல் பாதுகாப்பு மற்றும் நிறுவன அபிவிருத்தி என்பன தொடர்பான அபிவிருத்திகளையும் அது முன்னெடுத்து வருகின்றது. மகாவலி குடியேற்றப் பிரதேசங்களில் விளையாட்டு செயற்பாடுகளை அபிவிருத்தி செய்வதும் மகாவலி அதிகார சபையின் முக்கியமான கருமங்களில் ஒன்றாக இருந்து வருகின்றது. இதற்கென 2017ஆம் வருடம் தொடர்பாக வரவுசெலவுத்திட்டத்தின் மூலம் ஒதுக்கப்பட்ட தொகை ரூ.1,575.40 மில்லியன் ஆகும். இவ்வருடத்தின் போது ரூ. 1339 மில்லியன் தொகை (85%) பயனுள்ள விதத்தில் செலவிடப்பட்டிருந்துத.

1.3.1 நீர்ப்பாசனக் கட்டமைப்பை பராமரித்தல்

இரண்டாம் தடவையாக காடுகளை துப்பரவு செய்தல், நீர்ப்பாசனக் கால்வாய் தொகுதிகளிலிருந்து சேற்றினை அகற்றுதல், நீர்ப்பாசனக் கட்டமைப்புக்களை புதுப்பித்து, அபிவிருத்தி செய்தல், வீதிகளுக்கு கற்களை பரப்புதல் என்பன மகாவலி நீர்ப்பாசன கட்டமைப்பின் பராமரிப்பு நடவடிக்கைகளின் கீழ் வருகின்றன. 2017ஆம் வருடம் தொடர்பாக நீர்ப்பாசனக் கட்டமைப்பு பராமரிப்புக்கென ரூ. 370.81 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்ததுடன், மேலே குறிப்பிடப்பட்ட பணிகளை நிறைவேற்றிக் கொள்வதற்கென 2017 ஜனவரி மாதம் தொடக்கம் டிசம்பர் மாதம் வரையில் அத்தொகையில் ரூ. 285.81 மில்லியன் (77%) செலவிடப்பட்டிருந்தது.

மகாவலி வலயங்களுக்குள் 1,036 விவசாயிகள் சங்கங்கள் செயற்பட்டு வருவதுடன், நீர் விநியோக கால்வாய் கட்டமைப்புக்களின் பராமரிப்பு மற்றும் இயக்குதல் நடவடிக்கைகள் 2017 ஆம் வருடத்தின் போது உயர் செயல் முனைப்புடன் கூடிய 10 விவசாயிகள் சங்கங்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தன. மேலும், நிறுவன அபிவிருத்திப் பிரிவின் ஆலோசனையின் பேரில் 2017 ஆம் வருடத்தின் போது 10 விவசாயிகள் சங்கங்கள் வர்த்தக மட்டத்திற்கு உயர்த்தப்பட்டன.

1.3.2 காணி அளிப்பு

காணி உறுதிகள் 1000,000 நிகழ்ச்சித்திட்டத்தில் இடம்பெற்ற முன்னேற்றம்

வலயம்	இலக்கு	31.12.2017 இல் முன்னேற்றம் அளிப்புப் பத்திரங்கள் / அனுமதிப் பத்திரங்கள் /நீண்ட கால குத்தகை
B	25,600	25,533
C	17,700	26,360
D	2,800	444
H	12,500	8,729
L	8,600	7,816
மொறகஹகந்த	3,600	3,522
விக்டோரியா	2,800	3,299
ஹுரூலுவெவ	4,100	2,119
வளவே	18,500	19,683
றம்பக்கன் ஓயா	3,800	2,568
மொத்தம்	**100,000**	**100,073**

1.3.3 நிறுவன அபிவிருத்தி

தொழில்முயற்சிக்கான வாய்ப்புக்கள், தனிநபர் அபிவிருத்தி, நிறுவனங்களுக்கு வலுவூட்டுதல், பெண்களுக்கு வலுவூட்டுதல், குடியேற்றவாசிகளுக்கு சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்தியை பெற்றுக்கொடுப்பதன் மூலம் மகாவலி குடியேற்றவாசிகளின் சமூக பொருளாதார நிலையை மேம்படுத்துதல் என்பன அவர்களை குடியேற்றிய பின்னர் உள்ள கால கட்டத்தின் போது இலங்கை மகாவலி அதிகார சபையின் முதன்மையான கருமங்களாக இருந்து வருகின்றன. அதன் பிரகாரம், குடியேற்றவாசிகளின் இரண்டாவது மற்றும் மூன்றாவது தலைமுறையினரின் அபிவிருத்தியை கருத்தில் கொண்டு இலங்கை மகாவலி அதிகார சபையின் நிறுவன அபிவிருத்திப் பிரிவு மேலே குறிப்பிடப்பட்ட துறைகளை உள்ளடக்கும் விதத்தில் பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயலமர்வுகள் என்பவற்றை ஏற்பாடு செய்திருந்தது.

அதன் பிரகாரம் 2017 ஜனவரி மாதம் தொடக்கம் டிசம்பர் மாதம் வரையிலான காலப் பிரிவின் போது 4,406 நிறுவன அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களும், 572 சனசமூக நிகழ்ச்சித்திட்டங்களும், 82 பெண்கள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களும் நடத்தப்பட்டன.

1.3.4 வன வளம் மற்றும் சுற்றாடல்

வனவளம் மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு

மகாவலி பிரதேசங்களின் சுற்றாடல் நடவடிக்கைகளின் முகாமைத்துவம் மற்றும் ஒருங்கிணைப்பு என்பன சுற்றாடல் பிரிவின் மூலம் இடையறாது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. தேசிய சுற்றாடல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மூன்றாண்டு கால "புனருதய" செயல்திட்டத்திற்கு முன்னுரிமை வழங்கும் விதத்தில் சுற்றாடல் அமைச்சு மகாவலி பிரதேசங்களில் பசுமை எண்ணக்கருவை நடைமுறையில் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்து வருகின்றது. வன

வளம் மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கான வருடாந்த ஒதுக்குத் தொகை ரூ. 30.12 மில்லியன் ஆகும். அதில் ரூ. 30.12 மில்லியன் (100%) 2017 ஜனவரி தொடக்கம் டிசம்பர் வரையிலான காலப் பிரிவின் போது செலவிடப்பட்டிருந்தது.

இயற்கை வளங்கள் பாதுகாப்பின் கீழ் சாகுபடி மண் 1400 m பாதுகாக்கப்பட்டது. நாற்றுமேடைகளின் முகாமைத்துவம் மற்றும் நாற்றுமேடைகளின் உற்பத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 485,765 கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டதுடன், பிரதேசத்தின் வனச்செறிவினை அதிகரிக்கும் நோக்கத்துடன் 106,736 கன்றுகள் நடப்பட்டன. நீரின் தரத்தை அளவிடுவதற்கும், மேம்படுத்துவதற்குமென இவ்வருடத்தின் போது நீரின் தரத்தினை அளவிடும் 19 நிலையங்களும், சேற்றின் அளவினை அளவிடும் ஏழு நிலையங்களும் ஸ்தாபிக்கப்பட்டன.

பாடசாலைப் பிள்ளைகளின் பங்கேற்புடன் 87 சுற்றாடல் கல்வி மற்றும் விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டிருந்தன. மகாவலி பிரதேசங்களில் மிகக் கடுமையான ஆக்கிரமிப்பு இயல்பைக் கொண்ட தாவரங்களின் வளர்ச்சியை கட்டுப்படுத்துவதற்கும், முகாமை செய்வதற்குமென 22 குள நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல் செய்யப்பட்டன. மகாவலி பிரதேசங்களில் யானை – மனித மோதலை கட்டுப்படுத்தும் பொருட்டு 2017ஆம் வருடத்தின் போது 31 கிலோமீற்றர் நீளமான யானை வேலி நிர்மாணிக்கப்பட்டதுடன், 75 கிலோமீற்றர் நீளமான யானை வேலியின் பராமரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

புதுப்பிக்கத்தக்க வலு உற்பத்தியை அதிகரித்தல் (சிறு அளவிலான நீர் மின் உற்பத்திக் கருத்திட்டங்கள்)

மகாவலி பிரதேசங்களில் 20 சிறு அளவிலான நீர் மின் உற்பத்திக் கருத்திட்டங்களை உருவாக்குவதன் மூலம் 53.93 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இவற்றில் 16 கருத்திட்டங்கள் தொடர்பான சுற்றாடல் மதிப்பீட்டு அறிக்கைகளுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டிருப்பதுடன், 2017ஆம் ஆண்டின் முடிவின் போது 11 கருத்திட்டங்கள் வர்த்தக ரீதியில் செயற்பாடுகளை ஆரம்பித்திருந்தன. அவற்றின் உற்பத்திக் கொள்ளளவு 33.4 மெகாவாட் ஆகும்.

1.3.5 வணிக அபிவிருத்தி

நவீன தளபாடங்களுடன் கூடிய விதத்தில் ஏழு சுற்றுலா விடுதிகளை புதுப்பிக்கும் நடவடிக்கைகள் ஏற்கனவே பூர்த்தி செய்யப்பட்டிருப்பதுடன், இணையத்திற்கு ஊடாக தங்குமிட வசதிகளை ஒதுக்கிக் கொள்வதற்கென 14 சுற்றுலா விடுதிகள் தொடர்பாக வசதிகள் இப்பொழுது வழங்கப்பட்டு வருகின்றன.



கொத்மலை



றுகுணுகெத்த



பொல்கொல்ல

மகாவலி வலயங்களில் தனியார் துறையின் முதலீட்டுக்கான வாய்ப்புக்கள்

2017ஆம் ஆண்டின் ஜனவரி மாதம் தொடக்கம் டிசம்பர் மாதம் வரையிலான காலப் பிரிவின் போது மகாவலி வலயத்தில் 20 புதிய முதலீடுகள் மற்றும் ஏனைய கருத்திட்டங்கள் தொடர்பாக ஒப்புதல் வழங்கப்பட்டிருந்தது.

முதலீட்டுக் கருத்திட்டங்கள்	13
புதுப்பிக்கத்தக்க வலு கருத்திட்டம் (சூரிய ஒளி / உயிர்த் திணிவு வலு)	7

சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில் முயற்சிகளின் மேம்பாடு

பிரதேச அபிவிருத்தி வங்கியின் ஒத்துழைப்புடன் ஏற்பாடு செய்யப்பட்ட " மகாவலி சவிய" நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில்முயற்சிகள் மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்களின் மூலம் 181 சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில்முயற்சியாளர்களுக்கு ரூ. 36.65 மில்லியன் வழங்கப்பட்டிருந்தது. 2017ஆம் ஆண்டின் போது "மகாவலி திரிய" விசேட கடன் திட்டத்தின் கீழ் 11 விவசாயிகள் சங்கங்களுக்கு அவர்களுடைய வணிக நடவடிக்கைகளை விருத்தி செய்து கொள்வதற்கென ரூ. 15.4 மில்லியன் வழங்கப்பட்டிருந்தது.

1.3.6 பொருத்தமான பணிச் சூழல் ஒன்றுக்கென வசதிகளை வழங்குதல்

I. மனித வளங்கள் அபிவிருத்தி / புதிய ஆட்சேர்ப்பு / ஊழியர்களுக்கான பதவி உயர்வு

செயல்திறன் மிக்க, பயனுறுதி வாய்ந்த சேவை ஒன்றை வழங்கும் பொருட்டு திருத்தியமைக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறையின் பிரகாரம் அதிகார சபை பெருமளவுக்கு புதிய ஆட்சேர்ப்புக்களை மேற்கொண்டுள்ளது.

ஒப்புதல் அளிக்கப்பட்ட பணியாட்டொகுதி	4,624
31.12.2017 வரையில் நிலவி வந்த வெற்றிடங்கள்	434
2017ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஆட்சேர்ப்புக்கள்	268
2017ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட உள்ளக பதவி உயர்வுகள்	212

ii. **பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்**

ஊழியர்களின் ஆற்றல்கள் மற்றும் அறிவு மட்டம் என்பவற்றை உயர் மட்டங்களுக்கு எடுத்து வந்து, அவர்களுடைய திறன்களை விருத்தி செய்வதற்கென அதிகார சபையின் பயிற்சிப் பிரிவின் மூலம் பல்வேறு தலைப்புக்களின் கீழ் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டன.

	பங்குபற்றியோர் எண்ணிக்கை
பல்வேறு தலைப்புக்கள் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் (21)	87

1.3.7 சட்டத்தை வலுவுக்கு இடுதல்

2017ஆம் வருடத்தின் போது சட்டமா அதிபர் திணைக்களத்தின் அறிவுறுத்தல்களின் கீழ் சட்டப் பிரிவின் மூலம் 93 வழக்குகள் தொடர்பாக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டதுடன், 14 வழக்குத் தவணைகளில் அதிகார சபை ஆஜராகியது. இலங்கை மகாவலி அதிகார சபையில் இடம்பெற்று வரும் ஒரு சில வழக்குகளை தீர்த்துக் கொள்வதற்கு சட்டம் தொடர்பாக மூன்று கலந்துரையாடல் சுற்றுக்கள் நடத்தப்பட்டுள்ளன. மேலும், புதிதாக 04 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருப்பதுடன், 02 வழக்குகளின் நடவடிக்கைகள் முடிவுறுத்தப்பட்டுள்ளன.

1.3.8 நீர் முகாமைத்துவம்

இலங்கை மின்சார சபை, நீர் வழங்கல் சபை, நிர்ப்பாசனத் திணைக்களம் மற்றும் வளிமண்டலவியல் திணைக்களம் என்பவற்றுடன் தேவையான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு, விவசாயம் மற்றும் நீர் மின் உற்பத்தி, அதேபோல ஏனைய நீர்த் தேவைகள் என்பவற்றுக்கென மகாவலி நீர்த் தேக்கங்களின் நீர் வளங்களை பயனுள்ள விதத்தில் பயன்படுத்தப்படுவதனை நீர் முகாமைத்துவ செயலகம் உறுதிப்படுத்துகின்றது. அதே போல நீர் முகாமைத்துவ சபையின் இயக்குதல் கொள்கை தொடர்பான முடிவுகளை மேற்கொள்வதில் நீர் முகாமைத்துவ செயலக அலுவலகம் அதற்குத் தேவையான தகவல்கள் மற்றும் பரிந்துரைகள் என்பவற்றை வழங்கி வருகின்றது.

மகாவலி நீர்த் தேக்கங்களில் நீரைச் சேகரித்து வைக்கும் கொள்திறன்

நீர்த் தேக்கம்	உச்ச மட்ட கொள்திறன் அளவு (கன மில்லி மீற்றர்)
கொத்மலை	139
பொல்கொல்ல	
விக்டோரியா	551.3
றந்தெனிகல	680.9
றந்தம்பே	5.2
போவதன்ன	11
உடவளவே	233.3
தம்புலுஓயா	10.3
கண்டலம	23.2
கலாவெவ	78.6
உல்ஹிட்டிய / ரத்கிந்த	130.3
மாதுறுஓயா	371.7
மொத்தம்	**2,234.8**

1.3.9 உள்ளக கணக்காய்வு

அதிகார சபையின் பணிகள் தொடர்பாக செயல்திறனை உறுதிப்படுத்திக் கொள்ளும் பொருட்டு இந்த வருடத்தின் போது 17 கணக்காய்வு அறிக்கைகளும், 21 கணக்காய்வு ஐயவினா அறிக்கைகளும் வெளியிடப்பட்டிருந்தன.

2. மகாவலி நீர்த்தேக்கங்களின் வலு உற்பத்தி கொள்திறன்

நீர்த்தேக்கம்	மொத்த கொள்திறன் (தோறாயமாக) (MCM)	மொத்த வலு கொள்திறன் (MW)	வலு உற்பத்தி ஜன.- டிசம்பர் (Gwh)
கொத்மலை	174	201	300.48
பொல்கொல்ல	4	-	
விக்டோரியா	722	210	287.952
றந்தெனிகல	860	126	141.713
றன்டம்பே	7	49	84.20189
உல்ஹிகிட்டிய / ரதகிந்த	146	-	
மாதுறுஓயா	596	-	
போவதன்ன	23	40	66.093
உடவளவே	268	6	3.23712
உக்குவலை (நீர்மின் உற்பத்தி நிலையம் மட்டும்)		40	154.782
மொத்தம்	**2,800**	**672**	**1,038.46**

3. 2017 ஆம் வருடத்தின் போது சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை பத்திரங்கள்

சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை பத்திரம்		தலைப்பு	அமைச்சரவைத் தீர்மானம்
இல.	திகதி		
24/11/2017	திகதி 043/704/2494/17	கரலியத்த நகர அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் உள்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்தல் - கண்டி மாவட்டம்	அமைச்சரவைப் பத்திரத்தின் 03 ஆவது பிரிவின் 3.1,3.1 மற்றும் 3.3 பரிந்துரைகளுக்கு ஒப்புதல் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டது.
	இல.2017/40	மகாவலி E வலயத்தை இலங்கை மகாவலி அதிகார சபையின் ஒரு விசேட வலயமாக பிரகடனப்படுத்துதல்	
05/07/2017	இல.0/704/1298/17 -09I	மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றடால் அமைச்சின் கீழ் இருந்து வரும் நிறுவனங்களின் மூலம் நிர்வகிக்கப்பட்டு வரும் காணிகளிலிருந்து அரசாங்கத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குத் தேவையான கல், மணல், மண் மற்றும் சரளைக் கல் என்பவற்றை பெற்றுக் கொள்ளல்.	**i.** அமைச்சரவை பத்திர இல. 17/0530/704/009 தொடர்பாக 31.03.2017 இல் வழங்கப்பட்ட ஒப்புதலை தற்காலிகமாக நிறுத்தி வைப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டது. அமைச்சரவை பத்திரத்தில் குறிப்பிடப்பட்டிருந்த விதத்தில் அது வரையில் நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்கென புவிச்சரிதவியல் அளவை சுரங்கப் பணியகத்தின் கீழ் இருந்து வரும் தொழில்நுட்பச் சேவைகள் நிறுவனத்தை அனைத்து விதத்திலும் வலுவூட்டுதல் மற்றும் **ii.** மேலே (i) தீர்மானம் தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகார சபைகள் மற்றும் ஏனைய தரப்புக்கள் என்பவற்றுக்கு விளக்கமளிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றடால் அமைச்சின் செயலாளர் மேற்கொள்வதற்கென.